
# பொருளியல் நோக்கு

ஏப்ரல்/மே
1988





# பொருளாதாரம் 1988


மக்கள் வங்கி வெளியீடு

# பொருளாதார குறிகாட்டிகள்


நடைமுறை நிலையான (1975) விலைகளில் மொத்த தேசியீ உற்பத்தியில் ஏற்பட்ட சதவீத மாற்றம்




நடைமுறை நிலையான (1975) விலைகளில் தலைக்குரிய மொத்த தேசிய உற்பத்தி





அரச கடன்





ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி
குடித்தொகை கணிப்பீட்டு
புள்ளிவிபரவியல் திணைக்களம்


பண நிரம்பல்
மாதாந்தம்




தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்
1978=100




நிலையான (1975) விலைகளில் துறைவாரியாக மொத்த உள்நாட்டு உற்பத்தி



# பொருளியல் நோக்கு

மலர் 14 | இதழ் 1/2 | ஏப்ரல்/மே 1988



மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை


## நிரல்கள்


நிகழ்ச்சிக்குறிப்பேடு 2 ஏப்ரல் 1988

வளர்முக உலகம் 52 பங்களாதேஷ் - வாட்டி வதைக்கும் வெள்ளப்பெருக்கு

மாணவர் பக்கம் 64 பண நிரம்பல்


## விசேஷ அறிக்கை


3 இலங்கையின் பொருளாதாரம் 1978 - 1988

சிரிசேன திலகரத்ன 24 இலங்கையில் 1977ன் பின்னர் செய்யப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள்: ஒரு மதிப்பீடு

காமினி கொரயாவுடன் உரையாடல் 32 இலங்கைப் பொருளாதாரமும் வெளிச் சூழலும்

பூர்ணிமா ராஜபக்ஸ 42 கொள்கை மாற்றங்களும் வேலைவாய்ப்பும் இலங்கை நிலை 1970 - 1985


## சிறப்புக் கட்டுரைகள்


எம். எச். குணரத்ன 53 இலங்கையில் பாற்பண்ணைக் கைத்தொழிலும் பால் உற்பத்தியும்

பி. எஸ். பவிஸ்கார் சாந்தி ஜோர்ஜ் 56 அபிவிருத்தி பற்றிய சர்ச்சை - இந்தியாவின் தேசிய பண்ணை அபிவிருத்திச்சபை

குளோட் அல்வாரஸ் 62 பண்ணை அபிவிருத்தி - இந்தியாவின் 'வெள்ளப் பெருக்கு இயக்கம்' வற்றிவிட்டதா?


**சந்தாதாரர் கவனத்துக்கு**

எமது விசேஷ அறிக்கையின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு 'பொருளியல் நோக்கினை' 64 பக்கங்கொண்ட இரட்டை இதழாக வெளியிடுகிறோம். சந்தா நோக்கங்களுக்காக இது இரு தனித்தனி இதழ்களாக கருதப்படும் என்பதனை சந்தாதாரர்களின் கவனத்துக்கு கொண்டு வருகிறோம்.

## அடுத்த இதழில்

- ★ வீடமைப்பும் நிர்மாணமும்: முன்னேற்றமும் பிரச்சினைகளும்
- ★ மாறிவரும் கம்ப்யூட்டர் அமைப்பு
- ★ வங்கித்துறை வைப்புக்கள் முற்பணங்கள் என்பவற்றின் போக்குகள்
- ★ இலங்கை நாணயக் கொள்கையின் சில அம்சங்கள்.

அட்டைப்படம்: சரத் விஜேரத்ன


பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக்கோளாகக் கொண்டது.
பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.
பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதன் சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களில் நந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

ஏப்ரல்

1 கொழும்பு நுகர்வோர் வாழ்க்கைச் செலவுச்சுட்டெண் ஏப்ரல் 1988 ல் 722.3 புள்ளிகளாக இருந்ததென குடித்தொகைக் கணிப்பீட்டு, புள்ளிவிபரவியல் திணைக்களம் அறிவித்தது. இது மார்ச் 1988 ல் 714.7 புள்ளிகளாகவும், ஏப்ரல் 1987ல் 638.6 புள்ளிகளாகவும் இருந்தது. கடந்த 12 மாதங்களுக்கான சராசரி புள்ளி 680.6 ஆக இருந்தது. இச்சுட்டெண் கடந்த 12 மாதங்களிலும் 61.0 புள்ளிகளால் அதிகரித்திருக்கிறது.

20 மகாவலி அபிவிருத்தி செய்திட்டத்தின் 'சி' வலயத்தின் மேலதிக செலவுகளுக்கென ஜப்பானின் கடல்கடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்திலிருந்து 295 கோடி யென் கடன் பெறுவதற்கென இலங்கை ஜப்பானுடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்வது தொடர்பான நிதி, திட்டமிடல் அமைச்சரின் முன்மொழிவுக்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்தது. வலது கரை பிரதான கால்வாய் இல. 2, கிளைக் கால்வாய்கள், நீர்ப்பாசன, வடிகால் வசதி என்பவற்றின் நிர்மாணம் மற்றும் நிலத்துப்புரவு, பண்ணை அபிவிருத்தி, உசாத்துணைச் சேவைகள் போன்றவற்றுக்கு தேவையான வெளிநாட்டுச் செலாவணிச் செலவுகளுக்கென இக்கடன் பயன்படுத்தப்படும்.

இரட்டை வரி விதிப்பை தவிர்ப்பது மற்றும் வருமானம் தொடர்பான வரிகள் விஷயத்தில் நிதிசார் ஏய்ப்புக்களை தடுப்பது போன்றன தொடர்பான முறைசார் ஒப்பந்தமொன்றை இலங்கை, நெதர்லாந்து அரசாங்கங்கள் செய்து கொள்வது குறித்த நிதி அமைச்சரின் முன்மொழிவுக்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்தது.

இரண்டாவது தொழில்நுட்பக்கல்வி செய்திட்டத்துக்கென ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து 2 கோடியே 64 இலட்சத்து 50 ஆயிரம் (சுமார் 3.6 கோடி அ. டொலர்) எஸ். டி. ஆர். கடன் பெறுவது தொடர்பான ஒப்பந்தத்தில் ஈடுபடுவது என நிதி, திட்டமிடல் அமைச்சர் சமர்ப்பித்த முன்மொழிவுக்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியது. முதல் செய்திட்டத்தின் சாதனைகளை பலப்படுத்திக்கொள்வதற்கும், அவற்றை அடியொற்றி முன் செல்வதற்கும் என இந்த இரண்டாவது திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தொழில்நுட்பக் கல்வியின் தரம், திறன் மற்றும் அடையக் கூடிய தன்மை என்பவற்றை மேம்படுத்துவதற்கூடாக நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான பயிற்சியையும், தொழில்நுட்ப மனித ஆற்றல்களையும் முன்னேற்றுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

அரசாங்கத்தின் சுகாதார மற்றும் குடும்பத் திட்டமிடல் செய்திட்டமொன்றின் செலவுகளில் ஒரு பகுதியை நிதிப்படுத்துவதற்கென சர்வதேச அபிவிருத்தி சங்கத்திலிருந்து 1 கோடியே 29 இலட்சம் எஸ். டி. ஆர். (54 கோடியே 15 இலட்சம் ரூபா) கடன் பெறுவது தொடர்பான ஒப்பந்தத்தில் இலங்கை ஈடுபடுவதற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்தது. சுகாதார முகாமை முறைகளை விருத்தி செய்தல், தொடர்ந்தும் தாய் சேய் நலத்தைப் பேணி கருவளத்தினை குறைந்த மட்டங்களில் வைத்திருத்தல் போன்றன இச்செய்திட்டத்தின் நோக்கங்களாகும். சுகாதாரம், மகளிர் விவகார போதனா வைத்தியசாலைகள் மற்றும் திட்ட அமுல் அமைச்சுக்களால் இச்செய்திட்டம் அமுல் செய்யப்படும்.

மீன்பிடி வள்ளங்களின் மொத்தச் செலவில், 75 சதவீதம் வரையில் மானியம் வழங்குவதை 1988 இலிருந்து தொடர்ந்தும் மேற்கொள்வது தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் சமர்ப்பித்த முன்மொழிவொன்றுக்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்தது. மீன்பிடி வள்ளங்கள் மண்ணெண்ணெய், டீசல் போன்றவற்றை பாவிப்பதனால் தொடர்ந்தும் உற்பத்திச் செலவு அதிகரித்து வருவதனை தடுக்கும் பொருட்டு, மீனவர்கள் எரிபொருள்களை சேமிக்கக்கூடிய திறமையான இயந்திரங்களையும் வள்ளங்களையும் பாவிக்க தூண்டுவதே இம் முன்மொழியின் நோக்கமாகும். இந்த வள்ளங்கள் எரிபொருளை சேமிப்பது மட்டுமன்றி, ஆழ்கடலில் இயந்திரக் கோளாறு போன்ற ஆபத்துகளிலிருந்தும் மீனவர்களை பாதுகாக்க கூடியவை.


சுகாதார அமைச்சின் மலேரியா தடுப்புத்திட்டத்துக்கு தேவைப்படும் வாகனங்கள், உபகரணங்கள், மருந்து வகைகள் போன்றவற்றுக்கென 45 கோடியே 50 இலட்சம் யென் (சுமார் 10.4 கோடி ரூபா) ஜப்பானிய கொடையொன்றினை பெற்றுக்கொள்வதற்கான பத்திரங்களில் கைச்சாத்திட்டு பரிமாறிக்கொள்வது தொடர்பான சுகாதார அமைச்சரின் முன்மொழிவுக்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்தது. இதற்கு மேலதிகமாக, இப்பொருட்களை பெற்றுக்கொள்ளும் விஷயத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு உதவுவதற்கென ஜப்பானிய அரசாங்கம் ஆலோசகர் ஒருவரையும் நியமனம் செய்யும். படிப்பித்தலுக்கு உதவும் பொருட்கள், ஆய்வு கூட உபகரணங்கள், வாகனங்கள், தொழிற்கூட கருவிகள், மலேரியா ஒழிப்பு மருந்துகள் மற்றும் நானாவித பொருட்கள் போன்றனவே இந்த ஜப்பானிய உதவி மூலம் பெற்றுக் கொள்ளப்படவிருக்கின்றன.


ஜப்பானிய கொடை உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மொறட்டுவை பல்கலைக்கழகத்துக்கு 90.9 ஜப்பானிய யென் (சுமார் 20 கோடி ரூபா) பெறுமதியான கல்வி உபகரணங்களை அன்பளிப்புச் செய்வதற்கான ஒப்பந்தத்தில் ஜப்பானிய உயர் ஸ்தானிகர் கைச்சாத்திட்டார். பொறியியல் பீடத்தின் கீழ் இயங்கும் கம்ப்யூட்டர் விஞ்ஞானம், புடவை பொறியியல் இரசாயன பொறியியல், பொருட்கள் பொறியியல், கணிதம் போன்ற பிரிவுகளும், ஆங்கில மொழி பயிற்சி நிலையம் மற்றும் உடற் கல்வி அலகு போன்றனவும் ஆய்வு கூட ஆராய்ச்சி, உபகரணங்களை பெற்றுக்கொள்ளும். கம்ப்யூட்டர் பொறிகள், நவீன கட்புல, செவிப்புல சாதனங்கள் மற்றும் இயந்திரங்கள் போன்றன இதில் அடங்கியிருக்கும்.

23 மகாவலி செய்திட்ட 'பி' வலயத்தில் பிம்புரத்தாவையில் நீவு மீன்பிடித் திட்டமொன்றை உருவாக்குதல் குறித்த கடற்றொழில் அமைச்சரின் முன்மொழிவுக்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்தது. ஆராய்ச்சி, செய்து காட்டல் மற்றும் விரிவாக்கல் வசதிகளைக் கொண்ட மீன் வளர்ப்பு மையமொன்றுக்கு இத்திட்டம் இடமளிக்கும். வருடம் முழுவதும் நீர் நிறைந்திருக்கும் பிரதான குளங்களில் மீன்களை பெருமளவில் கையிருப்பில் வைத்திருத்தல் மற்றும் அறுவடை செய்தல் என்பவற்றுக்கூடாக உள்ளூர் மீன் பிடியை அதிகரித்தல் இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். சர்வதேச அபிவிருத்திக்கான கனேடிய முகவராண்மையின் உதவியுடன் இத்திட்டம், வகுக்கப்பட்டுள்ளது.

இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனத்தின் புத்தளம், ருகுணு சிமெந்து தொழிற்சாலைகளை புனருத்தாரணம் செய்வது குறித்த உள்ளூராட்சி, வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சரின் முன்மொழிவொன்றினை அரசாங்கம் அங்கீகரித்தது. அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க புத்தளம் தொழிற்சாலையை புனருத்தாரணம் செய்வதற்கென பெருந்திட்டமொன்றை வகுக்கும் பொருட்டு ஜப்பானிய உசாத்துணைநிறுவனம்சாத்தியவள ஆய்வொன்றை செய்து முடித்துள்ளது.

நிலையான (1975) விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறையின் பங்கு




# 1987-ல் இலங்கையின் பொருளாதாரம்

இலங்கையின் பொருளாதார செயற்பாடு 1987-ல் வளர்ச்சியில் முக்கியமான ஒரு வீழ்ச்சியைப் பதிவு செய்தது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மெய் அளவுகளில் 1.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 1977-ல் பொருளாதார சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதற்கு பின்னர் பதிவு செய்யப்பட்ட மிகக் குறைந்த வளர்ச்சி வீதம் இதுவாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1977-86 பத்தாண்டு காலத்தில் ஏற்பட்ட 5.5 சதவீத சராசரி வளர்ச்சியிலிருந்து இது வேறுபட்டுத் தெரிகிறது.

வெளிநாட்டிலிருந்து வரும் தேறிய காரணி வருமானத்தையும் சேர்த்து பெறப்படும் மொத்த தேசிய உற்பத்தி 1987-ல் (1982-ன்) நிலையான விலைகளில் 1.6 சதவீதமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது என மத்திய வங்கி அறிவித்துள்ளது. இது 1986-ல் 4.5 சதவீதமாக இருந்தது.

கடந்த ஆண்டில் பொருளாதார செயற்பாட்டில் நிகழ்ந்த பின்னடைவுக்கு பல காரணிகள் பொறுப்பாக இருந்தன. மோசமான காலநிலை நிலைமைகளும், இனப் பிரச்சினையும் பொருளாதார வளர்ச்சியைப் பாதித்த முக்கிய காரணிகளாக இருந்தன. பொருளாதாரத்தில் காணப்பட்ட அமைப்பு ரீதியான சில பலவீனங்களும் இதற்குப் பங்களிப்புச் செய்தன. வேளாண்மைத்துறை மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. 1987-ல் இத்துறைக்குச் சேர்க்கப்பட்ட முழுப் பெறுமானமும் 8 சதவீதமாக இருந்தது. தேயிலை தவிர்ந்த ஏனைய உப துறைப்பயிர்கள் அனைத்தினதும் உற்பத்தி மோசமாகப் பாதிப்படைந்தது.

விவசாயத்துறை இலங்கையின் பொருளாதாரத்தில் எப்போதும் மிக முக்கியமான ஒரு பங்கினை வகித்து வந்திருக்கிறது. மொத்தஉள்நாட்டுஉற்பத்திக்கு ஏறத்தாழ காற்பகுதியை அது பங்களிப்புச்செய்வதுடன் ஏனைய துறைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மீதும் முக்கிய செல்வாக்கினை செலுத்துகிறது. ஆக, சார்பு ரீதியில் விவசாயத்துறையில் பதியப்படும் மெதுவான வளர்ச்சி விகிதம் முழுப் பொருளாதாரத்திலும் ஏற்படும் பின்னடைவுக்கான பிரதான காரணியாக விளங்கி வளர்ச்சியைப் பின் தள்ளுகிறது. 1975-ன் நிலையானவிலைகளில், மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான விவசாயத்துறையின் பங்களிப்பு 1987-ல் 1.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்

தது. இதில் 1986-ல் 0.7 சதவீத சிறு அதிகரிப்பொன்று பதிவு செய்யப்பட்டது. பொருளாதாரத்துக்கான வேளாண்மைத் துறையின் பங்களிப்பு உண்மை நியதிகளில் 1986-ல் 1123 கோடியே 40 இலட்சம் ரூபாவிலிருந்து 1987-ல் 1054 கோடியே 10 இலட்சம் ரூபாவாக 6.2 சதவீதம் வீழ்ச்சி கண்டுள்ளதென குடித்தொகை கணிப்பீட்டு, புள்ளி விபரவியல் திணைக்களம் அறிவிக்கிறது.

இலங்கையின் பொருளாதாரம் 1987-ல் செயற்பட்ட விதம் குறித்து அறிக்கையிடும் இலங்கை மத்திய வங்கி, மோசமான காலநிலை காரணமாக மரப்பயிர்த்துறையில் உற்பத்தி வீழ்ச்சிகள் ஏற்பட்டிருந்தமையால், நாடு சிறந்த விலைகளின் அனுகூலத்தை பிரதான பிரதமவிளை பொருள் ஏற்றுமதிகளிலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியாது போய்விட்டது என்று குறிப்பிட்டுள்ளது. சுற்றுலாக் கைத்தொழிலில் மேலும் சீர்குலைவு ஏற்பட்டதுடன் சுற்றுலாத்துறைச் சம்பாத்தியங்கள் 1980-ன் பின்னர் பதிவு செய்யப்பட்ட மிகக் குறைந்த மட்டங்களில் இருந்தன. சர்வதேச சந்தைகளில் மசகெண்ணெய் விலைகள் உயர்ந்ததனால் நாட்டின் இறக்குமதிச் செலவு மேலும் அதிகரித்தது. மறுபுறத்தில் தொடர்ந்தும் வளர்ந்து வந்த வெளிநாட்டுக் கடன் கடப்பாடுகள் கொடுப்பனவு பக்கத்தில் கடுமையான அமுக்கங்களை தோற்றுவித்தன. இக்காரணிகள் அனைத்துமாக சேர்ந்து நாட்டின் சென்மதி நிலுவை நிலைமையை பலவீனப்படுத்தியதுடன் செலாவணி வீதத்தில் பெரும் நெருக்குதல்களை உருவாக்கி, வெளிநாட்டுச் சொத்துக்கள் மேலும் தீர்ந்து போவதற்கு வழி கோலின. இந் நிகழ்ச்சிகள் யாவும் பொருளாதாரத்தின் அமைப்பு ரீதியான பின்னடைவையும், இலங்கையின் வெளிநாட்டுத்துறை தொடர்ச்சியாக நலிவடைந்து வருவதனையும் மிகத் துல்லியமாகக் காட்டின. இவை எல்லாமாகச் சேர்ந்து பொருளாதாரத்தின் கூட்டுமொத்தச் செயற்பாட்டுக்கு வில்லங்கங்களைக் கொண்டு வந்தன.

இலங்கையின் பொருளாதார செயற்பாட்டில் 1987-ல் காணப்பட்ட பிரதானமான பாதக காரணிகளாக இலங்கை மத்திய வங்கி பின்வருவனவற்றை சுட்டிக்காட்டுகிறது.

இறப்பர் உற்பத்தி 11 சதவீதத்தாலும் தென்னை உற்பத்தி 25 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தது.

நெல் உற்பத்தி 18 சதவீதமும் சீனி உற்பத்தி 15 சதவீதமும் வீழ்ச்சி கண்டது.

கிழங்கு, மிளகாய், பம்பாய் வெங்காயம் போன்ற உப உணவுப்பயிர்களும் உற்பத்தி வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன.

சேவைத்துறை சேர்க்கப்பட்ட பெறுமதியில் 2.7 சதவீத அதிகரிப்பை மட்டுமே பதிவு செய்தது. முன்னைய ஆண்டில் இத்துறை 4.3 சதவீதம் வளர்ச்சி கண்டிருந்தது.

வலுத்துறையைப் பொறுத்த வரையிலும், 1987ல் நிலைமைகள் பாதகமாகவே இருந்தன. நீரேந்துப் பகுதிகளில் நீண்டகாலம் வறட்சி காணப்பட்டதால் நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் வெகுவாக் குறைந்து நீர் மின் உற்பத்தியைக் கடுமையாகப் பாதித்தது. இதன் விளைவாக நாட்டின் சக்தி தேவைகளுக்கு பெருமளவில் அனல் மின்சாரத்தில் தங்கியிருக்க வேண்டியிருந்தது. அனல் மின்சார உற்பத்திக்கென டீசலும், பார டீசலும் கனத்த அளவில் பயன்படுத்தப்படுகின்றன. மின் உற்பத்தி தடங்கல்களை எதிர் நோக்கியதனால் நாடளாவிய ரீதியில் மூன்றரை மணி நேர மின் வெட்டினை அமுல் செய்ய வேண்டியிருந்தது. இது பொருளாதார நடவடிக்கைகளில் பாதகமான தாக்கங்களைக் கொண்டு வந்தது.

பல காரணிகளின் விளைவாக நுகர்வோர் விலைகள் 1987 ல் தொடர்ந்தும் உயர்ச்சிப்போக்கில் சென்றன. உணவு வகைகளில் இது தெளிவாக தெரிந்தது. புள்ளிக்கு புள்ளி என்ற அடிப்படையில், கொழும்பு நுகர்வோர் விலைவாசி சுட்டெண் 1986 டிசம்பரிலிருந்து 1987 டிசம்பருக்குள் 10.2 சதவீதம் அதிகரித்திருந்தது. குறிப்பாக, 1987ன் கடைசி மாதங்களில் விலைவாசியில் திடீர் அதிகரிப்புக்கள் ஏற்பட்டிருப்பதனை இது பிரதிபலிக்கின்றது. பொருளாதாரத்தில் கூட்டு மொத்த விலை மாற்றத்தினை அளவிடும் மொ. தே. உ. சுருக்கி 6.8 சதவீதத்தால் உயர்ந்தது. இது 1986 ல் 5.5 சதவீதத்தாலேயே உயர்ந்திருந்தது.

இலங்கை ரூபா பெயரளவு நியதிகளில் பிரதான நாணயங்களுக்கெதிராக மேலும் பெறுமதியிறக்கம் கண்டது. விசேஷ எடுப்பனவு உரிமை அளவுடனும் ரூபா பெறுமதியிறக்கம் கண்டது. டிசம்பர் 1986ல் ஒரு வி. எ. உ. யின் பெறுமதி ரூ. 34.88 ஆக இருந்து, 1987 டிசம்பரில் ரூ. 43.64 ஆக அதிகரித்தது.

இலங்கையின் கூட்டுமொத்த சென்மதி நிலுவை தொடர்ந்தும் பற்றுக்குறையையே அனுபவித்தது. வி. எ. உ. அளவில் இப்பற்றுக்குறைவு 1987ல் 7 கோடியே 20 இலட்சம் எஸ். டி. ஆர். களாக இருந்தது. கூட்டு மொத்த நிலுவை தொடர்ச்சியான மூன்றாவது வருடமாக பற்றுக்குறையைப் பதிவு செய்தது. இதனால் மேலும் வெளிநாட்டு ஒதுக்குகளை பாவிக்க வேண்டியிருந்தது. சென்மதி நிலுவையில் கடந்த மூன்று வருடங்களிலும் காணப்பட்ட கூட்டு மொத்தப்பற்றுக்குறை 25 கோடியே 70 இலட்சம் எஸ். டி. ஆர். கள் வரையில் இருந்தது.

சமீப ஆய்வுகளிலும் அரசாங்க அறிக்கைகளிலும் குறிப்பிடப்பட்ட மற்றும் இரு பாதக

மான காரணிகள் வேலையின்மை மட்டம் அதிகரித்ததும், வருமான இடைவெளிகள் அகன்று சென்றதுமாகும். வறுமை பரவலாக பெருகியிருப்பதும், வருமானப்பகிர்வு சீர்குலைந்து சென்றிருப்பதும், சமூக நல போஷாக்கு மட்டங்கள் வீழ்ச்சியுற்றிருப்பதும் கவலையூட்டும் அறிகுறிகளாகும். ''1983 ன் பின்னர் பொருளாதார நடவடிக்கைகள் குறைவடைந்திருப்பது போல் தென்படுகிறது...... இப் போக்கின் மிகப்பாரதூரமான வெளிப்பாடுகளில் ஒன்று வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருவதாகும்'' என்று நிதி அமைச்சின் ''பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்'' சுட்டிக்காட்டுகிறது.


தலைக்குரிய வருமானம் மெய் அளவுகளில் 0.1 சத வீதமாக மிகச்சிறு அதிகரிப்பொன்றையே பதிவு செய்தது. தலைக்குரிய மொத்த தேசிய உற்பத்தி 1986 ல் 9,918 ரூபாவாகவும் (அமெரிக்க டொலர் 354) 1987ல் 10,598 ரூபாவாகவும் (அமெரிக்க டொலர் 360) இருந்தது.

கடன் சேவை விகிதம் அதாவது பொருட்கள் சேவைகள் என்பவற்றின் ஏற்றுமதிகளின் ஒரு விகிதமாக கடன் சேவை கொடுப்பனவுகள் 1986 ல் 26.4 சத வீதத்திலிருந்து 1987 ல் 28.5 சத வீதமாக உயர்ந்தது.

சர்வதேச சந்தையில் மசகெண்ணெய் விலைகள் உயர்ந்ததனால் இறக்குமதிச்செலவுகள் உயர் மட்டத்தில் நிலவின. மறுபுறத்தில் வளர்ந்து வரும் வெளிநாட்டுக்கடன் கடப்பாடுகள் கொடுப்பனவுப்பக்கத்தில் கடுமையான அமுக்கங்களை எடுத்து வந்தன. இத்தகு தாக்கங்களின் காரணமாக சென்மதி நிலுவை தொடர்ந்தும் பலவீனமாகவே இருந்தது. இது செலாவணி வீதத்திலும் வெளிநாட்டு சொத்துக்களிலும் நெருக்குதல்களை தீவிரப்படுத்தியது,

சுற்றுலாப்பயணிகளின் வருகை 1987 ல் 20.6 சத வீதத்தால் வீழ்ச்சியடைய சுற்றுலாத் துறை மூலமான பண வரவுகள் 1986 ல் 232.6 கோடி ரூபாவாக (7 கோடியே 10 இலட்சம் எஸ். டி. ஆர். ஆக) இருந்து 1987 ல் 181.3 கோடி ரூபாவாக (4 கோடியே 80 இலட்சம் எஸ். டி. ஆர். ஆக) வீழ்ச்சி கண்டது. இது எஸ். டி. ஆர். அளவுகளில் 32 சதவீத வீழ்ச்சியாகும்.

பிரதான விவசாய பயிர்களின் உற்பத்தி



இலங்கை மத்திய வங்கி

தனியார் பண அனுப்பீடுகள் மூலமான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல் எஸ்.டி.ஆர். அளவுகளில் ஒரு சிறு வீழ்ச்சியைக் காட்டியபோதிலும், ரூபா வடிவில் 16.0 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. தனியார் பண அனுப்பீடுகளின் மொத்தம் 1986-ல் 887.3 கோடி ரூபா (26.9 கோடி எஸ்.டி. ஆர்.) ஆகவும், 1987-ல் 1025.5 கோடி ரூபா (26.8 கோடி எஸ்.டி.ஆர்.) ஆகவும் இருந்தது.

திட்டக்கடன், பண்ட உதவி என்பவற்றை உள்ளடக்கிய உத்தியோகபூர்வ மாற்றல்கள் 1986-ல் எஸ்.டி.ஆர். 12.3 கோடியாக (ரூ. 511.4 கோடியாக) இருந்து 1987-ல் 13.9 கோடி எஸ்.டி.ஆர். (ரூ, 130.2 கோடி) ஆக வீழ்ச்சியடைந்தது. இதில்

திட்டக்கொடைகள் 10 கோடியே 40 இலட்சம் எஸ்.டி.ஆர். (394) கோடி ரூபா) ஆக இருக்க மிகுதி பண்டக்கொடைகளாக இருந்தது. மொத்த தேறிய மாற்றுதல் மூலமான வரவு 1987-ல் 4.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

நாணயமல்லா தேறிய மூலதனப் பாய்ச்சல்கள் நடைமுறைக்கணக்கு பற்றுக்குறையின் 70.0 சதவீதத்தை மட்டும் நிதிப்படுத்த போதியதாக இருந்ததால் ரூ. 180.2 கோடி (7 கோடியே 20 இலட்சம் எஸ். டி. ஆர்.) பொதுவான குறை ஏற்பட்டது. இது வெளிநாட்டுச் சொத்துக்களை எடுப்பதன் மூலம் நிதியிடப்பட வேண்டியிருந்தது.

அரசாங்கம் மற்றும் மத்திய வங்கி என்பவற்றின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கிய மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள் 32 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டு வருட முடிவில் 20 கோடியே 30 இலட்சம் எஸ்.டி.ஆர்.களாக (886.9 கோடி ரூபாவாக) இருந்தது. வெளிநாட்டு நாணய வங்கிப்படுத்தல் அலகுகளில் வைப்பிலிடப்பட்டிருந்த அதன் வைப்புக்கள் அனைத்தையும் போலவே அரசாங்கம் பாவனைக்கெடுத்தது. வெளிநாடுகளில் வைக்கப்பட்டிருந்த திரவ நிலுவைகளிலும், முதலீடுகளிலும் வீழ்ச்சி பதியப்பட்டது.

நிதி நடவடிக்கைகளின் விஷயத்தில், கூட்டு மொத்த வரவு செலவுத்திட்டப் பற்றுக்குறையில் தெளிவான ஒரு முன்னேற்றம் காணப்பட்டபோதிலும், மூலதன உட்பாய்ச்சல்கள் குறைவாக இருந்ததன் விளைவாக 1987-லிலும் விஸ்தரிப்பு நிதிப்படுத்தல். தொடர்ந்து இடம்பெற்றமையால் கடுமையான அமைப்பு ரீதியான பிரச்சினைகள் தோன்றின. சில உணவு வகைகளைப் பொறுத்தவரையில் உற்பத்தி வீழ்ச்சி காணப்பட்டமையால் வழங்கல் பற்றுக்குறை தோன்றிற்று. இதனுடன் சேர்ந்து பண நிரம்பலும் வேக வளர்ச்சியடைந்ததால், 1987-ன் கடைசி மாதங்களில் விலைகள் செங்குத்தாக உயர்ந்தன.

சமீப வருடங்களில் இலங்கையின் நிதியமைப்பு இயங்கிவந்த சூழலின் அமுக்கங்களை 1987-ல் அரசாங்க நிதி நடவடிக்கைகள் தொடர்ந்தும் பிரதிபலித்தன. அரச நடைமுறைச் செலவுகள் வருமானத்தை விடக் கூடிய வேகத்தில் வளர்ச்சியடைந்ததனல் நடைமுறைக் கணக்கு மிகை மேலும் சுருங்கிற்று. இது 1986-ல் மொ. உ. உ யில் 1.8 சதவீதமாக இருந்து 1987-ல் 1.7 சதவீதமாக குறைந்தது.

வரவுசெலவுத்திட்டப் பற்றுக்குறை நிலைமை முன்னைய வருடத்தைவிடச் சற்று விருத்தியடைந்து காணப்பட்டபோதிலும், 1987-ல் பற்றுக்குறையை நிதிப்படுத்துவதற்கான மூலவளங்களைப் பெறுவது சிரமமாக இருந்தது. வெளிநாட்டுக்கடன்கள் மூலம் மூலவளங்களாக 571 கோடியே 60 இலட்சம் ரூபா கிடைத்தன. இது முன்னைய ஆண்டில் கிடைத்ததை விட 37 சதவீதம் குறைவாகும். ஆக, சமீப வருடங்களில் வரவு செலவுத்திட்டப் பற்றுக்குறையில் சுமார் அரைவாசியை நிதிப்படுத்தி வந்த வெளிநாட்டுக் கடன்கள், 1987-ல் மூன்றிலொரு பகுதியை நிதிப்படுத்தவே போதியதாக இருந்தன. வங்கியல்லாத உள்நாட்டு மூலங்களிலிருந்து 639.9 கோடி ரூபா கிடைத்தது. இதுவும் 5 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. எனவே, பற்றுக்குறையை நிதிப்படுத்துவதற்கென இவ்வாண்டில், முன்னைய வருடங்களுக்கு மாறாக, பெருமளவிலான வங்கி மூலவளங்களைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. வங்கியமைப்பிலிருந்து 354.1 கோடி ரூபா பெறப்பட்டது.

பாரிய அளவில் செலவு நிகழ்ச்சித்திட்டங்களைக் கொண்ட அபிவிருத்தி மார்க்கமொன்றில் மிக வேகமாகச் செல்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளே பொருளாதாரத்தின் அமைப்பு ரீதியிலான பலவீனங்களின் பின்னணியிலிருந்த அடிப்படைக் காரணிகள் என்றும், 1987-ல் பொருளாதாரச் செயற்பாட்டில் அவதானிக்கப்பட்ட பல பாதகமான நிலைமைகளுக்கு இவையே வழிகோலின என்றும் இலங்கை மத்திய வங்கி அதன் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடுகிறது. உதாரணமாக 1987-ல் இலங்கைப் பொருளாதாரத்துக்கு கிடைக்கக்கூடியதாக இருந்த மொத்த மூல வளங்கள் 26,690 கோடி ரூபா வாகும். இதில் உள்நாட்டு மூலங்கள் 19,670 கோடி ரூபாவை (73.7 சதவீதம்) பங்களிப்புச் செய்தன. மிகுதி 7020 கோடி (26.3 சதவீதம்) ரூபாவுக்கும் இறக்குமதிகள் வகைகூறின. இந்த மொத்த மூலவளங்களில் தேசிய சேமிப்புக்கள் சமீப காலத்தில் 15 சதவீதம் அளவில் மட்டுமே பங்களிப்புச்செய்துள்ளன. கடந்த பத்தாண்டுக் காலத்தில் கிடைக்கக்கூடியதாக இருந்த மூலவளங்கள் (1978ன் விலைகளில்) 50 சதவீதத்தால் அதிகரித்துள்ளன; 1978-ல் 5930 கோடி ரூபாவிலிருந்து 1987-ல் 9120 கோடி ரூபாவாக அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் பாரிய மூலதனச்செலவுகளை மேற்கொண்டதனல் இவ்வதிகரிப்புக்கள் தேவையாக இருந்தன. ஆனல், தேசிய சேமிப்புக்கள் போதிய அளவில் இல்லாததால் தொடர்ந்தும் முன்னெப்போதுமிரா மட்டங்களிலான வெளிநாட்டு நிதிகளைக் கொண்டே இச்செலவுகள் நிதிப்படுத்தப்பட வேண்டியிருந்தன. இப்பின்னணியில் உள்நாட்டுச் செலவுகளின் வளர்ச்சி வேகம் மிதமிஞ்சியதாக இருப்பதாகவும் பொருளாதாரத்தினல் தாங்கமுடியாதது என்றும் கருதப்பட்டது.

மத்திய வங்கி அறிக்கையின் படி, 1987-ல் பொருளாதார

செயற்பாட்டில் பின்வரும் சாதக மான அம்சங்கள் அவதானிக் கப்பட்டன :

o சுரங்கமகழ்தல், கல் உடைத் தல் துறையில் 19 சதவிகித வளர்ச்சி பதிவுசெய்யப்பட்டது.

o தயாரிப்புத் துறையிலும் 7 சதவீத வளர்ச்சி காணப் பட்டது; குறிப்பாக தனியார் துறையில் சேர்க்கப்பட்ட பெறு மதி 13 சதவீதத்தால் அதி கரித்திருந்தது.

o 1987-ன் மொத்த ஏற்று மதிச் சம்பாத்தியங்களில் தயா ரிப்புத்துறை ஏற்றுமதிகளின் பங்களிப்பு 49 சதவீதம் வரை யில் உயர்ந்து சென்றிருந்தது. ஏற்றுமதி பதப்படுத்தல் வல யத்துக்கு உள்ளேயும் வெளியே யும் இருந்த கைத்தொழில் களுக்கு 1978-ன் பின்னர் வழங் கப்பட்ட பல்வகை ஊக்குவிப் புக்களின் விளைவாகவே இது சாத்தியமாகி இருப்பதுபோல் தெரிகிறது. ஆடை ஏற்றுமதி யில் காணப்பட்ட அதிகரிப்பு விசேஷமாக குறிப்பிடத்தக்க தாகும்.

o நிர்மாணத்துறையில் 1.8 சதவீத விரிவு ஏற்பட்டது; இருப் பிட உரிமையில் சேர்க்கப்பட்ட பெறுமதி வளர்ச்சி 2.5 சதவீத மாக இருந்தது.

o வங்கித்தொழில், காப் புறுதி மற்றும் மெய் ஆதனம் துறையில் சேர்க்கப்பட்ட பெறு மதியில் 8 சதவீத விரிவு காணப் பட்டது; வங்கித்துறையின் சிறந்த செயலாற்றுகையே இதற்கு பெருமளவில் காரண மாகும்.

o மொத்த, சில்லறை வியா பாரத்தில் சேர்க்கப்பட்ட பெறு மதியில் 2 - 8 சதவீத அதிகரிப்பு காணப்பட்டது.

o வர்த்தகம் மற்றும் நடை முறைக் கணக்கு நிலுவை என்ற இரு காரணிகளின் அடிப்படை யிலும் 1987-ல் இலங்கையின் சென்மதி நிலுவைகள் குறிப் பிடக்கூடிய முன்னேற்றத்தைக் காட்டின. பண்ட வியாபார கணக்கின் பற்றுக்குறை 1986-ல் 64 கோடியே 90 இலட்சம் எஸ்.டி.ஆர். களாக இருந்து, 1987-ல் 53 கோடியே 10 இலட் சம் எஸ்.டி.ஆர். களாக வீழ்ச்சி யடைந்தது. இந்த முன்னேற் றத்தைப் பிரதிபலிக்கும் விதத் தில், நடைமுறைக்கணக்கும் நல்ல செயற்பாட்டினைக் காட் டியது. இதில் முன்னைய ஆண் டில் 36.3 கோடி எஸ்.டி.ஆர். களாக இருந்த பற்றுக்குறை இவ்வாண்டில் 26.6 கோடி எஸ். டி.ஆர். களாக குறைந்திருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தி யில் நடைமுறைக்கணக்கு பற் றுக்குறை விகிதம் என்பது, சென்மதி நிலுவைகளின் பல வீன மட்டங்களை எடுத்துக் காட்டும் ஒரு குறிகாட்டியாகும். இவ்விகிதம் 1986-ல் 6.6 சதவீத மாக இருந்து 1987-ல் 5.2 சத விகிதமாக வீழ்ச்சியடைந்தது.

1987-ன் மிக மோசமான பொருளாதார செயற்பாடு, இன்னமும் வேளாண்மைத் துறையில் பெருமளவில் தங்கி யிருக்கும் பொருளாதாரமொன் றின் அமைப்புரீதியிலான பல வீனங்களை முக்கியமாக கோடிட் டுக் காட்டுகிறது என நிதி திட்ட மிடல் அமைச்சின் தேசிய திட்ட மிடல் பிரிவு இந்நிலைமை குறித்து கருத்து தெரிவித்துள்ளது. ''ஆயி னும், 1982 வரையில் பொரு ளாதார செயற்பாட்டில் காணப் பட்ட உற்சாகமூட்டும் நிலைமை யும், பொருளாதாரம் காட்டிய வளைந்து கொடுக்கும் ஆற்றலும் விவேக பூர்வமான பொருளா தார கொள்கைகள் பேணப் பட்டு, வழமை நிலை மீண்டும் உருவாக்கப்பட்டால் இந்த அமைப்பு ரீதியான பலவீனங் களுக்கு மத்தியிலும்கூட துரித மான வளர்ச்சி ஏற்படமுடியும் என்பதைக் காட்டுகின்றன'' என்று அது மேலும் தெவிக் கிறது.

''பொருளாதார நடவடிக் கைகள் 1989-ல் உண்மை நியதி களில் 5.5 சதவீத வளர்ச்சியை எடுத்துவருமென்று எதிர்பார்க் கலாம் என திட்டமிடல் பிரி வின் 1988 - 1992 காலத்துக் கான பொது முதலீட்டு நிகழ்ச் சித்திட்டம் கூறுகிறது. சாதக மான காலநிலை நிலவுவதற்கும், வடக்கிலும் கிழக்கிலும் பயங் கரவாத நடவடிக்கைகள் முடி வுக்கு வருவதற்குமான அறிகுறி கள் தென்படும் ஒரு நிலைமை யில் இந்த மதிப்பீடு மிக நியாய மானது என்றுதான் கூறவேண் டும்.'' 1989-க்கு பின்னரான வளர்ச்சி வீதங்கள் பொருளா தாரத்தில் உற்பத்தித் திறன்கள் சாதாரணமாக பயன்படுத்தப் படுகின்றன என்பதனைக் காட்ட வேண்டும். 1988 - 1992 காலத் தில் மொத்த உள்நாட்டு உற் பத்தி சராசரி 5.3 சதவீத வரு டாந்த வளர்ச்சியைப் பதிவு செய்யவேண்டுமென்பதே எதிர் பார்ப்பாகும்'' என்றும் இந் நிகழ்ச்சித்திட்டம் கூறுகிறது.

இலங்கைப் பொருளாதாரம் 1987-ல் செயற்பட்ட விதம் குறித்து குறிப்பாகவும், 1977-ன் பொருளாதார சீர்திருத்தங்களை அடுத்து வந்த பத்தாண்டுகளில் நமது பொருளாதாரம் கண்ட வெற்றி தோல்விகள் குறித்து பொதுவாகவும் அடுத்து வரும் பக்கங்களில் பகுப்பாய்வு செய் யப்படுகிறது.

### வேளாண்மை

கடற்றொழில், காட்டுத் தொழில், கால்நடை வளர்ப்பு என்பவற்றையும் உள்ளடக்கிய வேளாண்மைத்துறை, நாட் டின் மொத்த உள்நாட்டு உற் பத்திக்கு தொடர்ந்து மூன்றி லொரு பகுதியை பங்களிப்புச் செய்து வந்திருக்கிறது. இலங் கைப் பொருளாதாரத்தில் முன் னணி இடம்பெறும் துறையாக வும் அது இருந்திருக்கிறது. 1986, 1987 ஆகிய இரண்டு வருடங்களிலும் மொத்த உள் நாட்டு உற்பத்திக்கான இத் துறையின் பங்களிப்பு 25 சத வீதமாக இருந்திருப்பதுடன்

ஏற்றுமதிச் சம்பாத்தியங்களில் 40 சதவீதத்தினை இத்துறையே ஈட்டிக்கொடுத்தது. மொத்த அரச வருவாய்களில் 15 சத விகிதத்தை இத்துறை உருவாக்கிக் கொடுத்திருப்பதுடன், ஊழியர் படையில் 45 சதவீதத்தினருக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கியிருக்கிறது. பொருளாதாரத்தின் ஏனைய துறைகளின் அபிவிருத்தியிலும் இத்துறை தாக்கமான செல்வாக்கினைச் செலுத்துகிறது. கடந்த பத்தாண்டு காலத்தில் (1978-1987) வேளாண்மைத்துறை உற்பத்தி வருடாந்தம் 3.3 சதவீதம் வளர்ந்துவந்துள்ளது. வேளாண்மைத் துறையின் பிரதான துணைத்துறைகளின் வளர்ச்சி: ஏற்றுமதிப்பயிர்கள் 24 சதவீதம்; நெல் 20 சதவீதம்; ஏனைய பயிர்கள் 40 சதவீதம்; கடற்றொழில் மற்றும் காட்டுத்தொழில் 16 சதவீதம்; நெல், உப உணவுப்பயிர்கள், பணப் பயிர்கள், கால்நடை வளர்ப்பு, விட்டுத்தோட்டம் என்பவற்றை உள்ளடக்கிய உள்நாட்டு வேளாண்மை உப துறை மட்டும் மொ. உ. உற்பத்தியில் 18 சதவீதப் பங்கினைப் பெறுகிறது.

கடந்த பத்தாண்டு கால வேளாண்மைத் துறையின் உப துறைகளின் செயற்பாடுகளை ஒப்பீட்டு ரீதியில் நோக்கினால், முன்னைய வருடங்களின் செயற்பாட்டுடன் ஒப்பிடும்போது 1987-ல் காட்டுத்தொழில் மட்டுமே சிறந்த செயற்பாட்டைக் காட்டியது. எனினும் காட்டுத்தொழிலின் பங்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.2 சதவீதமாக மட்டுமே இருப்பதால், இந்த பிரிவில் ஏற்படும் வளர்ச்சி பாரிய தாக்கமொன்றை ஏற்படுத்த முடியாது. ஏனைய துறைகள் அனைத்தும் 1987-ல் கவலையூட்டும் செயற்பாட்டையே காட்டின.

இப்போக்குகளை அடியொற்றி பெருந்தோட்டத்துறை உற்பத்தி 14 சதவீதம் வீழ்ச்சியடைந்தது; அதேவேளையில் 1987-ல் நெல் துறையில் ஏற்பட்ட உற்பத்தி வீழ்ச்சி 18 சதவீதமாகும். இந்த மோசமான செயற்பாடுகள் அனைத்தும் சேர்ந்து முழு வேளாண்மைத் துறையிலும் 1987-ல் 6 சதவீத வீழ்ச்சிக்கு வழிகோலியது.

மொத்த தேசிய உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கத்தையும், (நிலையான விலைகளில்) சேர்க்கப்பட்ட பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்களையும் நோக்கும்போது, முழு வேளாண்மைத்துறையும் 1985ல் பவற்றில் சேர்க்கப்பட்ட பெறுமதி முறையே 14 சதவீதத்தாலும் 4 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தது, ஆனால், வேளாண்மையில் சேர்க்கப்பட்ட பெறுமதி 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. பெருந்தோட்டத் துறையில் தேயிலை உற்பத்தி 8 சதவீதத்தால் அதிகரித்த அதேவேளையில், இறப்பர் உற்பத்தி 11 சதவீதத்தாலும், தெங்கு உற்

அட்டவணை 1

**மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைவாரியான உள்ளடக்கம்**

| | 1978 | 1979 | 1980 | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. விவசாயம் | 26.0 | 25.0 | 25.8 | 24.6 | 24.0 | 26.4 | 25.0 | 25.9 | 25.5 | 24.0 |
| 2. பெருந்தோட்டம் | 6.4 | 6.2 | 5.3 | 5.4 | 5.2 | 6.2 | 5.8 | 6.8 | 6.6 | 5.6 |
| (அ) தேயிலை | 2.3 | 2.2 | 1.9 | 2.0 | 1.7 | 2.3 | 2.6 | 2.5 | 2.4 | 2.4 |
| (ஆ) இறப்பர் | 1.3 | 1.2 | 1.0 | 0.9 | 0.8 | 0.9 | 0.8 | 0.8 | 0.7 | 0.7 |
| (இ) தென்னை | 2.8 | 2.8 | 2.4 | 2.5 | 2.6 | 3.0 | 2.4 | 3.5 | 3.4 | 2.6 |
| 3. உள்நாட்டு | | | | | | | | | | |
| (அ) நெல் | 6.4 | 6.1 | 6.5 | 6.3 | 5.8 | 6.4 | 5.9 | 6.2 | 5.8 | 4.7 |
| (ஆ) ஏனையன | 11.2 | 10.6 | 10.4 | 9.8 | 10.8 | 9.4 | 9.6 | 9.4 | 9.5 | 9.6 |
| 4. கடற்றொழில் | 1.2 | 1.2 | 1.2 | 1.3 | 1.3 | 2.5 | 1.8 | 1.8 | 1.8 | 1.9 |
| 5. காட்டுத்தொழில் | 0.9 | 0.9 | 0.9 | 0.9 | 0.9 | 1.8 | 1.8 | 1.8 | 1.7 | 1.9 |

* மொ. உ. உ. யின் சதவீதமாக ஒவ்வொரு துறையினதும் பங்கு

8.6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்திருந்ததனை காண முடிகிறது. இது 1986-ல் 2.6 சதவீதமாகவும், 1987-ல் 5.8 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்திருந்தது. நெல், தென்னை என்பவற்றின் குறைந்த உற்பத்தி மட்டங்களே இதற்கான பிரதான காரணமாகும். காட்டுத்தொழில், கடற்றொழில் என் பத்தி 27 சதவீதத்தாலும் வீழ்ச்சி கண்டது, உணவுப் பயிர்த்துறையில் நெல் உற்பத்தி 18 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

வேளாண்மை உப துறைகள் ஒவ்வொன்றும் ஒரே சீரான பங்களிப்பை வழங்கவில்லை. ஆண்டுக்கு ஆண்டு பங்களிப்பு வீதங்

அட்டவணை 2

**விவசாயத்துறையில் வளர்ச்சி விகிதங்கள் (1978-1987)**

| | 1978 | 1982 | 1982 | 1987 | 1986 | 1987 |
|---|---|---|---|---|---|---|
| 1. விவசாயம் | 3.1 | | 0.9 | | 3.6 | -5.8 |
| 2. பெருந்தோட்டம் | 0.3 | | 1.0 | | 1.0 | -13.7 |
| (அ) தேயிலை | -1.2 | | 3.8 | | -1.3 | 1.0 |
| (ஆ) இறப்பர் | -3.8 | | -0.1 | | 0.6 | -10.6 |
| (இ) தென்னை | 3.5 | | -0.8 | | 2.8 | -24.6 |
| 3. உள்நாட்டு | | | | | | |
| (அ) நெல் | 2.7 | | -2.8 | | -2.5 | -18.0 |
| (ஆ) ஏனையன | 4.2 | | 3.7 | | 6.1 | 1.7 |
| 4. கடற்றொழில் | 8.0 | | -2.7 | | 8.9 | 3.8 |
| 5. காட்டுத்தொழில் | 5.2 | | 4.4 | | 1.8 | 13.1 |

களில் தளம்பல்கள் காணப்பட்டன. பாரம்பரியமற்ற பயிர்களின் விஷயத்தில் மட்டும் விவசாய மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான அத்துறையின் பங்களிப்பு 1978/87 காலத்தில் ஒருபோதும் எதிர்க்கணிய நிலையில் இருக்கவில்லை. ஏனைய அனைத்து உப துறைகளும் இப்பத்தாண்டு காலத்தில் ஏதோ ஒரு கட்டத்தில் எதிர்க்கணிய பங்களிப்பை கொடுத்துள்ளன.

### நெல்

நெல் எப்பொழுதும், களப்பயிர்த்துறைகளின் பிரதான அங்கம் ஒன்றாக இருந்து வந்துள்ளது. அத்துடன் சுமார் 500,000 பேருக்கு அது வேலை வாய்ப்புக்களையும் வழங்கியுள்ளது. நெல் உற்பத்தி 1988-ல் 18 சதவீதமாக வீழ்ச்சியடைந்து 21 இலட்சம் மெட்ரிக் தொன்களாக இருந்தது. மேலும், நெல் உற்பத்தி அடுத்தடுத்து வீழ்ச்சியைப் பதிவுசெய்த இரண்டாவது வருடம் இதுவாகும். 1987-ன் உற்பத்தி 1979-க்கு பின்னர் பதியப்பட்ட மிகக் குறைந்த உற்பத்தியாகும். நாட்டின் பல பாகங்களிலும் தொடர்ந்து வறட்சி நிலவி வந்தமையே 1987-ல் நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்தமைக்கான பிரதான காரணமாகும். நீர்த் தட்டுப்பாடு பயிர்ச்செய்கை ஆரம்பமாவதை தாமதப்படுத்தியது மட்டுமன்றி விளைவிக்கப்பட்ட பரப்பளவினையும் குறைத்தது. அத்துடன் உரப்பாவனை குறைந்து அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பின் அளவும் வீழ்ச்சியடைந்திருந்தது. இவையனைத்தும் சேர்ந்து 1986/87 மகா பருவத்திலும் 1987 யால பருவத்திலும் குறைவான உற்பத்தி ஏற்பட வழிகோலின. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சகஜ நிலை காணப்படாததும் விவசாய உற்பத்தியைப் பாதித்துள்ளது. சாகுபடி செய்யப்பட்ட நிலப்பரப்பில் 290,000 ஏக்சர் வீழ்ச்சி காணப்பட்டது ஒருபுறமிருக்க, விதைக்கப்பட்ட 90,000 ஏக்கர் பரப்பு வரட்சி காரணமாக முதிர்வுநிலையை அடையவில்லை.

சராசரி விளைச்சல் 1977-1987 காலத்தில் உயர்ந்துசெல்லும் போக்கொன்றை காட்டியுள்ளது. இது 1977—ல் ஏக்கரொன்றுக்கு 48.7 புசல்களாக இருந்து 1987-ல் 68.2 புசல்களாக அதிகரித்திருக்கிறது. எனினும், சராசரி விளைச்சலில் காணப்பட்ட அதிகரிப்புக்கள் பெரும்பாலும் பாரிய நீர்ப்பாசன பிரதேசங்களிலேயே ஏற்பட்டுள்ளன. இப்பகுதிகள் 1986/87 பருவத்தில் அதிக அளவில் வளமாக்கிகளை பாவித்துள்ளன. உரப்பாவனை 1977—ல் 123,000 மெட்ரிக் தொன்களிலிருந்து 1986-ல் 232,000 மெட்ரிக் தொன்களாக அதிகரித்திருக்கிறது. வறட்சி நிலவிய காரணத்தினாலேயே 1987-ல் இதில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தினால் சான்றிதழ் வழங்கப்பட்ட நெல் விற்பனை 1977-ல் 100,000 புசல்களாக இருந்து 1985-ல் 225,000 புசல்களாக அதிகரித்தது. தனியார்துறை அதிகளவில் பங்கெடுத்ததனாலும், 1987-ல் வறட்சி நிலவியமையினாலும் 1986-லும் 1987-லும் விநியோகங்கள் குறைவதற்கு காரணமாகும். உற்பத்திச் செலவில் ஏற்படும் அதிகரிப்புக்களைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் கடந்த பல வருடங்களில் அவ்வப்போது நெல்லுக்கான உத்தரவாத விலையை அதிகரித்து வந்துள்ளது. உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ், 1977 நவம்பரில் புசல் ஒன்றுக்கான விலை ரூ. 33 ஆக இருந்து ரூ 40 ஆக உயர்த்தப்பட்டது. குறிப்பாக, உழைப்பு,பண்ணைச்சக்தி போன்றவற்றின் செலவுகள் உயர்ந்து உற்பத்திச் செலவு அதிகரித்தமையால் புசல் ஒன்றுக்கான விலை 1980 நவம்பரில் ரூ. 50 ஆக உயர்த்தப்பட்டது. உரவிலைகள், மற்றும் செலவுகளில் ஏற்பட்டு வந்த அதிகரிப்புக்களுக்கு ஈடு கொடுக்கும் விதத்தில் நெல்லின் உத்தரவாத விலை 1980-ல் ரூ. 57.50 ஆகவும், 1982-ல் ரூ. 62.50 ஆகவும், 1986-ல் ரூ. 70.00 ஆகவும் உயர்த்தப்பட்டுக்கொண்டு வந்தது.

பிரதான நீர்ப்பாசன பிரதேசங்கள் மற்றும் சிறிய நீர்ப்பாசனத்திட்டப் பிரதேசங்களின் செறிவான பயிர்ச்செய்கையை மேற்கொள்வதிலேயே நெல்லுற்பத்தி அதிகரிப்பு பெருமளவில் தங்கியிருக்கிறது. காலநிலை நிலைமைகள் சீராக இருக்கும் பட்சத்தில் நெல் உற்பத்தி வருடாந்தம் 4 சதவீதம் வளர்ச்சியடைந்து 1992-ல் 14 கோடி புசல்களை அடையுமென உத்தியோக பூர்வ மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

செயற்பாடு சிறப்பாக விளங்கிய வருடங்களையும் உள்ளடக்கியதான வேளாண்மைத்துறையின் வருடாந்த வளர்ச்சி, ஒரு சில துறைகளின் பங்களிப்பினால் மட்டுமே ஏற்பட்ட விளைவு என்பதனை அவதானிக்க முடிகிறது. அனைத்து துறைகளும், சேர்க்கப்பட்ட பெறுமதிக்கு நோக்கணிய பங்களிப்பினை நல்கிய எந்த ஒரு தனி வருடத்தையும் காண முடியவில்லை. இந்நிலைமை காலநிலை, விலைகள், உற்பத்தி, செலவுகள், உள்நாட்டு, வெளிநாட்டுக் கேள்வி, உள்ளீடுகள் கிடைக்குந்தன்மை, அரசாங்க கொள்கைகள் போன்ற பல்வேறு சிக்கலான கூட்டுக்காரணிகளினாலேயே நிர்ணயிக்கப்படுகிறது.

### ஏனைய களப்பயிர்கள்

நெல் தவிர்ந்த ஏனைய களப்பயிர்களின் கீழ் இருந்த நிலப்பரப்பின் அளவும் கடந்த பத்தாண்டு காலத்தில் உயர்ச்சிப் போக்கினைக் காட்டியுள்ளது. ஈரலிப்புள்ள மகா பருவத்தின் போது உயர் வலயத்திலும், இடைத்தர வலயத்திலும் அமைந்துள்ள சேனைகளிலும் வீட்டுத் தோட்டங்களிலும் பொதுவாக பயிரிடப்படும் மிளகாய், வெங்காயம், எண்ணெய் விதைகள், வேர்கள் போன்ற பல்வேறு விதமான பயிர்களின் தொகுதியை ஏனைய களப்பயிர்கள் என்ற பிரிவு உள்ளடக்குகிறது. மிளகாய், வெங்காயம்

அட்டவணை 3

மரப்பயிர்த்துறையின் செயலாற்றுகை

| | 1978 | 1987 |
|---|---|---|
| ஏற்றுமதிச் சம்பாத்தியங்களில் பங்கு | 73% | 37% |
| அரச வருமானத்தில் பங்கு | 41% | 4.4% |
| உற்பத்தி | | |
| தேயிலை (பத்து இலட்சம் கி. கி.) | 199 | 213.3 |
| இறப்பர் ( " ) | 156 | 121.5 |
| தென்னை (பத்து இலட்சம் காய்கள்) | 2,209 | 2,292 |

போன்ற உயர் பெறுமதிமிக்க பயிர்கள் நீர்ப்பாசனத் திட்டப் பிரதேசங்களிலும், குறிப்பாக மகாவலி செய்திட்டத்தினல் பயன்பெறும் பிரதேசங்களிலும் பயிரிடப்பட்டு வருகின்றன. இத்தகைய எட்டு வகைப் பயிர்களுக்கு அரசாங்கம் கீழ்மட்ட விலைத்திட்டத்தை அறிவித்துள்ளது. விவசாயிகள் உற்பத்தித் தீர்மானங்களை எடுப்பதற்கு உதவும் வகையில் பயிர்ச்செய்கைப் பருவம் தொடங்க முன்னரேயே இவ்விலைகளை அரசாங்கம் அறிவித்தது.

இப்பயிர்கள் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 1987-ம் வருடத்தில் 1986-ன் அளவை விட ஒரு சிறு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. மழை நீரை நம்பிய மிளகாய் உற்பத்தி நிலப்பரப்புக்களை வறட்சி பாதித்தமையாலேயே மிளகாய் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டது. வெங்காயம், நிலக்கடலை, பயறு, தட்டைப்பயறு போன்றவை பயிரிடப்பட்ட நிலப்பரப்புக்கள் கூட்டுமொத்த அதிகரிப்பினைப்பதிவு செய்தன. உள்நாட்டு உற்பத்திக்கு குறை நிரப்புச்செய்யும் வகையில்வெங்காயம்,மிளகாய் என்பனவழமையாக இறக்குமதி செய்யப்பட்டு வந்துள்ளன. ஆனல், இப்பொருட்களின் இறக்குமதி அளவும், பெறுமதியும்வீழ்ச்சியடைந்திருக்கிறது.

பயறு, தட்டைப்பயறு, சோளம், சின்ன வெங்காயம், உளுந்து போன்ற பயிர்கள் பயிரிடப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட விஸ்தரிப்பு காரணமாக **1987 பயிர்ச்செய்கை வருடத்தில் உற்பத்தி அதிகரிப்புக்கள் பதிவு** செய்யப்பட்டுள்ளன. இவ்வாண்டில் கடுமையானவறட்சிநிலைமைகள் நெற்பயிர்ச்செய்கையை கடுமையாக பாதித்ததால் பல உயர் வலய விவசாயிகள் சிறு உணவுப்பொருட்களைப் பயிர் செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். குறைந்தபட்சவருமானத்தையும் உணவுப் பாதுகாப்பையும் பெறும் பொருட்டே அவர்கள் இவ்விதம் செய்தனர்.

உயர் பெறுமதி கொண்ட சிறு உணவுப் பொருள் வகையில் சின்ன வெங்காயம் மட்டுமே உற்பத்தி அதிகரிப்பைக் காட்டியது. உருளைக்கிழங்கு, மிளகாய், பம்பாய் வெங்காயம் போன்றவற்றின் உற்பத்திவீழ்ச்சியடைந்தது. வறட்சி நிலைமைகள்காரணமாக மிளகாய் உற்பத்தி 39 சதவீதம் வீழ்ச்சியடைந்தது. சிறு உணவுப் பயிர்த்துறைக்கான உர விநியோகம் 1987-ல் 6 சதவீதம் அதிகரித்து 20,207 மெட்ரிக் தொன்களாக இருந்தது.

சின்ன வெங்காயம், பயறு, தட்டைப்பயறு, உளுந்து, சோளம் என்பவற்றின் உற்பத்தி 1986/87 மகா பருவத்தில் கணிசமான அளவில் அதிகரித்தது. இவற்றுள் பல பயிர்கள் யால 1987 பருவத்திலும் நியாயமான உற்பத்தி அதிகரிப்புக்களைக்காட்டின. யால பருவத்தில் தட்டைப் பயறு உற்பத்தி 60 சதவீத அதிகரிப்பினைக் காட்டியதுடன் உளுந்து உற்பத்தி மூன்றுமடங்கு அதிகரித்திருந்தது. சோயா அவரை உற்பத்தி மகா பருவத்தில் 3 சதவீதத்தாலும், யால பருவத்தில் 24 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்திருந்தது.

சிறு உணவுப்பயிர்த்துறை பரவலான அபிவிருத்தி வாய்ப்புக்களைக் கொண்டிருந்த போதிலும், இத்துறையின் அபிவிருத்தியில் பல தடங்கல்கள் தென்படுவதாக மத்திய வங்கி குறிப்பிடுகிறது. சார்பு ரீதியில், குறைந்த அளவிலான நிறுவன ரீதியிலான ஒத்துழைப்பு, வித்தியாசமான விவசாய-சூழல் பிராந்தியங்களுக்கு பொருத்தமான விதை வகைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கிடைக்கும் தன்மை, சந்தைப் பிரச்சினைகள் போன்ற பிரச்சினைகளையும் இவை உள்ளடக்குகின்றன. ஓரளவுக்கு இக்காரணிகளின் விளைவினலேயே பல விவசாயிகள் இன்னமும் நெல் உற்பத்தி செய்வதனை அதிகம் விரும்பி வருகிருர்கள்: நாடு இப்பொழுது நெல்லுற்பத்தியில் தன்னிறைவை நோக்கிச் செல்வதனல் வேளாண்மைத் துறையில் சமநிலை வளர்ச்சியொன்றை எய்தும் பொருட்டு, கொள்கை நடவடிக்கைகளுக்கூடாக இவ்விருப்பத்தெரிவு மாதிரியை மாற்றவேண்டிய தேவையுள்ளது.

## சீனி

உள்நாட்டு விவசாயத்தின் மற்ெறாரு முக்கிய பிரிவான சீனி உற்பத்தித் துறையும் 1987-ல் வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. உச்ச மட்ட உற்பத்தி அளவான 34,325 மெட்ரிக் தொன் 1986-ல் பதிவு செய்யப்பட்டிருந்த அதே வேளையில், 1987-ல் உற்பத்தி 15 சத வீதத்தால் விழ்ச்சியடைந்து 29,304 மெட்ரிக் தொன்களாக இருந்தது. இலங்கை சீனிக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி 29 சத வீதத்தால் கணிசமான அளவில் விழ்ச்சியடைந்து 15,035 மெட்ரிக் தொன்களாக இருந்தது. அதே வேளையில் தனியார் துறை உற்பத்தி, 1986-ல் 13,116 மெட்ரிக் தொன்களாக இருந்து 1987-ல் 14,269 மெட்ரிக் தொன்களாக அதிகரித்திருந்தது,

கந்தளாய் மற்றும் செவனகல தொழிற்சாலைகளில் குறைந்த உற்பத்தி நிகழ்ந்தமையே சீனிக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி வீழ்ச்சியடைவதற்கான பிரதான காரணமாக இருந்தது. கந்தளாய் தொழிற்சாலையின் உற்பத்தி 1987-ல் 66 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்து 2288 மெட்ரிக் தொன்களாக இருந்தது. செவனகல தொழிற்சாலை உற்பத்தி 37 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்து 4107 மெட்ரிக் தொன்களாக இருந்தது. எனினும், ஹிங்குரான தொழிற்சாலையில் உற்பத்தி 9 சத வீதத்தால் அதிகரித்து 1981-ல் 8,640 மெட்ரிக் தொன்களாக இருந்தது. தொடர்ச்சியாக வறட்சி நிலவி வந்தமை கரும்பு வழங்கலை கடுமையாக பாதித்தது. அத்துடன்கிடைத்த கரும்பின் தரமும் வெகுவாக குன்றியிருந்தது. மேலும், உள்நாட்டுக்குழப்பங்கள் கந்தளாய், ஹிங்குரானை தொழிற்சாலைகளின் உற்பத்தியைப் பாதித்தன- பயங்கரவாத நடவடிக்கைகளினாலும், தொழிலாளர் பற்றாக்குறை நிலவியமையாலும் கரும்பு விளைவிக்கப்பட்ட பெருமளவு நிலப்பரப்புக்களில் அறுவடை செய்ய முடியவில்லை, பெல்வத்தை சீனித் தொழிற்சாலையின் உற்பத்தியும் வறட்சியினால் மிக மோசமாக, பாதிப்படைந்தது. இத் தொழிற்சாலையின் 1987 ம் வருடத்துக்கான உற்பத்தி இலக்கு 32,000 மெட்ரிக் தொன்களாக இருந்தபோதிலும், 14,269 மெ. தொன்களை மட்டுமே உற்பத்தி செய்ய முடிந்தது.

**மீன்**

கடற்றொழில், கால்நடை வளர்ப்பு என்பன விவசாயத்தின் உப துறைகளாகும். மதிப்பிடப்பட்ட மீன் உற்பத்தி 1987-ல் 190,002 மெட்ரிக் தொன்களாக, முன்னைய வருட அளவை விட 4 சத வீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது. ஆனால், உள்நாட்டு உற்பத்தி கேள்வியைவிட இன்னமும் மிகக் குறைந்த மட்டத்திலேயே இருக்கிறது. இத்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் பல.

மீன்பிடித் துறையின் கூட்டு மொத்தச் செயற்பாடு எதிர்பார்ப்புக்களைவிட மிகக் குறைந்த மட்டத்திலேயே நிலைத்திருந்தது. விநியோகம் செய்யும் பிரச்சினைகள், உயர் எரி பொருள் செலவுகள், மீனைப் பாதுகாப்பதற்குஆகும் உயர்ந்த செலவு, போதிய அளவில் மீன் கிடைக்காமை போன்ற காரணிகள் அனைத்தும் சேர்ந்து இவ்வாண்டில் மீன் விலைகளில் அதிகரிப்புக்களை கொண்டுவந்தன. நுசர்வோர் விலைகள் தொடர்ந்தும் அதிகரித்துவரும் அதே வேளையில், மீனவர்கள் பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்களாகவே தொடர்ந்தும் இருந்து வருகிறார்கள். இதற்கு காரணம் உயர்ந்த விலைகளின் அனுகூலங்கள் இவர்களைச் சென்றடையாமையாகும். ஆகவே, உற்பத்தியை அதிகரிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அதேவேளையில், இந்த முயற்சிகளின் பலாபலன்கள் உற்பத்தியாளரைச் சென்றடைவதனை உறுதி செய்யும் பொருட்டு நலன்களின் பகிர்வு குறித்து கூடிய கவனஞ் செலுத்தப்படுதல் வேண்டும். சார்புரீதியில் குறைந்த சமூக-பொருளாதார அந்தஸ்து கொண்ட கடற்றொழிலாளருக்குப் பல வருடங்களாக அமுலில் இருந்து வரும் பல்வேறு மானியத் திட்டங்களும் எந்த அளவுக்கு உதவியுள்ளன என்பதனை கண்டறிந்து மதிப்பிடுவதற்கு இந்த மானியத்திட்டங்களைப் பகுப்பாய்வு செய்யும் தேவை இப்பொழுது எழுந்துள்ளது.

**காட்டுத் தொழில்**

விவசாயத்துறையின் மற்றுமொரு உப பிரிவு காட்டுத் தொழில். இத்துறையின் உற்பத்தியும், பாதுகாப்பும் இப்பொழுது அதிக கவனத்தைப் பெற்று வருகிறது. பாரிய காடு வளர்ப்பு செய்திட்டமொன்றும் துவக்கிவைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டம் பற்றிய விவரங்கள் இங்குள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன. பெருந்திட்டத்தின் கீழான புதிய செய்திட்டம் முடிவாக்கப்பட்ட பின்னரேயே 1990-92 காலத்துக்கான உண்மையான இலக்குகள் தெரிய வரும்.

**காடுவளர்ப்பு நிகழ்ச்சித்திட்டம்**

| திட்டம் | காடாக்கப்படும் பரப்பளவு 1977-1987 | 1988-1992 காலப் பகுதியில் உத்தேச காடுவளர்ப்பு பரப்பளவு (ஹெக்டயார்) |
|---|---|---|
| 1. புறக்கணிக்கப்பட்ட தேயிலை, இறப்பர் காணிகளில் காடுவளர்ப்பு | 5546 | 80* |
| 2. தே. வி. மா. கு. அ. ச. (நட்சா) | 2801 | 1981 ல் பூர்த்தியானது |
| 3. மேல் மகாவலி | 8310 | 750* |
| 4. விறகு செய்திட்டம் | 10207 | ஜூன் 1988ல் பூர்த்தியாகும் |
| 5. சிங்கராஜ உயிரியல் ஒதுக்கு | 871 | 40* |
| 6. சமூக காடுவளர்ப்பு | 7163 | 2900** |
| 7. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டங்கள் | 4352 | 850* |
| 8. கிராம அபிவிருத்தி | 2014 | 3000** |
| 9. கூட்டுத்தாபன மீள் வனமாக்கல் செய்திட்டம் | 27500 | பூர்த்தியானது |
| 10. மீள்வனமாக்கலும் அபிவிருத்தியும் | 192 | 192* |

*இலக்கு 1988-க்கு மட்டும். **இலக்கு 1988, 1989 க்கு மட்டும்.

மீள்வனமாக்கலில் 1987 வரை அடையப்பட்ட முன்னேற்றமும் 1988-89 நிகழ்ச்சித் திட்டமும் மேலே தரப்பட்டுள்ளது. 1990-1992 காலத்துக்கான இலக்குகள் பெருந் திட்டத்தின் கீழான செய்திட்டம் பூர்த்தியானதும் கிடைக்கும்.

# முதலீடுகளும் அபிவிருத்தியும்

பொருளாதாரத்தின் கூட்டு மொத்த வளர்ச்சி 1983-1987 காலப்பிரிவில் 5:5 சதவீதமாக இருக்க வேண்டுமென முன்னர் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 1983-ம் ஆண்டுக்குப்பின்னர் பொருளாதார நடவடிக்கைகளில் வேகம் குறைந்திருந்ததனல் சராசரி வளர்ச்சி 4.1 சதவீதமாகவே இருந்தது. வளர்ச்சியில் இவ்விதம் பாதகமான போக்குகள் நிலவியதன் விளைவாக வேலைவாய்ப்பு நிலைமை பலவீனமடைந்தது. வேலையில்லாத்திண்டாட்டம் கடுமையாக உணரப்பட்ட ஒரு சூழ்நிலையில் அதனைச் சமாளிக்கக்கூடிய வகையில் தொழில் வாய்ப்புக்களைப் பெருக்குவதற்கு இக்காலப் பகுதியில் போதிய முதலீடுகள் இடப்படவில்லை. ஒவ்வொரு வருடமும் 159,000 பேர் ஊழியர் படையில் சேருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, துரிதமான தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கம் பொருளாதார வளர்ச்சியின் ஒரு பிரதான அங்கம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 86 சதவீதத்துக்கும் கூடிய பகுதி (தனியார் துறை, அரசதுறை) நுகர்வுக்கே பயன்படுத்தப்பட்டது. ஆக, ஐந்து வருட காலத்தில் உள்நாட்டுச் சேமிப்புக்கள் 14 சதவீதமாகவே இருந்தன. வெளியிலிருந்து வந்த நிதிகள் மொ. உ. உ.யின் 11 சதவீதமாக இருந்ததனல் முதலீடு மொ. உ. உ. விகிதத்தை 25 சதவிகிதமாக வைத்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது. (வெளிநாட்டிலிருந்து வரும் தனியார் தேறிய மாற்றுதல்களையும் உள்ளடக்கியதாக இருக்கும்) தேசிய சேமிப்புக்கள் என்ற முறையில் பார்த்தால் முதலீடுகளை நிதிப்படுத்துவதற்கு 16 சதவீத தேசிய மூலவளங்களும், 9 சதவீத வெளிநாட்டு மூலவளங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

எனினும், 1983-க்கு பிறகு முதலீட்டு நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கொன்றையே அனைத்துக் குறிகாட்டிகளும் வெளிப்படுத்துகின்றன. இனக்கலவரங்கள் மூண்ட ஜூலை 1983-க்கு முன்னரும் கூட மந்தப்போக்கொன்று தோன்றிவருவதற்கான அடையாளங்கள் தென்படத் தொடங்கியிருந்தன. தொடர்ச்சியான உள்நாட்டுக் கலவரங்கள் இப்போக்கினை துரிதப்படுத்த உதவின. தனியார் முதலீடு-குறிப்பாக சுற்றுலாத்துறை மீதான முதலீடு-கடுமையாக பாதிக்கப்பட்டது. இந்நிலைமைகளின் கீழ், சில வெட்டுகளுக்கு மத்தியிலும் கூட பொருளாதார நடவடிக்கைகளில் ஒரு வேகப் போக்கை நிலைநிறுத்தக் கூடிய விதத்தில் பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் அமைந்திருந்தது.

மத்திய அரசாங்கத்தின் மூலதனச் செலவுகள் 1983-87 காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 13 சதவீதத்திலிருந்து 15 சதவீதம் வரையில் வேறுபட்டிருந்தன. இச்செலவுகள் பகிரப்பட்ட விதமும் கடந்த ஐந்தாண்டு காலத்தில் மாற்றமடைந்து வந்துள்ளது. விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம் என்பவற்றுக்கான ஒதுக்குகள் 46 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாக வீழ்ச்சியடைந்தன. பொருளாதார சமூக கட்டமைப்புக்களுக்கான ஒதுக்கு 41 சதவீதத்திலிருந்து 63 சதவீதமாக உயர்ந்தது. கைத்தொழில்களுக்கான ஒதுக்குகள் மிகக்குறைந்த மட்டத்தில் 1 சதவீதமாக இருந்தன.

நவம்பர் 1977-ல் புதிய பொருளாதார கொள்கைகள் அறிமுகம் செய்யப்பட்டமையானது அடுத்து வந்த வருடங்களில் பெருமளவில் முதலீடுகள் இடப்படுவதற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் வழி கோலியது. பொருளாதார நடவடிக்கைகள் செழிப்புற்றதனையடுத்து மூலவளங்கள் மீதான அமுக்கம் அதிகரிக்கத்தொடங்கியது. மூலவளங்களுக்கான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குப் போதிய அளவில் உள்நாட்டுச் சேமிப்புக்கள் இருக்கவில்லை. ஆகவே, வெளிநாட்டுச் சேமிப்புக்களிலிருந்தும், வெளிநாட்டுச் சொத்துக்களை ஓரளவுக்கு எடுப்பதன் மூலமுமே புதிய முதலீடுகளுக்கான பணத்தினைப் பெற வேண்டியிருந்தது. பொருளாதார வளர்ச்சிக்கும், பொருளாதார ஸ்திரத்தன்மைக்கும் இடையில் ஒரு சமநிலையைப் பேணிக்கொள்வதற்கு 1978-ன் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட நாணயக்கொள்கைகள் முயற்சி செய்ய வேண்டியிருந்தன. குறித்த சில நாணய இலக்குகளை எய்துவதற்கென அதிகாரிகள் நிர்வாக நடைமுறைகளை அடிக்கடி கடைப்பிடித்தனர்.

நாட்டின் மூலவள நிலைமை குறித்து தற்பொழுது கணிசமான அளவுக்கு நிச்சயமின்மை தென்பட்டு வருவதாக நிதி, திட்டமிடல் அமைச்சின் திட்டமிடல் பிரிவு குறிப்பிட்டுள்ளது. அடிக்கடி மாறுபட்டுச் செல்லும் வெளிநாட்டுக் காரணிகளினாலும், நாட்டுக்குள் சகஜ நிலைமை காணப்படாததனாலுமே இந்நிலைமை தோன்றியுள்ளது. உள்நாட்டுச் சேமிப்புக்கள் போதிய அளவில் இல்லாதிருப்பதே நீண்டகால ரீதியிலான பிரதான பிரச்சினையாக இருக்கிறது. வருமானங்களிலும் வேலைவாய்ப்புக்களிலும் நியாயமான வளர்ச்சி மட்டங்களைப் பேணிக்கொள்வதற்கென கடந்த தசாப்தத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் நல்ல பெறுபேறுகளை எடுத்து வந்திருக்கின்றன. என்றாலும் சுய சார்பு வளர்ச்சிக்குறிக்கோளை நாடு அண்மிக்கும்

## மொத்த மூலவளங்களும் அவற்றின் பாவனையும் (ரூ. நூறு கோடி)

| | 1987 | 1988 | 1989 | 1992 | 1988–92 |
|---|---|---|---|---|---|
| 1. மொத்த மூலவளங்கள் | 216.9 | 244.8 | 270.7 | 352 | 1487.3 |
| | (110) | (110) | (109) | (108) | 108) |
| (அ) சந்தை விலைகளில் மொ. உ. உ. | 196.7 | 223 | 249.4 | 331 | 1380.1 |
| | (100) | (100) | (100) | (100) | (100) |
| (ஆ) பொருட்கள் மற்றும் காரணியல்லா சேவைகளின் தேறிய இறக்குமதி | 20.2 | 21.8. | 21.3 | 21 | 107.2 |
| | (10) | (10) | (9) | (6) | (8) |
| 2. மொத்தப் பயன்பாடு | 216.9 | 244.8 | 270.7 | 352 | 1487.3 |
| (அ) நுகர்வு | 171.5 | 193.9 | 214 | 276 | 1174.2 |
| அதில்- | (87) | (87) | (86) | (83) | (85) |
| – தனியார் | 151.8 | 173.7 | 192.5 | 247.6 | 1054.6 |
| | (77) | (78) | (77) | (75) | (76) |
| – பொது | 19.7 | 20.2 | 21.5 | 28.4 | 119.6 |
| | (10) | (9) | (9) | (9) | (9) |
| (ஆ) முதலீடு | 45.4 | 50.9 | 56.7 | 76 | 313.1 |
| அதில் | (23) | (23) | (23) | (23) | (23) |
| – தனியார் | 20 | 22.6 | 23.7 | 39.6 | 148.1 |
| | (10) | (10) | (10) | (12) | (11) |
| – பொது | 25.4 | 28.3 | 33 | 36.4 | 165 |
| | (13) | (13) | (13) | (11) | (12) |
| 3. முதலீடுகளை நிதிப்படுத்தல் | | | | | |
| (அ) தேசிய சேமிப்புக்கள் | 30 | 33.9 | 39.8 | 58.8 | 227 |
| | (15) | (15) | (16) | (18) | (16) |
| (ஆ) வெளிநாட்டு சேமிப்புக்கள் | 15.4 | 17 | 16.9 | 17.2 | 86.1 |
| | (8) | (8) | (7) | (5) | (6) |

குறிப்பு 1: அடைப்புக்குறிக்குள் தரப்பட்டிருப்பவை மொத்த உள் நாட்டு உற்பத்தியில் ஒவ்வொன்றினதும் விகிதமாகும்.

அமைந்து அவை தாக்குமுள்ளவையாக இருக்கவில்லை. பெருகி வரும் வெளிநாட் [illegible] உள்நாட்டுமுதலீட்டுக்கும் வெளிநாட்டு சேமிப்புக்களில் தங்கி யிருந்த நிலையும் குறையவில்லை.

பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் (1988-1992) இப்பிரச்சினையை கவனத்தில் எடுத்து பின்வரும் விதத் திலான பரிகாரங்களையும் எடுத்துக் காட்டியுள்ளது: குறுங்காலத்தில், உயர் பணவீக்கமும், வெளிநாட்டுச் சொத் துக்களில் சமனின்மையும் உருவாகக் கூடிய போக்கொன்று தென்படுகிறது. துரிதப்படுத்தப்பட்ட வளர்ச்சிக்கும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கும் இடையில் ஓர் இடைவெளி காணப்படுவ தால், இப்பொழுதுள்ள அவசரத்தேவை நீண்டகால அபிவிருத்தி நோக்கங்களை குறுங்கால அபிவிருத்தி நோக்கங்களுடன் இசைந்து செல்லக் கூடிய விதத்தில் உருவாக்கப்படும் ஒரு தீர்வுதான் வேலை யற்றோரின் விகிதத்தை குறிப்பிடக்கூடிய மட்டத்துக்கு குறைத்துவிடக் கூடிய அளவில் கூட்டுமொத்த வளர்ச்சி வீத மொன்றை வைத்துக்கொள்வதே மிக முக்கியமாகும். இங்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கும் நிகழ்ச்சித்திட்டம் அத்தகைய அணுகுமுறையொன்றை சுட்டிக்காட்டுவதாகவே இருக்கிறது.

கொள்கைத்திட்டத்தின் (1988-1992) மிகமுக்கிய பேரண்ட பொருளா தார அம்சங்களை பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

1. மொத்த உள்நாட்டு உற்பத்தி 5.3 சதவீத வருடாந்த சராசரி வீதத்தில் வளர்ச்சியடைய வேண்டும். தலைக்குரிய வருமான வளர்ச்சி 3.8 சதவீதமாக இருக்கும் என்பதை இது காட்டுகிறது.

2. மொத்த உள்நாட்டு மூலதன வாக்கம் மொத்த உள்நாட்டு உற்பத்தி யின் 22.6 சதவீதமாக இருக்கும். தேசிய சேமிப்பு விகிதம் 1992 அளவில் 17.8 சதவீதமாக விருத்தியடையும். வெளி நாட்டுச் சேமிப்புக்களில் தங்கியிருப்பது ஓரளவுக்கு குறைவடையும் என்பதனை இது காட்டுகிறது.

3. மொத்த உள்நாட்டு மூலதனவாக் கத்தில் தனியார் முதலீடுகளின் பங்கு இப்பொழுதிருக்கும் (1988) 44 சத வீதத்திலிருந்து 52 சதவீதம் வரையில் அதிகரிக்கும்.

4. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பொது நுகர்வின் பங்கு 9 சதவீதம் வரையில் வீழ்ச்சியடைந்து நிகழ்ச்சித் திட்டக்காலம் முழுவதும் அதே அளவில் நிலைத்திருக்கும். குறிப்பாக, தனியார் நுகர்வினைக் குறைப்பதன் மூலம் சேமிப்பு விகிதத்தில் ஒரு முன்னேற்றம் எய்தப் படும்.

5. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதம் என்ற முறையில் வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறை 11 சத வீதத்திலி ருந்து 1992-ல் 8 சதவீதமாக வீழ்ச்சி யடையும். மொ. உ. உ. யின் விகிதமாக அரசாங்கமூலதனச்செலவுகள் வெகுவாக குறைக்கப்படுவதே இதற்குக் காரண மாகும்.

கால் நடை

குடித்தொகை கணிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களத் தின் தற்காலிக மதிப்பீடுகளின் படி, 1987-ல் (எருமைப் பாலை யும் சேர்த்து) பால் உற்பத்தி 27 கோடியே 50 இலட்சம் லீட்டர் களாக இருந்தது. முன்னைய வருட உற்பத்தி அளவான 17 கோடியே 80 இலட்சம் லீட்டர் களைவிட இது 54 சதவீதம் அதி கரித்திருந்தது. மில்கோ நிறுவ னம்1987-ல் 6 கோடியே 90 இலட் சம் லீட்டர் பாலினைச் சேகரித் தது. இது 1986-ல் தேசிய பால் சபையும், மில்கோவும் சேகரித்த அளவைவிட சற்று கூடுதலா னது.

ஏற்றுமதிப்பயிர்கள்

இலங்கைப் பொருளாதாரத் தின் கூட்டுமொத்தச் செயற்பாடு கடந்த பல தசாப்தங்களாக தேயிலை, இறப்பர், தென்னை என் பவற்றை உள்ளடக்கிய மரப் பயிர்த்துறையின் செயற்பாட் டிலேயே தங்கியிருந்து வரு கிறது. 1978-ம் வருடத்துக்கு முன்னர் நாட்டின் மொத்த ஏற்றுமதிச் சம்பாத்தியங் களில் 85 சதவீதத்தினை இப் பயிர்கள் பெற்றுத்தந்தன. வரவு செலவுத்திட்ட வருமானத்தில் 8.4 சதவீதத்தையும் இத்துறை கொடுத்தது. பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டதன் பின்னர் வந்த பத்தாண்டுகளில் தேயிலை, இறப்பர், தென்னை என் பவற்றின் பங்கு கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்து சென் றிருக்கிறது. இந்த ஏற்றுமதிச் சம்பாத்தியங்களின் பங்குமூன்று நான்கு வருடங்களுக்கு முன்னர் 50 சதவீதம் வரை குறைந்து வந்து 1987-ல் 37 சதவீதமாகி விட்டது. வருவாய்க்கு இத்துறை யின் பங்களிப்பு 4.4 சதவீதமாக கடுமையாக வீழ்ச்சியடைந்தது. நாட்டின் பொருளாதாரத்துக்கு மரப்பயிர்த்துறையின்பங்களிப்பு இவ்விதம் வீழ்ச்சியடைந்து கொண்டு சென்றமைக்கு ஒரு புறம், அரசாங்கத்தின் தாராள மயப்படுத்தப்பட்ட பொருளா தார கொள்கைகளின் கீழ் புதிய வளர்ச்சித்துறைகள் வெற்றிகர மாக எழுச்சியடைந்து வந்ததும், மறுபுறத்தில், மரப்பயிர்த்துறை யில் வெளியீடு தேக்கமுற்று இருந்ததும் காரணமாகும். தேயிலை உற்பத்தி 1960 களின் நடுப்பகுதியில் உச்ச மட்டமான 22 கோடியே 80 இலட்சம் கிலோ கிராமாக இருந்தது. 1987-ல் உற் பத்தி 21 கோடியே 30 இலட்சம் கி. கிராமாகும். அதேபோல 1979-ல் 15 கோடியே 60 இலட் சம் கி. கிராமாக இருந்த இறப் பர் உற்பத்தி 1987-ல் 12கோடியே 10 இலட்சம் கி. கிராமாக வீழ்ச் சியடைந்து காணப்பட்டது. தெங்கு உபதுறையின் செயற் பாடு இதை விடவும் மோசமாக இருந்தது. ஒரு காலத்தில் தென்னை உற்பத்தி 300 கோடி காய்கள் வரை இருந்தது. 1960 களின் நடுப்பகுதியில் காணப் பட்ட இந்த உற்பத்தி மட்டம் அதன் பின்னர் ஒரே ஒரு முறையே **அடையப்பட்டது**. கடுமையான வறட்சியினால் உற் பத்தி பாதிப்புற்று 1987-ல் 230 **கோடி** காய்களே பெறப்பட் டன.

மரப்பயிர்த்துறையில் உற் பத்தி நோக்கமடைவதற்கு அல் லது வீழ்ச்சியடைந்து சென்ற மைக்கு சில வெளிக்காரணிகளும் பங்களிப்புச் செய்துள்ளன. குறைந்த விளைபொருள் விலைகள் காணப்பட்டமையை அடுத்து இலாபத்தன்மை குறைந்து

சென்றமை அத்தகைய ஒரு காரணியாகும். ஆனல், இதற்குப் பங்களிப்புச் செய்த ஏனை யன அனைத்தும் உள்நாட்டுக் காரணிகள் தான்.

விவசாயத்துறையின் ஏற்றுமதிப்பிரிவில் தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் சிறு ஏற்றுமதிப்பயிர்கள் என்பன அடங்கியிருக்கின்றன. சமீபகாலம் வரையில் -நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சம்பாத்தியத்தில் பெரும் பங்கினை இப்பயிர்களே எடுத்து வந்தன. ஆனல், 1987 அளவில் நிலைமை வெகுவாக மாற்றமடைந்துவிட்டது. இந்த ஏற்றுமதிகளின் பங்கு கடந்த பத்தாண்டு காலத்தில் 79 சதவீதத்திலிருந்து 43 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருக்கிறது. தேயிலை, இறப்பர், தென்னை என்பனஏற்றுமதித் துறையில் தமது பங்களிப்பினை படிப்படியாக குறைத்துக் கொண்டு வந்த அதே வேளையில், புதிய கைத்தொழில் ஏற்றுமதிகள், இரத்தினக்கற்கள் போன்றன சமீப வருடங்களில் ஏற்றுமதிச் சம்பாத்தியங்களில் தமது பங்கினை அதிகரித்து வந்திருக்கின்றன.

கடந்த ஒரு தசாப்த காலத்தின் போது பெருந் தோட்டத் துறையின் கூட்டுமொத்த வெளியீடு ஒரு சதவீதத்துக்கும் குறைந்த அதிகரிப்பினையே பதிவு செய்தது. தேயிலை, இறப்பர், தென்னை ஆகிய இலங்கையின் மூன்று பாரம்பரிய ஏற்றுமதிப் பயிர்களும் அநேகமாக கடந்த தசாப்தம் முழுவதிலும் உற்பத்தியில் சீர்குலைவினையும் ஏற்றுமதி வீழ்ச்சியையும் அனுபவித்து வந்துள்ளன. உற்பத்தி வீழ்ச்சிக்காக எடுத்துக் கூறப்பட்ட அடிப்படைக் காரணங்களில் ஒன்று - குறிப்பாக 1987இல் - மிக மோசமான காலநிலையாகும். தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குப் பொருட்கள் என்பவற்றின் விலைகள் உண்மை நியதிகளில் அதிகரித்திருந்த போதிலும் ஏற்றுமதி அளவு குறைவாக இருந்தமையினல் விவசாய ஏற்றுமதிகள் மூலமான சம்பாத்தியங்கள் எஸ். டி. ஆர். அளவுகளில் 5 சதவீதம் வீழ்ச்சியடைந்திருந்தன.

மூன்று பிரதான விவசாய விளைபொருள்களதும் ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட இந்த கடுமையான வீழ்ச்சி 1987இல் இலங்கையின் ஏற்றுமதித்துறையின் செயற்பாட்டில் கவலையூட்டும் ஒரு விஷயமாகும். தேயிலை ஏற்றுமதி அளவு 1987இல் மூன்று சதவீதத்தால் குறைந்து 20 .1 கோடி கிலோ கிராமாக இருக்க இறப்பர் ஏற்றுமதி அளவு 4 சதவீதத்தால் குறைந்து 10 .6 கோடி கி. கிராமாக இருந்தது. 1986இல் 110 .5 கோடி காய்களுக்கு சமமானதாக இருந்த தெங்குப் பொருட்களின் கூட்டு மொத்த ஏற்றுமதி 1987இல் 53 . 8 கோடி காய்களுக்கு சமமான தாகவே இருந்தது. இவ்விதமாக குறைவுகள் காணப்பட்டதன் காரணமாக, சர்வதேச சந்தைகளில் இப் பண்டங்களின் விலைகள் அதிகரித்திருந்த போதிலும் அத்தகைய் விலையதிகரிப்புக்களின் முழுப்பயனையும் நாடு அனுபவிக்க முடியாது போயிற்று. எஸ். டி. ஆர். அளவுகளில் தேயிலையின் ஏற்றுமதிச் சம்பாத்தியம் சிறு அளவில் குறைந்திருந்தது. இவ் வீழ்ச்சி இறப்பரில் 4 சதவீதமாகவும், தேங்காயில் 23 சதமாகவும் இருந்தது. விவசாயத் துறை ஏற்றுமதிகள் மூலமான மொத்தச் சம்பாத்தியங்கள் 1986இல் 47 கோடியே 90 இலட்சம் எஸ். டி. ஆர். களாக இருந்து 1987இல்4 5 கோடியே 80 இலட்சம் எஸ். டி. ஆர்களாக ஐந்து சதவீதத்தால் வீழ்ச்சி கண்டிருந்தது. விலைகளில் முன்னேற்றம் காணப்பட்ட ஒரு பின்னணியிலேயே சம்பாத்தியம் இவ்விதம் குறைந்திருக்கின்றது.

### தேயிலை

1986இல் 21 கோடியே 13 இலட்சம் கி. கிராமாக இருந்த தேயிலை உற்பத்தி 1987இல் 21 கோடியே 33 இலட்சம் கிலோவாக அதிகரித்தது. தாழ் நிலத் தேயிலை உற்பத்தியில் 7 சதவீத வளர்ச்சி பதிவு செய்யப்பட்டதே இதற்கான பிரதான காரணமாகும். இவ்வுற்பத்தி இதுவரை பதியப்பட்ட உச்சமட்டத்தில்- 8 கோடியே 64 இலட்சம் கிலோ வாக இருந்தது. மேலும். மொத்த தேயிலை உற்பத்தியில் 49 சதவீதத்துக்கு தாழ்நிலத் தேயிலை பொறுப்பாக இருந்தது. மாருக, உயர் நிலத்தேயிலை உற்பத்தி தொடர்ச்சியான மூன்ருவது வருடமாக 1987லும் 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 7 கோடியே 34 இலட்சம் கிலோ வாக இருந்தது, தேயிலைப் பயிர்ச் செய்கையின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கும் மொத்த நிலப் பரப்பின் அளவும் அண்மையவருடங்களில் வீழ்ச்சியினைக் காட்டி வந்துள்ளது. இந் நிலப் பரப்பு 1985 இல் 231,000 ஹெக்டயார்களாக இருந்து. 1987 இல் 221, 498 ஹெக்டயார்களாக குறைந்துவிட்டது. தேயிலை எல்லைக்காணிகள் வேறு பாவனைகளுக்கென பிரித்தெடுக்கப்பட்டமையினலேயே இந்த வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

தேயிலை ஏற்றுமதிப் பெறுமதி 1986இல் 925. 3 கோடி ரூபாவாகவும் (28. 1 கோடி எஸ். டி. ஆர்) 1987இல் 1065. 4 கோடி ரூபாவாகவும் (28 கோடி எஸ். டி. ஆர்.) இருந்தது. இது ரூபா அளவில் 15 சதவீத அதிகரிப்பினையும், எஸ். டி. ஆர். அளவில் ஒரு சிறு குறைவினையும் காட்டுகிறது. தேயிலை ஏற்றுமதி அளவு 1986இல் 20 கோடியே 80 இலட்சம் கிலோவாக இருந்து 1987 இல் 20 கோடியே 10 இலட்சம் கிலோ வாக வீழ்ச்சியடைந்தமையே இதற்கான காரணமாகும். மாருக, எஸ். டி. ஆர். அளவுகளிலான தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலை 3 சதவீதத்தால் உயர்ந்து கிலோ ஒன்று 1.39 எஸ். டி. ஆர். ஆக இருந்தது. இந்த அதிகரிப்பு ரூபா அளவுகளில் 19 சதவீதமாக உயர்ந்து கிலோ ஒன்று ரூபா 52.97 ஆக இருந்தது. இலண்டன் ஏல விற்

பணையில் இலங்கைத்தேயிலையின் சராசரி விலை 9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. அதாவது கிலோ ஒன்றின் விலை 115.67 பென்ஸாக இருந்து 105.21 பென்சாக குறைந்திருந்தது.

### இறப்பர்

இறப்பர் ஏற்றுமதி அளவு 1987 இல் 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 10.6 கோடி கிலோவாக இருந்தது. எனினும் சராசரி ஏற்றுமதி விலை 1 சதவீதத்தால் (ரூபா அளவுகளில் 16 சதவீதத்தால்) அதிகரித்து கிலோ ஒன்று 0.73 எஸ். டி. ஆர். (ரூ. 27.63) ஆக இருந்தது. இதன் விளைவாக எஸ். டி. ஆர். அளவுகளில் ஏற்றுமதிச் சம்பாத்தியம் 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த அதே வேளையில் ரூபா அளவுகளில் 12 சதவீத அதிகரிப்புக் காணப்பட்டது. ஏற்றுமதிகள் 1985-ல் 9 கோடியே 30 இலட்சம் எஸ். டி. ஆர்.களாக இருந்து 1987-ல் 7 கோடியே 70 இலட்சம் எஸ். டி. ஆர்.களாக வீழ்ச்சியடைந்திருந்தது. கிலோ ஒன்றுக்கான கப்பற்றளம் வரையிலான ஏற்றுமதி விலை 1985-ல் ரூ. 21.34 ஆக இருந்து 1987-ல் ரூபா 27.63 ஆக உயர்ந்திருந்தது. 1985-ல் 12 கோடியே 2 இலட்சம் கிலோவாக இருந்த ஏற்றுமதிகள் 1987-ல்10கோடியே 60 இலட்சம் கிலோவாக வீழ்ச்சி கண்டிருந்தது.

இறப்பர் உற்பத்தி 1987-ல் 12 கோடியே 30 இலட்சம் கிலோவாக இருக்கும் என்று தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. முன்னைய வருட மட்டத்தினை விட இது 11 சதவீதம் குறைவானதாகும். கடந்த இருபது வருட காலத்தில் பதியப்பட்ட மிகக் குறைவான உற்பத்தி மட்டம் இதுதான். வருடத்தின் முதல் காலாண்டில் கடுமையான வறட்சி நிலைமைகளினுல் உற்பத்தி கடுமையாக வீழ்ச்சியடைந்தது. வருடத்தின் மூன்ருவது காலாண்டில் பிரதானஉற்பத்திப் பிரதேசங்களில் கடுமையான மழை பெய்ததால் பாலெடுத்தல் குறைந்து உற்பத்தி மேலும் வீழ்ச்சியடைய ஏதுவாயிற்று. மீள் நடுகைக்கென பெரும் பரப்புக்களில் மரங்கள் பிடுங்கப்பட்டதும் உற்பத்தியில் எதிர்க்கணிய தாக்கமொன்றை கொண்டுவந்தது.

இறப்பர் பயிர்ச்செய்கையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிலப் பரப்பின் அளவிலும் 1987-ல் ஒரு சிறு வீழ்ச்சி காணப்பட்டது. இது 1985-ல் 205,500 ஹெக்டயார்களிலிருந்து 1987-ல் 205,100 ஹெக்டயார்களாக குறைந்திருந்தது. எல்லைப்புற இறப்பர் காணிகள் குறிப்பாக தேயிலைக்கு மாற்றப்பட்டது. மற்றும் அபிவிருத்திநடவடிக்கைகளுக்கென இறப்பர் காணிகள் துப்புரவு செய்யப்பட்டவை போன்றனவே இவ்விதம் நிலப் பரப்பு குறைவடைய காரணமாக இருந்தன.

பாலெடுக்கும் நிலப்பரப்பு 1987-ல் ஒரு சதவீதத்தால் அதிகரித்து 165,565 ஹெக்டயார்களாகஇருந்தது. இது சமீப வருடங்களில் பதிவு செய்யப்பட்ட

அட்டவணை 4

விவசாய ஏற்றுமதிகள் விகிதம்

| | 1978 | 1979 | 1980 | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த ஏற்றுமதிகளில் விவசாய ஏற்றுமதிகள் | 78.9 | 53.8 | 61.8 | 57.8 | 54.3 | 58.0 | 60.4 | 52.6 | 46.3 | 42.7 |
| தேயிலை | 48.5 | 37.4 | 35.1 | 30.6 | 29.6 | 33.1 | 42.8 | 33.2 | 27.2 | 27.0 |
| இறப்பர் | 15.3 | 16.4 | 14.7 | 13.7 | 10.8 | 11.4 | 8.8 | 7.1 | 7.7 | 7.1 |
| தென்னை | 9.6 | 11.1 | 7.0 | 6.8 | 7.0 | 7.6 | 5.7 | 8.5 | 7.0 | 6.4 |
| சிறு ஏற்றுமதிப்பயிர்கள் | 5.5 | 5.4 | 5.1 | 6.6 | 6.9 | 5.9 | 3.7 | 3.8 | 34.4 | 2.2 |

விவசாய உற்பத்தி

| | 1978 | 1979 | 1980 | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேயிலை '000 மெ.தொ. | 199.0 | 206.4 | 191.4 | 209.9 | 187.8 | 179.3 | 208.1 | 214.1 | 211.1 | 213.3 |
| இறப்பர் '000 மெ.தொ. | 155.6 | 153.0 | 133.1 | 124.0 | 125.2 | 140.0 | 141.9 | 137.5 | 137.8 | 117.8 |
| தென்னை பத்துஇலட்சம் காய்கள் | 2,207 | 2,393 | 2,026 | 2.258 | 2,521 | 2,312, | 1.942 | 2,958 | 3,039 | 2,167 |
| நெல் '000 மெ.தொ. | 1,891 | 1,917 | 2,133 | 2,230 | 2,156 | 2,479 | 2,420 | 2,661 | 2,588 | |
| மீன் '000 மெ.தொ. | 157 | 168 | 188 | 207 | 217 | 221 | 169 | 175 | 183 | 190 |
| ஏனைய உணவுப்பயிர்கள் '000மெ.தொ. | 750 | 602 | 556 | 745 | 994 | 1,142 | 748 | 769 | 729 | – |

ஆதாரம்: இலங்கையின் பொருளாதார, சமூக புள்ளி விவரங்கள், இலங்கை மத்தி வங்கி, சனத் தொகை கணிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம்

மிகக் குறைந்த மட்டமாகும் இந்த வீழ்ச்சிப்போக்கு 1980-இல் இருந்தே அவதானிக்கப்பட்டு வந்துள்ளது.

### தென்னை

ஏற்றுமதிச் சம்பாத்தியங்களிலானமிகக் கடுமையான வீழ்ச்சி தெங்கு உற்பத்திகளிலேயே பதிவு செய்யப்பட்டது. தெங்கு உற்பத்திப் பொருள்கள் மூலமான ஏற்றுமதிச் சம்பாத்தியம் 1986-ல் 7 கோடியே 30 இலட்சம் எஸ். டி.ஆர். களாக இருந்து 1987-ல் 5 கோடியே 60 இலட்சம் எஸ். டி. ஆர்.களாக 23 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தன. பருப்புப் பொருள்களின் ஏற்றுமதியில் காணப்பட்ட 24 சத வீழ்ச்சியே இதற்கு பிரதான காரணமாகும். மொத்த ஏற்றுமதி அளவு 1986-ல் 110 கோடி 50 இலட்சம் காய்களுக்கு சமமானதாக - ஏறத்தாழ அரை வாசி அளவுக்கு குறைந்துவிட்டது. விலைகளில் மிகச் சாதகமான அதிகரிப்பு (1986ல் 1 காய் ரூ. 1.46; 1987 1 காய் - ரூ. 2.64) நிலவியபோதும் ஏற்றுமதி அளவில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தமையால் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. தென்னை உப உற்பத்திப் பொருட்கள் மூலமான ஏற்றுமதி வருமானம் எஸ். டி. ஆர். அளவுகளில் 21 சத வீதத்தாலும், ரூபா அளவுகளில் 8 சத வீதத்தாலும் வீழ்ச்சியடைந்தது.

மொத்த தேங்காய் உற்பத்தி 1987-ல் 230 கோடி காய்களாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. உற்பத்தி 304 கோடி காய்களாக இருந்த 1986 உடன் ஒப்பிடுகையில் இதில் 25 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சராசரி உள்நாட்டு தேங்காய் நுகர்வு மொத்த் உற்பத்தியில் 65 சத வீதம் வரையில் இருக்கிறது. மிகுதி 35 சதவீதமே ஏற்றுமதிக்கு கிடைக்கிறது. தேங்காய் துருவல், தேங்காய் எண்ணெய், காய்கள் மற்றும் கொப்பரா போன்ற

### பெருந்தோட்டத்துறை

இலங்கையின் மரப்பயிர்த்துறை 1950-களிலும் 1960-களிலும் துரித வளர்ச்சியடைந்து வந்தது. அது இப்பொழுதும் கூட நாட்டின் பொருளாதாரத்தில் முன்னணி ஸ்தானத்தை வகித்து வருகிறது. மேலும் குறைந்த பட்சம், அடுத்து வரும் பத்தாண்டுகளுக்காவது அத்துறை எமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாக தொடர்ந்தும் இருந்து வரும். ஆக, இத்துறையின் செயற்பாடு தேசத்தின் அபிவிருத்தி முயற்சிகளுடன் மிக நெருங்கிய விதத்தில் பின்னிப்பிணைந்திருக்கிறது என்பது வெளிப்படை.

சமீப கடந்த காலத்தில் மரப்பயிர்த்துறையின் வினைதிறன் கணிசமான அளவுக்கு மோசமடைந்திருந்தது. இது சென்மதி நிலுவை நிலைமைகளைப் பாதித்து, வரவு செலவுத்திட்டப்பற்றுக் குறைகள் அதிகரிப்பதற்கு வழிகோலியது. மேலும், இத்துறையின் தொழிலாளர் உறிஞ்சும் ஆற்றலும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மரப் பயிர்த்துறையில் வளர்ச்சி வேகத்தை நிலை நிறுத்திக் கொள்ள முடியாது போனமைக்கு பல காரணங்களைக் கூற முடியும். உற்பத்தியாளர்களுக்கு போதிய ஊக்குவிப்புக்கள் வழங்கப்படாமை இதில் முக்கியமானதாகும். மேலும், இத்துறைக்கு புத்துயிரளிப்பதை நோக்கமாகக் கொண்ட தெளிவாக வரையறுக்கப்பட்ட கொள்கைத் தொகுதியொன்றும் இருக்கவில்லை. வெளிநாட்டு வர்த்தகப் போக்குகளும் மிகப் பாதகமான விதத்தில் நிலவி வந்தன.

நெற்பயிர்த்துறை துரித முன்னேற்றம் கண்டு வரும் ஒரு பின்னணியிலும், மரப்பயிர்த்துறையில் இலங்கையின் போட்டியாளர்கள் உற்பத்தி, வினைதிறன் என்பவற்றில் கணிசமான விருத்திகளை எய்திவரும் ஒரு சூழ்நிலையிலும் மரப்பயிர்த்துறையின் வீழ்ச்சி நிகழ்ந்து வருவது கவலைதரும் ஒரு விஷயமாகும்.

1972, 1975 ஆகிய ஆண்டுகளின் காணிச் சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டங்கள் மரப்பயிர்த்துறையைப் பெருமளவுக்கு பாதித்த போதிலும், இக்காணிகளில் உற்பத்தி சார்ந்த வேலை வாய்ப்புக்களையும், உற்பத்தியையும் பெருக்குவதே இந்நிகழ்ச்சித் திட்டங்களின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. ஆனால், இத்துறையின் கடந்த பத்தாண்டு கால செயலாற்றுகை, இக்குறிக்கோளின் இரு அம்சங்களும் எந்த அளவுக்கு எய்தப்பட்டன என்பது குறித்து கடுமையான சந்தேகங்களை தோற்றுவிக்கிறது.

மரப்பயிர்த்துறைக்கு புத்துயிரூட்டி, புனருத்தாரணம் செய்ய வேண்டிய அவசியத்தை இப்பொழுது அரசாங்கம் நன்கு உணர்ந்திருக்கிறது. இதற்கென உற்பத்தியாளர்களுக்கு நல்ல ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுவதுடன் அதிக அளவிலான அரச மானியங்களும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. அத்துடன் நிறுவன அமைப்புக்களும் விருத்தியாக்கப்பட்டுள்ளன. எனினும், வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்பட வேண்டிய தேவை மற்றும் புனருத்தாரணத்தின் போது தொழிலாளர் உறிஞ்சப்படும் ஆற்றல் போன்ற விஷயங்கள் இன்னமும் போதிய அளவில் அங்கீகாரம் பெறவில்லை.

மரப்பயிர்த்துறையில் வெளியீடு வீழ்ச்சியடைந்து வருவதன் பிரதான தாக்கம் வேலைவாய்ப்புக்களிலேயே உணரப்பட்டுள்ளது. இத்துறை 1960-களில் உருவாக்கிய வேலைவாய்ப்பு மட்டங்களைக் கூட பேணிக்கொள்ள முடியாது போனமையை மிகப்பெரிய தோல்வியாக சுட்டிக்காட்டலாம். வெளியீட்டு மட்டம், வீழ்ச்சியடைந்து செல்லச்செல்ல வேலைவாய்ப்பு நிலைமையும் சீரழிந்து சென்றது. இவ்வாறாக, தொழிலாளரை உறிஞ்சிக் கொள்ளும் ஆற்றல் பலவீனமடையலாயிற்று. மறுபுறத்தில், கிராமப் புறங்களில், ஊழியர் பட்டாளம் பெருகி வந்தமையால், அவர்களுக்கு உணவுப் பயிர்த்துறையில் பொதுவாகவும், நெற்பயிர்த்துறையில் குறிப்பாகவும் வேலைவாய்ப்புக்களை வழங்க வேண்டிய பெருஞ்சுமையையும் இந்நிலைமை உருவாக்கியது.

தேயிலை, இறப்பர் துறைகளில் இந்த வீழ்ச்சி கலக்கமூட்டுவதாக இருந்தது. பொதுவாக இத்துறைகளே மரப்பயிர்த்துறையில் அதிகளவு வேலைவாய்ப்புக்களைக் கொடுத்து வந்தன. தெங்குத்துறையைப் பொறுத்தவரையில் வேலைவாய்ப்புக்களின் நிலைமை எப்பொழுதும் திருப்திகரமானதாக இருந்ததில்லை. கடந்த ஒரு தசாப்த காலத்தில் இதில் நிலைமை இன்னும் மோசமடைந்திருக்கிறது. இம்மூன்று பயிர்களிலும் பயிரிடப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட வீழ்ச்சியும், நிலத்தின் ஒரு அலகுக்கான விளைச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சியுமே வேலைவாய்ப்பு மட்டங்களின் சீர்குலைவுக்கு வழிகோலின. மூலதனச்செறிவு மிக்க தொழில் நுட்பங்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டமையின் விளைவாக வேலைவாய்ப்பு மட்டம் குறையவில்லை. மூலதனம் ஊழியத்தைப் பிரதியீடு செய்துள்ள ஒரு நிலைமையில் போலன்றி, இங்கு இப்போக்கினை மாற்றியமைக்க முடியும் என்பது இதன் ஒரு சாதக அம்சமாகும். எனினும், இதற்கென மிகத்தெளிவான கொள்கை நோக்குடன், உடன் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

"இலங்கையின் பெருந்தோட்டத்துறையின் தொழிலாளர் உறிஞ்சும் ஆற்றல்" என்ற நூலிலிருந்து.

உருவங்களில் இந்த ஏற்றுமதி நடைபெறுகிறது,

தேங்காய் விலைகள் 1986-87 காலத்தில் கணிசமான அளவில் மேல் நோக்கி உயர்ந்தன. இந்த வேளையில் உற்பத்தி அளவில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. உற்பத்தியாளருக்குக் கிடைக்கும் சராசரி விலை 1987-ல் தேங்காய்க்கு 80 சதத்தினுல் அதிகரித்திருந்தது. நடைமுறை விலையில் சேர்க்கப்பட்ட பெறுமதியின் பங்களிப்பு 1986-ல் 355 கோடியே 97 இலட்சம் ரூபாவிலிருந்து 1987-ல் 526 கோடியே 23 இலட்சம் ரூபாவாக அதிகரித்திருந்தது. உண்மை நியதிகளில் தெங்குக் கைத்தொழிலில் சேர்க்கப்பட்ட பெறுமதி 1986-ல் 100 கோடியே 44 இலட்சம் ரூபாவாக - 1985ன் அளவை விட 0.7 சதவீதத்தால் அதிகரித்து - காணப்பட்டது.

**சிறு ஏற்றுமதிப்பயிர்கள்**

சிறு ஏற்றுமதிப்பயிர்கள் என்ற பதம் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு வகையிலான வாசனைத்திரவியங்கள் மற்றும் பானப்பயிர்கள் என்பவற்றை உள்ளடக்கியதொன்ருகும். கறுவா, கோப்பி, மிளகு கராம்பு, ஏலக்காய், கொக்கோ, சாதிக்காய், பாக்கு போன்றவற்றை சிறு ஏற்றுமதிப்பயிர்கள் என்று கூறமுடியும். நாட்டின் ஈரவலயத்திலும் மத்திய வலயத்திலும் இவை பயிரிடப்படுகின்றன. அநேகமாக உற்பத்தியில் பெருமளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இப்பயிர்கள்மூலமான ஏற்றுமதி வருமானம் கடந்த தசாப்தம் முழுவதிலும் மொத்த ஏற்றுமதிச் சம்பாத்தியங்களில் 6 சதவீதம் வரையில் இருந்து வந்துள்ளது. ஏற்றுமதித்தொகை வருடத்துக்கு வருடம் கடுமையான தளம்பல்களைக் காட்டியிருக்கிறது. மிளகு, கொக்கோ, பாக்கு என்பன 1987-ல் ஏற்றுமதி அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. முக்கியத்துவம்பெற்று வரும் மற்றுமொரு பயிர் **மரமுந்திரிகையாகும்.** இதன் ஏற்றுமதி அளவு 1987-ல் இரட்டிப்பாகியது. எனினும், சாதிக்காய், சோளம், ஏலக்காய், கராம்பு போன்றவற்றின் ஏற்றுமதி அளவு இக்காலத்தில் 30 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது.

இப்பயிர்களின் வெளியீடு, சந்தைப்படுத்தல் என்பவற்றை முன்னேற்றும் நோக்கில் மலைநாட்டு மாவட்டங்களில் செய்திட்டமொன்று துவக்கிவைக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசங்களிலேயே இப்பயிர்கள் செழித்து வளர்கின்றன. சிறு ஏற்றுமதித்துறைக்கான உர விநியோகம் 1986-ல் 235.6 கோடி மெ. தொன்களாக இருந்து 1987-ல் 319. 1 கோடி மெ. தொன்களாக 35 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**கைத்தொழில்**

பொருளாதார வளர்ச்சிக்கான தயாரிப்புத்துறையின் பங்களிப்பு கடந்த ஐந்தாண்டுகாலமாக அநேகமாக எந்த மாற்றமுமின்றி ஒரே மாதிரியாக இருந்து வருகிறது. தயாரிப்புத்துறை 1982 - 87 காலப்பகுதியில் 6 . 2 சதவீதம் வளர்ச்சி கண்டிருக்கும் அதேவேளையில், மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான அத்துறையின் பங்களிப்பு 15 சதவீதம் அளவிலேயே தொடர்ந்தும் இருந்து வந்திருக்கிறது. பொருளாதார நடவடிக்கைகளின் ஏனைய பிரதான துறைகளைப் போலவே கைத்தொழில் துறையும் அதன் பங்கினை ஒரே மட்டத்தில் நிலையாக வைத்துக் கொண்டிருந்தது. முழுப் பொருளாதாரத்திலும் அமைப்பு ரீதியான மாற்றம் எதுவும் நிகழவில்லைஎன்பதனையேஇந் நிலைமை தெளிவாக காட்டுகிறது. நிதி அமைச்சின் தேசிய திட்டமிடல் பிரிவு கவலைக்கிடமான இந்நிலைமை குறித்து பின்வருமாறு கருத்துத் தெரிவிக்கிறது. ''நாட்டின் உறுதியான கைத்தொழில் அடித்தளமொன்றுக்கும், வருங்கால பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புக்களின் உருவாக்கம் என்பனவற்றுக்கும் தயாரிப்புத்துறையின் தற்போதைய செயலாற்றுகை எந்த விதத்திலும் போதியதாக இல்லை''

''மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியைவிட, கூடிய வேகத்தில் கைத்தொழில் வளர்ச்சி இருக்க வேண்டுமென்பதனை உயர்மட்ட பொருளாதார அபிவிருத்திகண்ட வளர்முக நாடுகளின் அனுபவங்கள் காட்டுகின்றன. பொருளாதாரத்தின் ஏனைய துறைகளில் தொடர்பு தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய வகையில் கைத்தொழில் துறை முன்னணிப் பங்கொன்றை வகிக்க வேண்டியிருக்கிறது. இலங்கையின் விஷயத்தில் இது மேலும் முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனில், சென்மதி நிலுவைப் பிரச்சினைகளை தணிப்பதில் கைத்தொழில் முக்கியபங்காற்ற வேண்டியிருக்கிறது''

உண்மை நியதிகளில் கைத்தொழில் வெளியீடு 1987 இல்

**அட்டவணை 5**

**சிறு ஏற்றுமதிப் பயிர்களின் ஏற்றுமதி (பத்து இலட்சம் கி. கி.)**

| பயிர் | 1976 | 1980 | 1982 | 1984 | 1985 | 1986 | 1987 |
|---|---|---|---|---|---|---|---|
| மிளகு | 0.10 | 0.95 | 1.30 | 2.77 | 1.12 | 1.28 | 2.02 |
| கறுவா | 6.80 | 7.94 | 6.26 | 8.89 | 6.85 | 7.59 | 7.50 |
| ஏலக்காய் | 0.16 | 0.16 | 0.21 | 0.18 | 0.19 | 0.27 | 0.19 |
| கோப்பி | 1.71 | 0.91 | 2.92 | 3.65 | 3.90 | 2.64 | 0.85 |
| கொக்கோ | 1.11 | 0.90 | 0.14 | 0.62 | 0.97 | 0.68 | 0.83 |
| கராம்பு | 0.48 | 1.19 | 0.97 | 0.97 | 0.27 | 0.74 | 0.49 |
| பாக்கு | 2.37 | 5.48 | 2.41 | 2.20 | 0.39 | 1.21 | 1.58 |

### மொத்த கைத்தொழில் உற்பத்தியின் சதவீத பங்கு

| கைத்தொழில் வகை | 1972 | 1977 | 1979 | 1981 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிவகை, புகையிலை | 33 | 33 | 27 | 20 | 25 | 24 | 27 | 29 | 27 |
| 2. புடவை, அணியும் ஆடை, தோற் பொருட்கள் | 16 | 10 | 11 | 13 | 18 | 21 | 25 | 29 | 32 |
| 3. மர, மர உற்பத்திகள் | 1 | 2 | 2 | 1 | 2 | 2 | 2 | 2 | 1 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் | 3 | 4 | 4 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 |
| 5. இரசாயனம், பெட்ரோலியம், நிலக்கரி, பிளாஸ்டிக் பொருட்கள் | 23 | 35 | 41 | 52 | 42 | 40 | 34 | 27 | 28 |
| 6. உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் | 7 | 6 | 7 | 6 | 5 | 5 | 5 | 5 | 4 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 3 | 2 | 3 | 2 | 1 | 1 | – | – | 1 |
| 8. தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | 13 | 8 | 5 | 3 | 4 | 4 | 4 | 4 | 4 |
| கூட்டு மொத்த கைத்தொழில்கள் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி *தற்காலிகம்

8 சதவீதத்தால் அதிகரித்தது. முன்னைய ஆண்டில் ஏற்பட்ட வளர்ச்சி 12 சதவீதமாகும். தனியார்துறை கைத்தொழில்களின்வெளியீடு 15சதவீதத்தால் அதிகரிக்க, அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டில் ஒரு சதவீத வீழ்ச்சி காணப்பட்டது. கைத்தொழில் வளர்ச்சி இவ்வாண்டில் மெதுவாக இருந்தமைக்கு பொதுத்துறை கைத்தொழில்களின் வெளியீட்டில் காணப்பட்ட குறைவே காரணமாகும். தேசிய புடவைக் கூட்டுத் தாபனத்தின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி, பெட்ரோலிய வெளியீடு ஒரே மட்டத்தில் இருந்தமை போன்றவற்றின் விளைவாகவே உற்பத்திக்குறைவு ஏற்பட்டுள்ளது. உள்நாட்டு குழப்ப நிலைமைகள் பல அரச துறை கைத்தொழில் கூட்டுத் தாபனங்களின் உற்பத்தியையும் வெளியீட்டையும் கடுமையாகப் பாதித்தன.

பல கைத்தொழில் உபதுறைகள் 1987இல் வெளியீட்டு அதிகரிப்புக்களை காட்டின. புடவை, ஆடையணிகள் மற்றும் தோற் பொருட்கள் (23 சதவீதம்), உலோகமல்லாத கனிப்பொருட்கள்(11 சதவீதம்), அடிப்படை உலோகப் பொருட்கள் (11 சதவீதம்), தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள் [9சதவிதம்], பலகை மற்றும் பலகை உற்பத்திகள் (4சதவீதம்), இரசாயனப் பொருள்கள், உணவு, பானம் மற்றும் புகையிலை உற்பத்திகள் [ஒவ்வொன்றும் 3 சதவிதம்], கடதாசி, கடதாசி உற்பத்திகள் [1 சத வீதம்], என்பனவே அதிகரிப்புக்களை பதிவு செய்த உபதுறைகளாகும்.

உணவு, பான வகைகள், புகையிலை, புடவை, ஆடையணிகள்,தோல்,இரசாயனப்பொருட்கள், பெற்ரோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாஸ்டிக் ஆகிய மூன்று பிரதான உற்பத்திப் பிரிவுகளும் கைத்தொழில் வெளியீட்டின் 87 சதவீதத்துக்கு பொறுப்பாக இருக்கின்றன. அடிப்படை உலோகங்கள் (1%) தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள் [5%] போன்ற பொறியியல் அடிப்படையிலான கைத்தொழில் உபதுறையின் பங்கு சார்பு ரீதியில் மிகச்சிறிய அளவிலேயே இருக்கிறது.

கைத்தொழில் உற்பத்தி முழுவதுமே மூன்று பிரதான பிரிவுகளுக்குள் ஒன்றுதிரண்டிருப்பது, பொதுவாக பொருளாதாரத்திலும், குறிப்பாக கைத்தொழில் துறையிலும் இப்பிரிவுகளின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டுகிறது. இறக்குமதிப்பிரதியீட்டுக்கும் ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில் அபிவிருத்திக்கும் இக்கைத்தொழில்கள் கணிசமான ஒரு பங்களிப்பினை வழங்குகின்றன. ஆயினும் [அட்டவணையில் காட்டப்பட்டுள்ள] சேர்க்கப்பட்ட பெறுமானத்தையும் கணக்கில் எடுக்கும்போது அவற்றின் சார்பு ரீதியான பங்கு குறைந்த முக்கியத்துவத்தையே பெறுகிறது. பலகை, பலகை உற்பத்திகள், உலோகமல்லாத கனிப்பொருட்கள், தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள் என்பனவற்றை உள்ளடக்கிய உபதுறைகள் சேர்க்கப்பட்ட பெறுமதியில் பெரும் பங்கினை பங்களிப்புச் செய்கின்றன. பல்வேறு உபதுறைகளிலும் சேர்க்கப்பட்ட பெறுமதியின் அளவு அவ்வப்போது மாறிவருகிறது. போதிய தகவல்களின்றி இந்த மாற்றங்களுக்கான காரணங்களை அலச முடியாது. சார்பு ரீதியானமாற்றங்களின் நன்மையை அறிந்துகொள்ள தரவுகள் உதவுகின்றன.

தயாரிப்புத்துறை பெருமளவுக்கு இறக்குமதி செய்யப்பட்ட

### உற்பத்தியின் சதவீதமாக சேர்க்கப்பட்ட பெறுமதி

| கைத்தொழில் வகை | 1972 | 1977 | 1979 | 1981 | 1983 | 1984 | 1985 | 1986 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிவகை, புகையிலை | 46 | 42 | 50 | 42 | 46 | 49 | 59 | 56 |
| 2. புடவை, அணியும் ஆடை, தோற் பொருட்கள் | 55 | 39 | 20 | 17 | 15 | 18 | 24 | 26 |
| 3. மர, மர உற்பத்திகள் | 58 | 61 | 49 | 54 | 54 | 56 | 59 | 62 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் | 35 | 44 | 49 | 42 | 43 | 44 | 47 | 49 |
| 5. இரசாயனம், பெட்ரோலியம், நிலக்கரி, பிளாஸ்டிக் பொருட்கள் | 55 | 31 | 15 | 17 | 14 | 15 | 11 | 24 |
| 6. உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் | 56 | 61 | 62 | 47 | 59 | 52 | 57 | 54 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 20 | 22 | 24 | 19 | 27 | 11 | 53 | 13 |
| 8. தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | 36 | 36 | 48 | 52 | 60 | 65 | 66 | 64 |
| கூட்டு மொத்த கைத்தொழில்கள் | 38 | 38 | 32 | 27 | 26 | 31 | 34 | 39 |

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி, நிதி, திட்டமிடல் அமைச்சு

### இறக்குமதி மூலப்பொருட்களில் தங்கியிருந்த அளவு 1985

| வகை | வெளிநாட்டு மூலப் பொருட்களின் சத விகிதம்–1985 |
|---|---|
| | (%) |
| 1. உணவு, குடிவகை, புகையிலை | 20 |
| 2. புடவை, அணியும் ஆடை, தோற் பொருட்கள் | 97 |
| 3. மர, மர உற்பத்திகள் | 10 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் | 60 |
| 5 இரசாயனம், பெட்ரோலியம், நிலக்கரி, பிளாஸ்டிக் பொருட்கள் | 98 |
| 6. உலோகமல்லாத கனிப்பொருள் | 53 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 100 |
| 8. தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | 59 |
| 9. ஏனையன | கி. வி. |
| மொத்தம் | 89 |

மூலப் பொருட்களிலேயே தங்கியிருக்கிறது. தயாரிப்புத் துறைக்கான உள்ளீடுகளில் சுமார் 90 சதவீதம் 1985இல் இறக்குமதி செய்யப்பட்டன. பல கை உற்பத்திகள், உணவு, பானங்கள், புகையிலை ஆகிய உபதுறைகள் மிகக்குறைந்த அளவிலேயே இறக்குமதி மூலப்பொருட்களில் தங்கியிருக்கின்றன. மறுபுறத்தில், அடிப்படை உலோகங்கள் இரசாயனப் பொருள்கள், இறப்பர், பிளாஸ்டிக் பொருட்கள், புடவைகள், ஆடைகள் உப துறைகள் முற்றிலும் இறக்குமதி உள்ளீடுகளிலேயே தங்கியிருக்கின்றன.

**முதலீடு**

கைத்தொழில் கொள்கை தொடர்பாக 1987 பெப்ரவரியில் வெளியிடப்பட்ட கொள்கைப் பிரகடனத்தின் ஏற்பாடுகளை அமுல் செய்வதற்கு அரசாங்கத்திற்கு இருக்கும் ஆற்றலிலேயே நடுத்தர கால கைத்தொழில் அபிவிருத்தி பெருமளவுக்கு தங்கியிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்புதலளிக்கப்பட்ட முதலீடுகள் தொடர்ந்தும் உயர்ந்து வந்துள்ளன. மாகொழும்பு பொருளாதார ஆணைக்குழு 1978க்கும் 1987க்கும் இடையில் 253 தயாரிப்புக் கைத்தொழில்களுக்கு அனுமதி அளித்தது. இதில் 138 தொழில்கள் 8.7 கோடி ரூபா வரையான முதலீடுகள் தொடர்பாக ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தன. இதே காலப் பிரிவில் வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனை கமிட்டி 528 செய்திட்டங்களுக்கும், உள்நாட்டு முதலீட்டு ஆலோசனைக் கமிட்டி 7,496 செய்திட்டங்களுக்கும் அனுமதி வழங்கின. நாட்டின் பல பாகங்களினும் குழப்பநிலைமைகள் நிலவிவந்த போதிலும்

(ஒப்புதல்களை ஒரு குறிகாட்டியாகஎடுத்துப்பார்த்தால்) கைத்தொழில் துறையில் 1987–லும் முதலீட்டு வேகம் நிலைத்திருந்ததனை காண முடிகிறது. உள்நாட்டு முதலீட்டு ஆலோசனைக் குழு 1987-ல் மொத்தம் 53 கோடி ரூபா முதலீடுகளைக் கொண்ட 364 செய்திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியிருந்தது. இத்திட்டங்கள் 14,500 பேருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கும் என்றும் கூறப்பட்டது. இதே போல வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக்குழு மூலதன முதலீடு 67.2 கோடி ரூபாவாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்ட 41 கைத்தொழில் செய்திட்டங்களை அங்கீகரித்தது, இத்திட்டங்கள் 5000 வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் என்றுஎதிர்பார்க்கப்பட்டது. உ. மு. ஆ. குழு, வெ. மு. ஆ. குழு என்பன 1986-ல் முறையே 321 திட்டங்களையும் 41 திட்டங்களையும் அங்கீகரித்தன. மாகொழும்பு பொருளாதார ஆணைக்குழு 1986-ல் 10 செய்திட்டங்களையும் 1987-ல் 31 செய்திட்டங்களையும் அனுமதித்தது. இச்செய்திட்டங்களிலான மொத்த முதலீடு 81.2 கோடி ரூபாவாக இருக்குமென்றும் அவை 8,970 பேருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

**சமூக பொது வசதிகள்**

போக்குவரத்து, தொலைத் தொடர்பு, சக்தி வலு என்பன மூன்றும் பிரதான பொதுவசதி துறைகளாகும். பிரயாணிக போக்குவரத்து, பொரு போக்குவரத்துஎன்பனதவிர்ந் இவ்வசதிகள் அனைத்தும் அர துறையின் பொறுப்பிலேயே இருக்கின்றன. இவ்வசதிகள் மீதான பொது மூலதன செல கள் 1977-க்கு பின்னர் செங்குத் தாக உயர்ந்து சென்றுள்ளன. உதாரணமாக, 1978ல் 68.1 கோடி ரூபாவாக இருந்த இச்செலவுகள் 1988ல் 783.7 கோடி ரூபாவாக அதிகரித்திருந்தன. பொருளாதார பொது வசதிகளைப் பொறுத்தவரையில்கணிசமான முதலீடுகள் வெளிநாடுகளிலிருந்தே பெறப்பட்டன. ஆனால், கல்வி, சுகாதாரம், சமூக நலன் போன்ற சமூகவசதிகளைப்பொறுத்தவரையில் அவற்றுக்குத்தேவையான செலவுகள் பெருமளவில் அருமையாக இருந்த உள்நாட்டு மூலவளங்களிலிருந்தே பெறப்பட்டன. ஆகவே, இவ்வசதிகளின் பெருக்கம் மூலவளத்தட்டுப்பாட்டினால் பெருமளவுக்கு பாதிப்படைந்தது. குடித்தொகை பெருகிவரும் வேகத்தில் கல்வி, சுகாதாரம், சமூக நலன் போன்ற வசதிகளை விஸ்தரிப்பதற்கு தேவையான நிதிவளங்கள் போதிய அளவில் இருக்கவில்லை. உதாரணமாக கல்வி மீதான மொத்த வரவு செல்வுத்திட்டச் செலவு 1970-77 காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சராசரி 3.4 சதவீதமாக இருந்து 1978-86 காலத்தில் 2.4 சதவீதமாக குறைந்திருந்தது.

1977-க்கு பிற்பட்ட காலத்தில் தயாரிப்புக் கைத்தொழில்துறையில் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகள் பெருமளவில் திரண்டு வந்தன. கைத்தொழில் துறை 1977-க்கு பின்னர் கவர்த்திழுத்த முதலீடுகளின் தொகை இலங்கையின் கைத்தொழில் மயமாக்கல் வரலாற்றில் இது வரை காலமும் காணாத ஒன்றாக இருந்தது. முதல் இரு வருடங்களிலேயே மிகக்கூடிய அளவில் ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

பொருளாதாரம் தாராளமய மாக்கப்பட்டதனை அடுத்து சந்தையில் சேர்ந்திருந்ததேவைகளை நிறைவேற்ற .தொழிலதிபர்கள் உடனடியாக முன்வந்ததே இதற்கு காரணமாகும். 1980-ன் பின் முதலீட்டு பிரேரணைகளில் கணிசமான அளவுக்கு குறைவு ஏற்பட்டதும், உள்ளூர் கைத்தொழில் செயத்திட்டங்கள் குறைந்த அளவில் அமுல் செய்யப்பட்டதும் பொருளாதாரத்தில் சார்பு ரீதியான விலைகள் அவற்றுக்கு சாதகமாக இருக்கவில்லை என்பதனை காட்டுகிறது. கைத்தொழில் அமைச்சு 1978க்கும் 1985க்கும் இடையில் கையாண்ட 3548 புதிய கைத்தொழில் திட்டங்களில் 30 சதவீத தொழில்கள் மட்டுமே உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன.பத்து சதவீத கைத்தொழில்கள் இனித்தான் உற்பத்தியை ஆரம்பிக்க வேண்டியிருந்தன. கைவிடப்பட்ட (அல்லது உற்பத்தியை ஆரம்பிக்காத) திட்டங்கள் 60 சதவீதம் வரையில் இருந்தன. சந்தைச் சக்திகளில் அதிக அளவில் தங்கியிருப்பதும், ''மிதமிஞ்சிய பாதுகாப்பும்'' கைத்தொழில் துறையில் அபிவிருத்திக்கு தடையாக இருக்கிறது என்பதனை இலங்கையின் அனுபவம் காட்டுவதாக உள்ளூர் கைத்தொழில்மயமாக்கல் மாதிரி பற்றி கருத்துத் தெரிவித்த மத்திய வங்கி பொருளியலாளர் ஒருவர் குறிப்பிட்டார். சந்தைச் சக்திகளும் சந்தையல்லாத சக்திகளும் சரியான அளவில் கலப்புற்றிருக்கும் ஒரு சூழல் உறுதியான கைத்தொழில் அபிவிருத்திக்குவழிகோலும் என்பதனை தென்கொரிய அனுபவம் எடுத்துக் காட்டுகிறது. ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களை அதிகரித்த அளவிலான சர்வதேச போட்டிக்கு விடுவதன் மூலம் ஏற்படும்தாக்கங்களை குறைப்பதற்கு அல்லது நீக்குவதற்கும், இறக்குமதிப் பிரதியீட்டுக் கைத்தொழில்களுக்கு மிதமிஞ்சிய பாதுகாப்பளிப்பதன் தாக்கங்களை குறைப்பதற்குமென யதார்த்த ரீதியான ஊக்குவிப்புக் கொள்கைத்தொகுதியொன்று உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகும். அத்தகைய கொள்கைத் தொகுதியொன்று அதன் செலவுகளையும் மிஞ்சிய விதத்தில் உறுதியான அனுகூலங்களைக் கொண்டுவரும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

**விலைகள்**

பொருட்களினதும் சேவைகளினதும் விலை அசைவுகள், பொருளாதாரத்தின் உள்நாட்டு ஸ்திரத் தன்மையைப் பிரதிபலிக்கின்றன. (1) கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், (2) மொத்த விலைச் சுட்டெண், (3) மொத்த தேசிய உற்பத்தி சுருக்கி போன்றன இலங்கையில் விலையசைவினைக் கண்டறியப் பயன்படுத்தப்படும் பிரதான குறிகாட்டிகளாகும். கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (1952 = 100) இவற்றுள் மிக முக்கியமானது. விலையசைவுகளின் வாழ்க்கைச் செலவுத் தாக்கங்களை இது பிரதிபலிக்கிறது. இந்த தசாப்தத்தின் (1978 - 87) முதல் ஐந்து வருடங்களிலும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினுல் கணிக்கப்படும் வீக்கப் போக்குகள் 17 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்திருந்தன. சுதந்திரத்துக்கு பிற்பட்ட இலங்கையின் வரலாற்றில் இது முன்னெப்பொழுதும் **நிகழ்ந்திராததாகும்** எனினும், இரண்டாவது அரைப் பகுதியில், அதாவது 1983-1987 காலத்தில், விலைமட்டங்கள் ஓரளவுக்கு உறுதியாக இருக்கும் ஒரு போக்கு தென்பட்டதனுல் சராசரி அதிகரிப்பு வருடாந்தம் 9 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் 1985-ல் 1.4 சதவீதமாக மிகச் சிறு அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டதே இந்த வீழ்ச்சிக்கான பிரதான காரணமாகும். இருந்தபோதிலும், 1987-ன் கடைசி இரு காலாண்டுகளிலும் விலைமட்டங்கள் புதிய வேகப் போக்கொன்றில் அதிகரிக்கத் தொடங்கியிருந்தன. இது ஒரு வேளை, எதிர்காலப் போக்குகள் குறித்த ஒரு எச்சரிக்கை சமிக்ஞையாக இருக்கக்கூடும்.

மொத்த விலைச் சுட்டெண் மற்றும் மொ. தே. உ. சுருக்கி என்பனமூலமான விலையதிகரிப்பு புள்ளிகள் சற்று வேறுபட்டு காணப்பட்டாலும், அவற்றின் பொது மாதிரி கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் போக்குகளுடன் ஒத்ததாகவே இருக்கிறது. பணவீக்க அசைவுகள் மூலம் இந்த மூன்று சுட்டெண்களும் வெவ்வேறு அம்சங்களை அளவிடுகின்றன என்பதை நினைவில் வைத்துக் கொள்ளல் வேண்டும். அதனுல் அவை அவற்றின் சொந்த வரையறைகளைக் கொண்டுள்ளன.

இக்காலப் பிரிவில் பல பேரண்டப் பொருளாதார காரணிகள் விலைகளின் மேல் நோக்கிய அசைவினைத் தூண்டின. பற்றுக் குறை நிதிப்படுத்தல், உற்பத்தி தாராதுறைகளுக்கான (உ+ம் பாதுகாப்பு) பெருமளவிலான வரவுசெலவுத்திட்ட ஒதுக்குகள், பண நிரம்பல் அதிகரிப்பு, செலாவணி விகித பெறுமதியிறக்கம், இனக்கலவரங்களின் விளைவாக ஏற்பட்ட உற்பத்தி இழப்புக்கள், வறட்சி, வெள்ளப் பெருக்கு, மற்றும் நுகர்வோர் மானியங்கள் நீக்கப்பட்டமை போன்ற பல காரணிகள் இதற்குப் பொறுப்பாக இருந்தன. 1978-82 காலப்பிரிவில், உயர்ந்த விகித பண வீக்கத்துக்கு பண நிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு, உயர் வட்டி வீதங்கள், செலாவணி விகித பெறுமதியிறக்கம், நீண்ட கருக்கட்டல் காலத்தைக் கொண்ட முதலீட்டுத் திட்டங்கள் போன்றன பங்களிப்புக் காரணிகளாக இருந்தன. மறுபுறத்தில், அடுத்த ஐந்தாண்டு காலத்தில் (1983 - 87) நுகர் பொருட்களின் வழங்கல் பற்றுக்குறை, அதிகரித்த பாதுகாப்புச் செலவுகள், அவற்றுடன் சேர்ந்த பற்றுக்குறை நிதிப்படுத்தல் மற்றும் பண நிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு

போன்றன பணவீக்கப் போக்குகளைத் தூண்டிய காரணிகளாக இருந்தன. எவ்வாறிருப்பினும், பொருட்களினதும், சேவைகளினதும் விலையசைவுகளுக்கு எப்பொழுதும் பல கூட்டுக் காரணிகளே பொறுப்பாக இருந்து வந்துள்ளன. அதனால் பணவீக்கத்துக்கு இதுதான் காரணம் என்று ஒன்றை தனியாக பிரித்து எடுத்துக் காட்டுவது கஷ்டமானதாகும். அத்துடன் அது தவறான வழியில் இட்டுச் செல்வதாகவும் இருக்கும்.

உள்நாட்டு, நுகர்பொருள் துறைகளையே விலையதிகரிப்புக்கள் கடுமையாக பாதித்திருக்கின்றன. சுருக்கமாகச் சொன்னால் பணவீக்க அமுக்கங்கள் உள்நாட்டு மூலங்களிலிருந்தே தோன்றி வந்துள்ளன. இது 1970-களின் நடுப்பகுதியில் நிலவிய பணவீக்க மாதிரியிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. அப்போது பணவீக்கம், ஒன்றில் இறக்குமதி செய்யப்பட்டது; அல்லது இலங்கைக்கு வெளியே தோன்றியதாக இருந்தது. வறட்சியினாலும் மற்றும் நாட்டின் சில பகுதிகளில் குழப்ப நிலைமைகள் காணப்பட்டதாலும் உற்பத்தி வீழ்ச்சியடைந்திருந்தமையே 1987-ன் கடைசிப் பகுதியில் பணவீக்கப் போக்குகள் துரிதமடைந்ததற்கான பிரதான காரணமாக இருந்தன.

## செலாவணி விகித அசைவுகள்

செலாவணி விகித அசைவுகள் இலங்கை நாணயத்தின் வெளி நிலைமையைப் பிரதிபலிக்கின்றன. இதற்கூடாகவே உள்நாட்டு நாணயத்தின் கொள்வனவுச் சக்தி, பிரதான வர்த்தகப் பங்காளி நாடுகளின் நாணயங்களின் கொள்வனவுச் சக்தியுடன் ஒப்பிடப்படுகிறது. 1977-ல் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்களின் பின்விளைவாக, (1) ஆரம்ப மட்டம் டொலர் ஒன்று ரூபா 16 ஆக இருக்கும் விதத்தில் செலாவணி விகிதத்தை ஒரு நிலைப்படுத்தியமை, (2) வெளிநாட்டு கட்புலனாகா கொடுப்பனவுகளை தாராளமயமாக்கியமை, (3) லைசென்ஸ் தேவைகள் மற்றும் ஏனைய செலாவணிக் கட்டுப்பாட்டு முறைகளை ஒழித்தமை, (4) வர்த்தக ஏகபோகங்கள் ஒழிக்கப்பட்டமை போன்ற மாற்றங்கள் ஏற்பட்டன. அத்துடன், இலங்கை ரூபா ஒரே இரவில் 46 சதவீதத்தால் பெறுமதியிறக்கம் செய்யப்பட்டது. கடந்த தசாப்த (1978 - 87) காலத்தில், இலங்கையின் பிரதான வர்த்தக பங்காளி நாடுகளது நாணயங்களுடன் இலங்கை நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியடைந்து வந்தது.

முதல் ஐந்து வருடங்களைப் பொறுத்த வரையில் (1978-82) சார்பு ரீதியான ரூபாவின் பெறுமதியிறக்கம் மிகக்குறைந்த அளவிலேயே நிலவி வந்தது. இக் காலத்தில் பிரான்சின் பிராங்குடனான இலங்கை ரூபாவின் பெறுமதி 18.07 சதவீதம் பெறுமதியேற்றம் கண்டது. ஆனால், இரண்டாவது அரைப் பகுதியில் (1983 - 87) துரித கதியில் பெறுமதியிறக்கம் நிகழ்ந்து வந்தது. டொயிஷ் மார்க், பிரெஞ்சு பிராங், யென் போன்ற நாணயங்களுடனான ரூபாவின் கொள்வனவுச் சக்தி பெருமளவில் வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக கடந்த பத்தாண்டு காலத்தில் செலாவணி விகிதங்களின் கூட்டு மொத்த மாற்றங்கள், ரூபாவின் பெறுமதி விஷயத்தில் செங்குத்தான வீழ்ச்சிகளையே பதிவு செய்துள்ளன. ரூபாவின் பெறுமதி யென்னுக்கு எதிராக 67 சதவீதத்தாலும், டொஷ் மார்க்குக்கு எதிராக 55 சதவீதத்தாலும், எஸ். டி. ஆர். க்கு எதிராக 51.7 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்திருந்தது. இலங்கை ரூபாவின் பெறுமதியிறக்கம் 1987-ல் கணிசமான அளவில் காணப்பட்டது. இது ஸ்டேர்லிங் பவுணுக்கெதிராக 26.7 வீதம் யென்னுக்கு எதிராக 28% போன்ற உயர் மட்டங்களில் நிலவியது.

இலங்கையின் வெளிக்கொடுப்பனவுகள் மற்றும் உள்நாட்டு விலை மாற்றங்கள் என்பன மீதான செலாவணி விகித அசைவுகளின் தாக்கம் பெருமளவுக்கு வெவ்வேறு நாணயங்களைப் பயன்படுத்தும் வெளிநாட்டு வர்த்தகத்தின் இயல்பிலும், செறிவுத்தன்மையிலுமே தங்கியிருக்கிறது. தாக்கமான செலாவணி விகிதங்கள் என்ற கருதுகோள், இந்த வெளிநாட்டுக் கொடுப்பனவு நிலைமைகளுடனும் பிரதான வர்த்தக பங்காளி நாடுகளுக்கிடையில் முக்கிய நாணயங்களுக்கிடையிலான செலாவணி விகித அசைவுகளையும் காட்டுகிறது. வியாபார அளவு மற்றும் அந்தந்த நாடுகளின் பணவீக்கப் போக்குகளுக்கு ஏற்ப சீர்செய்யப்பட்ட **மெய்த்தாக்க**முள்ள செலாவணி விகிதம் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்ட பெயரளவு தாக்கமான செலாவணி விகிதம் கடந்த சில வருடங்களில் கணிசமான பெறுமதியிறக்கத்தை காட்டியிருக்கிறது.

சமீபத்தில் எண்ணெய் விலைகளில் பின்னடைவு காணப்பட்டதன் விளைவாக எண்ணெய் உற்பத்தி செய்யும் பல மத்திய கிழக்கு நாடுகள் தமது பொருளாதாரங்களில் கடுமையான நெருக்கடிகளை எதிர்நோக்கியதுடன் அந்நாடுகள் ஏற்கனவே திட்டமிட்டிருந்த பல பெரிய திட்டங்களை அமுல் செய்வதிலும் தடங்கல்கள் காணப்பட்டன. அந்த நாடுகளின் வரவு செலவுத் திட்டங்களில் பாரிய வெட்டுக்கள் நிகழ்ந்ததனால் 1970-களில் தொடங்கப்பட்ட மிகப் பரவலான நிர்மாணத் துறை முயற்சிகள் குறைந்து கொண்டு வந்தன. அதனால் தேர்ச்சியற்ற வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கான கேள்வி வீழ்ச்சியடையத் தொடங்கியது. அத்துடன், சில அரசுகளில் உள்நாட்டு தொழிலாளர் கிடைத்து வருவதனால் தேர்ச்சி

பெற்ற தொழிலாளர்களுக்கான வாய்ப்புக்களும் குறைந்து கொண்டு வருகின்றன. இலங்கையை உள்ளிட்ட தென்னாசிய நாடுகளிலிருந்து மத்திய கிழக்குக்கு குடிபெயர்ந்த தொழிலாளர்களில் மிகப் பெரும்பான்மையினர் தேர்ச்சியற்ற தொழிலாளர்களாகவே இருந்தனர், இவர்களுக்கான தேவை இந்நாடுகளில் குறைந்து வந்ததனால் இத்தொழிலாளரில் அதிகமானோர் நாடு திரும்பவேண்டிய நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஏற்கனவே பலவீனமான நிலையில் இருக்கும் ஆசியப் பொருளாதாரங்களை இப்போக்குகள் மேலும் நலிவடையச் செய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இலங்கையின் விஷயத்தைப் பொறுத்தவரையில், பண வருகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு மோசமாக இருக்கவில்லை.

**சென்மதி நிலுவை**

தனியார் பண அனுப்பீடுகளில் காணப்பட்ட தெளிவான குறைவு, சுற்றுலா மற்றும் பெரும்பாலான ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சி, வெளிநாட்டுக் கடன்கள் மீதான அதிகரித்த அளவிலான வட்டி மற்றும் சேவைக் கொடுப்பனவுகள் என்பவற்றுக்கு மத்தியிலும்கூட, 1982 லிருந்து சென்மதி நிலுவை நிலைமைகளில் ஒரு சாதகமான போக்கு அவதானிக்கப்பட்டு வந்துள்ளது. நடைமுறைக் கணக்குப் பற்றுக் குறை தொடர்ச்சியாக குறைந்து வந்தமையினாலேயே இப் போக்கு நிலவிற்று.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதம் என்ற முறையில், நடைமுறைக் கணக்குப் பற்றுக்குறை 1980 - ல் உச்ச மட்டமான 19.8 சதவீதத்தை அடைந்தது. இந்த விகிதம் 1982 - ல் 15.4 சதவீதமாக இருந்து பின்னர் படிப்படியாக குறைந்துகொண்டுவந்து 1987-ல் 7.9 சதவீதமாக இருந்தது. இலங்கையின் பாரம்பரிய ஏற்றுமதிகள் உயர் விலைகளைப் பெற்றுக்கொண்டதனையடுத்து 1984 - ல் வழமைக்கு மாறாக பற்றுக் குறை மிகக் கீழ்மட்டத்தில் நிலவியது. இறக்குமதிப் பொருட்களின் வருகை குறைந்ததும், தனியார் பண அனுப்பீடுகளில் ஏற்பட்ட உயர்ச்சிப் போக்கிலான மாற்றங்களும் இந்த முன்னேற்றத்துக்கு பங்களிப்புச் செய்தன. நடைமுறைக் கணக்கில் பற்றுக் குறை சராசரி 1980 – 1983 காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 15 சதவீதமாக இருந்து 1984 - 1987 காலத்தில் 8 சதவீதமாகக் குறைந்திருக்கிறது.

ஏற்றுமதி வருமானங்கள் 1978 - 1984 காலத்தில் செங்குத்தான அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் [எஸ். டி. ஆர். அளவுகளில்] வருடாந்தம் சராசரி 14 சதவீதமாக அதிகரித்தன. ஆனால், 1985 – க்குப் பிறகு, பிரதானமாக பாரம்பரிய ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்தமையால், இப்போக்கு மாற்றமடையத் தொடங்கியது. ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதி 1984இல் 143 . 2 கோடி எஸ். டி. ஆர். களாக இருந்து 1987 இல் 106 . 1 கோடி எஸ். டி. ஆர்களாக வீழ்ச்சியடைந்திருந்தது. இதே வேளையில், 1985இல் உச்சமட்டத்தில் இருந்த இறக்குமதி கொடுப்பனவுகள் 1986, 1987 ஆகிய வருடங்களில் தாழ்ந்த மட்டங்களில் வைக்கப்பட்டிருந்தன. பாரிய அளவில் மூலப் பொருட்களை இறக்குமதி செய்து கொண்டிருந்த மகாவலிச் செய்திட்டத்தின் பல பிரிவுகள் பூர்த்தியடைந்திருந்தமையே இதற்கு ஓரளவுக்குக் காரணமாகும். மேலும், 1983-ன் பின் இறக்குமதி செய்யப்பட்ட பல பண்டப் பொருட்களின் வெளிநாட்டு விலைகளில் ஒரு இறங்குமுகமான போக்குக் காணப்பட்டதும், அடுத்து வந்த வருடங்களில் இறக்குமதிக் கொடுப்பனவுகள் குறைவதற்கு வழிகோலியது. ஒரு மெட்ரிக்தொன் அரிசிக்கான செலவு 1983இல் 204 எஸ். டி. ஆர்களாக இருந்து, 1987இல் 149 எஸ். டி. ஆர்களாக குறைந்திருந்தது. அதேபோல ஒரு மெட்ரிக் தொன் சீனியின் விலை 1983இல் 251 எஸ். டி. ஆர்களிலிருந்து 1987இல் 167 எஸ். டி. ஆர்களாக குறைந்திருந்தது. கோதுமை விலையும் 161 இலிருந்து 97 எஸ். டி. ஆர். களாக வீழ்ச்சியடைந்திருந்தது. மசகெண்ணெய் பீப்பா ஒன்றின் விலை 28 . 4 எஸ். டி. ஆர். களிலிருந்து 14 . 2 எஸ். டி. ஆர்களாக குறைந்தது.

இறக்குமதிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, சென்மதி நிலுவைக் கஷ்டங்களை சமாளிப்பதற்கு கணிசமான அளவில் உதவிற்று. 1978இல் மொத்தம் 75 . 3 கோடி எஸ். டி. ஆர். களாக இருந்த இறக்குமதிகள் 1983 இல் 181 . 1 கோடி எஸ். டி. ஆர்களாக உயர்ந்திருந்தன. இது 1985இல் உச்சமட்டத்துக்கு வந்து 199 கோடி எஸ். டி. ஆர். களாக இருந்து அதன் பின்னர் படிப்படியாகக்குறையத்தொடங்கியது. இறக்குமதிகள் 1987இல் 165 . 9 கோடி எஸ். டி. ஆர். களாகவும், 1986 இல் 158 . 4 கோடி எஸ். டி. ஆர். களாகவும் இருந்தன.

சென்மதி நிலுவையில் சேவைகள் கணக்கு 1982 - 87 காலப்பிரிவு முழுவதிலும் பற்றுக்குறை நிலையிலேயே இருந்து வந்தது. இப்பற்றுக்குறை 1983இல் 5 கோடியே 60 இலட்சம் எஸ். டி. ஆர்களாக இருந்து 1987இல் 11 கோடியே 40 இலட்சம் எஸ். டி. ஆர்களாக அதிகரித்திருந்தது. இந்த பாதகமான போக்குக்கு பங்களிப்புச் செய்த முக்கிய காரணிகளில் ஒன்று சுற்றுலாத்துறை வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியாகும். சுற்றுலாத்துறை மூலமான வருவாய்கள்1982இல்11கோடியே 70

இலட்சம்எஸ்.டி.ஆர்களாக உச்ச மட்டத்தில் இருந்து 1987-ல் 4 கோடியே 80 இலட்சம் எஸ். டி. ஆர். களாக குறைவடைந்திருந் தன. இதன் விளைவாக, பிரயா ணங்கள் மூலமான தேறிய சம் பாத்தியங்கள் 1969-ன் பின்னர் 1987-ல் முதன்முதலாக எதிர்க் கணிய நிலையில் இருந்தன.

வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பான தேறிய வட்டிக் கொடுப்பனவுகள் அதிகரித்திருந் ததும் சேவைகள் கணக்கின் பற் ருக்குறைகள் உயர்வதற்கு பங் களிப்புச் செய்தது. 1980-களில் மூலதனச் செலவுகள் தொடர்ந் தும் அதிகரித்துவந்ததால் வெளி நாட்டு மூலவளங்களிலிருந்தே இச்செலவுகளில் பெரும்பகுதி நிதிப்படுத்தப்பட்டு வந்தது. இந்த நிலைமை வெளிநாட்டுக் கடன்களை அதிகரித்த அளவில் பெற வேண்டிய தேவையை உரு வாக்கியதுடன் அதன் விளைவாக இக்கடன்கள் மீதான சேவைக் கொடுப்பனவுச் சுமைகளை நாடு எதிர் நோக்க வேண்டியிருந்தது. வெளிநாட்டு மூலவளங்களில் பெரும் பகுதி சலுகை ரீதி யிலேயே இங்கு வந்து சேர்ந்தது. எயார் லங்கா. கப்பல் கூட்டுத் தாபனம் போன்ற பொதுத் துறை தாபனங்கள், தமது மூல தன தேவைகளுக்கென வர்த்தக கடன்களைப் பெற்றுக்கொண் டன. இத்தகைய வர்த்தக கடன் களுக்காக வட்டிக் கொடுப்பனவு கள், சமீப வருடங்களில்மொத்த வட்டிக் கொடுப்பனவுகளில் கணிசமான பங்கினைப் பெற்றி ருந்தன. அதே வேளையில், தனி யார் பண அனுப்பீடுகள் 1984-ல் உச்ச கட்டத்தை யடைந்து அதன் பின்னர் படிப்படியாக குறைந்து வரத்தொடங்கியுள் ளன.

**வெளிநாட்டுக்கடன்**

கடந்த தசாப்தம் முழுவதி லும்,இலங்கையின் நடைமுறைக் கணக்கு பற்றுக்குறையை நிதிப் படுத்தல் மூலமாக வெளிநாட்டு மூலவளங்களே இருந்து வந்துள் ளன. முழு மொத்த வெளிநாட் டுக்கடன்இக்காலப் பிரிவில் கணி

**கடன் சேவைக் கொடுப்பனவுகள் 1983–1987**

| விடயம் | எஸ். டி. ஆர். பத்து இலட்சம் | | | | |
|---|---|---|---|---|---|
| | 1983 | 1984 | 1985 | 1986 (a) | 1987 (b) |
| 1. கடன் சேவைக் கொடுப்பனவுகள் | 287.1 | 308.0 | 340.6 | 356.7 | 391.1 |
| 1.1 கடன் தீர்ப்பனவுகள் | 126.5 | 132.3 | 165.5 | 213.4 | 256.1 |
| (i) சர்வதேச நாணய நிதியத்திற்கு | 46.2 | 22.7 | 35.8 | 58.5 | 69.4 |
| (ii) ஏனையவற்றுக்கு | 80.3 | 109.6 | 129.7 | 154.9 | 185.7 |
| 1.2 வட்டிக் கொடுப்பனவுகள் | 160.6 | 175.7 | 175.1 | 143.3 | 135.0 |
| (i) சர்வதேச நாணய நிதியத்திற்கு | 30.8 | 31.4 | 27.1 | 21.3 | 18.3 |
| (ii) ஏனையவற்றுக்கு | 129.8 | 144.3 | 148.0 | 122.0 | 115.7 |
| 2. வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகளினதும் சேவைகளிலுமிருந்தான வருவாய்கள் | 1,312.9 | 1,756.1 | 1,619.0 | 1,352.6 | 1,372.0 |
| 3. வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள் மற்றும் சேவைகள் மூலமான பெறுகைகளும் தனியார் பண மாற்றல்களும் | 1,588.0 | 2,049.6 | 1,906.6 | 1,622.4 | 1,640.0 |
| 4. கடன் சேவை விகிதங்கள் | | | | | |
| 4.1 மேலேயுள்ள 2 ன் சதவீதமாக | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 21.9 | 17.5 | 21.0 | 26.4 | 28.5 |
| (ii) ச. நா. நி. கொடுக்கல் வாங்கல் தவிர்ந்த | 16.0 | 14.5 | 17.2 | 20.5 | 22.1 |
| 4.2 மேலேயுள்ள 3 ன் சதவீதமாக | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 18.1 | 15.0 | 17.9 | 22.0 | 23.8 |
| (ii) ச.நா.நி. கொடுக்கல் வாங்கல் தவிர்ந்த | 13.2 | 12.4 | 14.6 | 17.1 | 18.5 |

சமான அளவில் அதிகரித்து வந் திருக்கிறது. அதே நேரத்தில் மொத்த கடன் சேவைக்கொடுப் பனவுகள் 10 வருட காலத்தில் இருமடங்காகியுள்ளன. மொத் தப் பொருட்களினதும், சேவை களினதும் ஏற்றுமதிகளின் ஒரு விகிதம் என்ற முறையில், கடன் சேவைக் கொடுப்பனவுகள் 1987-ல் சுமார் 28 சதவீதம் வரை யில் உயர்ந்திருந்தன. இலங்கை யின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட் டத்துக்கும் நுகர்வுத்தேவை களுக்கும் கடந்த 10 வருடங் களில் வெளிநாட்டு நிதிவளங் கள் நல்ல ஒத்துழைப்பைக் கொடுத்து வந்துள்ளன என்று கூறப்படுகிறது. மேலும், இக் கடன்களில் பெரும்பாலானவை குறைந்த வட்டி வீதங்களைக் கொண்டிருப்பதுடன் நீண்ட திருப்பிச் செலுத்தும் காலத்தை யும் கொண்டிருக்கின்றன. வேறு சில வளர்முக நாடுகளுடன் ஒப் பிட்டுப் பார்க்கும் போது இலங் கையின் கடன் பிரச்சினை இது வரையில் மிக மோசமான கட் டத்தை அடையவில்லை என்றே கூற வேண்டும்.

சமீப காலத்தில் கடன் தீர்ப் பனவுக் கொடுப்பனவுகள் முன் னெப்போதுமிராத விதத்தில் அதிகரித்து வந்தமை, பொருளா தாரக் கொள்கையிலும், அபி விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களி லும் உறுதியான நடவடிக்கை களின் அவசியத்தை வலியுறுத் தின. மொத்த தேசிய உற்பத்தி யின் ஒரு விகிதம் என்ற முறை யில் 1961/65 காலத்தில் 2.0 சத வீதமாக இருந்த கடன் சேவைக் கொடுப்பனவுகள் 1971/75 காலத் தில் 5.5 சதவீதம் வரையில்வந்து 1981/85 காலத்தில் 8.0 சதவீத மாக உயர்ந்து காணப்பட்டது. இது 1987-ல் 28 சதவீத மட் டத்தை அடைந்தது. இவ்வாறாக கடன் சேவை/மொ. தே. உற் பத்தி விகிதம் உயர்ந்து வருவது அரசாங்க வரவு செலவுத் திட் டத்துக்கும், சென்மதி நிலுவைக் கும் மிகக்கடுமையான பிரச்சினை களைத் தோற்றுவிக்க முடியும் என்று அச்சம் தெரிவிக்கப்படு கிறது. இறக்குமதிகளை நிதிப் படுத்துவதற்கு மற்றும் கடன் சேவைக் கடப்பாடுகளை நிறை வேற்றுவதற்குமென பொருளா தாரம் போதிய அளவிலான மூலவளங்களை தோற்றுவிக்க முடியாது போனல் பாரதூர மான பிரச்சினைகள் உருவாகக் கூடும்.

# இலங்கையில் 1977-ன் பின்னர் செய்யப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள்: ஒரு மதிப்பீடு

எஸ். திலகரத்ன

ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக பொருளியல் துறை பேராசிரியர் கலாநிதி எஸ். திலகரத்ன, இலங்கையில் 1977-ன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்களை ஒரு விமர்சன கண்ணோட்டத்தில் பரிசீலனை செய்கிறார்.

1977-ன் பின்னர் இலங்கையில்மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் முன்வைத்த பொருளாதார மாதிரியின் பிரதான கூறுகளையும், அடுத்து வந்த பத்து வருடங்களில் இந்த மாதிரி செயலாற்றிய விதம் மற்றும் அதன் சாதனைகள் என்பவற்றையும் சுருக்கமாக எடுத்து விளக்குவதற்கும், இந்த மாதிரி நடைமுறைக்கு விடப்பட்டபோது காணப்பட்ட சில அடிப்படை பலவீனங்களை எடுத்துக்காட்டுவதற்கும் இந்த சுருக்கமான கட்டுரையில் ஒரு முயற்சி மேற்கொள்ளப்படும்.

### 1. பொருளாதார மாதிரியின் பிரதான கூறுகள்

1977-ன் பிற்பாகத்தைஅடுத்து வந்த பத்தாண்டுகளில் பின்பற்றப்பட்ட பொருளாதார கொள்கை, நடைமுறை என்பவற்றை பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

i. பொருளாதார தாராளமயமாக்கல்; ஆரம்பத்தில், 45 சதவிகித ரூபா பெறுமதியிறக்கத்துடன் இணைந்த வகையில் இறக்குமதிகளையும், செலாவணிக் கொடுப்பனவுகளையும் தாராளமயமாக்கியமை; பின்னர் பல தொடரான பெறுமதியிறக்கங்கள் இடம் பெற்றமை; ஏனைய பொருளாதார நடவடிக்கைகளில்காணப்பட்ட அரசாங்கக் கட்டுப்பாடுகள் அகற்றப் பட்டமையும், 'திறந்த சந்தைப் பொருளாதாரம்' ஒன்றின் உருவாக்கத்துக்கு வழிகோலக்கூடிய விதத்தில் தனியார்மயமாக்கல் கொள்கையொன்றை பின்பற்றியமையும்.

ii. ஊக்குவிப்புத்தொகுதி: உள்நாட்டு, வெளிநாட்டு தனியார் முதலீட்டாளர்களுக்கு தாராளமான நிதி மற்றும் ஏனைய ஊக்குவிப்புக்களை வழங்குதல்.

iii. குறிப்பாக நீர்ப்பாசனம், மின்சாரம், பாதைகள் மற்றும் தொலைத் தொடர்புச் சேவைகள் போன்ற பொது வசதிகளை அபிவிருத்தி செய்வதிலேயே கூடிய அளவிலான பொது முதலீடுகள் இடப்பட்டன. பொது வசதிகளின் முன்னேற்றத்தையடுத்து பொது முதலீடுகளின் பங்கு காலப் போக்கில் குறைந்து செல்லும் என்று எதிர்பார்க்கப் பட்டது.

iv. ஏற்றுமதி வழிப்பட்டவேலை வாய்ப்பு நோக்கில் வளர்ச்சி: பொது வசதிகள் செய்துகொடுக்கப்பட்டதையும், ஒரு தொகுதி ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டதையும் அடுத்து இச் சூழலில் தனியார்துறை ஊக்கத்துடன் செயற்படும் என்று எதிர்பார்க்கபபட்டது. வேலை வாய்ப்புக்களை பெருக்கக் கூடியதும்,(ஏற்றுமதி நோக்கில்) அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொடுக்கக் கூடியதுமான நடவடிக்கைகளில் தனியார் துறை இறங்க வேண்டுமென்பதே இதன் கருத்தாகும். இவ் விஷயம் தொடர்பாக, சிங்கப்பூர், தென் கொரியா ஆகிய நாடுகள் பொருத்தமான மாதிரிகள் என்று அடிக்கடி சுட்டிக்காட்டப் பட்டு வந்தது.

v. பாரிய அளவிலான பொது முதலீடுகளையும், பெருகி வந்த இறக்குமதி மட்டங்களையும், நிதிப்படுத்துவதற்கு பெருமளவில் வெளிநாட்டுக் கடன்களில் தங்கியிருந்தமை, இந்த தங்கியிருத்தலானது நிலைமாறும் காலகட்டமொன்றின் ஒரு வழிமுறை என்றும், ஏற்றுமதி வழிப்படுத்தப்பட்ட வளர்ச்சிப் படிமுறை உருவாகி வரும்போது இதுபடிப் படியாக குறைந்துசெல்லும் என்றும் கருதப்பட்டது.

vi. மீள்பகிர்வு நடவடிக்கைகள் நோக்கங்களில் வெளிப்படையாக காணப்படாததால், சமதர்ம நோக்குடன் சமூக சேமநல நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்தமை. அதாவது, பொருளாதார வளர்ச்சி ஏற்படும்போது அதனை அடியொட்டி மக்களுக்குதொழில் வாய்ப்புக்கள் பெருகி, வறுமை ஒழிந்து நன்மை கிட்டும் என்ற எதிர்பார்ப்பில் பெருமளவிலான நிதி வளங்கள் முதலீடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

மேலே விவரிக்கப்பட்டகொள்கைத் தொகுதியின் வெற்றிகரமான 'அமுலாக்கத்துக்கு அரசியல் ஸ்திர நிலை' ஒரு முன் நிபந்தனையாக கருதப்பட்டது என்பதனையும் இங்கு சுட்டிக் காட்டவேண்டும். மேலும் இந்த

சீர்திருத்தங்கள் அவற்றின் தர்க் ரீதியான முடிவுகளை அடையும் வரையில் - அதாவது துரித பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு அதன் பயன்கள் சமூகத்தின் சகல பிரிவினரிடமும் மெதுவாக கசிந்து செல்லும் வரையில், அரசியல் தலைமை உறுதியாக இருக்க வேண்டுமென்றும், ஆட்சி நீடிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது.

**2. சாதனைகள்**

இந்த மாதிரி செயற்பட்டதன் விளைவாக ஏற்பட்டதெனக் கூறப்படும் பிரதான சாதனைகளை இப்பொழுது பார்ப்போம்,

i. பொருளாதாரத்தின் வளர்ச்சி விகிதம் வரலாற்று வளர்ச்சி மட்டங்களுக்கு மேலே உயர்ந்து சென்றது. உண்மை நியதிகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் 1960–களில் 4 சதவீதமாகவும், 1970 - 1977 காலத்தில் 3 சதவீதமாகவும் இருந்து 1978 - 86 காலத்தில் சராசரி 5.5 சதவிகிதமாகி இருந்தது. உண்மையில், இக்காலப் பிரிவின் ஆரம்பத்தில் (1978 - 82) சராசரி மொ. உ. உ. வளர்ச்சி 6.2 சதவீதமாக இருந்தது. குறிப்பாக, இனக்கலவரங்கள் காரணமாக பொருளாதார நடவடிக்கைகளில் ஒரு பொதுவான மிதப்போக்கு காணப்பட்ட பிந்தியகாலத்திலும் (1983-86) கூட சராசரி வருடாந்த வளர்ச்சி 5 சதவீதமாக இருந்தது. இந்த வளர்ச்சி வேகம் 1987-ல் மட்டுமே மந்த கதியை (1.5 சதவீதமாக மிகக் கடுமையான ஒரு வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டது) அடைந்தது. இதற்கு பிரதானமாக வேளாண்மைத் துறையில் ஏற்பட்ட (சுமார் 6 சதவீதம் வரையான) உற்பத்தி வீழ்ச்சியே காரணமென்றுகூறவேண்டும். சகல பிரதான பயிர்களையும் - குறிப்பாக இறப்பர், தென்னை, நெல் போன்ற பயிர்களை - வறட்சி நிலைமைகள் மிகக் கடுமையாக பாதித்ததன் தாக்கமேஇது.

பொருளாதாரத்தில் முதலீடுகளின் விகிதம் முன்னெப்போதுமிராத வகையில் உயர்ந்து சென்றது. மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 1960-களிலும், 1970-களிலும் (1977 வரையில்) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 15-16 சதவிகிதம் வரையில் இருந்தது. இது 1978 - 86 காலத்தில் சராசரியாக 26 சத வீதமாக திடீர் அதிகரிப்பு கண்டது. வளர்முக பொருளாதாரமொன்றைப் பொறுத்த வரையில் இது ஒரு உயர்ந்த மட்டமாகும்.

iii. நீர்ப்பாசனம், சக்தி, பாதைகள், போக்குவரத்து, தொலைத்தொடர்புகள், பல்வேறு வகையினதான வியாபார, பொது கட்டடங்கள், நகர புனரமைப்பு போன்ற பௌதீக பொது வசதிகளை விருத்தி செய்வதற்கே அதிகரித்த முதலீடுகளில் பெரும்பகுதி சென்றது. 1977-க்கு பிற்பட்ட காலத்தில் சமூக பொது வசதிகளின் நவீன மயமாக்கத்திலும், விருத்தியிலும், புனருத்தாரணத்திலும் குறிப்பிட்டுக்கூறக்கூடிய விதத்தில் சாதனைகள் எய்தப்பட்டது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

iv. கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதியில் செங்குத்தான அதிகரிப்புக்கள் ஏற்பட்டதனையடுத்து ஏற்றுமதி அமைவில் ஓர் அடிப்படை மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று இப்பொழுது அடிக்கடி கூறப்படுகிறது. கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதி 1976–ல் மொத்த ஏற்றுமதிப் பெறுமதியில் 15 சதவீதம் அளவில் இருந்து, 1987-ல் 49 சதவீதம் வரையில் உயர்ந்து சென்றுள்ளது. இதேகாலத்தில் பெருந்தோட்டத்துறை உற்பத்திகளின் ஏற்றுமதிப் பங்கு சார்பு ரீதியாக வீழ்ச்சி கண்டது. இது 1976-ல் 71 சதவீதமாக இருந்து 1987-ல் 38 சதவீதமாக குறைந்திருந்தது. அன்னியச் செலாவணி சம்பாத்திய மூலம் என்ற வகையில், உடுபுடவை ஏற்றுமதி தேயிலையை முந்திவிட்டது. காலனித்துவ ஏற்றுமதி மாதிரியிலிருந்து, இறுதியில், நாடு தன்னை விடுவித்துக் கொண்டது என்று இதனை உதாரணங் காட்டி பேசப்பட்டு வருகின்றது. ஏற்றுமதி வழிப்பட்ட புதிய வளர்ச்சிப் பாதையொன்றில் நாடு காலடி எடுத்து வைத்து விட்டது என்றும் கூறப்படுகிறது.

v. வேலைவாய்ப்புக்களின் விஷயத்திலும், குறைந்தது 1983-ம் வருடம் வரையாகிலும், தொடர்ச்சியான விரிவாக்கம் காணப்பட்டது. எழுபதுகளின் நடுப்பகுதியில் வேலையில்லாதோரின் தொகை பத்து இலட்சமாக (ஊழியர் படையில் 20 சதவீதமாக) இருந்து 1982-ல் 600,000 ஆக (ஊழியர் படையில் 12 சதவீதமாக) வீழ்ச்சியடைந்திருந்தது' என்று கூறப்படுகிறது. 'சுதந்திர வர்த்தக வலயம் மட்டும் 1987 வரையில் 47,000 நேரடி வேலைவாய்ப்புக்களை உருவாக்கி கொடுத்திருக்கிறது. எனினும், 1983 - க்கு பிறகு (குறிப்பாக இனக்கலவரங்களையடுத்து பொருளாதார மந்தப் போக்கு தோன்றியதால்) வேலை வாய்ப்புக்களின் உருவாக்கம் குறைவடைந்து வந்ததுடன், 1987 - ல் வேலையற்றோரின் எண்ணிக்கை பத்து இலட்சமாக (ஊழியர் படையில் 18 சதவீதமாக) உயர்ந்திருந்தது.

vi. இனப்பிரச்சினை காரணமாக பெருந்தொகையான வளங்கள் (சில வருடங்களில் 1200 - 1500 கோடி ரூபா வரையில்) பாதுகாப்புக்கு திசை திருப்பப்பட்டதன் விளைவாக, பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட நேரடி, மறைமுக சேதங்கள் நிகழாதிருந்திருப்பின் பொருளாதாரம் தொடர்ந்து சிறப்பான வளர்ச்சிச் செயற்பாட்டைக் காட்டியிருக்கும் என்றும், சிலவேளை குறைவிருத்தியின் முதுகெலும்பினை உடைத்துக்கொண்டு நிலையான வளர்ச்சிப்பாதையில் முன்னேறிச் சென்றிருக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

### 3 சாதனைகளை மதிப்பிடுதல்

1977-ன் பொருளாதார சீர்திருத்தங்களை அடுத்து எய்தப்பட்ட சாதனைகள் குறித்து எடுத்துக் கூறப்பட்டவற்றை நாம் இப்பொழுது சற்று பரிசீலித்துப்பார்ப்போம்.

3.1 சேவை - அடிப்படை வளர்ச்சி மாதிரி: 1978 - 86 காலத்தில் மொத்த தேசிய உற்பத்தியில் பதிவு செய்யப்பட்ட சராசரி வளர்ச்சி விகிதம் முன்னெப்போதுமிராத விதத்தில் உயர்வாக இருந்தது என்பதனை ஏற்கனவே பார்த்தோம். இலங்கையின் பொருளாதாரம், 1977-ன் பின்னரான சீர்திருத்தங்களை அடுத்து, உறுதியானதும், நிலையானதுமான வளர்ச்சி அடித்தளமொன்றை உருவாக்கிக் கொள்வதில் வெற்றி கண்டுள்ளதா என்பதே இங்கு எழும் முக்கியமான கேள்வியாகும். தென்கொரியா, தைவான், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் (இலங்கையின் கொள்கை வகுப்போருக்கு இவையே கவர்ச்சிகரமான ஆதர்சங்களாக தெரிகின்றன), பொருளாதார சீர்திருத்தங்களை அடுத்து வந்த முதல் பத்தாண்டு காலத்தில், பொருளுற்பத்தித் துறையில் மிக உறுதியான முறையில் ஏற்பட்ட வளர்ச்சி முழு உற்பத்திப் படிமுறையையும் உந்தித் தள்ளியது. தென்கொரியாவிலும், தைவானிலும் 1960 - 70 காலத்தில் பொருளுற்பத்தித்துறையில் ஏற்பட்ட வருடாந்த சராசரி வளர்ச்சி 17 - 18 சதவிகிதம் வரையில் இருந்தது. இந்த வளர்ச்சி 1962 - 72 காலப் பிரிவில் சிங்கப்பூரில் 19 சதவீதமாக இருந்தது. இலங்கையின் விஷயத்தைப் பொறுத்த வரையில், பொருளாதார வளர்ச்சியை உந்தித் தள்ளக்கூடிய விதத்திலான ஒரே சீரான, தெளிவான முன்னேற்றம் பண்ட உற்பத்தி நடவடிக்கைகளில் காணப்படவில்லை.

— 1978 - 80 காலத்தில் நிர்மாணத்துறையில் 20 சதவீத வருட சராசரி வளர்ச்சி பதிவு செய்யப்பட்டது. உயர் வளர்ச்சி வீதங்களுடன் இத்துறையே முன்னணியில் இருந்தது. ஆனால், அதன் பின்னர் இத்துறை பெருமளவுக்கு தேக்கமுற்றுக் கிடக்கிறது. இந்த வளர்ச்சி வேகம் அற்ப ஆயுள் கொண்டதாகவே இருந்தது.

— வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில், வளர்ச்சி வீதம் அங்குமிங்கும் ஊசலாடி, தொடர்ந்து தளம்பிக்கொண்டிருந்தது. வறட்சி, மழை போன்ற காலநிலை மாற்றங்களே இதற்குக் காரணம். 1978-86 காலத்தில் பதிவு செய்யப்பட்ட சராசரி வளர்ச்சி 3 சதவீதமாக இருந்தது.

— பொருளுற்பத்தித்துறை வளர்ச்சியும் அவ்வப்போது கூடியும், குறைந்தும் காணப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் இது 1 சதவீதத்துக்கு குறைவாகவும், வேறு சில வருடங்களில் 12 சதவீதம் வரையில் உயர்வாகவும் இருந்தது. வருடாந்த சராசரி 5 சதவீதமாக இருந்தது.

எனவே, பொருளாதார வளர்ச்சிக்கான பிரதான மூலம், விவசாயம், தயாரிப்பு, நிர்மாணம் போன்றவற்றை உள்ளடக்கிய பொருளுற்பத்தித் துறையாக இருக்கவில்லை. மாறாக, இக்கால கட்டத்தில் சேவைத்துறையே வளர்ச்சியின் ஆதார அம்சமாக இருந்தது.

வர்த்தகம், போக்குவரத்து, பாவனைப் பொருட்கள், நிதிச் சேவைகள், மெய் ஆதனம், வீடமைப்பு, பொது நிர்வாகம், பாதுகாப்பு மற்றும் சேவைகள் என்பவற்றை அடக்கிய சேவைத்துறை 1978-84 காலப்பிரிவில் தடங்கல்கள் இல்லாது வருடாந்தம் 7-8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து வந்தது. இக்கால கட்டத்தில் மொத்த தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட அதி

அட்டவணை 1

துறைவாரியான வளர்ச்சி (%)

| | வேளாண்மை | தயாரிப்புத்தொழில் | நிர்மாண | சேவைகள் |
|---|---|---|---|---|
| 1978 | 5.4 | 7.8 | 28.2 | 7.5 |
| 1979 | 2.0 | 4.6 | 20.9 | 7.8 |
| 1980 | 3.1 | 1.0 | 11.0 | 8.0 |
| 1981 | 6.9 | 5.2 | - 3.0 | 6.4 |
| 1982 | 2.6 | 4.8 | - 2.0 | 7.0 |
| 1983 | 5.0 | 0.8 | 1.0 | 6.7 |
| 1984 | -0.4 | 12.3 | - 0.1 | 7.0 |
| 1985 | 8.6 | 5.2 | 0.5 | 3.9 |
| 1986 | 2.6 | 8.4 | 1.5 | 4.3 |
| 1978-86 | 3.1 | 4.9 | 6.3 | 6.5 |

கரிப்புகளில் மூன்றில் இரண்டு பங்கு சேவைத்துறையிலிருந்தே வந்தது. சேவைத்துறை நடவடிக்கைகளும் 1985-க்கு பிறகு மந்தமடைந்து முழுப்பொருளாதாரத்தின் வளர்ச்சியையும் பின் தங்க வைத்தது.

ஆகவே, 1977-ன் பின்னரான வளர்ச்சி மாதிரி, கைத்தொழில் அல்லது விவசாய நடவடிக்கைகளிலிருந்து தோன்றும் ஏற்றுமதிகள் அல்லது இறக்குமதிப் பிரதியீடுகள் என்பவற்றுக்குப் பதிலாக, வர்த்தகமல்லாதனவற்றை நோக்கியே கடுமையாக சாய்ந்திருக்கிறது. சேவைத் துறை நடவடிக்கைகளில் ஏற்பட்ட உயர் வளர்ச்சி, ஒரு புறத்தில், கடந்த காலத்தில் பல்வேறு பொருளாதார சேவைகளுக்குமான தேவைகள் நிறைவேற்றப்படாது திரண்டிருந்தமையால் அவற்றை முழுதாக தீர்த்து வைத்தது, அல்லது பொது வசதிகளின் பற்றுக்குறையை பூர்த்தி செய்தது என்பவற்றிலிருந்து ஏற்பட்டது என்று குறிப்பிடமுடியும்.

தனியார் தொழில் முயற்சிகளின் கீழ் எதிர்கால உற்பத்தி அதிகரிப்புகளுக்கு வசதி செய்து கொடுக்கும் போக்கினையும் அது பிரதிபலிக்கின்றது. மேலும், சேவைகளின் பெருக்கம் விரும்பத்தகாத ஒரு விஷயமல்ல. ஏனைய எந்தப் பொருளையும் போல இதுவும் தேவையொன்றையே நிறைவேற்றி வைக்கிறது. எனினும், தாராளமயப் படுத்தப்பட்ட பொருளாதாரமொன்றில், வளர்ச்சி மாதிரி சேவைத்துறையை நோக்கி கடுமையாக சாய்வுற்றிருப்பது நீண்ட கால நோக்கில் நிலை நிறுத்திக்கொள்ள முடியாத ஒரு போக்காகும். ஏற்றுமதிகள், இறக்குமதி பிரதியீடுகள போன்ற வியாபார முனையில் துரித, நிலையான வளர்ச்சியை எய்தும் ஆற்றலிலேயே தாராளமயப் படுத்தப்பட்ட பொருளாதாரமொன்றின் வெற்றி இறுதியில் தங்கியிருக்கிறது.

அன்றேல் தாராளமயப்படுத்திய பொருளாதாரமொன்று வெளிநாட்டுக் கொடுப்பனவுப் பிரச்சினைகளை எதிர் நோக்கும். அத்துடன், உதவியாகவும் கடன்களாகவும் போதிய வெளிநாட்டு நிதி வளங்கள் வந்து சேரும் வரையிலேயே அவற்றால் தாக்குப்பிடிக்கமுடியும். அதனால் தான் வேளாண்மை கைத்தொழில் போன்ற பொருள் உற்பத்தித்துறைகளில் நிலையான வளர்ச்சி மிக முக்கிய அம்சமாக எடுத்துக் கூறப்படுகிறது.

3.2 ஏற்றுமதி வழிப்பட்ட வளர்ச்சி குறித்த வார்த்தை ஜாலம்: பாரம்பரியமான ஏற்றுமதித் (பெருந்தோட்டப்பயிர்) துறையில் சாதகமான வளர்ச்சிப் போக்கொன்று காணப்படவில்லை. வெளியீட்டு வளர்ச்சி மந்தமாகவே இருந்தது. இது 1978-86 காலத்தில் வருடாந்தம் சராசரி 3 சத வீதத்துக்கும் குறைவாக இருந்தது. தேயிலை விலைகளில் 1984-85 காலத்தில் மட்டும் (வெளிக்காரணிகளினால்) ஒரு செழிப்பு நிலை காணப்பட்டது. இக்காலம் தவிர்ந்த அநேகமான வருடங்களில் பெருந்தோட்டப் பயிர்கள் மூலமான ஏற்றுமதி வருமானம் 45-50 கோடி எஸ். டி. ஆர். களாக தேக்கமுற்றுக் கிடந்தது. சிறு ஏற்றுமதிப் பயிர்களிலும் கூட சாதகமான வளர்ச்சிப் போக்கு காணப்படவில்லை. இவ்விதமாக வேளாண்மைத்துறை ஏற்றுமதி தேங்கிக் கிடந்த போது ஏற்றுமதிப் பெருக்கத்தின் பெரும் பகுதிக்கு கைத்தொழில் ஏற்றுமதிகளே காரணமாக இருந்தன. ஆனால் கைத்தொழில் பொருள் ஏற்றுமதியில் காணப்பட்ட விரிவு பெரும்பாலும் இறக்குமதி உள்ளீடுகளைச் சார்ந்திருந்த இரு பொருட்களிலேயே குவிமையப் பட்டிருந்தது புடவை உடுதுணிகள் பெற்றோலியப் பொருட்களே அவை. எனவே, 1977-87 காலத்தில் கைத்தொழில் ஏற்றுமதிகள் ஆறு மடங்கால் அதிகரித்திருந்த போதிலும்

மொத்த ஏற்றுமதிச் சம்பாத்தியத்தில் (சுமார் அரைவாசி) இவை ஈட்டிய தேறிய வெளிநாட்டுச் செலாவணிச் சம்பாத்தியங்கள் (இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளையும் கணக்கில் எடுக்கும் போது) மிகக் குறைவாகவே இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே ஏற்றுமதி அமைப்பில் ஒரு அடிப்படை மாற்றம் நிகழ்ந்திருக்கிறது என்று வாதிக்க முடியாது. வேளாண்மைத்துறை ஏற்றுமதிகளே தொடர்ந்தும் வெளிநாட்டுச் செலாவணிச் சம்பாத்தியத்துக்கான பிரதான மூலமாக இருந்து வருகின்றன. மொத்த அன்னியச் செலாவணித்திரட்டில் குறைந்தது மூன்றில் இரண்டு பங்குக்கு இத்துறை பொறுப்பாக இருக்கிறது. ஆனால், (தேயிலையில் செழிப்பு நிலை காணப்பட்ட 1984-85 வருடங்களைத் தவிர) அநேகமாக 1977க்கு பிற்பட்ட காலம் முழுவதிலும் வேளாண்மைத்துறை ஏற்றுமதிகள் மூலமான சம்பாத்தியங்கள் தேக்க நிலையிலேயே தொடர்ந்தும் இருந்து வந்தன. தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரமொன்றின் ஆற்றலைப்பொறுத்தவரையில், ஏற்றுமதி விரிவு முக்கியமில்லை. ஒன்றுடன் ஒன்று தொடர்புத்தாக்கம் கொண்ட, பொருளாதாரத்தின் ஏனைய துறைகளில் வளர்ச்சியைத்தூண்டக்கூடிய ஏற்றுமதிக் கைத்தொழில்களை உருவாக்குவதே முக்கியமாகும். சமீபத்தில் தென் கொரிய பொருளாதாரம் மீது செய்யப்பட்ட ஆராய்ச்சி இரு மிகத் தெளிவான வளர்ச்சி முனைகளை இனங்காட்டியுள்ளது. அவை (அ) தொழில் செறிவு மிக்க ஏற்றுமதி வழிப்பட்ட கைத்தொழில்கள் (ஆ) ஏற்றுமதித்துறைக்கான உள்ளிடுகைகளை உற்பத்தி செய்யும் மூலதன செறிவு மிக்கஇறக்குமதி பிரதியீட்டுக் கைத்தொழில் என்பன. பரஸ்பரம் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதாகக் கருதப்படும் ஏற்றுமதிப் பெருக்கம், இறக்குமதி பிரதியீடு என்பன இணைந்து காணப்பட்ட ஓர் இரட்டை - கைக்

தொழில் வளர்ச்சிப்படிமுறையாக அது இருந்தது. ஆகவே, கோட்பாட்டு ரீதியில், ஏற்றுமதி விரிவு, இறக்குமதி பிரதியீடு என்ற அம்சங்களை பிரித்து வேறுபடுத்திப் பார்க்க முடியாது.

ஏற்றுமதி வழிப்பட்ட வளர்ச்சி உபாயம் தோல்வி கண்டதால் அதனையடியொட்டி பல பின்விளைவுகள் தோன்றின. தாராளமயக் கொள்கையின் தொடர்ச்சிக்கு இவை அச்சுறுத்தலாக இருந்தன. வர்த்தக இடைவெளி (அதாவது ஏற்றுமதிகளைவிட இறக்குமதிகள் மிகையாக இருந்தமை) தொடர்ந்தும் பெரிய அளவிலேயே நிலைத்திருந்தது. 1977-86 காலத்தில் இறக்குமதிகள் (எஸ். டி. ஆர். அளவுகளில்) ஆண்டொன்றுக்கு சராசரி 11 சதவீதமாக அதிகரிப்பினைக்காட்டிய போது ஏற்றுமதிகள் 5 சதவீதமாக மட்டுமே அதிகரிப்பினைக் காட்டின. மொத்த இறக்குமதிகளில் 60 சதவீதத்தை மட்டுமே ஏற்றுமதிகள் நிதிப்படுத்தக்கூடியவையாக இருந்தன. தனியார் பண அனுப்பீடுகள், கடன்கள், கொடைகள் என்பன வர்த்தக இடைவெளியின் பெரும்பகுதியை நிதிப்படுத்தின. ஆக, நிதிப்படுத்துவதற்கு (பண அனுப்பீடுகள், கடன்கள், கொடைகள் போன்ற) வேறு நிதி மூலங்கள் கிடைக்கக் கூடியதாக இருந்ததால்தான் தாராளமய பொருளாதாரத்தை தொடர்ந்தும் நடத்திச் செல்லக் கூடியதாக இருந்தது. அதற்கு ஏற்றுமதிப் பெருக்கம் தான் காரணமென்று கூற முடியாது இது, நீண்டகால நோக்கில் நீடித்து நிலைக்க முடியாத ஒரு போக்கு என்பது வெளிப்படை.

அடுத்த முக்கிய விஷயம்வெளிநாட்டுப்படுகடன் தொடர்பானது. முதலீடுகளில் பெருந்தொகை விகிதம் வர்த்தகமல்லாத பொது வசதித்துறைகளிலேயே இடப்பட்டிருக்கிறது. இந்தமுதலீடுகளில் 40 சதவிகிதம் வரையான தொகை வெளிநாட்டட்டது. இதன் தவிர்க்க முடியாத பின்விளைவாக வெளிநாட்டுக்கடன் சேவைவிகிதம்உயர்ந்து சென்றிருக்கிறது. (பொருட்கள், சேவைகள் என்பவற்றை உள்ளடக்கிய) ஏற்றுமதிச் சம்பாத்தியங்களின் விகிதமாக கடன் சேவை (அதாவது அசலும் வட்டிக் கொடுப்பனவுகளும்) 1970-களில் 15 சதவீதமாக இருந்து, 1986-87ல் சராசரி 27 சதவீதமாக அதிகரித்துக் காணப்பட்டது. பெருமளவில் சலுகை ரீதியிலான கடன்கள் கிடைத்திருந்தும் கூட, ஏற்றுமதிச் சம்பாத்தியங்களில் காற்பகுதியை உறிஞ்சிக்கொள்ளும் அளவுக்கு கடன் சேவை விகிதம் உயர்ந்து சென்றுள்ளது. பெருந்தொகையான முதலீடுகள் வர்த்தகமல்லாத துறைகளில் முடக்கப்பட்டிருந்ததனையும் வர்த்தகப் பிரிவில் முடக்கப்பட்டிருந்த முதலீடுகளும் கூட கூடிய இறக்குமதி உள்ளிடுகைகளைக் கொண்ட பொருட்கள் மீதே இடப்பட்டிருந்ததனையும் இது பிரதிபலிக்கின்றது.

மேலும், முதலீட்டு வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு (இது முன்னர் மொ. உ. உ. யின் 15-16 சதவீதமாக இருந்து 26-27 வீதம் வரையில் உயர்ந்து சென்றது), உள்நாட்டுச் சேமிப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் விளைவாக ஏற்பட்ட தொன்றல்ல என்பதனையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். தேசிய சேமிப்புக்கள் பல வருடங்களாக மொ. உ. உ. யின் 12-13 சதவீதத்தில் தேங்கிக் கிடந்தன. வெளிநாட்டுக் கடன்கள், உதவிகள் என்பன பேரளவில் வந்து குவிந்தமையாலேயே முதலீடுகள் அதிகரித்தன. இந்த வெளிநாட்டு நிதிகளில் பெரும்பகுதியை பொதுத்துறை பயன்படுத்திக்கொண்டது. பொதுத்துறை முதலீடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பே பொருளாதாரத்தில் மொத்த முதலீடுகள் அதிகரித்ததற்கான காரணமாகும். எனவே, இங்கு நாம் காணும் காட்சி, கூடுதலான தனியார் சேமிப்புக்கள், முதலீடுகள் என்பவற்றை அடிப்படையாக கொண்ட தனியார் தொழில் முயற்சிகளின் ஏற்றுமதி வழிப்பட்ட வளர்ச்சி ஒன்றை எமக்கு எடுத்துக்காட்டுவதாக இல்லை. மாறாக, இந்த வளர்ச்சிப்படி முறை, ஒரு புறம் பொதுத் துறையினால் மேற்கொள்ளப்பட்டதொன்றாக இருப்பதுடன் மறுபுறம், வெளிநாட்டுக் கடன்கள், கொடைகள் என்பவற்றிலிருந்தே இது நிதிப்படுத்தப்பட்டது. அது மட்டுமல்லாமல், சமூக பொது வசதிச் சேவைகளிலேயே அதிக கவனம் செலுத்தப்பட்டு வந்துள்ளது. எனவே, 1977-ன் பின்னர் ஏற்பட்ட வளர்ச்சிக்கு சந்தைப் பொறிமுறைக்கு புத்துயிர் ஊட்டியதே காரணம் என்று கூறுவது, உண்மை நிலவரத்தை சரியாக எடுத்துக் கூறியதாக இருக்க மாட்டாது.

3.3 வர்த்தக நடவடிக்கையை கைத்தொழில் நடவடிக்கையாக மாற்றும் முயற்சி தோல்வியுற்றமை: கைத்தொழில் துறைக்குள், தனியார் துறையைப் பொறுத்தவரையில் நிகழ்ந்த மிகத் தெளிவான அபிவிருத்தி ஆடைகள் கைத்தொழிலில் காணப்பட்ட துரித விஸ்தரிப்பாகும். இந்தக் கைத்தொழில் விஸ்தரிப்படைந்ததற்கு முக்கிய காரணியாக இருந்தது, தென் கொரியா, சிங்கப்பூர், ஹொங்கொங் போன்ற ஏனைய ஏற்றுமதி நாடுகளின் கோட்டாக்கள் தீர்ந்து போய் இருந்தமையாகும். தனியார்துறை தொழில் முயற்சியாளர்கள் ஏற்றுமதி வழிப்பட்ட வேறு கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு ஏன் முன்வரவில்லை? ஏற்றுமதி அடித்தளத்தை பன்முகப்படுத்த அவர்கள் ஏன் முயலவில்லை? இதற்கான அடிப்படைக் காரணம் 1977-க்கு பிற்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்கள் வழங்கிய ஊக்குவிப்பு அமைப்பிலேயே தங்கியிருக்கின்றது. தனியார் தொழில் முயற்சியாளர்களைப் பொறுத்த வரையில், உள்நாட்டுச் சந்தையின் வியாபார நடவடிக்கையுடன் ஒப்பிடும்போது, ஏற்றுமதி வழிப்பட்ட நடவடிக்கைகள், சார்பு ரீதியில் கவர்ச்சிகரமானவையாக இருக்கவில்லை.

செலாவணி விதங்களின் உதாரணத்தை எடுத்துப் பார்ப்போம். ஏற்றுமதிகளிலும் அதே போல உள்நாட்டுச் சந்தை நடவடிக்கைகளிலும் சார்பு ரீதியான இலாபத் தன்மையை நிர்ணயிப்பதில் செலாவணி வீதங்கள் பிரதான பங்கினை வகிக்கின்றன. பல வருடங்களாக தொடராக இடம்பெற்று வந்த பெறுமதியிறக்கங்களுக்கு மத்தியிலும்கூட, ரூபாவின் மெய்ச் செலாவணி விகிதம், குறிப்பாக 1980-84 காலப்பிரிவில் பெறுமதியேற்றம் கண்டுள்ளது. பெயரளவிலான செலாவணி வீதங்களை விட (இலங்கைக்கும் அதன் வர்த்தக பங்காளர்களுக்கும் இடையில் பணவீக்க வித்தியாசங்கள் சீராக்கப்பட்டவாறான) மெய்ச் செலாவணி வீதங்களே வியாபார நடவடிக்கைகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இலங்கையின் பணவீக்க விகிதம் அதன் வர்த்தக கூட்டாளி நாடுகளில் நிலவும் விகிதங்களை விட உயர்வாக இருப்பின், அந்நாட்டு நாணயங்கள் தொடர்பாக இலங்கையின் மெய்ச் செலாவணி விகிதம் பெறுமதியேற்றம் அடையும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், ஏற்றுமதிகள் மீது பெறப்படும் பணம் பெறுமதியிறக்கம் அடையும் போது ஏற்படும் சாதகமான விளைவுகள் உள்நாட்டு பணவீக்கத்தினால் ஈடுசெய்யப்பட்டு விடும். இலங்கையில், 1979-84 காலத்தில் உண்மையில் நடந்தது இது தான். இக்காலத்தில், கிடைக்கக் கூடியதாக இருந்த அனைத்து விலைக்குறிகாட்டிகளின் படியும், வருடாந்த பணவீக்க விகிதம் சராசரி 16 சதவீதமாக இருந்தது. நீண்ட கால சமூக பொதுவசதிச் செய்திட்டங்களில் முதலீடுகள் இடப்பட்டதும், வரவு செலவுத் திட்டப்பற்றுக் குறைகளை நிதிப்படுத்துவதற்கான உடனடி வழியாக வங்கிக் கடன்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது போன்ற காரணிகளே உயர்ந்த உள்நாட்டு பணவீக்க விகிதத்துக்கு பெருமளவுக்கு காரணமாகும். ஒரு விஷச்சுழல் உருவாக்கப்பட்டது. பெறுமதியிறக்கத்தின் தாக்கங்கள் பணவீக்கத்தினால் எதிர்மறையானதாக மாற்றப்பட்டபோது, ரூபாவை அதன் மெய் விகிதத்தில் மீள ஸ்தாபிக்கும் விஷயத்தில் தயக்கம் காட்டப்பட்டது. மேலும், பணவீக்கம் ஏற்படும் என்ற பயமே இதற்கு காரணம். தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரம், ரூபா பெறுமதியிறக்கம் என்பவற்றையடுத்து ஏற்றுமதித் தூண்டுகைப்பேறு தோன்றும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், கடுமையான பணவீக்கத்துக்கு எதிரில் இதற்கென வகுக்கப்பட்ட கொள்கை நடைமுறைகள் போதியதாக இருக்கவில்லை.

சார்பு ரீதியில் கைத்தொழிலை விட வர்த்தக நடவடிக்கையை கூடிய கவர்ச்சிகரமானதாக மாற்றுவதில் பல சிக்கலான கூட்டுச் சக்திகள் செயற்பட்டன. பொருளாதார தாராளமயமாக்கல் மற்றும் உதவிகள் மூலம் நிதிப்படுத்தப்பட்ட பொதுவசதி நடவடிக்கைகள் போன்றன தனியார் தொழில் முயற்சியாளர்களுக்கு, அபாய ஏதுக்கள் குறைந்ததும், உடன் இலாபம் கிட்டுவதுமான ஏராளமான வாய்ப்புக்களைத் திறந்து விட்டன. இறக்குமதி; மொத்த சில்லறை வியாபாரம், வேலை ஒப்பந்தங்கள், பொருட்கள் வினியோகம், பழுதுபார்த்தலும் பராமரித்தலும், நிதிச்சேவைகள், மெய் ஆதனம், பிரயாணம், போக்குவரத்துச் சேவைகள், தொழில்களுக்கு ஆட்சேர்ப்பு வேலை போன்றவற்றை உதாரணங்களாக காட்ட முடியும். இந்த வாய்ப்புக்கள் பெருகிய அளவுக்கு - குறிப்பாக, பொருளாதார தாராளமயத்தை அடுத்து வந்த ஆரம்ப வருடங்களில் இத்தகைய வாய்ப்புக்கள் பல்கிப் பெருகின - கைத்தொழில் முதலீடுகளின் கவர்ச்சி குறைந்து கொண்டு வந்தது. கைத்தொழில்கள், வர்த்தகத்தை விட அபாயஏதுக்கள் கூடியதாக இருக்கும் வளர்முக நாடுகளின் விஷயத்தில், ஆரம்ப கட்டத்தில், கைத்தொழிலிலும் பார்க்க வியாபார நடவடிக்கைகள் விரும்பப்படுவது தவிர்க்க முடியாதது தான். ஆனால், தாராளமயமாக்கல் நடந்து பல வருடங்கள் கடந்த பின்னரும் தனியார் துறை முதலீட்டாளர்கள் தொடர்ந்தும் வர்த்தகத்துறையை விரும்பி வருவதானது, கைத்தொழில் துறையில் கவர்ச்சித் தன்மையையும் இலாபத்தன்மையையும் உயர்த்துவதற்கு கொள்கை வகுப்போர் சரியான நேரத்தில் சரியான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியமையையே காட்டுகிறது. இன்னின்ன கைத்தொழில்கள் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட கொள்கை மற்றும் உபாயங்கள் மூலம் முனைப்புடனும், இலக்கு நிர்ணயத்துடனும் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும் என முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. தாராளமயமாக்கல் தொடங்கி பத்தாண்டுகளுக்கு பிறகு - அதாவது 1987 ஜுலையில் கைத்தொழில் கொள்கை ஒன்றுக்கான ஒரு ஒழுங்குவிதி அறிவிக்கப்பட்டது. வியாபார நடவடிக்கைகளிலிருந்து கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு நிலைமாற்றம் ஒன்று ஏற்படக்கூடிய விதத்தில், செயல்திட்டம் மற்றும் உபாயம் ஒன்றை வகுத்துக் கொள்வதில் தோல்வி கண்டமையே, 1977-ன் பின்னரான பொருளாதார சீர்திருத்தங்களின் பிரதான குறைபாடு என்று கூற முடியும். அடிப்படை மாற்றங்களையும் விரிந்த அளவிலான மாற்றங்களையும் எடுத்து வரக்கூடிய விதத்தில் இச் சீர்திருத்தங்கள் முறையாக நடத்திச் செல்லப்படவில்லை.

புதிதாக தொழில் வளர்ச்சி கண்டு வரும் தென்கொரியா போன்ற நாடுகளின் அனுபவம் பல படிப்பினைகளைத் தருகின்றது. கைத்தொழில்களின் பெருக்கத்துக்கு அரச துறையும், தனியார் துறையும் நெருக்கமான உறவுகளை வைத்துக் கொள்ள வேண்டும் என்பதனையும் வர்த்தகத்தில் நம்பகத்

தன்மையைத் தூண்டும் விதத்தில் இந்த உறவு வளர்ச்சிகாண வேண்டுமென்பதனையும் அது காட்டுகிறது. முதலீடு செய்வோர் எதிர்நோக்கும் சந்தைக் குறைபாடுகள், தடங்கல்கள் என்பவற்றை வென்றெடுக்கக் கூடிய விதத்தில் இந்த உறவுகள் உருவாக வேண்டும், காரணி விலைகள், செலாவணி வீதங்கள் தீர்வைகள் போன்றவற்றை சரியாக அமைத்துக் கொடுத்து விடுவதுடன் அரசாங்கத்தின் பங்கு முடிந்து விடுவதில்லை. சந்தைச்சக்திகள் இயங்கி கைத்தொழில் வளர்ச்சி தானுகவே ஏற்படும் என்று அரசாங்கம் கைக்கட்டிப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. மூன்ருவது உலக நாடுகளில் வளர்ந்து வரும் கைத்தொழில் முதலாளித்துவத்துக்கு காரணம் தலையிடாக் கொள்கையல்ல. அரச அனுசரணை தான் என்பதனை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

### 3.4 கறுப்பு பொருளாதாரத்தின் வளர்ச்சி

தாராளமயப்படுத்தப்பட்ட பொருளாதாரம் வியாபார நடவடிக்கைகளில் பெரு விருப்புக்காட்டியது ஒரு புறமிருக்க மறுபுறத்தில், கணிசமான அளவிலான 'கறுப்பு பொருளாதாரம்' ஒன்று வளர்ச்சியடைவதற்கும் இடமளித்தது. சட்ட விரோத கொடுக்கல் வாங்கல்கள் மூலம் பெறப்பட்ட சம்பாத்தியங்கள் அல்லது வரி நோக்கங்களுக்காக பிரகடனப் படுத்தப்படாத வருமானங்களை இது பிரதிபலிக்கின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் 'கறுப்பு பொருளாதாரம்' ஒரு புதிய விஷயமல்ல. ஆனுல் கடந்த பத்தாண்டு காலத்தில் இதன் அளவும், கொடுக்கல் வாங்கல்களின் பரிமாணமும் கணிசமான அதிகரிப்புக்களை பதிவு செய்திருப்பதனை காணமுடிகிறது. இலஞ்சமும் கையூட்டும் இரத்தினக்கல் வியாபாரமும் கள்ளக் கடத்தலும், சட்ட விரோத கமிஷன்கள், குதிரைப் பந்தயமும் சூதாட்டமும், போதை வஸ்துக்கள், தொழில்சார் நிபுணர்களின் வெளியிடப்படாத சம்பாத்தியங்கள், மெய் ஆதனம் மற்றும் வியாபார கொடுக்கல் வாங்கல்கள் என்பவற்றின் பிரகடனப்படுத்தப்படாத பெறுமதிபோன்றன கறுப்புப்பணத்தின் சில முக்கிய மூலாதாரங்களைக் காட்டுகின்றன. இக்கறுப்புப் பணத்தில் ஒரு சிறு தொகை அனுமதேய வைப்புச் சான்றிதழ்களாக வர்த்தக வங்கிகளினுல் திரட்டப்பட்டுள்ளன. இவ்விதம் திரட்டப்பட்ட தொகை 1982ல் இருந்த மட்டத்தைவிட ஆறு மடங்கு பெருகி 1987ல் 203 கோடி ரூபாவாக இருந்தது. நாட்டில் இப்பொழுது இருக்கும் கறுப்புப்பணத்தின் பெறுமதி 2000 கோடி ரூபாவிலிருந்து 4000 கோடிவரையில் அதாவது நடைமுறை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 10 சதவிதத்திலிருந்து 20 சதவீதம் வரையில் இருக்குமென்று உத்தேசமாக மதிப்பிடப்பட்டுள்ளது. மதிப்பீடுகள் எப்படி இருந்த போதிலும், தேசியப் பொருளாதாரத்துக்குள் நுழையாது மூலவளங்கள் பெருமளவில் இருப்பில் இருப்பதற்கான ஆதாரங்கள் உண்டு. மேலும் இவ்விதம் கறுப்புப் பொருளாதாரமொன்று நிலவுவது பேரண்டப் பொருளாதார கொள்கைகளில் பல சிக்கல்களை உண்டு பண்ணியிருக்கிறது. இப் பொருளாதாரம், வரவு செலவுத்திட்ட நாணயக் கொள்கை நடைமுறைகளுக்கு வெளியே இருப்பதனுல் கேள்வியை முகாமை செய்வது மிகக் கடினமாக இருக்கிறது. இந்த வருமானங்கள் நுகர்வு நோக்கில் பெருமளவில் பயன்படுத்தக்கூடிய போக்கு இருப்பதால் பொருளாதாரத்தின் மீது பணவீக்கத்தாக்கங்களையும் எடுத்து வருகிறது.

### 3.5 வேலைவாய்ப்புகளில் நகர் சார்ந்த தன்மை

பொருளாதார சீர்திருத்தங்களை அடுத்து எழுச்சியடைந்து வந்த பொருளாதார வளர்ச்சி கடுமையாக நகர்ப்புறம் சார்ந்த தொன்ருகவே தென்பட்டது. சேவைகள், ஆடைக் கைத்தொழில்கள் போன்ற துரித வேகத்தில் வளர்ச்சிகண்ட நடவடிக்கைகள் பெருமளவுக்கு நகர்ப்புறங்களிலேயே மையம் கொண்டிருந்தன. ஆக, நகர்ப் பகுதிகளிலேயே வேலைவாய்ப்புக்களில் கூடுதலான விரிவு ஏற்பட்டது. மத்திய வங்கியின் 1978-79, 1981-82 ஆகிய வருடங்களுக்கான நுகர்வோர் நிதி, சமூக பொருளாதார ஆய்வுகள் இவ்வுண்மையை மிகத்தெளிவாக எடுத்துக் காட்டின.

வேலையின்மை விகிதம் நகர்ப்புறங்களில் கடுமையாக வீழ்ச்சியடைந்திருப்பதனை இந்த அட்டவணைகாட்டுகிறது. இந்த வீழ்ச்சி 1978-82 காலத்தில் கிராமப் புறங்களில் 18 சத வீதமாக இருக்க நகர்ப் புறங்களில் 31 சத வீதத்துக்கும் கூடுதலாக இருந்தது. பொருளாதாரச் சீர்திருத்தங்களினுல் மிகக் கூடிய அனுகூலங்களைப் பெற்ற இடம் கொழும்பு நகரமாகும். இங்கு இக்காலப் பிரிவில் வேலையில்லாதோரின் தொகை 40 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 2

ஊழியர் படையின் சதவிகிதமாக வேலையற்ருேர்

| | 1978/79 | 1981 | சதவீத வீழ்ச்சி |
|---|---|---|---|
| நகரத்துறை | 20.7 | 14.2 | 31.4 |
| (கொழும்பு நகரம்) | (20.5) | (12.3) | (40.0) |
| 2. கிராமத்துறை | 14.6 | 12.0 | 17.8 |
| 3. தோட்டத்துறை | 5.6 | 5.0 | 10.7 |

நகர்ப்புறங்களிலும் கூட வேலையில்லாத பெண்களின் எண்ணிக்கையிலேயே கடுமையான வீழ்ச்சி காணப்பட்டது. வேலையில்லாத ஆண்களின் எண்ணிக்கையில் 19 சத வீத வீழ்ச்சி ஏற்பட பெண்களின் எண்ணிக்கையில் 33 சதவீத வீழ்ச்சி காணப்பட்டது. சேவைகள், ஆடைக் கைத்தொழில் போன்றன அதிகமாக பெண்களை வேலைக்கமர்த்துவதனையே இது காட்டுகிறது. மறுபுறத்தில், கிராமப் புறங்களைப் பொறுத்த வரையில், வேலையில்லாத பெண்களின் எண்ணிக்கை இக் காலப்பிரிவில் எந்த மாற்றத்துக்கும் உள்ளாகவில்லை.

1977ன் பொருளாதார சீர்திருத்தங்களின் ஒரு சாதகமான விளைவாக நகர்ப்புறங்களில் வேலையின்மை மட்டம் வீழ்ச்சியடைந்திருக்கும் அதே வேளையில் கிராமப் புறங்களில் சில இடங்களில் வேலையின்மை வீதம் அதிகரித்து வந்துள்ளதையும் காணமுடிகிறது. மேல் மாகாணத்திலும், தென் மாகாணத்திலும் அமைந்துள்ள ஐந்து கடலோர மாவட்டங்களில் வேலையின்மை வீதம் 1971ம் வருடத்தைவிட 1981ல் உயர்வாக இருந்ததனை அட்டவணை 3 காட்டுகிறது. இம் மாவட்டங்களில் வாழும் பெருந்தொகையான இளைஞர்களின் வேலை வாய்ப்பு அபிலாஷைகளை நிறைவேற்றி வைப்பதில் பொருளாதார சீர்திருத்தங்கள் தோல்வி கண்டுள்ளன என்பதனை இது காட்டுகிறது. அம்பாந்தோட்டை, மாத்தறை மாவட்டங்களில் 1971-81 காலத்தில் வேலையில்லாதோரின் எண்ணிக்கை 25-31 சதவீதம் வரையில் அதிகரித்து வந்திருப்பதனை இந்த அட்டவணை காட்டுகிறது.

தென் மாவட்டங்களில் இப்பொழுது இடம் பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களை சமூக பொருளாதார ரீதியில் கிராமப்புற இளைஞர்கள் கைவிடப்பட்டிருக்கும் ஒரு பின்னணியிலிருந்தே நோக்குதல் வேண்டும். யாழ்ப்பாண மாவட்டத்திலும் வேலையற்றோர் எண்ணிக்கை 1971 ஐவிட 1981ல் உயர்ந்தே காணப்பட்டது. இது 1971ல் 12.6 சதவீதமாக இருந்து 1981ல் 14.2 சதவீதமாக உயர்ந்திருந்தது. இறக்குமதி தாராளமயப்படுத்தப்பட்டதனை அடுத்து கடுமையான போட்டி ஏற்பட்டதால் யாழ். மாவட்டத்தில் மிளகாய், வெங்காயம், உருளைக் கிழங்கு போன்ற பயிர்களின் உற்பத்தி 1978-1981 காலத்தில் வீழ்ச்சி கண்டது. இதன் விளைவாக விவசாய வருமானங்களில் கணிசமான அளவு குறைவு ஏற்பட்டது. 1977ன் பொருளாதார சீர்திருத்தங்களை அடுத்து நிகழ்ந்த பொருளாதார வளர்ச்சியின் அனுகூலங்களில் இம் மாவட்டம் பங்குபற்றவில்லை. மறுபுறத்தில், எந்த நட்ட ஈடுகளுமின்றி இம் மாவட்டம் பல பொருளாதார இழப்புகளை அனுபவித்து தமிழ் இளைஞர்களின் ஆயுதந் தாங்கிய போராட்டத்தை விளங்கிக்கொள்ள முயலும் போது இது ஒரு நேரடிக் காரணியாக இருந்ததென்பதனையும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

**அட்டவணை 3**

**தெரிவு செய்யப்பட்ட சில மாவட்டங்களில் ஊழியர் படையின் ஒரு விகிதமாக வேலையற்றோர்**

| | 1971 | 1981 | சதவீதமாற்றம் |
|---|---|---|---|
| அம்பாந்தோட்டை | 16.2 | 20.2 | + 24.7 |
| மாத்தறை | 21.4 | 28.0 | + 30.8 |
| காலி | 26.2 | 27.4 | + 4.6 |
| களுத்துறை | 26.2 | 27.7 | + 5.7 |
| கம்பகா | | 26.9 | — |
| முழுத்தீவும் | 18.7 | 17.9 | − 4.3 |

### 3.6 வருமான இடைவெளிகள்

பொருளாதார சீர்திருத்தங்களை அடுத்து வந்த வருடங்களில் நாட்டில் சார்பு ரீதியில் வருமான இடைவெளிகள் அதிகரித்து வந்திருப்பதனை காண முடிகிறது. உயர் வருமான குழுக்களிடையே வருமானங்கள் திரண்டு சென்ற ஒரு போக்கு உருவானதற்கான ஆதாரங்கள் உண்டு. வேலையின்மையில் ஏற்பட்ட உயர்வு, மெய் வருமானங்கள் குறைந்து சென்றமை (இலாபமீட்டுவோருக்கு சார்பாக வருமானங்களை மீள் பகிர்வு செய்யும் போக்குடன் கூடிய) பணவீக்கத்தின் சார்பு ரீதியான அதிகரிப்பு போன்றவை இத்தகைய வருமான இடைவெளிகளை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்திருக்க கூடும்.

### 4. முடிவுரை

பௌதீக பொது வசதிகளின் முன்னேற்றம், சேவைக் கைத்தொழில்கள் மற்றும் ஆடைக் கைத்தொழில் என்பவற்றில் ஏற்பட்ட பெருக்கம் என்பனவே 1977-க்குப் பிற்பட்ட காலத்தின் வெளிப்படையான சாதனைகளாக தென்படுகின்றன. பொருளாதார வளர்ச்சிப் படிமுறை சேவைத் துறையின்பால் கடுமையாக சாய்வுற்றிருந்தது. ஏற்றுமதி நோக்கிலான வளர்ச்சி என்பது வெறும்வார்த்தைஅலங்காரம் மட்டும்தான்; இது ஒரு நிறைவேறாத நம்பிக்கையாகவே இருந்தது. தேறிய வெளிநாட்டுச் செலாவணிப் பங்களிப்புக்களால்அளவிடப்படும் ஏற்றுமதி அமைப்பில் எந்த அடிப்படை மாற்றமும் நிகழ்ந்ததாக தெரியவில்லை. வேளாண்மைத்துறை ஏற்றுமதிகள் தொடர்ந்தும் தேக்க நிலையிலேயே இருந்தன. இக் கொள்கைச் சீர்திருத்தங்கள் அவற்றின் தர்க்கரீதியான முடிவு வரையில் - அதாவது ஏற்றுமதி வழிப்பட்ட வளர்ச்சிக்கு சாதகமான நிலைமைகள்

( 43 —ம் பக்கம் பார்க்க)

# இலங்கைப் பொருளாதாரமும் வெளிச்சூழலும்

**காமினி கொரயாவுடன் உரையாடுபவர் சுசந்தா குணதிலகா**

''பொருளியல் நோக்கின்'' இலங்கையின் பொருளாதாரம் குறித்த சிறப்பிதழுக்கென பதிவுசெய்யப்பட்ட இந்த உரையாடலில், கலாநிதி காமனி கொரயா, தற்போதைய சர்வதேச சூழலின் அமைவில், குறிப்பாக இலங்கைப் பொருளாதாரத்தின் நிலை குறித்தும், பொதுவாக வளர்முக நாடுகள் குறித்தும் இங்கு திறந்த மனதுடன் பேசுகிறார். 1950-களிலும், 1960-களிலும் இலங்கை அரசின் திட்டமிடல் பிரிவிலும் மத்திய வங்கியிலும் பொறுப்புமிக்க பதவிகளை வகித்த அவர் பின்னர் சர்வதேச அரங்கில் நுழைந்து வியாபாரம் மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்கான ஐ. நா. அமைப்பின் (அங்டாட்) செயலாளர் நாயகமாக பல வருடங்கள் பணிபுரிந்தபோது அனைத்து மூன்றாவது மண்டல நாடுகள் சார்பாகவும் தொடர்ந்தும் குரல் எழுப்பி வந்தார். இப்பொழுது தனது பதவிப் பொறுப்புக்களை முடித்துக்கொண்டு நாடு திரும்பியிருக்கும் கலாநிதி கொரயாவுடன் மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி சுசந்தா குணதிலகா இங்கு உரையாடுகிறார்.

சுசந்தா குணதிலகா

கலாநிதி கொரயா அவர்களே, இலங்கை தொடர்பான சில பிரச்சினைகள் மற்றும் உலக சூழலில் இலங்கைப் பொருளாதாரத்தின் நிலை போன்ற பரந்த விடயங்கள் குறித்து நான் உரையாட விரும்புகிறேன். இவ்விஷயங்கள் தொடர்பான உங்கள் கருத்துக்கள் பெறுமதி மிக்கவை; ஏனென்றால், நீங்கள் 1950-களில் இலங்கையில் திட்டமிடல் பணிகளில் ஈடுபட்டிருந்தீர்கள். பிறகு அங்டாடின் நிறைவேற்றுத் தலைமைப் பொறுப்பில் பணியாற்றினீர்கள். இப்பொழுது, சுமார் 30 வருஷங்களுக்குப் பிறகு, இலங்கையின் பொருளாதாரத்தை நீங்கள் எப்படி காண்கிறீர்கள்? குறிப்பாக, வெளிச் சூழலின் பின்னணியில்.

காமனி கொரயா

நான் முதலில் சொல்ல விரும்பும் விஷயம், 1950-களிலும் கூட இலங்கைப் பொருளாதாரத்தில் வெளிச் சூழலின் தாக்கம் முக்கியமாக இருந்தது என்பதுதான். எமது பிரதம விளைபொருள்களான தேயிலை, இறப்பர், தென்னை என்பவற்றுக்கு கிடைத்த விலைகள் பலவீனமாக இருந்த நிலைமைகளை அக்காலத்திலும் நாங்கள் சந்தித்தோம். கொரிய யுத்தத்தினால் ஏற்பட்ட செழிப்பு நிலைமைகளுக்குப்பின் விலைகள் வீழ்ச்சியடைந்தன. அன்றிலிருந்து இவ்விளைபொருள் ஒவ்வொன்றினது சந்தையும் மந்த நிலைமைகளை அனுபவித்து வந்திருக்கிறது.

அக்காலத்தில் ஏற்றங்களும் இறக்கங்களும் இருந்தன. 1960-களின் நடுப்பகுதியில் பீக்ஸ் முறைக்கூடாக நாங்கள் ஓரளவுக்கு பொருளாதார தாராளமயமாக்கலை அறிமுகப்படுத்தினோம். அதனையடுத்து வர்த்தக நியதிகளில் சீர்குலைவு ஏற்பட்டமையால் பீக்ஸ் விகிதத்தை உயர்த்த வேண்டிய தேவை ஏற்பட்டது. இது ஒரு பின்னிடைவாக இருந்ததுடன், இத்திட்டம் உருவாக்கப்பட்ட மூல நோக்கங்களுக்கு மாறானதாகவும் இருந்தது. ஆகவே, அந்தக்காலத்திலும் இந்த அடிப்படைப் பலவீனம் இருந்தது.

அன்றிலிருந்து வெளிச் சூழலில் மாற்றங்கள் இடம்பெற்று வந்திருக்கின்றன. ஆனால் இவை நல்ல விதமான மாற்றங்களாக இருக்கவில்லை. பிரதம விளைபொருள் சந்தையின் மோசமான போக்குகள் அண்மைக்காலம் வரையில் தொடர்ந்து வந்தன. 1980-களில் தேயிலை, இறப்பர், தென்னை மட்டுமல்லாது அனைத்து விளைபொருள் விலைகளும் மிகத்தாழ்ந்த மட்டங்களுக்கு வீழ்ச்சியடைந்தன. பொருளாதார மந்தம் ஏற்பட்ட 1930-களில் காணப்பட்ட நிலைமைகளை ஒத்ததாக இது இருந்தது. அனைத்துக்கும் மேலாக எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் எமது வர்த்தக நியதிகளை மேலும் சீர்குலைத்தன. இக்காலத்தில் சில வளர்முக நாடுகள் தயாரிப்புப் பொருட்கள் சிலவற்றை மேற்கத்தைய சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடியனவாக இருந்தன. ஆனால், அத்தகைய ஒரு அனுகூலத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் நாங்கள் இருக்கவில்லை. புதிதாக தொழில் வளர்ச்சி கண்டு வரும் சில நாடுகளில் தயாரிப்புத்துறை ஏற்றுமதிகள் பிரதம விளைபொருள்களுக்கு பிரதியீடாக இருந்த போதிலும், எமது நாட்டில் அத்தகைய ஒரு நிலைமை தோன்றவில்லை.

உண்மையில், எங்களுக்கும் சில சந்தர்ப்பங்கள் கிடைத்தன. மத்திய கிழக்கு தொழில் சந்தை எமது தொழிலாளர்களை உறிஞ்சிக் கொண்டதுடன், எமது சென்மதி நிலுவைக்கு நல்லதொரு ஆதரவையும் வழங்கியது. இது முன்னர் நிலவிய வெளிச் சூழலிலும் ஒரு வித்தியாசமான அம்சம். ஏனைய வளர்முக நாடுகளுடனான எமது வர்த்தகமும் தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து வந்திருக்கிறது. அதிகளவிலான எமது தேயிலையும், ஒரு குறிப்பிட்ட அளவு வரையிலான இறப்பரும் வளர்முக நாடுகளுக்குச் சென்றுகொண்டிருக்கின்றன.

வேறு சில மாற்றங்களும் நிகழ்ந்துள்ளன. உதவி வழங்கும் குழுக்களின் பங்கு அதிகரித்திருக்கிறது. பொருளாதாரத்துக்கு மூலவளங்களை வழங்கும் விஷயத்தில் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற கொடுகடன் நிறுவனங்கள் இப்பொழுது முக்கிய பங்கினை வகிக்கத் தொடங்கியிருக்கின்றன. இலங்கைக்கு உதவும் குழு 1960-களின் நடுப்பகுதியில் அமைக்கப்பட்டு இதுவரை இருந்து வருகிறது. பல்பக்க உதவி வழங்கும் கொடையாளிகள் இலங்கைக்கு வழங்கும் வெளிநாட்டு மூலவளங்கள் அதிகரித்திருக்கின்றன என்று நிச்சயமாக கூறலாம். அந்நாட்களில் எங்களுக்கு வர்த்தக வங்கிகளுடன் அதிகமான நெருக்கம் இருக்கவில்லை. இப்பொழுது சில கூட்டுத்தாபனங்கள் பெருமளவில் கடன்களைப் பெற்றாலும் நிலைமை இன்று வரை அவ்விதத்திலேயே இருந்து வந்திருக்கிறது. ஆக, வெளிச் சூழலானது, இலங்கையின் ஸ்திரத்தன்மைக்கும், நீண்ட காலத் திட்டமிடலுக்கும் இசைவானதாக இன்னமும் அமையவில்லை. அது எப்பொழுதும் எமக்கு தடங்கலாக இருந்திருப்பதுடன் நிச்சயமின்மையையும் கொண்டு வந்திருக்கிறது. இலங்கையைப் பொறுத்த வரையில் மட்டுமன்றி, பல வளர்முக நாடுகளின் விஷயத்திலும் இதுதான் நடந்து வருகிறது.

சு. கு.

புதிதாக தொழில்மயமாகி வரும் நாடுகளைப் பற்றிக் குறிப்பிட்டீர்கள். அந்நாடுகளின் உத்திகளை 1950-களிலும், 1960-களிலும் நாங்கள் ஏன் பின்பற்றியிருக்கக் கூடாது? சூழலின் கொந்தளிப்பான நிலைமைகளுக்கு மத்தியிலும் கூட அந்நாடுகள் நிலைமைகளை வெற்றிகரமாக அனுசரித்துச் சென்றிருக்கின்றன அல்லவா?

கா. கொ.

சரிதான். தயாரிப்புப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் படிமுறையொன்றில் அப்பொழுதே நாம் இறங்கியிருந்தால், உலகச் சந்தைச் சூழல் இப்பொழுதை விட சாதகமானதாகவே இருந்திருக்கும். ஆனால், அத்தகைய செயற்பாடொன்றை சாத்தியமாக்கக் கூடிய நிலைமைகள் அப்பொழுது எம்மிடம் இருக்கவில்லை. எங்கள் கைத்தொழில் அடித்தளம் மிகச்சிறிதாக இருந்தது. மேலும் எம்மிடம் வரையறுக்கப்பட்ட அளவிலேயே பொது வசதிகளும் இருந்தன. ஹொங்கொங், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் போல முற்றிலும் திறந்த பொருளாதார நிலைப்பாடுகளை எடுக்கக் கூடிய அரசியல் தலைமையும் எம்மிடம் இருக்கவில்லை. ஆனால், தயாரிப்பு பொருட்கள் துறையில் உலக வர்த்தகத்துக்குள் நுழையும் வாய்ப்புக்கள் இப்பொழுதை விட அந்நாட்களில் மிகப் பிரகாசமாக இருந்தன. காரணம், அப்போது மேலை நாடுகளில் பாதுகாப்புக் கொள்கைகள் அவ்வளவு கடுமையாக இருக்கவில்லை, என்பதுதான். இப்பொழுது புடவை போன்ற துறைகளில் பாதுகாப்புக் கொள்கைகள் பரவலாக இருப்பதை நாங்கள் பார்க்கிறோம். வளர்முக நாடுகள் புதிதாக தொழில் வளர்ச்சி கண்டு வரும் நாடுகளின் வழியைப் பின்பற்ற வேண்டுமென்று பலரும் கூறி வருகிறார்கள். ஆனால், இந்நாடுகள் அனைத்தும் அதே மாதிரி செய்தால் அவர்களுடைய பொருட்களை உறிஞ்சிக் கொள்ளக் கூடிய சந்தைகள் இருக்கமாட்டாது என்ற உண்மையை இவர்கள் பார்க்கத்தவறிவிடுகிறார்கள். திறந்த பொருளாதாரங்களை ஆதரித்துப் பேசுபவர்கள் லிப்டுகளை தயாரிப்பவர்களைப் போன்றவர்கள் என்று யாரோ சரியாக சொல்லியிருக்கிறார்கள். ஒரே நேரத்தில் எத்தனை பேருக்கு மேலே போக முடியும்? அளவுக்கதிகமாக ஆள் நிறைந்திருந்தால் அந்த லிப்டு இயங்காது. எப்படியிருப்பினும், வாய்ப்புக்களிலிருந்து பயன்பெறக் கூடிய விதத்தில் அப்போது இங்கு நிலைமைகள் பொருத்தமான விதத்தில் தான் இருந்தன என்பதனை இங்கு சொல்லியாக வேண்டும்.

சு. கு.

''திறந்த பொருளாதாரம்'' என்ற சொல்லைப் பயன்படுத்தினீர்கள். இப்பொழுது இந்த சொற்பிரயோக பல்வேறு வித்தியாசமான வழிகளில் பாவிக்கப்பட்டு வருகின்றது. தனியார் உரித்தினைக் குறிப்பதற்கும் இது சில சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படுகிறது. இலங்கையைப் போன்ற ஒரு சிறிய நாடு அதன் அபிவிருத்திக்கான மிகச் சிறந்த பாதையாக எதனைப் பின்பற்றியிருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? பொருளாதார வளர்ச்சியை மட்டும் ஒரு குறிகாட்டியாக நாங்கள் எடுத்துக் கொள்வோம்.

கா. கொ.

நீங்கள் சொன்னது போல 'திறந்த பொருளாதாரம்' என்ற வார்த்தை பலவிதங்களில் பிரயோகிக்கப்பட்டு வருகிறது. தன்னிறைவான ஒரு இலங்கையை உருவாக்க வேண்டும் என்று நாம் எதிர் பார்த்தால் அது நடைமுறைச் சாத்தியமான ஒரு தெரிவாக இருக்க மாட்டாது. இது ஒரு சிறு நாடு. எமது சமுதாயத்தின் அபிவிருத்திக்கும், நவீனமயமாக்கலுக்கும் தேவைப்படும் விரிவான, வித்தியாசமான பொருட்கள் அனைத்தையும் உற்பத்தி செய்யும் ஆற்றல் எம்மிடத்தில் இல்லை.

எந்த ஒரு சிறிய நாடும் அத்தகைய ஒரு தெரிவினைச் செய்ய முடியாதென்றே நான் நினைக்கிறேன். இத்தகைய நாடுகள் அவற்றின் அபிவிருத்திக்குத் தேவையான இயந்திரங்கள், மூலப் பொருட்கள், மூலதனப் பொருட்கள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக உலக வர்த்தகத்துக்குள் நுழைய வேண்டியிருக்கிறது. சமீப காலத்தில் பெரிய நாடுகள் கூட அவற்றின் பொருளாதாரங்களில் உலக வர்த்தகத்தின் தாக்கத்தை உணர்ந்து வருகின்றன. உதாரணமாக, ஐக்கிய அமெரிக்கா இப்பொழுது அதிக அளவுக்கு உலக வர்த்தகத்தில் தங்கியிருக்கிறது. அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12 அல்லது 13 சதவீதம் வரையில் அது அவ்விதம் தங்கியிருக்கிறது. இது 1950-களில் 4 அல்லது 5 சதவீதமாக இருந்தது. சோவியத் யூ

யன், சீன போன்ற நாடுகளிலும் இதே போக்கு நிலவி வருவதாக நான் நினைக்கிறேன். எனவே இப்பொழுது உலகம் மிக நெருக்கமாக ஒருங்கிணைக்கப்பட்டு, நாடுகள் ஒன்றில் மற்றொன்று தங்கியிருக்கும் நிலை வர வர உறுதியாகிக் கொண்டு வருகிறது. எந்த ஒரு நாடும் இச் சூழலிருந்து தனியாக பிரிந்து வெளியே செல்வது மிகக் கஷ்டம்.

குறிப்பாக, இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு அமைப்பிலிருந்து தாராள மயமாக்கப்படும் போக்கினைக் குறிக்கவும் 'திறந்த பொருளாதாரம்' என்ற பதம் பிரயோகிக்கப்படுகிறது. எந்த நாடும் (அது வெளிநாடுகளிலிருந்து அதன் இறக்குமதிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியதாக இருந்தாலும்) எந்த இறக்குமதிகள் வரவேண்டும் என்பதனை தீர்மானிக்கும் பொறுப்பை சந்தைச் சக்திகளிடம் விட்டு விடலாம். அல்லது குறிப்பிட்ட ஒரு அரச கொள்கைத் தொகுதிக்கூடாக இவற்றை அனுமதிக்கலாம். இறக்குமதிகள், ஏற்றுமதிகள் மற்றும் உலக வர்த்தகத்துக்கான தேவை என்பவற்றை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், இந்த தேவையை அங்கீகரித்த மாத்திரத்தில், இறக்குமதிகள் முற்றிலும் ஒழுங்குபடுத்தப்படாத முறையில் வந்து குவிய வேண்டும் என்பதை அங்கீகரித்தவர்களாக மாட்டோம். இது எங்களுக்குள்ள தெரிவாகும். அபிவிருத்திக்கு அவசியமான இறக்குமதிகளை ஊக்குவிப்பதிலும் குறைந்தளவில் தேவைப்படும் இறக்குமதிகளை உற்சாகமிழக்கச் செய்வதிலும் இவ் விஷயத்தில் அரசாங்கம் ஒரு முக்கிய பங்கினை ஆற்ற வேண்டியிருக்கிறது. அனுமதிப்பத்திரங்கள், கட்டுப்பாடுகள் என்பவற்றின் மூலம்தான் இவற்றைச் செய்ய வேண்டுமென்பதில்லை. இறக்குமதித் தீர்வைகள் போன்றவற்றுக்கூடாக அதனைச் செய்ய முடியும். ஆகவே, ஒரு திறந்த பொருளாதாரமானது அனைத்துக்கும் முற்றுமுழுதான சுதந்திரத்தைக் கொடுத்து விடும் என்று நான் எண்ணவில்லை. சந்தைச் சக்திகளுடன் மட்டும் இணைந்த விதத்திலான இறக்குமதிகளின் மாதிரி தற்போது நிலவி வரும் வருமானப் பகிர்வு நிலையை மட்டுமே காட்டுகிறது. வறிய நாடுகளில் இந் நிலைமை அரச கொள்கை மூலம் சரி செய்யப்பட வேண்டும்.

சு. கு.

''உதவியல்ல; வியாபாரம்'' என்ற கோஷத்தை 1960-களில் அங்டாட் ஆரம்பித்த போது, அது சில இலத்தீன் அமெரிக்க கருத்தியல் வாதிகளினால் உலக ஏகாதிபத்தியம் குறித்த லெனினிய கருத்துக்கு புத்துயிரூட்டுவதாகவே தெரிந்தது. வறிய நாடுகள் சுரண்டப்பட்டு வருவதனை இது காட்டியதுடன், வடக்கு தெற்கு உறவுகளில் நேர் எதிர்கொள்ளல் மாதிரியொன்றினையும் வகுத்திருந்தது. இப்பொழுது ஒவ்வொரு நாடும் உலகுடன் அதிகரித்த அளவில் ஒருங்கிணைக்கப்பட்டு வருவதுடன், உலக அமைப்புடன் மிக நெருக்கமாக இணைவுற்றுச் செல்லும் ஒரு போக்கு வளர்ச்சி கண்டிருக்கிறது. உலக நிகழ்வுகளில் செல்வாக்குச் செலுத்தக் கூடிய மூன்றாவது உலகின் ஆற்றல் வர வர குறைந்து கொண்டே போகிறது. இதனை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

கா. கொ.

முதலில், நீங்கள் சுட்டிக்காட்டிய அங்டாடின் ''உதவியல்ல; வர்த்தகம்'' என்ற கோஷத்தைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். ''வர்த்தக இடைவெளி'' ஒன்று இருந்ததனை முதலில் அங்டாட் கண்டது. அதாவது வளர்முக நாடுகளின் இறக்குமதித் தேவைகள், அந்நாடுகளின் ஏற்றுமதிகளை விட கூடிய வேகத்தில் வளர்ந்து கொண்டிருந்தன. அதனால், இந்நாடுகளின் அபிவிருத்திக் குறிக்கோள்கள் எய்தப்பட வேண்டுமானால் இந்த இடைவெளி நிரப்பப்பட வேண்டியிருந்தது. அதிகரித்த ஏற்றுமதி வருமானங்கள் மூலம் வர்த்தகத்துக்கூடாக் இந்த இடைவெளியை நிரப்ப முடியும் என்று அங்டாட் கூறியது. ஆனால் வர்த்தகத்தினால் மட்டும் இதனைச் சாதிப்பதனை இயலுமாக்குவதற்கு அவசியமான மாற்றங்களைக் கொண்டு வர வளர்முக நாடுகள் தயங்கின. எனவே, இதனைச் செய்வதற்கு அந்நாடுகளுக்கு உதவி வழங்க வேண்டுமென அங்டாட் கூறியது. இந்த இடைவெளி உதவியினால் அல்லது வர்த்தகத்தினால் நிரப்பப்படுவது குறித்து கோட்பாட்டு ரீதியில் எந்தத் தவறுமில்லை. ஆனால், வர்த்தகம் இப்பணியைச் செய்ய வேண்டும் என்பது முன்னுரிமையாக இருந்தது.

அந்தக் கட்டத்தில் வளர்ச்சியடைந்த நாடுகள் ஒரு வாதத்தை முன்வைத்தன. அமைப்பு ரீதியான மாற்றங்கள் மற்றும் வியாபார மாதிரிகள் போன்ற அம்சங்கள் இதில் தொடர்புபட்டிருப்பதனால் வர்த்தக நடைமுறைகளை மாற்றியமைப்பது கடினம் என்றும், உதவி வழங்குவது அதைவிட இலகுவாக இருக்கும் என்றும் அந்நாடுகள் கூறின. ஆனால், அவர்கள் இதில் எதையும் செய்யவில்லை. வர்த்தக இடைவெளியை நிரப்ப வேண்டிய பொறுப்பினை அவர்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளவில்லை. என்றாலும், அங்டாடின் தொடர்ந்த தத்துவார்த்த நிலைப்பாடு உதவிக்குப்பதில் வர்த்தகத்தை விரும்புவதாகவே இருந்தது.

பேர்பிஷ் அங்டாடில் இருந்த போது, இறக்குமதிப் பிரதியீட்டுக்கூடாக இலத்தீன் அமெரிக்க நாடுகளை கைத்தொழில்மயமாக்கும் முயற்சிகளை உற்சாகப்படுத்தினர். இறக்குமதிப் பிரதியீட்டை அத்திவாரமாக கொண்டு இலத்தீன் அமெரிக்கா கைத்தொழில் மயமாக்களுக்கான அடித்தளத்தை ஓரளவுக்கு இட்டுக் கொண்டது. ஆனால், இப்படிமுறையின் முட்டுக்கட்டைகளை அந்நாடுகள் 1960-களின் ஆரம்பத்திலேயே உணரத் தொடங்கின. ஒரு புறம் இறக்குமதிப் பிரதியீடு திறமையற்றதாக இருந்ததும், மறுபுறம், தேசிய சந்தைகள் வரையறுக்கப்பட்டவையாக இருந்ததும் இதற்குக் காரணமாகும். அருகருகே இருக்கும் நாடுகளை பிராந்திய ரீதியில் ஒருங்கிணைத்து, ஒத்துழைப்புக்கூடாக சந்தைகளை விரிவு படுத்தும் மார்க்கங்களை பேர்

பிஷ் தேடினர். அதுவும் கூட நீண்ட தூரம் போக முடியவில்லை. வளர்முக நாடுகளின் தேவைகளை நிறைவேற்றக்கூடிய விதத்திலான உலக வர்த்தக கட்டுக்கோப்பொன்றை உருவாக்க வேண்டுமென்பதே அவருடைய வாதமாக இருந்தது.

''அபிவிருத்திக்காக ஒரு புதிய வர்த்தக கொள்கையை நோக்கி'' என்ற தலைப்பில் அவர் அங்டாடுக்காக தயாரித்தளித்த அறிக்கையில், வளர்முக நாடுகளை நோக்கி பெருமளவிலான மூலவளங்கள் பாயக்கூடிய விதத்தில் உலக வர்த்தக அமைப்பில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென வலியுறுத்தியிருந்தார். இந்த மாற்றங்கள் மூன்று வகையில் இருக்கும். பண்ட உடன்படிக்கைகளுக்கூடாக பண்டச் சந்தைகளைப் பலப்படுத்துவதற்கான ஏற்பாடுகள்; வளர்முக நாடுகளின் புதிதாக எழுச்சியடைந்து வரும் கைத்தொழில் ஏற்றுமதிகளுக்கு முன்னுரிமை வழங்கும் திட்டங்கள் மற்றும் சலுகை ரீதியான உதவிக்கூடாக அதிகரித்த அளவிலான மூலவளப் பாய்ச்சல் என்பனவே அந்த மாற்றங்களாகும்.

ஆக, அந்த நாட்களிலும் கூட, அபிவிருத்திப்படிமுறைக்கு இசைவான விதத்தில் உலகச் சூழல் ஒன்றினை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்ற கருத்து நிலவி வந்தது. அதிகளவில் உள்நோக்கிய விதத்திலான கொள்கைகள் மூலமான ஒரு மாற்று வழியைத் தேடுவது அல்லது வளர்முக நாடுகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவது என்பன இரண்டாம்பட்சமாகவே இருந்தன. ஒரு குழு என்ற முறையில் வளர்முக நாடுகள் ஒருங்கிணைய வேண்டும் என்ற கருத்து பின்னாளிலேயே வந்தது. அந்தக்காலத்தில் உலக பொருளாதாரம் மிக வேகமாக வளர்ந்து கொண்டிருந்தது என்பதனை நாங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். 1950-களிலும் 1960-களிலும் உலக வர்த்தகம் வரலாற்றில் முன்னெப்போதும் நிகழ்ந்திராத மட்டங்களில் வளர்ச்சி கண்டு வந்தது. வர்த்தக கட்டுக்கோப்பினை அதிக சாதகமானதாக்குவதன் மூலமும், முன்னுரிமைச் சலுகைகளை வழங்குவதன் மூலமும் வளர்ச்சியடைந்த நாடுகள் மூன்றாவது மண்டலத்துக்கு உதவ வேண்டுமென வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன. ஆனால், இப்பொழுது, உலக பொருளாதாரம் அந்நாட்களில் போல வெற்றிமுழக்கத்துடன் முன்னேறிச் செல்லவில்லை. நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. ஆரம்பத்தில் வளர்முக நாடுகள் இந்நிலைமையை நேரெதிர் கொண்டபோது, சர்வதேச வர்த்தகத்தை அவை நிராகரித்துவிடவில்லை. மாறாக, வளர்முக நாடுகள் முக்கிய பங்கொன்றினை ஆற்றக்கூடிய விதத்தில் சர்வதேச வர்த்தகத்தின் பொறிமுறைகளையும், முறைமைகளையும் மாற்றியமைக்க வேண்டுமென்பதே அங்டாடின் விருப்பமாக இருந்தது. வளர்முக நாடுகள் அவற்றின் சக்திகள் அனைத்தையும் திரட்டி வளர்ச்சியடைந்த நாடுகளை எதிர் கொள்ள வேண்டும் என்றும், உலக அமைப்புக்களை மாற்றியமைப்பதற்கான அமுக்கத்தைக் கொண்டு வருவதற்கே இந்த நேரெதிர் கொள்ளல் என்றும் பிரெபிஷ் கூறினர்.

சு. கு.

வளர்முக நாடுகளில் 1970-களின் நடுப்பகுதியில் ''தொழிற்சங்கம்'' என்ற வார்த்தை ஒலிக்கத் தொடங்கியது. உற்பத்தியாளர்கள் அனைவரும் ஒரு தொழிற்சங்கமாக ஒன்று கூடுவதனையே இது குறிக்கிறது. இவையனைத்தும் வளர்முக நாடுகள் வளர்ச்சி கண்ட நாடுகளை நேருக்கு நேர் எதிர்கொள்ளும் ஒரு நிலைமையையே தோற்றுவித்தன.

கா. கொ.

ஏதோ ஒரு வகையிலான போராட்டம் இல்லாது அடிப்படை மாற்றங்களை கொண்டுவர முடியாது என்பதை அங்டாட் நம்பியது. இதற்காக மூன்றாவது உலக நாடுகள் தம்மிடமுள்ள அனைத்து அரசியல், பொருளாதார செல்வாக்குகளையும் பிரயோகிக்க வேண்டியிருக்கிறது. '77 குழுவை ஸ்தாபித்தது பிரெபிஷ்ஷின் ஒரு முக்கியமான அரசியல் பங்களிப்பு என்று நான் கருதுகிறேன். முதன் முதலாக வளர்முக நாடுகள் அனைத்தும் ஓர் அலகாக ஒன்றிணைந்தன. பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கும், பொதுக்கோரிக்கைகளை வென்றெடுப்பதற்குமென ஒரு வகை தொழிற்சங்கமாக இந்நாடுகள் தம்மை அமைத்துக் கொண்டன. மைய நாடுகளுக்கும் சூழ உள்ள நாடுகளுக்கும் இடையிலான தொடர்பு ஒரு வழிப்பாதையாக இருப்பதனை பிரெபிஷ் கண்டார். பொருளாதார, கலாசார, அரசியல், தொழில் நுட்ப அம்சங்கள் அனைத்தும் வளர்ச்சி கண்ட நாடுகளிலிருந்து வளர்முக நாடுகளை நோக்கியே சென்றன. மறுதிசையில் அவை பயணிக்கவில்லை. சந்தைச் சக்திகள் இயங்குவதால் மட்டும் இத்தொடர்பு மாதிரி ஒரு போதும் மாற்றமடையப் போவதில்லை என்று அவர் நம்பினர். மாறாக, சந்தைச்சக்திகள் ஒழுங்குபடுத்தப்படாது தன்னிச்சையாக இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டால் மைய நாடுகளுக்கும் சூழ உள்ள நாடுகளுக்கும் இடையில் இப்பொழுது நிலவும் தொடர்பு மாதிரி மேலும் வலுவடைந்து, வளர்ச்சி கண்ட நாடுகளின் மேலாதிக்கம் பெருகி வளர்முக நாடுகளின் தங்கியிருக்கும் தன்மை மேலும் அதிகரிக்கும். சர்வதேச ரீதியில் தலையிடுவதன் மூலம் மையத்திலிருந்து கிளம்பிவரும் இச்சக்திகளை ஒழுங்குபடுத்தி, கையாண்டு, நிதானப்படுத்துவதே அவரது மூல நோக்கமாக இருந்தது. இவற்றுக்குப்பதிலாக, ஓரளவுக்கு மறுதிசையிலிருந்து வரும் சக்திகளுக்கு இதனால் இடம் கிடைக்கும் என்று நம்பப்பட்டது.

சு. கு.

ஆனால், இப்பொழுது, மீண்டும் பின்னோக்கிப் பார்க்கும் போது இவையெல்லாம் வீண் நம்பிக்கைகள் என்று தெரிகிறது. உண்மையிலேயே 1970-களின் நடுப்பகுதியில் ஒரு மாற்றத்துக்கான அறிகுறிகள் தெரிந்தன. உலக வங்கி போன்ற நிறுவனங்களில் இருந்தவர்கள் கூட-குறிப்பாக மக்னமாரா போன்றவர்கள் - தங்கள் தொனிகளை ஓரளவுக்கு மாற்றிப் பேசத் தொடங்கியிருந்தார்கள். சில சமூக ஜனநாயக நாடுகளில் கூட சொற்பிரயோகங்கள் சற்று மாறி ஒலிக்கத்

தொடங்கியிருந்தன. சூழல் குறித்து ஸ்டொக்-ஹோமில் நடைபெற்ற மாநாடு இந்த புதிய அணுகு முறையின் தோற்றுவாயாக தெரிந்தது. டக் ஹமர் ஷீல்ட் நிறுவனத்தின் பிரகடனம் மற்றும் புதிய பொருளாதார ஒழுங்கு குறித்த தீர்மானங்கள் அனைத்துமே இந்த மாற்றங்களுக்கு கட்டியம் கூறின ஆனால், இப்பொழுது, 1980-களின் இறுதியில் நின்று பின்னோக்கிப் பார்க்கும்போது, இத்தகைய நிலைப்பாடுகள் பலவற்றிலும் ஈற்றில் ஏமாற்றமே கிடைத்திருப்பது தெரிகிறது.

கா. கொ.

முற்றிலும் உண்மை, அபிவிருத்தி ஒத்துழைப்புக்கென்று தாம் முதலில் ஏற்றுக் கொண்டிருந்த கடப்பாடுகளிலிருந்து பல வளர்ச்சி கண்ட நாடுகள் வாபஸ் பெற்றன. இதில் பல விஷயங்கள் சம்பந்தப்பட்டிருந்தன. கிழக்கு, மேற்கு பதற்றம் கூடிக் கொண்டு வந்தது; ஆயுதக்குவிப்பு பந்தயம், எண்ணெய் விலை உயர்வு, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை, தமது சொந்தப் பொருளாதாரங்களில் காணப்பட்ட கேள்விச் சுருக்கும், பொருளாதார மந்தம் போன்ற பல காரணிகளின் பின்னணியிலேயே வளர்ச்சி கண்ட நாடுகள் தமது கடப்பாடுகளிலிருந்து பின்வாங்க நிர்ப்பந்திக்கப்பட்டன. இவையனைத்தும் சேர்ந்து உலக பொருளாதாரத்திலும், உலக வர்த்தகத்திலும் ஏற்படுத்திய தாக்கத்தின் பிரதிபலிப்பாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், மேற்கு ஜேர்மனி மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் -பழைமைபேண், சந்தை நோக்கிலான பலம் வாய்ந்த அரசாங்கங்கள் தோற்றம் பெற்றன. இவ்விதமான நிலைமைகள் தோன்றியதன் விளைவாக, 1980-களில் பல்பக்க பொருளாதார படி முறைகள் பலவீனமடையத் தொடங்கின. பேச்சு வார்த்தைப் படிமுறை வர வர கடினமாகிக் கொண்டே வந்தது. ஒவ்வொரு மாநாடும் எந்தப் பிரதி பலனும் இல்லாது முடிவடைந்து கொண்டிருந்தது.

மறுபுறத்தில், இன்னொரு முக்கிய விஷயம் தெரிகிறது. உலக பொருளாதாரத்தில், ஒரு குழு என்ற முறையில் வளர்முக நாடுகளின் பங்கு அதிகரித்து வந்திருக்கிறது. இதற்கு ஒபெக்கின் எழுச்சியும், புதிதாக தொழில் வளர்ச்சி கண்டுவரும் நாடுகளின் தோற்றமும் காரணமாகும். இன்று உலக வர்த்தகத்தில் வளர்முக நாடுகளின் பங்கு எவ்வளவோ அதிகரித்து விட்டது. உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (உலக பொருளாதாரத்தின்) வளர்முக நாடுகளின் பங்களிப்பு 20 சதவீதம் வரையில் இருக்கிறது. ஒரு தனிப்பிரிவு என்று எடுத்துப் பார்க்கும்போது ஐக்கிய அமெரிக்கா அல்லது கிழக்கைரோப்பிய சோஷலிச நாடுகள் அல்லது ஐரோப்பிய பொதுச்சந்தை நாடுகள் போன்றவற்றின் பங்களிப்புக்கு இது சமமானதாகும்.

வளர்ச்சி கண்ட நாடுகள் வளர்முக நாடுகளுக்கான ஏற்றுமதிகளில் தங்கியிருக்கும் நிலையும் பெருமளவில் அதிகரித்திருக்கிறது. அமெரிக்கா ஜப்பான் போன்ற நாடுகளின் ஏற்றுமதிகளில் -குறிப்பாக தயாரிப்புத்துறைப் பொருட்களில் — சுமார் 40 சதவீதம் வரையில் இப்பொழுது வளர்முக நாடுகளுக்கே செல்கிறது. ஐரோப்பாவின் விஷயத்தில் இது 30 அல்லது 35 சதவீதம் வரையில் இருக்கிறது. ஆக, இப்பொழுது உலக பொருளாதார களத்தில் வளர் நாடுகளின் "பிரசன்னம்" முன்னரைவிட மிகுந்த முக்கியத்துவம் கொண்டதாகிவிட்டது. அதனால் வளர்முக நாடுகளின் நிகழ்வுகள் குறித்த தாக்கமும், எதிரொலியும் வளர்ச்சி கண்ட நாடுகளில் பல்வேறு வழிகளிலும் பிரபலிக்கப் படுகின்றன. எனவே, வளர்ச்சி கண்ட நாடுகள் மைய நிலையிலிருந்து இப்பொழுது சற்று நழுவிவிட்டது போல் தெரிகிறது.

சு. கு.

மையம், சுற்றுப் புறம் என்ற விஷயத்துக்கு மீண்டும் வருவோம். ஏகாதிபத்தியம் குறித்த லெனினிச கண்ணோட்டம் இந்த மைய-சுற்றுப்புற தொடர்பு மாதிரியையே காட்டுகிறது. லெனினிச கண்ணோட்டத்தின்படி, சுற்றுப்புறத்தில் உள்ள நாடுகள் சுரண்டலுக்குள்ளாகின்றன. அதே நேரத்தில், சுற்றுப்புற நாடுகளுக்குள்ளும் கூட ஒரு நாடு சுரண்டல் அமைப்பொன்றைக் கொண்டிருக்கும். ஆனால், அங்டாடின் பல பொருளாதார நிலைப்பாடுகள், வளர்முக நாடுகளுக்குள் இருக்கும் பொருளாதார அமைப்புக்களை கணக்கில் எடுப்பதில்லை. இது யதார்த்தத்தை ஓரளவுக்கு மறைப்பதாகவே தெரிகிறது. உதாரணமாக, தென் கொரியா, வட கொரியா போன்ற பலவிதங்களிலும் வேறுபாடுகளைக் கொண்ட பல நாடுகள் ஒரே கலவைக்குள் சேர்க்கப்படுகின்றன.

கா. கொ.

நீங்கள் சொல்வது உண்மைதான். இதற்காக அங்டாட் கடுமையாக விமர்சனத்துக்குள்ளாகி இருக்கிறது. வளரும்நாடுகளுக்குள்ளேயே காணப்படும் பல குறைபாடுகள் குறித்து அங்டாட் கண்களைக் மூடிக் கொள்வதனை வடக்கு பல சந்தர்ப்பங்களில் கண்டித்திருக்கிறது. ஆனால், இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, அங்டாட் அரசுகளுக்கிடையில் பேச்சுவார்த்தை நடத்தப்படும் ஒரு களமாக இருப்பது; நாடுகளுக்கிடையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள முடியுமான பிரச்சினைகளை அங்டாட் தனது நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொள்கிறது. வளர்முக நாடுகளுக்குள்ளே உள்நாட்டு கொள்கை மாற்றங்களுக்கூடாக தீர்த்துக்கொள்ள வேண்டிய பிரச்சினைகளை அது தன் நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்வதில்லை. தனிப்பட்ட நாடுகளுக்கு அங்டாட் உதவிகளை வழங்குவதுமில்லை. எனவே, தனி நாடுகளின் கொள்கை சம்பந்தப்பட்ட விஷயங்களில் அதற்கு எந்தச் செல்வாக்கும் இல்லை.

இரண்டாவது காரணம், சர்வதேச பேச்சுவார்த்தைகளுக்கான ஒரு தளத்தை அமைத்துக்கொள்ளும் பொருட்டு அங்டாட் தெற்கின் அரசியல் ஒற்றுமையை

திரட்ட வேண்டியிருக்கிறது. இவ்விஷயத்தில், தெற்கில் இருக்கும் அனைத்து நாடுகளும் - அவற்றின் உள்நாட்டு கொள்கைகள் மற்றும் ஆட்சி முறை எந்தவகையின தாக இருந்த போதிலும் ஒரு குழு என்ற முறையில் அவை அனைத்துக்கும் பொதுவான சில பிரச்சினைகளை வென்றெடுப்பதற்கு ஒன்றுபட வேண்டியிருக்கின்றன. இதில் சில தவிர்க்க முடியாத குறைபாடுகள் இருந்த போதிலும், அங்டாட்டுக்கு இதனைத்தவிர வேறு மாற்று வழியில்லை. இல்லாவிட்டால், வடக்கில் உள்ள நாடுகளுக்கு எதிரில் ஒரு பொது முன்னணியை முன் வைக்கும் பொருட்டு வளர்முக நாடுகளை ஒன்று திரட்டிக் கொள்ள முடியாது போய் விடும்.

அங்டாட் அதிகம் முக்கியத்துவம் கொடுத்து வரும் உலக சூழல், வளர்முக நாடுகளின் முன்னேற்றத்துக்கு அவசியமான நிலைமைகளில் ஒன்று மட்டுந்தான் என்பதை அங்டாட் தாபனமும், அதில் பணிபுரிபவர்களும் நன்கு அறிந்திருக்கிறார்கள். ஆனால், அது மட்டும் போதியதாக இல்லை. ஒரு புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கு பற்றி நாங்கள் பேசினோம். வளர்முக நாடுகளுக்குள்ளேயே ஒரு புதிய தேசிய பொருளாதார ஒழுங்கும் இதற்குச் சமமாக எழுச்சியடைந்து வராத விடத்து, புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கினால் எந்தப்பயனுமில்லை. ஏனெனில், நாங்கள் முன்னர், உலகளாவிய ரீதியில் நிலவுவதாக சுட்டிக்காட்டிய குறைபாடுகள் அனைத்தும் உள்நாட்டு மட்டத்திலும் அதே விதத்தில் நிலவி வருகின்றன.

சு. கு.

புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கு (NIEO) இப்பொழுது அநேகமாக ஒரு செத்த குதிரையாகி விட்டது. எழுபதுகளின் நடுப்பகுதியில் நிலவிய மாயைகள் எல்லாம் கலைந்து விட்டன. சர்வதேச முறைமையும் மற்றும் ஐ. நா. அமைப்பும் இதற்கு ஓரளவுக்கு காரணமாகும். இரண்டாவது உலகப் போருக்குப்பின் ஏற்பட்ட சில சூழ்நிலைகள் காரணமாக, ஐ. நா. வுக்கான பேரளவிலான நிதியளிப்பு வடக்கில் உள்ள சில நாடுகளினாலேயே மேற்கொள்ளப்பட்டது. இந்நாடுகள் பலத்த செல்வாக்கினைக் கொண்டிருந்தன. குறிப்பாக, பழமை பேண் அரசாங்கங்கள் பதவிக்கு வரும் போது இந்தச் செல்வாக்கு உயர் மட்டத்தில் நிலவும். ஆக, இந்த ஒழுங்குகளை மாற்றியமைப்பதற்கு நீங்கள் எந்த அமைப்புக்களை பயன்படுத்துகிறீர்களோ அந்த அமைப்புக்களே எதிர்மறை நிலையில் இருக்கின்றன.

கெடுபிடி யுத்தத்தின் போது, கிழக்கு–மேற்கு நேரெதிர் கொள்ளல் கற்பனைக்கெட்டக் கூடிய பல் வேறுபட்ட மாற்று ஏற்பாடுகள், உத்திகள் என்பன குறித்துச் சிந்திக்கப்பட்டன. இந்த மாற்று ஏற்பாடுகளில் சில முற்றிலும் யதார்த்தத்துக்கு புறம்பானவையாக இருந்தன. இருந்த போதிலும் பல்வேறு வகைப்பட்ட மாற்று ஏற்பாடுகள் முன் வைக்கப்பட்டன. அத்தகைய உத்திகள் பொருளாரதார உத்திகளாக மட்டும் இருக்க வேண்டும் என்பதில்லை. பொருளாதாரம், அரசியல், தொழில் நுட்பம், கலாசாரம் போன்ற விரிவான தளங்களை அவை உள்ளடக்கியதாக இருக்க முடியும். எனவே, கடந்த இருபது வருடங்களில், பல புதிய பிராந்தியங்கள் கண்டறியப்படாது விடப்பட்டிருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

கா. கொ.

ஆம் உண்மைதான்; சிந்தனை பல்வேறு திசைகளில் விரிந்து செல்ல முடியும். ஆனால், எண்ணெய்யின் சக்தி நிலவிய காலத்தில் புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கு குறித்த கருதுகோள் உச்ச கட்டத்தில் இடம் பெற்றிருந்தது. 1973-ன் எண்ணெய் விலை அதிகரிப்புக்குச் சற்று பின்னர் ஐ. நா. பொதுச் சபையின் ஆறாவது விசேஷ கூட்டத் தொடர் கூடியபோது பு.ச. பொ. ஒ. (NIEO) பிரகடனப் படுத்தப்பட்டது. இப்புத்தொழுங்கு ஒரேயடியாக அனைத்தையும் செய்து முடித்து விடும் என்று எதிர்பார்க்கப்படவில்லை. உலக பொருளாதாரத்தின் முகாமையில் வளர்முக நாடுகளின் செல்வாக்கு வர வர கூடிக் கொண்டு செல்லும் ஒரு படி முறையையே அது பிரதிபலித்தது.

பொருளாதார புத்தொழுங்கு நிகழ்ச்சித்திட்டத்தின் முழு விவரங்களையும் நீங்கள் நுணுக்கமாக பரிசீலத்துப்பார்த்தால், அவற்றில் புதிதாக எதுவுமில்லை என்பதனை காண்பீர்கள். அங்டாட் ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் முன்வைத்திருந்த கோரிக்கைகளையும், பிரேரணைகளையும் ஓர் ஒழுங்கு முறையில் ஒன்று திரட்டிய வடிவம் தான் புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கு என்ற கருதுகோள். இரு அம்சங்களில் மட்டுமே இதில் புதிய விஷயங்கள் தெரிகின்றன. உதவிக்கான வேண்டுகோள்கள் மற்றும் அங்கொன்றும் இங்கொன்றுமாக செய்யப்படும் சிறு சிறு மாற்றங்களுக்குப் பதிலாக, அமைப்பையே மாற்ற வேண்டுமென்பது இதில் ஒன்று. அடுத்தது, ஒரு தொகுதி என்ற முறையில் வளர்முக நாடுகளின் தன்னிறைவிலும், அந்நாடுகள் தமக்குள்ளேயே வர்த்தகத்தையும், பரிமாற்றங்களையும் அதிகரித்துக் கொள்வதிலும் கூடிய அழுத்தம் கொடுப்பது தொடர்பானதாகும். இது வடக்கை எதிர்கொள்வதற்கான இந்நாடுகளின் ஆற்றலையும் வளர்க்கும்.

பொருளாதார புத்தொழுங்கு குறித்த கருதுகோள் இன்னமும் கூட செல்லாக்காசாகி விடவில்லை. இன்று வளர்ச்சி கண்ட உலகில் இருக்கும் சில பிரிவினர் இதனை வழக்கொழிந்துபோன ஒரு சொற்பிரயோகமாக கருதவில்லை. ஒரு கெட்ட வார்த்தையாகவே கருதுகின்றனர். இந்த தீர்மானம் முன்னர் ஒரு மனதுடன் எடுக்கப்பட்டதனால், இதற்கெதிராக வாக்களிக்கும் தைரியம் வடக்கின் எந்த நாட்டுக்கும் இருக்கவில்லை. எண்ணெய் சக்தி ஏற்கனவே ஸ்தாபிதமாகியிருந்ததனால், அதனையொத்த ஏதாவதொன்று வேறு எங்காவது நிகழலாம் என்ற பயம் நிலவியது. சில நாடுகள் வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தபோதிலும் ஐக்கிய அமெரிக்காவை உள்ளிட்ட அனைத்து நாடு

களதும் இணக்கத்துடனேயே அத்தீர்மானம் எடுக்கப்பட்டது. இப்பொழுது நிலைமை மாறிவிட்டது. வளர்ச்சி கண்ட நாடுகளின் அனுகுமுறைகளில் ஏற்பட்டிருந்த மாற்றங்களையடுத்து, வளர்முக நாடுகளின் முகாம் பலவீனமடைந்து விட்டது. நீங்கள் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல மாற்று ஏற்பாடொன்று காரிய சாத்தியமில்லாது போனமைக்கு இதுவும் ஒரு காரணம். எண்ணெய் விலைகள் வீழ்ச்சியடைந்ததனைத் தொடர்ந்து எண்ணெய் வள நாடுகளின் பிடி தளர்ந்துவிட்டது. பொருளாதார பின்வாங்கலுடன் வளர்முக நாடுகள் அனைத்துமே நிலைகுலையத் தொடங்கின; சென்மதி நிலுவைப் பற்றாக்குறைகள் மற்றும் வர்த்தக நியதிகளின் சீர்குலைவு என்பன இந்நாடுகளை மேலும் மேலும் உலக வங்கியிலும் சர்வதேச நாணய நிதியத்திலும் தங்கியிருக்கச் செய்தன; கடன் சுமை வர வர அதிகரித்ததனால் நிவாரணமளிக்கும் கடன் கொடுப்போர் மீதான அந்நாடுகளின் கடப்பாடு இறுகிவந்தது. அத்துடன் இராக்-இரான் யுத்தம் வந்தது. வளர்முக நாடுகளுக்குள்ளேயே பல்வேறு முகவரகங்கள் மற்றும் தாபனங்களில் பிளவுகள் ஏற்பட்டன. அத்துடன் அரபு ஒற்றுமைக்கான தாபனம், அரபு லீக் என்பவற்றில் பிரிவினைகள் தோன்றின. இவையனைத்தும் ஒன்றாக சேர்ந்து வளர்முக நாடுகளை சங்கடத்தில் மாட்டிவைத்தன. எனவே, இத்தகைய சந்தர்ப்ப சூழல்களின் பின்னணியில், வளர்முக நாடுகளுக்கு பெரிய நாடுகளிடம் மண்டியிடுவதைத் தவிர வேறு வழியெதுவும் தெரியவில்லை. ஆக, புதிதாக உருவெடுத்த அரசியல் நிலைமைகளை அடுத்து பொருளாதார பலவீனம் தோன்றியமையே, மாற்று ஏற்பாடு ஒன்றினை உருவாக்க முடியாது போனமைக்கான முக்கிய காரணமாகும்'.

வடக்கு அனுசரணை காட்டத் தவறியமையால் அதற்கு பதிலீடாக தெற்கு-தெற்கு ஒத்துழைப்பு உருவாக வேண்டிய தேவை இப்பொழுது எழுந்துள்ளது என்று பரவலாக பேசப்பட்டு வருகிறது. வளர்முக நாடுகளுக்கிடையே வர்த்தக முன்னுரிமைகள் குறித்த உலகளாவிய அமைப்பொன்றை ஸ்தாபிப்பது பற்றி சமீபத்தில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. மேலும், தெற்கு - தெற்கு ஒத்துழைப்பை பலப்படுத்துவதற்கென தெற்கு கமிஷனும் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒத்துழைப்புக்கூடாக வளர்முக நாடுகள் தமது அரசியல், பொருளாதார ஆற்றல்களை மேம்படுத்திக்கொள்ள முடியும். அதன் பிறகு, மாற்று வழிகளை கண்டறிவதற்கான இந்நாடுகளின் திறன் அதிகரித்து, அவற்றை அமுல் நடாத்துவதற்கான வாய்ப்புக்களும் பெருமளவில் ஏற்பட முடியும்.

இந்நோக்கத்துக்காக, நான் அடிக்கடி சொல்லி வருவதுபோல, வளர்முக நாடுகளுக்குள், சக்தி வாய்ந்த நாடுகள் முன்னணியில் வந்து நிற்க வேண்டும். இவ்விதம் நிகழ்வதில்லை என்பதே நான் அங்டாடிலிருந்து பெற்ற அனுபவம். ஒபெக் நாடுகளும், புதிதாக தொழில் வளர்ச்சி கண்ட நாடுகளும் அங்டாட் பேச்சுவார்த்தைகளின் போது முதல் வரிசைக்கு வரவில்லை. '77 குழுவில் சிறந்த ஜனநாயக முறையொன்று நிலவி வருவதுடன், தலைமைத்துவமும் பல்வேறு அளவுகோல்களின் படியும் மாறி மாறி வருகிறது. பலம் பொருந்திய வளர்முக நாடுகள் அங்டாடுடன் ஒத்துழைத்துச் சென்றது உண்மைதான். ஆனால், அவை முன்னணிக்கு வந்து தலைமைத்துவத்தைக் கொடுக்கவில்லை. அத்துடன், தெற்கின் கோரிக்கைகளுக்கு வடக்கு அனுசரணை காட்டும் விதத்தில், மிகச் சக்திவாய்ந்த நாடுகள் என்ற முறையில் இந்நாடுகள் தமது செல்வாக்கினைப் பிரயோகிக்கவுமில்லை.

ஐ. நா. விலோ அல்லது சுங்கத்தீர்வை மற்றும் வரி என்பவற்றுக்கான பொது உடன்பாட்டு அமைப்பிலோ (GATT) ஏதாவது பிரச்சினைகள் இருப்பின், வடக்கில் உள்ள நாடுகள் வளர்முக நாடுகளின் தலைநகரங்களுக்குச் சென்று அந்நாடுகளின் உதவியைக் கோருவதுண்டு. ஆனால், வளர்முக நாடுகள் அநேகமாக இவ்விதம் செய்வதில்லை. வளர்முக நாடுகள், வியாபாரம் மற்றும் உதவி போன்ற விஷயங்களில் தமது தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல் நிலைமைகளை விருத்தி செய்து கொள்வதற்கே தமது தொடர்புகளைப் பயன்படுத்துகின்றன. ஆக, இப்பொழுதுள்ள சூழலின் அவசியத் தேவை தெற்கிலுள்ள நாடுகளை திரட்டி ஒற்றுமை மூலம் பலப்படுத்துவதுதான்.

சு. கு.

ஒரு புதிய சிந்தனையை உருவாக்க வேண்டும் என்பதே தெற்கு கமிஷன் அமைக்கப்பட்டதற்கு பின்னணியில் இருந்த விஷயம் என்று நினைக்கிறேன். ஆனால், முன்னாள் தான்சானிய ஜனாதிபதி நியரேரே இதற்கு தலைமை தாங்குவது ஓர் எதிர் முரண் நிலையைக் காட்டவில்லையா? ஏனென்றால், தான்சானியாவுக்கான அவரது அனைத்துப் பொருளாதார உபாயங்களும் இப்பொழுது பெரும் குழப்பத்தில் இருக்கின்றன. அத்துடன் அவை செயற்படக் கூடியவை அல்ல என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. தான்சானியாவை கிராமமயமாக்கும் திட்டமும் அழிவில் முடியும் போல் தெரிகிறது. உஜாமா உட்பட அபிவிருத்தி குறித்த அவரது கருத்துக்கள் அனைத்தும் திசை மாறிச் சென்றதனால் இப்பொழுது அந்நாடு சர்வதேச நாணய நிதியத்தின் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது. தோல்வியுற்ற ஒரு பரிசோதனைக்குப் பிறகு அவர் இப்பொழுது தனது நாட்டை ச. நா. நிதியத்தின் கொள்கைகளுக்காக துறந்து விட்டது போல் தெரிகிறது. எனவே, அத்தகைய ஒருவர் புதிய சிந்தனையொன்றை உருவாக்குவதில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார் என்பது கொஞ்சமும் பொருந்துவதாக தெரியவில்லையே!

கா. கொ.

இது குறித்து தீர்க்கமாக கருத்துச் சொல்வதற்கு தான்சானிய உள்நாட்டு நிலவரங்கள் பற்றி எனக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது. சோஷலிச அரை சோஷலிச முகாமை முறை தோல்வி கண்டமைக்கு தான்சானியாவே — குறிப்பாக வடக்கில் உள்ள நாடு

களில்—உதாரணமாக காட்டப்பட்டு பேசப்படுவதை நான் அடிக்கடி கேட்டிருக்கிறேன். இது பற்றி நான் இதுவரை நியரேரேயிடம் பேசவில்லை. ஒரு நாளைக்கு பேசலாம் என்றிருக்கிறேன். ஆனால், தான்சானியா குறித்த இந்த தீர்ப்பு நியாயமானதுதானா என்று எனக்குச் சொல்லத்தெரியாது. சரியான உதவிகள் கிடைக்காததால் இக்கொள்கை தோல்வியடைந்திருக்க முடியும் அல்லவா? ஆக, இத்தோல்விக்கான உண்மையான காரணத்தை நாங்கள் கண்டறிய வேண்டும்.

தான்சானியா ஸ்கன்டிநேவிய நாடுகளிலிருந்து பெறும் தலா நபர் வீத உதவி பெருமளவில் இருப்பதாக இப்பொழுது கூறப்படுகிறது. ஆனால், இந்த உதவி தான்சானிய பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்காக நெறிப்படுத்தப்படுகின்றதா என்பது தெரியவில்லை. மறுபுறத்தில், தான்சானியாவில் என்ன நடந்தது என்பதைக் கொண்டு நியரேரேயின் தகுதி கணிக்கப்படவில்லை. ஒரு விருப்பு வெறுப்பற்ற தலைவர் என்ற முறையில் அவர் மீது வைக்கப்பட்டிருக்கும் நம்பிக்கை மற்றும் அவரது நேர்மை போன்ற குணாம்சங்களே அவரை முன்னணிக்கு கொண்டு வந்துள்ளன.

இருந்த போதிலும், இந்தக்கேள்விகளை அவரிடம் விடுத்து தான்சானிய அனுபவம் பற்றிய அவரது மதிப்பீட்டினைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதே என் விருப்பம். உண்மையிலேயே மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தை ஓர் அளவு கோலாகக் கொண்டுதான் தான்சானியாவுக்கு குறைந்த புள்ளிகள் வழங்கப்படுகிறது. அரசியல் உறுதிப்பாடு, வருமானப் பகிர்வு, பலவீனமான சமூக குழுக்களைப்பராமரித்தல் போன்ற ஏனைய தளங்களில் தான்சானியாவின் செயற்பாடு எவ்விதம் இருக்கிறது என்பது எனக்குத்தெரியாது. இந்த அம்சங்களையே நாங்கள் நோக்குதல் வேண்டும். ஆனால், இவையொன்றும், தெற்கில் தலைமைத்துவத்தை வகிப்பதில் நின்றும் நியரேரேயை தகுதியிழக்கச் செய்யவில்லை என்று நான் நிச்சயமாக கூறுவேன்.

சு. கு.

தான்சானியாவுக்கு ஸ்கன்டிநேவிய நாடுகளிலிருந்து பெருமளவில் உதவிகள் வந்தது பற்றி குறிப்பிட்டீர்கள். ஒருவேளை, இந்த சமூக ஜனநாயக நாடுகள், தங்களை ஒத்த ஒரு பிம்பத்தை இங்கு கண்டிருக்க முடியும். இலங்கையின் விஷயத்திலும், இப்போக்குடன் ஒத்த ஒரு மாதிரியை ஒருவர் சிலவேளை காண முடியும். இலங்கையில் பிந்திய 1960-களிலும், 1970-களிலும் வருமானப்பகிர்வு, ஜனநாயகம், எழுத்தறிவு, சிசு மரண விகிதம் போன்ற குறிகாட்டிகள் நல்ல நிலையிலிருந்தன. இந்நிலைமை ஸ்கன்டிநேவிய நாடுகள் போன்ற சமூக ஜனநாயக நாடுகளை சந்தோசப்படுத்தியிருக்கக் கூடும். வளர்ச்சியுடன் கூடிய வருமானப்பகிர்வு விஷயத்தில், உலக வங்கியும் இலங்கையை உயர் ஸ்தானத்தில் வைத்திருந்தது. இதன் காரணமாக 1970-களின் நடுப்பகுதியில் இலங்கைக்கு உதவிகளை வாரிவழங்கும் ஒரு மனச்சார்பு நிலை தோன்றியிருக்க வேண்டும். இலங்கை குறித்த சர்வதேச சமூகத்தின் எதிர்வினைவு மற்றும் இலங்கைக்கான உதவி வருகை போன்றன குறித்த உங்கள் கருத்து என்ன?

கா. கொ.

ஆம். இலங்கை குறித்து பெருமளவுக்கு நல்லெண்ணம் நிலவி வந்திருக்கிறது. ஸ்கன்டிநேவியாவை உள்ளிட்ட சமூக ஜனநாயக நாடுகளுக்கு மத்தியில் இது பரவலாக காணப்பட்டது. எங்களுடைய சமூக நலக் கொள்கைகள் நல்லபிப்பிராயத்தை உருவாக்கியிருந்தன.

மறுபக்கத்தில், அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, ஜப்பான் போன்ற பெரிய நாடுகளைப் பொறுத்த வரையில் உதவியளிப்பதன் மூலம் வளர்முக நாடுகளில் தங்கள் செல்வாக்கை நிலையாக வைத்திருக்கும் அரசியல் நோக்கம் மட்டுமன்றி வேறு அளவுகோள்களும் இருந்தன. இலங்கை பொருளாதார தாராளமயமயமாக்கலுக்கு ஊடாக சந்தைச் சக்திகளை பெருமளவில் அனுமதித்து, வளர்ச்சி நோக்கிலான அணுகுமுறையொன்றை பின்பற்றியமையை அந்நாடுகள் பெரிதும் வரவேற்றன. மிதமிஞ்சிய அளவிலான அரச தலையீடு, (அரசு இயந்திரம் மிகப் பலவீனமானதாக இருக்கும் வேளையில்) அபிவிருத்தி முயற்சிகளுக்கு பெருமளவில் அரச ஆதரவுடனான பொறிமுறைகளை நம்பியிருத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் வளர்முக நாடுகள் தமக்குத்தாமே தடங்கல்களை ஏற்படுத்திக் கொண்டிருப்பதாக இந்த மேலைத்தேய நாடுகள் கருதுகின்றன. இந்த அம்சங்கள் குறித்து இலங்கை நன்கு திறந்த அணுகுமுறையொன்றை வைத்திருக்க விரும்புவதானது, ஸ்கன்டிநேவிய நாடுகளை மட்டுமல்லது பல பெரிய கொடையாளி நாடுகளையும் கவர்ந்த அம்சமாக இருந்திருக்க முடியும். இந்நாடுகள் குறிப்பாக 1977 காலத்துக்குப் பின்னர் இலங்கைக்கு உதவுவதற்கு தீவிரமாக முன்வந்துள்ளன.

சு. கு.

ஆக, இரு வழிகளில் உதவி வருகிறது என்று சொல்கிறீர்கள். ஒன்று சமூக ஜனநாயக நோக்கிலான ஸ்கன்டிநேவிய நாடுகளின் உதவி வருகை. மற்றது சந்தை நோக்கிலான தனியார் துறை சார்பு அணுகுமுறை உதவி வருகை. இலங்கைக்கான உதவி வருகையின் பரிமாணம் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

கா. கொ.

இந்த விஷயத்தில இலங்கை, மற்றும் பல வளர்முக நாடுகளையும் விட நல்ல முறையில் பயனடைந்திருக்கிறது என்றே நினைக்கிறேன். எமக்கு கிடைத்த உதவிகளில் பெரும் பகுதி இருபக்க உதவியாக இருந்ததுடன், சலுகை ரீதியிலான நிபந்தனைகளுடனேயே

அவை தரப்பட்டன. மேலும், சர்வதேச நிறுவனங்களுக்கூடாகவும் அவை வந்து சேர்ந்தன. இதுவரையில் வியாபாரக்கடன் என்று நாம் அதிகம் பெற்றிருக்கவில்லை. ஆனால், இப்பொழுது அதுவும் உயர்ந்துவருகிறது. இத்த உதவிகள் குறித்த நிபந்தனைகள் இலங்கையைப் பொறுத்த வரையில் சிறந்தவையாகவே இருந்து வந்துள்ளன. ஆனால், பல வளர்முக நாடுகளில் நிபந்தனைகள் மிக மோசமாகவும் இருந்துள்ளன.

தம்மிலிருந்து வெகுதூரம் ஒதுங்கியிருக்கும் நாடுகளுக்கோ தமக்கு எதிராக இருக்கும் நாடுகளுக்கோ எவரும் உதவி வழங்க முன்வரமாட்டார்கள். ஆனால், வளர்முக நாடுகளின் தேசிய கொள்கைகள் மற்றும் சமூக நடவடிக்கைகள் போன்ற அம்சங்களை உதவி வழங்கும் நாடுகளால் சரிவர புரிந்து கொள்ள முடிவதில்லை. வளர்முக நாடுகளில் அடிச்சரடாக ஓடும் சமூகச் சக்திகளைப் புரிந்துகொள்ளும் விஷயத்தில் உதவி வழங்கும் முகவரகங்களும் குழுக்களும் மிகப் பலவீனமானவையாகவே இருக்கின்றன. பொருளாதாரத்துக்கு நல்லது எது என்பது அவர்களுக்குத் தெரியும். மூலவளங்களை எவ்வாறு ஒதுக்குவது, அமைப்பினை மிகத்திறமையான முறையில் இயங்கச் செய்வது எப்படி என்பதெல்லாம் குறித்து அவர்களிடம் கருத்துக்களுண்டு. ஆனால், பொருளாதார வளர்ச்சியானது பொருளாதார பரிசோதனைச்சாலையொன்றில் ஏற்படுவதில்லை என்பது அவர்களுக்கு தெரிவதில்லை. பல்வேறு முரண்படும் சக்திகளும் இயங்கிக்கொண்டிருக்கும் சமூகமொன்றிலேயே அது இடம் பெறுகிறது. இந்தச் சக்திகளைப் புறக்கணித்து, அவற்றை உணரத்தவறி அவற்றை மடக்கி நிதானப்படுத்துவதில் தோல்வி கண்டால், அத்தகைய சூழலொன்றில் வெளியிலிருந்து வரும் ஆலோசனை தீங்கு விளைவிப்பதாகவும் பல சந்தர்ப்பங்களில் அபாயகரமானதாகவும் இருக்க முடியும்.

சு. கு.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற பன்னாட்டு முகவரங்களுடனான இலங்கையின் தொடர்பு பற்றி என்ன கருதுகிறீர்கள். எங்களுடைய தன்னுரிக்கமும், பேரம் பேசும் சக்தியும், தங்கியிருக்கும் அளவும் எத்த மட்டில் இருக்கிறது.

கா. கொ.

இந்த விஷயத்துடன் எனக்கு நேரடித் தொடர்பு நிலவிய காலத்தைப்பற்றி என்னால் நன்கு சொல்ல முடியும். நான் திட்டமிடல் அமைச்சில் பணிபுரிந்த போதுதான், முதலில் உதவிக்குழு ஸ்தாபிக்கப்பட்டது. ஐந்து அல்லது ஆறு வருடங்கள் உதவி கேட்டுச் செல்லும் தூதுக்குழுவுக்கு நான் தலைமை தாங்கிச் சென்றிருக்கிறேன். அப்பொது உதவி வழங்குபவர்களிடையே இலங்கை அரசாங்கத்துக்கு உதவ வேண்டுமென்ற ஒரு மனப்போக்கு இருந்தது. ஆனால், அந்தக்காலத்திலும் கூட கொள்கைகளின் ஆற்றலை தீர்மானிக்கும் விஷயத்தில் ஒரு நீதிபதி போல உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் செயற்பட வேண்டுமென உதவி வழங்குபவர்கள் எதிர்பார்த்தார்கள். கொள்கைகள் சரியானவைதான் என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் சர்வதேச நாணய நிதியத்திலிருந்தும் உலக வங்கியிலிருந்து ஒரு சமிக்ஞையைப் பெற்ற பின்னரேயே உதவி வழங்கும் நாடுகள் உதவி தர முன்வந்தன.

கொள்கை தொடர்பான பிரச்சினைகள் குறித்து பல சந்தர்ப்பங்களில் உலக வங்கியுடனும், சர்வதேச நாணய நிதியத்துடனும் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டது எனக்கு ஞாபகமிருக்கிறது. குறிப்பாக, இறக்குமதிகளை தாராளமயப்படுத்துதல், செலாவணிவீத கொள்கைகள், உணவு மானியங்கள் போன்ற விஷயங்கள் குறித்து இவை இடம் பெற்றன. உணவு மானியங்களை ஒழிப்பதற்காக இந்நிறுவனங்கள் முழு மூச்சுடன் முயன்றன. நாங்கள் இம்முயற்சியை எதிர்த்து நிற்க வேண்டியிருந்தது. நாடு இறங்கிச் செல்லக்கூடிய மட்டத்துக்கும் ஓர் எல்லையுண்டு என்பதனை நாங்கள் அவர்களுக்கு எடுத்துக் கூறினோம். ஸ்டேர்லிங் பவுண், இந்திய ரூபா என்பன பெறுமதியிறக்கம் செய்யப்பட்டதனையடுத்து, நாங்களும் எமது நாணயத்தை பெறுமதியிறக்கம் செய்ய வேண்டுமென அவர்கள் கடுமையாக வற்புறுத்தினார்கள். வளர்முக நாடுகளுக்கான அவர்களுடைய மருந்தில் இது ஒரு பாகமாக இருந்தது. மிதமிஞ்சிய பெறுமதியிறக்கம் நாட்டில் ஏற்படுத்தக் கூடிய சமூக பின்விளைவுகள் குறித்து நாங்கள் அவர்களுக்கு சுட்டிக் காட்டினோம். அதனால் ஒரு இரட்டைச் செலாவணி வித முறையைக் கொண்ட பீக்ஸ் திட்டத்தை நாங்கள் வகுத்தோம். இத்திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்கள், உணவு, மருந்துப் பொருட்கள், உரம் போன்றன உத்தியோக பூர்வ குறைந்த விகிதத்தில் நாட்டுக்குள் வருவதற்கு அனுமதித்தோம். ஏனைய பொருட்களுக்குள் தாராள அடிப்படையில் ஓர் உயர் செலாவணி விகிதத்தில் வர அனுமதியளிக்கப்பட்டது. இது குறித்து ச. நா. நிதியம் சந்தோசப்படவில்லை. இறுதியாக சரியான திசையை நோக்கி எடுத்து வைக்கப்பட்ட தவறான காலடி என இதனை அவர்கள் வர்ணித்தார்கள். மொத்தப் பெறுதியிறக்கத்தை அனுமதித்து, வாழ்க்கைச் செலவுகளை மேலேயுயர்த்துவதற்கு எங்களால் முடியாது என்று நாங்கள் கூறியதும் தான் அவர்கள் இதனை ஏற்றுக்கொண்டார்கள். உணவு மற்றும் மானியங்கள் குறித்தும் இதே நிலை தான் நிலவியது. அபிவிருத்திக்குச் செல்ல வேண்டிய மானியங்களை உணவு மானியங்கள் உறிஞ்சிக்கொள்வதாக அவர்கள் இயந்திரத்தனமாக வாதித்தார்கள்.

ஆனால், சமூக சமநிலையையும், சமூக நீதியையும் நிலை நிறுத்துவதற்கும். வறியோரைப் பராமரிப்பதற்குமென இந்த உணவு மானியங்கள் தேவை என்று நாங்கள் வலியுறுத்திக் கூறினோம். அந்தக்காலத்தில் பாதுகாப்புக்கென்று பெரிய அளவில் செலவுகள் எதுவும் இருக்கவில்லை. எமது மானியங்கள் தான் எமது பாதுகாப்புச் செலவுகள் என்று நான் அப்போது கூறிக் கொண்டிருந்தேன்.

உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் சில கருத்துக்களையும், சில பரிகரிப்பு முறைகளையும் வைத்திருக்கின்றன. வளர்முக நாடுகள் அவற்றையே பின்பற்ற வேண்டுமென அவை விரும்புகின்றன. வளர்முக நாடுகள் இவ்விஷயங்கள் தொடர்பாக தங்களது முழுச் சக்திகளையும் பயன்படுத்தி விவாவதித்து, பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும். இதற்கு ஓரளவுக்கு தேர்ச்சி வேண்டும்; அத்துடன் நாட்டின் நிலைமையிலும் இது தங்கியிருக்கிறது. ஒரு நாடு முற்றிலும் தங்கியிருக்கும் நிலையில் இருக்கும் போது அதன் பேரம் பேசும் சக்தியும் அந்த அளவுக்கு வீழ்ச்சியடைந்திருக்கும். எப்படியாயினும், பல வளர்முக நாடுகளைப் பொறுத்த வரையில் ஒரு பலவீனமான நிலையில் நின்றே பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டியிருக்கிறது. எனவே, இத்தகைய ஒரு பின்னணியில், எம்மால் எவ்வளவு முடியுமோ அத்தளவுக்கு பெற்றுக்கொள்ளக் கூடியதாக பேச்சு வார்த்தைகளை நடாத்துவதே உள்ள ஒரே வழி.

சு. கு.

முழு வளர்முக நாடுகளையும் எடுத்துப்பார்த்தால், உலக வங்கியுடனும், சர்வதேச நாணய நிதியத்துடனும் மிகச்சிறந்த, வெற்றிகரமான பேச்சு வார்த்தைகளை நடாத்தக்கூடிய நிலையில் இருக்கும் இலட்சிய நாடு என்று எதனை நீங்கள் கருதுகிறீர்கள்.

கா. கொ.

அப்படி ஒரு நாட்டை எனக்குத் தெரியாது. இது இந்நாடுகளின் நிலைமையிலும், இந்நாடுகள் ச. நா. நி., உலக வங்கி உதவியில் தங்கியிருக்கும் அளவையும் பொறுத்த ஒரு விஷயம். இந்தியா பல்வேறு பெறுமதியிறக்க வேண்டுகோள்களையும் எதிர்த்து நின்று சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னர் வெற்றிகரமாக பேச்சுவார்த்தை நடத்தியது என்று கூறப்படுகிறது. இந்நிலை இப்பொழுதும் அதே மாதிரியாக இருக்கிறதா என்று கூற எனக்குத் தெரியாது.

பொருளாதார மந்தம் மற்றும் உலக சூழல் என்பன காரணமாக இப்பொழுது வளர்முக நாடுகள் அனைத்துமே மிகப்பலவீனமான நிலையில் இருக்கின்றன. உலக வங்கியும், ச. நா. நிதியமும் இப்பொழுது தங்கள் நிலைப்பாடுகளில் முன்னரை விடவும் கடுமையாக நிற்கின்றன. பிரேசில் போன்ற சில நாடுகள் பல சந்தர்ப்பங்களில் ச. நா. நிதியத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்த மறுத்து வந்துள்ளன. ஆனால், பேச்சுவார்த்தைகளின் ஓர் உபாயமாக இது எவ்வளவு காலத்துக்கு தாக்குப் பிடிக்க முடியும் என்று கூறமுடியாது. அத்துடன் ஒரு நாடு தொடர்ச்சியாக கடைப்பிடித்து வரக்கூடிய அடிப்படை நிலைப்பாடாக எவ்வளவு காலத்துக்கு இது நிலைக்க முடியும் என்பது கேள்விக்குரியதே.

சு. கு.

மிகவும் நியாயமற்றது என்று நான் நினைக்கும் கேள்வியொன்றை இப்பொழுது உங்களிடம் கேட்கப் போகிறேன். ஒரு தேவதை கீழிறங்கி வந்து, இலங்கையின் பொருளாதாரத்தை மீளமைப்புச் செய்யும் சக்தியை உங்களுக்கு கொடுத்துவிட்டுப் போனால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

கா. கொ.

நீங்கள் ஒரு சர்வாதிகாரியாக இருந்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்பதை விட இப்படிக் கேட்பது நல்லது. மூலவளங்கள் மீது எந்த தடங்கலும் இல்லாத ஒரு நிலையில்தானே.

சு. கு.

சரி. அதனை வேறு விதமாக கேட்கிறேன். தற்போதைய வெளிச் சூழலின் அமுக்கங்களுக்கு மத்தியில் இலங்கையின் உள்நாட்டு அமைப்பை நீங்கள் எப்படி பழுது பார்ப்பீர்கள்?

கா. கொ.

நான் செய்யப்போவது எவ்வளவு தூரத்துக்கு வெற்றிகரமாக அமையுமென்றோ அல்லது அதனை நான் எப்படிச் செய்வேன் என்றோ சொல்லாமல் என்ன செய்வேன் என்று மட்டும் சொல்கிறேன். பொருளாதார, தொழில் நுட்ப முன்னேற்றப்பாதையில் இலங்கையை உறுதியுடன் முன்னெடுத்துச் செல்லும் கொள்கையொன்றை நான் பின்பற்றுவேன். எங்கள் சனத்தொகை அமைப்பினையும், எமது இளைஞர்களின் அபிலாஷைகளையும் பொறுத்த வரையில், இப்பிராந்தியத்தில் நாங்கள் பின் தங்கியவர்களாக இருக்க முடியாது. துரிதமானதும், சமநிலையற்றதுமான ஓர் அபிவிருத்தி சமூகத்தின் மீது எடுத்து வரும் எதிர்மறைத்தாக்கங்கள் குறித்து நான் மிக மிக ஜாக்கிரதையாக இருப்பேன். இந்த அம்சம் குறித்து நாங்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். அபிவிருத்தி வந்தால் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்று ஒருவர் நினைத்தால் அது மிக எளிதான தீர்வுதான். இது நீண்ட கால நோக்கிலேயே அதாவது உண்மை அபிவிருத்தி ஏற்பட்ட பின்னரேயே நிகழ முடியும். சமூகத்தின் பக்கம் பார்க்காது நீங்கள் அபிவிருத்தியில் மட்டும் முழுக் கவனத்தையும் செலுத்துவதன் அபாயம் என்னவென்றால், சமூக கொந்தளிப்பு ஏற்பட்டு முழு அபிவிருத்திப் படிமுறையும் பாதிக்கப்பட்டு விடுவதுதான். எல்லா அம்சங்களையும் சமநிலையில் வைத்துக் கொள்ளக்கூடிய தாக்கமான கொள்கையொன்றை நான் அமுல் செய்வேன். இவையனைத்தையும் செய்வதனைவிட சொல்வது மிக எளிதுதான்!

# வேலையின்மை

இடையறாததும், ஒப்புநோக்கத்தக்கதுமான தரவுத் தொடர் ஒன்று இல்லாமையால் வேலைவாய்ப்புகளில் ஏற்படும் மாற்றங்களின் அளவையும் 1977 ஆம் ஆண்டின் பின் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களின் தாக்கத்தையும் மதிப்பிடுதல் கடினமாகவுள்ளது. தொழில்/தொழிலில்லாமை பற்றிய புள்ளிவிவரங்கள் 1981 ஆம் ஆண்டிற்கு மட்டுமே கிடைக்கக் கூடியதாகவுள்ளது. மற்றெல்லாத் தரவுகளும் பல்வேறு அளவுகளிலான மாதிரி அளவைகளில் பெறப்பட்ட புள்ளிவிவரங்களாகும். இவை (2500 முதல் 10,000 வீடுகள் வரை) பல்வேறு தேவைகளுக்காகக் காலத்துக்குக் காலம் நடாத்தப்பட்ட அளவைகளின் மூலம் பெறப்பட்டவையாகும். தொழில்/தொழிலில்லாமை பற்றிய தகவல்கள், இவ்வளவைகளிலிருந்து கிடைத்த உப பேறுகளாகுமேயன்றி பிரதான விளைவுகளன்று. இத்தரவுகள் சிக்கல் மிக்கவையாக இருப்பதுடன், தொழில்/தொழிலில்லாமை என்பது பற்றிய கருத்துக்களும் பொருள் வரையறைகளும் வேறுபடுவதனாலும் இவ்வளவைகள் நடாத்தப்பட்ட காலப் பிரிவுகள் (ஒரு வாரம் முதல் மூன்று வாரம் வரை) வேறுபடுவதனாலும் அர்த்தமுள்ள முடிவுகள் எடுக்கத்தக்க வகையில் இவற்றை ஒப்பு நோக்குவது சிரமமாகவுள்ளது. உண்மையில் இத்தகைய தரவுகளை ஒப்பு நோக்கிப் பெறப்படும் முடிவுகள் தவறானவையாகும்.

1977 ஆம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் வேலையில்லாமை மீது எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதை மதிப்பிடுவதற்கு, 1977 க்கு முன் வேலையில்லாமை எவ்வாறிருந்தது என்பது பற்றிய தரவுகளை அடித்தளமாகக் கொண்டு தொடங்குவதே சாலச்சிறந்ததாகும். 1973-75 காலப்பிரிவில் (மத்திய வங்கியினால்) மூன்று மாதிரி அளவைகள் நடாத்தப்பட்டன. இவற்றை அத்தகைய மதிப்பீட்டிற்கு ஓர் அடித்தளமாகக் கொள்ளலாம்.

மேற்கூறிய தரவுகளை அடிப்படையாக்க கொண்டு 1977 ல் வேலையில்லாமை எம்மட்டத்திலிருந்தது என்பதைக் கூற முடியுமா? 1977 ஆம் ஆண்டானது இரு ஆட்சிகளுக்கிடையிலான ஒரு முக்கிய பிரிவுக்கோடாக அமைவதனால், ஒருவர் தமது தேவைக்கேற்ப மேற்கூறிய தரவுகளிலிருந்து ஒரு தொகையைத் தெரிவு செய்வதற்கான போக்கு இருக்கக் காணப்படுகிறது. உதாரணமாக, 1977 ஆம் ஆண்டின் பின்னான சீர்திருத்தங்களை ஆதரிப்பவர் ஒருவர், 1977 ஆம் ஆண்டுக்கு முந்திய காலப்பிரிவில் நிலவிய வேலையில்லாமை நிலையை எடுத்துக் காட்டும் பொருட்டு, (1973 ஆம் ஆண்டின் நுகர்வோர் நிதி ஆய்வு காட்டிய) 24 சதவீதத்தை அல்லது அதைவிட உயர்ந்த ஊகச் சதவீதம் ஒன்றைத் தெரிவு செய்து கொள்ள விரும்புவார். அவ்வாறான முயற்சி, அதே ஆண்டில் நடத்தப்பட்ட (குறிப்பாக தொழிலாளர் தொகை மீது கூடிய கவனஞ் செலுத்திய) மற்றொரு ஆய்வு, வேலையில்லாமை ஏறத்தாழ 20 சதவீதமாக இருப்பதாக எடுத்துக் காட்டியது என்ற உண்மையைப் புறக்கணிக்கிறது. இம்மூன்று தரவுத் தொகுதிகளும் மேற்கூறிய காரணங்களினால் ஒப்புநோக்கத் தக்கவையாக இல்லை என்பது தெளிவு. வேறு மாற்று வழியில்லை என்பதனால் நாம், ஓரளவு சரியானது எனக்கொள்ளத்தக்க அடித்தளமாக 1975 ல் வெளியிடப்பட்ட தொகையையோ அல்லது 1973 ஆம் ஆண்டின் இரு தொகைகளது சராசரியையோ உபயோகிக்கலாம். இவ்விரண்டும் ஏறத்தாழ 20 சதவீத வேலையின்மையைக் காட்டுகின்றன.

1977 ஆம் ஆண்டில் சுமார் 50 இலட்சம் தொழிலாளர்கள் இருந்தனரெனக் கொண்டால், இது, அடிநிலைத் தொகையாக 10 இலட்சம்பேர் வேலையில்லாதிருந்தனர் எனக் கொள்ளலாம். சீர்திருத்தங்களின் பின் வேலையில்லா நிலைமை எவ்வாறு மாற்றமடைந்தது? 1982 வரையான தரவுகள் உள்ளன. 1981-82க்கான தரவுகளை ஆராய்வோம். அவ்வாண்டை அடைந்தபோது சீர்திருத்தங்கள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி, பொருளாதார முயற்சிகளில் பெருஞ் சுறுசுறுப்பைத் தோற்றுவித்திருந்தன. தரவுகளைப் பெறுவதற்கான இரு முக்கிய மூலங்களுண்டு: ஒன்று, 1981 மார்ச்சில் நடாத்தப்பட்ட குடிசன மதிப்பீடு; மற்றையது, நுகர்வோர் நிதி, சமூக பொருளாதார ஆய்வு. இது 1981 அக்டோபர் முதல் 1982 செப்டெம்பர் வரை நடாத்தப்பட்டது, இரு தொகுதித் தரவுகளுக்குமிடையிலான கால இடைவெளி ஏறத்தாழ ஓராண்டு எனக் கொள்ளலாம். இங்குங்கூட சீர்திருத்த ஆதரவாளர் 1981/82 ஆய்வின் பெறுபேறுகளைப் பயன்படுத்தி, வேலையில்லாமை வெறுமனே 12 சதவீதமாகக் குறைந்ததென முடிவு செய்து சீர்திருத்தங்கள், வேலையில்லாமையை அரைவாசியாகக் குறைந்து விட்டதெனக்காட்ட விரும்புவார். அல்லது மேற்கூறிய தொகுதித் தரவுகளையும் ஒப்பிட்டு, ஒரே ஆண்டில் வேலையில்லாப் பிரச்சினை மூன்றிலொரு பகுதியினால் (18 ல் இருந்து 12 சதவீதமாக) குறைந்து விட்டது எனக் கொள்ளப்படலாம்.

எவ்வாறாயினும், இத்தகைய அவசர முடிவுகளுக்கு வருவது விஞ்ஞானமுறைக்கு அமைந்ததல்ல. ஏனெனில் அது, குடிசன மதிப்பீட்டிலும், ஆய்வுகளிலும் தொழில்/வேலையில்லாமை என்பது பற்றிக் கொள்ளப்பட்ட கருத்தும் பொருள் வரையறையும் வேறுபட்டவை என்பதைப் புறக்கணிக்கிறது. ஒரு சொல்லின் பொருளை நாம் குறுகியதாகவோ விரிவானதாகவோ வரையறுக்கலாம். குறுகிய பொருள் கொண்டால் அதற்கமைய தொகைகளும் சிறியதாக அமையும். 1981/82ல் நடாத்தப்பட்ட ஆய்வில் வேலைவாய்ப்பு 1981 குடிசன மதிப்பீட்டில் பொருள்வரை செய்யப்பட்டதை விட விரிவாகப் பொருள்வரை செய்யப்பட்டுள்ளது. அதேவேளையில் வேலையில்லாமை குறுகிய பொருளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொழில் பற்றிய கருத்து: 1981 குடிசன மதிப்பீட்டில், தொழில் செய்வோரில் சம்பளத்துக்காக அல்லது இலாபத்திற்காக எவ்வகை வேலையிலும் ஈடுபட்டுள்ள அனைவரும் சேர்க்கப்பட்டிருந்தனர். அத்துடன் முழுநேரக் கூலி பெறுவோர் மட்டுமன்றி, பகுதிநேரச் சம்பளம் பெறுவோர், சுயதொழில் செய்வோர், குடும்பமுயற்சிகளில் சம்பளமின்றி வாரம் ஒன்றுக்குச் சராசரி 15 மணிநேரம் உழைப்போர் ஆகியோரும் உட்படுத்தப்பட்டிருந்தனர். மறுபுறம், 1981/82ன் மாதிரி ஆய்வில், சம்பளத்துக்கோ இலாபத்துக்கோ, குடும்ப நன்மைக்கோ, ஆய்வு நடந்த வாரத்தில் ஒரு நாளேனும் (மிகக்குறைந்தது 3 மணித்தியாலம்) வேலை செய்தோர் அனைவரும் தொழில் செய்பவர்களாகக் கொள்ளப்பட்டிருந்தனர். மூன்று மணிநேரம் உழைத்தவர்களையும் சேர்த்துக் கொண்டதனால், இவ்வாய்வு, நாட்டின் தொழில்செய்வோர் தொகையை மிகைபடுத்தி மதிப்பிட்டு விட்டதாகத் தோன்றுகிறது. இந்த நுகர்வோர் நிதி, சமூக-பொருளாதார ஆய்வில் தொழில் செய்வோரின் எண்ணிக்கை, குடிசன மதிப்பீட்டில்காணப்படுவதைவிட மிகக் கூடியதாகக் காணப்படுவதற்கு மூன்று மணிநேரம் உழைத்தவர்களும் சேர்க்கப்பட்டமை காரணமாகலாம். இரண்டுக்குமிடையில் காணப்பட்ட வேறுபாடு 560,000 பேராகும். ஓராண்டில் இவ்வளவு பெரிய வேலைவாய்ப்பு விரிவாக்கம் சாத்தியமானதல்ல.

வேலையில்லாமை பற்றிய கருத்து: மறுபுறம், நு. நி. ச. பொ. ஆய்வு வேலையில்லாமைக்குப் பயன்படுத்திய பொருள் வரையறை மிகக்குறுகியதாகும். ஒருவர், (அ) 14 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராக இருந்து. (ஆ) ஆய்வு காலத்தில் தொழில் இல்லாதிருந்தால் (இ) சம்பளத்துக்காக, இலாபத்துக்காக அல்லது குடும்ப நன்மைக்காகத் தொழில் தேடுவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தால் அவர் வேலையில்லாதவர் எனக்

கொள்ளப்பட்டார். அமைதியாக வேலை தேடுவோர் இதில் சேர்க்கப்படவில்லை. மாருக, குடிசனமதிப்பீட்டில் விரிவான கருத்துப் பயன்படுத்தப்பட்டிருந்தது: (அ) வேலையற்றிருக்கும் 10 அதற்கு மேற்பட்ட வயதுடையோர் (ஆ) வேலை தேடுவோர், இல்லாவிடின் வேலை செய்ய விரும்புவோர் வேலைகிடைத்தால் செய்வதற்குத் தயாராக இருப்போர் - இவர்கள் வேலையற்றோரெனக் கொள்ளப்பட்டனர். குடிசன மதிப்பீடுபற்றிய பொது அறிக்கையில் பின்வருமாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது. "வேலை வாய்ப்புக்கள் குறைவாகவுள்ளவிடத்து, வேலையற்ருேரில், வேலை கிடைக்க மாட்டாது என்று நம்புவதனுல், வேலை தேடுவதில் மும்முரமாக ஈடுபடாவிடினும் வேலை செய்ய விரும்பி, வேலை கிடைத்தால் செய்வதற்குத் தயாராக இருப்பவர்களும் சேர்க்கப்பட வேண்டுமென குடிசன மதிப்பீடு தொடர்பான ஐ. நா. விதப்புரைகள் கூறுகின்றன. இத்தகையோரை வேலையற்ருேர் பட்டியலில் சேர்ந்துக்கொள்வதற்கான காரணம், அத்தகையோர் நீண்ட காலமாக வேலை தேடியலைந்து கிடைக்காமல் சலிப்புற்றவர்களாக இருக்கலாம் என்பதாகும். அதேபோன்று, பாடசாலை விட்ட இளைஞர்கள், தம்மூத்த சகோதரர்கள், உறவினர்கள் அல்லது நண்பர்களின் வேலை தேடும் முயற்சி தோல்வியில் முடிவுற்றிருப்பதைக் கண்டு வேலை தேடுவதில் மும்முரமாக ஈடுபடாதிருக்கலாம். இந்நிலையில் ஒருவர் வேலை செய்யத் தயாராக இருக்கிருர் என்பது அவர் மும்முரமாக வேலை தேடுகிருர் என்பதன் மூலமன்றி, அவரது மனநிலையின் வாயிலாகவே வெளிப்படுகிறது. எனவே மும்முரமாக வேலைதேடுவதில் ஈடுபட்டுள்ளவர்களோடு, அவ்வாறு ஈடுபடாமல் வேலை செய்யத் தயாராக இருப்போரும் வேலையற்ருேர் பட்டியலிற் சேர்க்கப்பட வேண்டும்.

1981 - 82 ஆய்வில் பயன்படுத்தப்பட்ட (மும்முரமாக வேலை தேடுவோர் என்ற) வேலையற்ருேர் பற்றிய பொருள் வரையறை, நாட்டில் வேலையற்ருேரின் எண்ணிக்கையைக் குறைத்துக் கணித்துள்ளது. இவ்வாய்வு கடினமாக வேலை தேடுவதில் முனைந்திருந்தோரை மட்டுமே கணக்கில் எடுத்திருந்தது. எனவே இதன் காண்புகளை, குடிசன மதிப்பீட்டின் காண்புகளுடனே பிற அளவைகளின் காண்புகளுடனே ஒப்புநோக்கவியலாது. எனவே, வேலையற்ருேர் எண்ணிக்கைபற்றி பல்வேறு மூலங்கள் தெரிவிக்கும் தரவுகள் அர்த்தமுள்ள வகையில் ஒப்புநோக்கப்பட முடியாது என்பது தெளிவு. வேறுபாடுகளைக் கவனியாமல் ஒப்புநோக்குதல் தவருன முடிவுகளுக்கு இட்டுச் செல்லும். ஆதலால், ஒப்புநோக்கத்தக்க தரவுகள் தொடரொன்று இல்லாதவிடத்து ஊகங்கள் அல்லது கரடுமுரடான கணிப்புகளைச் செய்ய முடியுமேயன்றி பிரச்சினையின் அளவைச் சரியாக மதிப்பிட முடியாது. புள்ளிவிவரங்கள் கிடைப்பது அரிதாகவுள்ளது. எனினும் பின்வரும் முடிவுகளைச் செய்வது நியாயமானதாகும்.

(அ) 1978 - 82 காலப்பிரிவில் இடம்பெற்ற மும்முரமான பொருளாதார முயற்சிகள் நிச்சயமாகப் புதிய வேலைவாய்ப்புக்களைக் கணிசமான அளவுக்கு விரிவாக்கியிருக்கும். இதனுல் வேலையில்லாப் பிரச்சினை குறைந்திருக்கும். ஒழுங்குற அமைக்கப்பட்ட (அரசாங்க, தனியார் வர்த்தகத்துறை, சுதந்திர வர்த்தக வலயம்) துறைகளைத் தவிர, பொருளாதாரத்தின் ஒழுங்குற அமைக்கப்படாத துறையிலும் குறிப்பாக வர்த்தக, போக்குவரத்துத் துறைகளின் விரிவாக்கம் காரணமாக வேலைவாய்ப்புகள் அதிகரித்திருக்கும்.

(ஆ) 1977க்குப் பிந்திய காலத்தின் சீர்திருத்தங்களால் பாதிக்கப்படாத இரு காரணிகளின் நிமித்தம் வேலையில்லாப் பிரச்சினையும் தளர்ந்திருக்கும். அக்காரணிகள்: தொழிலாளர்கள் பெருந்தொகையில் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்புப் பெற்றமை (2,00,000 பேர் என மதிப்பிடப்பட்டுள்ளது), சிறிமா - சாஸ்திரி உடன்படிக்கையின் கீழ் இந்திய வம்சாவழியினர் இந்தியாவுக்குக் குடிபெயர்ந்தமை (1978 - 84ல் 1,00,000 பேர்).

(இ) வேலைவாய்ப்பு விரிவாக்கத்தின் பெரும் பகுதி, நகர்ப்புறத்தை மையமாகக் கொண்ட சேவைத்துறையிலும் கைத்தொழில் துறையிலும் இடம்பெற்றதாகத் தோன்றுகிறது. எவ்வாருயினும், நாட்டின் வேலையில்லாப் பிரச்சினையில் 25 சதவீதமே நகர்ப்புறங்களில் காணப்படுகிறது. 75% நாட்டுப்புறங்களிற் காணப்படுகிறது. சீர்திருத்தங்களினுல் நாட்டுப்புற வேலையில்லாப் பிரச்சினை எந்த அளவுக்குக் குறைந்தது என்பது தெளிவாகத் தெரியவில்லை.

(ஈ) 1984 - 87ல் வேலைவாய்ப்புகள் குறைந்தமையையும், வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்தையுமே எல்லாச் சான்றுகளும் காட்டுகின்றன. உத்தியோக முறையான மதிப்பீடுகளின்படி 1987ல் 11 இலட்சம் பேர் அல்லது தொழிலாளர் தொகையில் 18 சதவீதமானேர் வேலையற்றிருந்தனர்.

( 31—ம் பக்கத் தொடர்ச்சி)

உருவாகும்வரையில் - நடத்திச் செல்லப்படவில்லை.

வணிக நடவடிக்கைகளின் பெருக்கத்துடன்கணிசமான அளவிலான ஒரு 'கறுப்பு பொருளாதாரம்' நாட்டில் வளர்ச்சி கண்டது. பேரண்டப் பொருளாதார சிக்கல்களையும், பணவீக்கத் தாக்கத்தினையும் இது கொண்டுவரக்கூடியதாக இருந்தது. ஏற்றுமதி நோக்கிலான வளர்ச்சி மாதிரியொன்றை எய்துவதில் ஏற்பட்ட தோல்வியின் விளைவாக தாராளமயப்படுத்திய பொருளாதாரத்தை தொடர்ந்து வைத்திருப்பதற்கு அதிக அளவிலான வெளிநாட்டுக் கடன்களிலும் உதவிகளிலும் தங்கி இருக்கவேண்டி நேரிட்டது. இதன் காரணமாக சமீப வருடங்களின் ஏற்றுமதிச் சம்பாத்தியங்களில் கா ற் ப ங் களவை உறிஞ்சிக் கொள்ளக்கூடிய அளவுக்கு கடன் சேவை விகிதம் செங்குத்தாக உயர்ந்து சென்றது. இவை இரண்டையும் நீண்ட காலத்தில் நாடு தாக்குப்பிடிக்க முடியாது.

சேவை வழியிலான வளர்ச்சி மாதிரி, வேலைவாய்ப்பு விஷயத்தில் நகர்ப்புறங்களுக்கு சாதக்மானதாக இருந்தது. குறிப்பாக கொழும்பு நகரம் இதனுல் நன்கு பயனடைந்தது. ஆனுல், தென் மாவட்ட இளைஞர்களின் வேலைவாய்ப்பு அபிலாஷைகளை இதனுல் பூர்த்திசெய்ய முடியவில்லை. இறக்குமதி தாராள மயம் கிராம வருமானங்களில் பாதகமான தாக்கங்களைக் கொண்டு வந்தது. குறிப்பாக, யாழ். மாவட்டத்தில் எவ்வித நட்டஈடுமின்றி பொருளாதார இழப்புக்கள் ஏற்பட்டன. ஆக தார்ராளமயப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தின் கீழ் சமூக கொந்தளிப்பு படிப்படியாக பரவி வந்தது. வருமானப் பகிர்வு விஷயத்திலும், மிகக் கீழே இருந்த 40 சத வீதமான குடும்பங்கள் நட்டங்களையே அடைந்தன. மேலும், வறியோரினும் வறியோரான 20 சதவீதம் வரையிலான மக்கள் மிக மோசமாக போஷாக்கு அளவுகளிலும்கூட-பாதிப்புற்றிருப்பதாகத் தெரிகிறது.

# கொள்கை மாற்றங்களும் வேலைவாய்ப்பும்

## இலங்கை நிலை 1970 – 1985

பூர்ணிமா இராஜபக்ச

ஹேக் நகரிலுள்ள சமூகவியல் நிறுவனத்தைச் சேர்ந்தவரும் இப்பொழுது இந்நாட்டில் கொள்கை ஆய்வு நிறுவனத்தின் ஆலோசகராகப் பணியாற்றுபவருமாகிய பூர்ணிமா இராஜபக்ச, 1988 பெப்ரவரி 11-13 திகதிகளில், கொள்கை ஆய்வு நிறுவனம் ''வேலைவாய்ப்பும் வேலையின்மையும்'' என்ற தலைப்பில் நடத்திய திட்ட ஆராய்ச்சிக் கருத்தரங்கில் சமர்ப்பித்த கட்டுரையின் திருத்திய வடிவம் இங்கே தரப்படுகிறது.

### இலங்கைப் பொருளாதாரத்தின் அமைப்பு அம்சங்கள்

இலங்கைப் பொருளாதாரத்தை இதே போன்ற குறைந்த வருமானமுள்ள ஏனைய நாடுகளின்பொருளாதாரங்களுடன்ஒப்பிட்டுப்பார்க்குமிடத்து கல்வியறிவு, சுகாதாரம், ஆயுள், மரணவிகிதம், சனப் பெருக்கம், உணவுச் சத்து மட்டம் ஆதியன சம்பந்தமான முன்னேற்றமே தனி முக்கியத்துவம் வாய்ந்த தன்மையாகக் காணப்படுகிறது. எனினும், இலங்கையிலும் இது போன்ற குறை விருத்தி நாடுகளிலும் அமைப்பு முறையில் பல பின்னிடைவுகள் காணப்படுகின்றன.

இலங்கையின் விவசாயத் துறை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூன்றிலொரு பங்கையும் வேலைவாய்ப்பில் மூன்றிலிரண்டு பங்கையும் வகிக்கும் பாரிய துறையாக விளங்குகிறது. இத்துறையுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, கைத்தொழிலுற்பத்தித் துறை பலவீனமுள்ளதாகக் காணப்படுகின்றது. இத்துறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 வீதத்தை மாத்திரம் வழங்கக் கூடியதாயிருக்கிறது. இவற்றை விட ஒரு சிறிய நிருமாணத் துறையும், பல தொழில்களைக் கொண்டதும், ஆனால் அதிகளவில் உற்பத்தி செய்யாததுமான ஒரு பெரிய சேவைத் துறையும், ஒழுங்கு முறை சார்ந்த துறையின் நடவடிக்கைகளை நிறைவு செய்யும் விதத்தில் மொத்தத் தொழிலாளர் தொகுதியில் ஏறத்தாழ 20 வீதத்தைக் கொண்ட ஒரு பெரிய முறைசாராத் துறையுமுண்டு.

இலங்கையின் பொருளாதார முறை – அதன் வளர்ச்சியும் அபிவிருத்தி வாய்ப்பும் - ஏற்றுமதித் துறையின் செல்வாக்கினால் பெரிதும் உந்தப்படும் போக்குடையதாயிருக்கிறது. இந்த ஏற்றுமதித் துறையில் முக்கியமான மூன்று பண்டங்கள் (தேயிலை, இறப்பர், தேங்காய் ஆகியன) உண்டு. ஏற்றுமதி மூலம் பெறும் வருவாய் முக்கிய நுகர் பொருள்களையும் கைத்தொழில்களைப் பெருக்குவதற்கு வேண்டிய இடைநிலை, மற்றும் மூலதனப் பொருள்களையும் கொள்வனவு செய்வதற்குத் தேவையான வெளிநாட்டுச் செலாவணியைத் தருவதுடன் அரசாங்கத்தின் வருவாயில் பெரும் பகுதியையும் (ஏற்றுமதி வரிவிதிப்பு மூலம்) தருகிறது. இந்த அமைப்பு முறையின் விளைவாக ஏற்றுமதித்துறையில் அதிகம் தங்கியிருக்க வேண்டியிருப்பதனால் ஏற்றுமதி வருவாயும் அரசாங்க வருமானத் தளமும், வர்த்தக நியதிகள் சம்பந்தமான தடைகளேற்படுவதன் மூலம், தாக்கமுற்றுச் சில பிரச்சினைகள் இலங்கைக்கு ஏற்படக்கூடும். வளர்ச்சி தடைப்படுதல், கொடுப்பனவு மீதி அதிகரித்தல், வரவு செலவுத் திட்டப் பிரச்சினைகளேற்படுதல் ஆதியவற்றை நாடு எதிர்நோக்க வேண்டியிருக்கும். அரசாங்கமே மிகக் கூடுதலான முதலீடு செய்வதனாலும் இடைநிலை, மூலதனப் பொருள்களை இறக்குமதி செய்வதனாலும் இந்தப் பிரச்சினைகள் சிக்கங்களை கொண்டுவரக்கூடும்.

### பொதுப் போக்குகள் 1970 - 1985

1970 - 1985 காலத்தைக் கவனிக்கும் போது, 1970-1977, 1978-1986 என்று இரண்டு காலப் பகுதியாகப் பிரித்துப் பார்த்தல் வேண்டும். இந்த இரண்டு காலப் பகுதியிலும் வேறுபட்ட கொள்கைகளைப் பின்பற்றிய இரண்டு அரசாங்கங்களிருந்தமையால் பொருளாதார அமைப்பிலும் போக்கிலும் வேறுபாடுகளிருந்தன.

உள்நாட்டு வருமானங்கள் நாட்டின் வர்த்தக நியதிகளின் ஏற்ற இறக்கங்களினால் பாதிக்கப்படாமலிருக்கவும், பெருகிவரும் சனத்தொகைக்கு வேலைவாய்ப்பளிக்கவும் முயன்றுவந்த 1977ம் ஆண்டுக்கு முன்பிருந்த அரசாங்கங்கள், இறக்குமதி செய்யப்பட்டுவந்த பொருள்களுக்குப் பதிலீடானவற்றை உற்பத்தி செய்யக்கூடிய கைத் தொழில்களுக்கு ஊக்கமளித்து வந்தன. இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதன் பொருட்டு இறக்குமதிகளின் அளவைக் கட்டுப் படுத்தியும், இறக்குமதித் தீர்வை வீதங்களை உயர்த்தியும், இரட்டைச் செலாவணி வீதத்தை நடைமுறைப்படுத்தியும் உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு ஊக்கமளிக்கப்பட்டது. அரசாங்க ஆதரவுடன் கைத்தொழில்களைத் தொடங்கும் நடவடிக்கை 1950ம் ஆண்டு நடுப்பகுதியிலிருந்து மேற்கொள்ளப்படுவதாயிற்று இந்த முறை 1960ம் ஆண்டுகளிலும் 1970ம் ஆண்டுகளிலும் தொடர்ந்து பின்பற்றப்பட்டுவந்தது. இந்தக் காலத்தில் வெளிநாட்டினர்க்குச் சொந்தமான பெருந்தோட்டங்

கள், எண்ணெய் இறக்குமதி, போக்குவரத்துத் தொழில், காப்புறுதித் தொழில், வங்கித் தொழில் ஆதியன தேசிய மயமாக்கப்பட்டதுடன் அரசாங்கமே நாட்டின் மிகக் கூடுதலான உற்பத்திகளையும் மேற்கொள்ளலாயிற்று. 1970 - 77 காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரத்தை, முக்கியமாக பொருளாதார வளங்களை முகாமை செய்யும் கருமத்தை அரசாங்கம் பெருமளவில் தன் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்தது; விலைகளைக் கட்டுப்படுத்தியும் உற்பத்திக்கும் நுகர்ச்சிக்கும் மானியம் வழங்கியும் வந்தது. 1977ம் ஆண்டளவில் 6000 வரையான பொருள்கள் விலைக் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. அரசாங்கத்தின் மொத்த நடப்புச் செலவில் ஏறத்தாழ 23% பல்வேறு வகையான மானியங்களில் செலவு செய்யப்பட்டது.

*1970-1977* காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 2.9% வீதமாகக் குறைந்தது. இதற்கு முந்திய பத்தாண்டு காலத்தில் இந்த வீதம் 4.4% ஆகவிருந்தது. இவ்வாறு உற்பத்தி வளர்ச்சி குறைந்ததற்குக் காரணம் இக்காலத்தில் பாரம்பரிய ஏற்றுமதிகளின் வர்த்தக நியதிகள் சீரழிந்தமையினால் வெளிநாட்டுச் செலாவணி வருவாய் குறைந்தமையும், இறக்குமதிகளுக்குப் பதிலீடாகப் பொருள்களை உற்பத்திசெய்யத் தொடங்கப்பட்ட கைத்தொழில்கள் போதியளவு விரிவடையாமையுமாகும். மேலும், பாரம்பரிய ஏற்றுமதிகள்; மூலமான தேங்கிய வருமானத்திலிருந்து நலன்புரி சேவைகள் முதலியவற்றிற்கு நியாயமான அளவு செலவுசெய்ய வேண்டியிருந்தமையினால் கைத்தொழில் துறைக்கு வேண்டிய இறக்குமதிகளைச் செய்வதற்கு அந்த வருமானத்தைப் போதிய அளவில் பயன்படுத்த முடியவில்லை. இக்காலத்தில் கைத்தொழில் பொறித்தொகுதிகளின் சக்தியில் ஏறத்தாழ 60% மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. வெளிநாட்டுச் செலாவணியைப் போதிய அளவில் பெறமுடியாமையினால் உண்ணாட்டுச் சேமிப்பும் குறைவதாயிற்று. வெளிநாட்டு மூலதனம் வருவதும் பெரிதும் குறைந்துவிட்டமையினால் மூலதன உருவாக்கமும் குறையலாயிற்று. இந்தக் காரணிகளெல்லாம் சேர்ந்து வேலைவாய்ப்பின்மை வீதத்தை அதிகரிக்கச் செய்துவிட்டன. கல்விகற்ற இளைஞர்களிடையிலேயே வேலையில்லாத நிலைமை அதிகமாகக் காணப்படுகிறது. வர்த்தக நிலைமைகள் பாதிக்கப்படுதல் போன்ற வெளிநாட்டுக் காரணிகளும் இக்காலத்தில் உறுதியற்ற நிலைமைகள் (பணவீக்கம், சமநிலையற்ற நடப்புக் கணக்கு போன்றவை) ஏற்படுவதற்குக் காரணமாயிருந்தன.

*1978 - 1985* காலப்பகுதியில் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டபொழுது மேற்குறித்த நிலைமைகளில் மாற்றமேற்பட்டது. 1977ல் தொடங்கப்பட்ட அபிவிருத்தி முறையின்படி, ஏற்றுமதி வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடுத்தல், பொருளாதார விடயங்களில் அரசு பங்கெடுப்பதைக் குறைத்துத் தனியார்துறைக்குக் கூடிய வாய்ப்பளித்தல், வளங்களைப் பகிர்ந்தளிப்பதில் சந்தை வாய்ப்புகளை விரிவடையச் செய்தல் ஆகிய விடயங்களுக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டது. இதன்பொருட்டு விலைக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதுடன் மானியம் வழங்கும் சந்தர்ப்பங்களும் குறைக்கப்பட்டன. பங்கிட்டளிக்கும் முறையும் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சுங்கவரி விகிதங்கள் கொண்டுவரப்பட்டன; செலாவணி வீதங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டதுடன் நாணயப் பெறுமதிகளும் குறைக்கப்பட்டது; வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் மீதிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதுடன் வெளிநாட்டு முதலீடுகளுக்கும் ஊக்கமளிக்கப்பட்டது; உண்ணாட்டு வியாபாரம் தனியார் துறையினரிடம் விடப்பட்டது.

*1978 – 1985* காலத்தில் மொத்த உண்ணாட்டு உற்பத்தி 5.6 வீதமாக அதிகரித்தது; இதற்கு முந்திய காலத்தில் இந்த வீதம் 2.9% ஆகவிருந்தது. மொத்த உண்ணாட்டு உற்பத்தியில் 15 வீதமாகவிருந்த முதலீட்டு மட்டம் 27 வீதமாகக் கூடிற்று. இந்த அதிகரிப்புகளுக்குக் காரணம் அரசு மேற்கொண்ட பாரிய மூலதனச் செலவுகளாகும். இச்செலவுகளுக்கு வெளிநாட்டு நிதி உதவி முன்னெப்பொழுதும் இல்லாதவாறு இலங்கைக்குக் கிடைத்தது. தேசிய சேமிப்பு போதிய அளவில் கிடைக்கவில்லை.

மொத்த உண்ணாட்டு உற்பத்தி வீதம் அதிககரிக்வே வேலையின்மை வீதம் குறையலாயிற்று. உலகச்சந்தை நிலைமைகள் குழப்பமடைந்திருந்த வேளையிலேற்பட்ட பொருளாதார நடவடிக்கைகள் காரணமாகச் சில சமநிலையற்ற தன்மைகள் ஏற்படலாயின. இந்தச் சமநிலையற்ற தன்மைகளைச் சீர்செய்வதற்காக உலக வங்கியின் ஆதரவுடன் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. முதலீட்டுச் செலவுகள் போன்ற செலவினங்களையும் வெளிநாட்டுச் செலாவணி வீதத்தையும் குறைத்தல் ஆகியனவே இவையாகும். இந்த நடவடிக்கைகள் காரணமாக இப்பொழுது பொருளாதார வளர்ச்சி சிறிது குறைந்திருப்பதுடன் வேலையின்மையும் ஓரளவு கூடியிருக்கிறது.

அண்மைக்காலத்தில் ஓரளவு வளர்ச்சியேற்பட்டிருந்தபொழுதிலும் அது வறுமையை ஒழிப்பதற்கு அதிகம் உதவவில்லை என்றே கூறுதல்வேண்டும். சமீபத்தில் வளர்ச்சி வீதம் சிறிது குறையவே வறுமை முன்னரிலும் பார்க்கப் பரந்து காணப்படுகிறது; வருமான மட்டம் குறைந்துவிட்டது; பொதுநலம்

மாற்றும் ஊட்டச்சத்து மட்டங்கள் வீழ்ச்சியடைந்துவிட்டன. (யூனிசெவ், 1985; உலக வங்கி, 1977; உலக வங்கி 1978; உலக வங்கி, 1986; உலக வங்கி, 1987).

1970ன் தொடராண்டுகளில் வேலையின்மை இலங்கையின் ஒரு முக்கிய அரசியல் பிரச்சினையாக இருந்தது. முக்கியமாகக் கல்வி கற்ற இளைஞர்களுக்கிடையில தெளிவாகக் காணப்பட்ட வேலையின்மைக்கும், 1971-ம் ஆண்டிலேற்பட்ட கிளர்ச்சிக்குமிடையில் தொடர்பிருந்தமை நன்கு தென்பட்டது. இந்த விடயம் அரசியல் நிகழ்ச்சிகளிலிருந்து சிறிது காலம் மறைந்திருந்த பொழுதிலும் இப்பொழுது பெரும் அரசியல் பிரச்சினையாக மீண்டும் தோன்றியுள்ளது.

வேலைவாய்ப்புப் பிரச்சினை பல்லாண்டுகளுக்கு முன் வேரூன்றத் தொடங்கியது. 1970-ன் தசாப்தத்தில் போதிய வெளிநாட்டுச் செலாவணி கிடைக்காமையினல் முதலீடுகளின் மட்டம் குறையவே பொருளாதார வளர்ச்சியும் குறைவதாயிற்று. இதன் விளைவாக வேலையின்மையின் அளவு அதிகரித்தது. 1971-ம் ஆண்டின் புள்ளிவிபரங்களின்படி தொழிலாளர்களுக்கிடையில் 1971-ல் 18 சதவீதமாகவிருந்த வேலையின்மை பின்னர் 29 சதவீதமாக அதிகரித்து 1977-ல் பத்து லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் வேலையில்லாமல் திண்டாடும் நிலையேற்பட்டது. பொருளாதார வளர்ச்சி குறைந்தது ஒருபுறமிருக்க, 1971-ல்நடைபெற்ற சர்வதேசத் தொழில் அமைப்பின் ஆய்வின்படி ஆரம்பக் கல்விக்கு மேற்பட்ட கல்வி கற்றவர்களுக்குப் பொருத்தமான வேலைவாய்ப்பில்லாமலிருந்தமை பாரதூரமான விளைவுகளையேற்படுத்தக் கூடியதாயிருந்தது. தொழிற் சந்தைச் சீர்திருத்தங்களும் செய்யப்படுதல் வேண்டுமென இந்த ஆய்வு விதந்துரைத்தது. இந்த ஆய்வின்படி, வேலையில்லாப் பிரச்சினை உயர்மட்டத்திலிருந்தமைக்குரிய ஏனைய காரணங்கள் வருமாறு: மலேரியா ஒழிக்கப்பட்டதன் விளைவாக, யுத்தகாலத்தின் பின்னர், சனத்தொகை அதிகரிக்கத் தொடங்கியமை, கூடிய எண்ணிக்கையான பெண்கள் கல்வி கற்கத் தொடங்கியதன் காரணமாக வேலைகளிலீடுபடும் பெண்களின் எண்ணிக்கை வீதம் கூடியமை, நிதித் தேவைகளுக்காக வேலைசெய்யவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டமை, விவாகம் செய்யும் வயது மட்டம் உயர்ந்தமை, கருக்கொள்ளல் குறைந்தமை ஆதியனவாம்.

மேற்குறிப்பிட்டது போன்று, 1977-ம் ஆண்டின்பின் ஏற்பட்ட பொருளாதாரப் பெருக்கம் வேலையில்லாதிருந்தவர்களின் எண்ணிக்கையில் பெரும் பகுதியை ஒழித்துவிட்டது. இதற்குக் காரணம் தொழிலாளர்களை அதிகம் ஈடுபடுத்தும் துறைகளில் (சேவைகள், கட்டுமான வேலைகள், நெற்செய்கை, உடுப்பு வகை தயாரித்தல் ஆதிய வற்றில்) அதிக வளர்ச்சியேற்பட்டமையாகும். பொருளாதாரத்தைத் தாராளமயமாக்கியமை சில எதிர்மறையான வேலைவாய்ப்பு விளைவுகளையும் ஏற்படுத்தியது. முக்கியமாக, இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்கள் நியாயமான அளவில் கிடைத்தமையினல் இறக்குமதிகளுக்குப் பதிலீடாகப் பொருள்களை உற்பத்தி செய்யவெனத் தொடங்கப்பட்டனவும் தொழிலாளர் பலருக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்தனவுமான சிறுகைத்தொழில்கள் பாதிக்கப்பட்டன. இக் கைத்தொழில்கள் பெரும்பாலும் முறைசாராத துறையிலேயே தொடங்கப்பட்டிருந்தன. இத் தொடர்பில் பலருக்கும் தெரிந்தது கைத்தறித் துறையாகும். புடவைக் கைத்தொழில் அமைச்சு தயாரித்த ஓர் அறிக்கையின்படி தாராளமயமாக்கும் முறை தொடங்கப்பட்டபொழுது இயங்கிவந்த 111,000 கைத்தறிகளில் ஏறத்தாழ 30,000 கைத்தறிகள் 1980-ம் ஆண்டளவில் இயங்காது ஒழிந்துவிட்டன. வேலைவாய்ப்புப் பற்றிய ஒரு தெளிவான நிலைமை 1977-ம் ஆண்டின் பின் ஏற்பட்டது. பெருந்தொகையான தொழிலாளர் மத்திய கிழக்கு நாடுகளில் வேலை பெற்றுச் சென்றதுடன் பெருந்தோட்டங்களிலிருந்த பெருந்தொகையான இந்திய வம்சாவழித் தொழிலாளரும் குடிபெயர்ந்து இந்தியா சென்றனர். இதன் விளைவாகத் தொழிலாளரிடையிலிருந்த வேலையில்லாமை வீதம் குறையலாயிற்று. ஆனல் அண்மைக் காலத்தில் இந்த வேலைவாய்ப்பு வளர்ச்சி வேகத்தைத் தொடர்ந்து போக முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. விரைவுபடுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தி வேலைகள், அரசாங்கத்தின் வீடமைப்புத் திட்ட வேலைகள், உல்லாசப் பிரயாணிகளுக்காகிய ஹோட்டல் கட்டும் வேலைகள் ஆதியன இப்பொழுதுகுறைந்துவிட்டமையால் தொழிலாளருக்கு வேலைவாய்ப்புகளும் குறைந்துவிட்டன. புதிய, நீண்டகால அரசாங்கத் திட்டங்களும் இப்பொழுது தொடங்கப்படவில்லை. நாட்டில் நிலவும் அமைதியின்மை காரணமாக, ஹோட்டல் தொழிலிலும் தேக்க நிலையேற்பட்டுள்ளது. நிர்மாண வேலைகள் அண்மைக் காலத்தில் பெரிதும் குறைந்துவிட்டன. நிதி, வர்த்தகத் துறைகள் இப்பொழுது விரிவடைந்துள்ளன. மக்கள் கூடிய அளவில் முதலீடுகளும் செய்கிறர்கள். இவை யாவும் பொருளாதார முன்னேற்றத்தைக் காட்டுகின்றன. நெல் உற்பத்தியின் அளவு விரைவில் நாட்டின் தேவைகளுக்குப் போதியதாகவிருக்கும். ஆனல், இலங்கை நெல்லை ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு மிகக் குறைவு. நெற் பயிர்ச் செய்கை நிலப் பரப்பை அதிகரிப்பதற்கோ, உற்பத்தியைச் செறிவடையச் செய்வதற்கோ அதிக வாய்ப்புமில்லை. நெற் செய்கையில் ஈடுபட்டிருந்த பலர் 1977-ம் ஆண்டின் பின்னர் நீர்ப்பாசனம் பெறும் புதிய நிலங்களில் குடியேற்றப்பட்டுள்ளனர். ஆடை வகை உற்பத்தி வளர்ச்சி, அபிவிருத்தியடைந்த நாடுகள் பல இப்பொழுதுஆடைவகை இறக்கு

மதியைக் குறைத்துள்ளமை யினுல் தடைப்பட்டிருக்கிறது. பெருந்தோட்டப் பகுதிகளி லுள்ள இந்திய வம்சாவழித் தொழிலாளர் இந் நாட்டைவிட்டுச் செல்வதும் குறைந்துவிட்டது. மத்திய கிழக்கு நாடுகளின் பொருளாதார வளர்ச்சி குறைந்து விட்டமையினுல் இங்கிருந்து அந்நாடுகளுக்கு வேலைக்குச்செல்பவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவது மாத்திரமன்றி அந் நாடுகளில் ஏற்கனவே வேலை பெற்றிருந்தவர்களும் அண்மைக் காலத்தில் படிப்படியாகத் திருப்பியனுப்பப்பட்டு வருகின்றனர்.

இத்தகைய எதிர்மறைத் தன்மைகள் அபிவிருத்தியில் ஏற்பட்டதன் காரணமாக 1981இல் 14.7 சதவீதமாகக் குறைந்திருந்த வேலையின்மை 1986இல் 16.2 சதவீதமாக அதிகரித்தது என மதிப்பிடப்பட்டது.

தொழிலாளர் எத்தகைய வேலைகளைத் தேடினர், எத்தகைய வேலைகள் கிடைக்கக்கூடியதாயிருந்தன, தொழிற் சந்தைப் பிரிவுகள் எவ்வாறிருந்தன என்பனவற்றைப் பார்க்கவேண்டியது பொருத்தமாயினும், இந்த ஆய்வின் கருத்துப்படி, தொழிலாளரிடையில் வேலையின்மையை நீக்கக்கூடிய அளவுக்கு வேலைவாய்ப்பிருக்கவில்லை என்பதைக் கவனிப்பதே முக்கியமாகும். 1977 க்கும் 1978க்கும் இடையில் கைத்தொழிலின் இயலளவு பயன்படுத்தப்பட்டமை 60 சதவீதத்திலிருந்து 70 சதவீதமாகக் கூடியது. இந்த வீதம் மெதுவாகக் கூடி 1980ஆம் ஆண்டளவில் 73% ஆயிற்று. தொழிலாளர் தொகை நிலைமைகளை நீண்டகாலக் குடிநிலைத் தொகைத் தன்மைகளே தீர்மானிக்குமாயினும், பெரிய அளவிலான பொருளாதாரத் திட்டங்களை வகுத்துத் தொழிலாளர்களை மேலும் பயன்படுத்த வேண்டிய தேவைகளை அதிகரிக்கச் செய்வது முக்கியமாகும். முதலீட்டு மட்டமே தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் முக்கிய காரணியாகும்.

தொழிலாளருக்குக் கொடுக்கப்படும் கூலியின் அளவுகள் வேலைவாய்ப்பை அதிகரிக்கச் செய்வதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இது வைதிகமான கோட்பாடுகள் தெரிவிக்கும் கருத்துக்களிலும் பார்க்கக் கூடிய கவனத்தை ஈர்க்கக் கூடிய ஒரு விடயமாகும். 1970 - 77 காலத்தில் ஒழுங்கமைந்த தனியார் துறையில் மெய்யான கூலிகள் 47% அளவில் அதிகரித்தன. அதேவேளை பெயரளவுக் கூலிகள் 113% அதிகரித்தன. இக்காலத்தில் ஒழுங்கமைந்த தனியார் துறையில் வேலைவாய்புகள் 15% அதிகரித்தன. ஆனுல் 1978 - 1985 காலத்தில் பெயரளவுக் கூலிகள் 161 வீதத்தால் அதிகரிக்க மெய்யான கூலிகள் 7 சதவீதத்தால் மாத்திரம் அதிகரித்தன. இக்காலத்தில் பணியாளர் சகாய நிதியில் திறக்கப்பட்ட புதுக் கணக்குகள் 37 சதவீதத்தால் அதிகரித்தன. தனியார் துறையில் வேலைவாய்ப்புகள் அதிகரித்தமைக்குக் காரணம் அத்துறையில் கூடிய இலாபம் எதிர்பார்க்கப்பட்டமையாகும். 1978 -1985 காலத்தில் அதிக புதிய பணியாளர் சகாய நிதிக் கணக்குகள் திறக்கப்பட்ட பொழுதிலும் மிகச்செழிப்புற்றகாலம் எனச் சொல்லக் கூடிய 1978 - 1985 காலப்பகுதியிலேயே மிகக் கூடுதலான கணக்குகள் திறக்கப்பட்டன. 1970 - 73 காலத்தில் பெயரளவுக் கூலிகளும் மெய்யான கூலிகளும் ஓரளவு நிலையாக விருந்தன. 1970 - 77 காலப்பகுதியில் தனியார்துறை வேலைவாய்ப்புகள் மிகக்குறைந்த அளவிலேயே அதிகரித்தன.

**வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் அரசாங்கத்தின் பங்கு**

1977ஆம் ஆண்டின்பின் பொருளாதார வளர்ச்சியும், வேலைவாய்ப்பு அதிகரிப்பும் ஏற்பட்டமைக்குக் காரணம் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டமை எனவும், அண்மைக்காலத்தில் பொருளாதார வளர்ச்சி குறைந்தமைக்கும் வேலையின்மை அதிகரித்தமைக்கும் காரணம் கொள்கைகளைச் சீரமைப்பதில் வேகம் காட்டாமையே எனவும் நாணயத்துறை வல்லுநர்கள் கருதக்கூடும். பின்வருவன சீர்செய்யப்படவில்லை என இவர்கள் கூறலாம். பல்வேறு ஏற்றுமதிகளை ஊக்குவிக்கக் கூடியவாறு இறக்குமதி வரி விகிதம் மேலும் மாற்றியமைக்கப்படவில்லை, நாணய மாற்று வீதத்தில் நியாயமான மாற்றம் செய்யப்படவில்லை. அரசாங்கச் செலவினங்களை மட்டுப்படுத்தி வளங்களைத் தனியார் துறைக்குக் கிடைக்கச் செய்து தொடர்ந்து வளர்ச்சி ஏற்படவும் வேலைவாய்ப்பு அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பனவாம்,

1977 ஆம் ஆண்டிலிருந்து பின்பற்றப்பட்ட தாராளமயக் கொள்கை முக்கியமானதாக இருந்த போதிலும் நியாயமான பொருளாதார வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்பு அதிகரித்தமைக்கும் அக்கொள்கை அடிப்படையில் செய்யப்பட்ட ஏற்றுமதிகளோ சந்தை நிலைமைகளோ பெரிதும் உதவின எனக் கூற முடியாது. (1978 - 1985 காலத்தில் இறக்குமதிகளுக்குத் தேவையான வெளிநாட்டுச் செலாவணியில் 60 சதவீதத்தை மாத்திரம் மேற்படி ஏற்றுமதிகள் கொடுத்தன.) உண்மையில் அரசாங்கம் மேற்கொண்ட பாரிய மூலதன முதலீடுகளே இவற்றிக்குக் காரணமாயிருந்தன. இக்காலத்தில் உண்ணுட்டுச் சேமிப்பு மட்டம் உயர்ந்த போதிலும் (இதற்குக் காரணம் மெய்யான கூலிகள் குறைந்தமையும் தேசிய வருமானத்திலிருந்து பெறும் கூலி இலாபப்பங்கில் மாற்றம் செய்யப்பட்டமையுமாகும்)இது விரிவடைந்த முதலீட்டுக்குச் சமமாகவிருக்கவில்லை. மிகுதித் தொகை வெளிநாட்டுச் சேமிப்புகளிலிருந்து பெறப்பட்டது. 1970 – 77

காலத்தில் அரசு மேற்கொண்ட மூலதனச் செலவு சராசரி 28சதவீதமாகவிருக்க, 1978 - 85 காலத்தில் இது ஏறத்தாழ 44சதவீதமாகக் கூடிற்று. மொத்த உண்ணாட்டு உற்பத்தியின் நூற்று வீதமாகப் பார்க்குமிடத்து இது சராசரி 6.3 சதவீதத்திலிருந்து 14.7 சதவீதமாக இக்காலங்களுக்கிடையில் கூடிவிட்டது என்பதைக் காணலாம். அரசாங்க முதலீட்டுச் செலவு விரிவடைந்த வீதம், 1980 ஆம் ஆண்டிலிருந்து குறையவே பொருளாதார வளர்ச்சி வீதமும் குறையலாயிற்று. 1978 - 80 காலத்தில் 6.8 சதவீதமாக இருந்த வளர்ச்சி, 1981 - 85 காலத்தில் 5.2 சதவீதமாகக் குறையலாயிற்று. 1970 - 77 காலத்தில் பொருளாதார வளர்ச்சி குறைந்திருந்தபோதிலும் அரச துறையில் வேலை வாய்ப்பு மட்டம் உயர்ந்ததுடன் வருங்காலத்தில் தொழிலாளர் கூடிய வேலைவாய்ப்புப் பெறவழி வகுக்கக் கூடிய உபாயங்களும் பின் பற்றப்பட்டதற்கான அறிகுறிகளுண்டு. இந்த வேலை வாய்ப்புக்கள் பற்றிய புள்ளி விபரங்கள் சரியானவை என உறுதி கூறவும் முடியாது. 1970-ன் தசாப்தத்தில் தொழில் வாய்ப்புகள் குறைவாகவேயிருந்தன. இக்காலத்தில் தேசிய மயமாக்கப்பட்ட விவசாய நிலங்களின் அளவும் பெருகின. 1977 முடிவுக்கும் 1980 முடிவுக்குமிடைப்பட்ட காலத்தில் அரசாங்கத்திலும் அரசாங்க ஆதிக்கமுள்ள நிறுவனங்களிலுமிருந்த வேலைவாய்ப்பு வளர்ச்சி வீதம் முறையே 12.6%, 24.6% ஆகவிருந்தது. இதே வளர்ச்சி வீதம் 1981 - 85 காலத்தில் 4.5%, 4.0 ஆகவும், பிந்தியது 1983 - 85 காலத்தில் 5.0 வீதத்தால் குறைந்தும் காணப்பட்டது. 1970ஆம் ஆண்டுகளிலும் 1980ஆம் ஆண்டுகளின் முற்பகுதிகளிலும் அரச துறை வேலைகள் (முக்கியமாக எழுதுவினைஞர் தரங்கள் போன்றவற்றில்) வேலையின்மைப் பிரச்சினையை உடனடியாகக் குறைப்பதற்காக வழங்கப்பட்டிருக்கலாம். அதன் பின்னர் அரசாங்கத்துறையில் வேலை வாய்ப்பு வளர்ச்சியடைந்தமைக்கு முக்கிய காரணம் அரச முதலீடு அதிகரித்தமையாகும். 1970 – 1975 காலத்தில் (பெருந்தோட்டங்கள் தேசியமயமாக்கப்படுவதற்கு முன்) அரசாங்க ஆதிக்கமுள்ள நிறுவனங்களில் 89, 969 புதிய வேலைகளும் 1977 — 1983 காலத்தில் 168,684 வேலைகளும் உருவாக்கப்பட்டமை இதற்கு எடுத்துக்காட்டாகும். பாதுகாப்புச் சேவைகளில் கூடிய எண்ணிக்கையானவர்கள் சேர்க்கப்பட்ட பொழுதிலும் (அரசாங்கத் துறை வேலை வாய்ப்பு வீதம் 1983ம் ஆண்டிலிருந்து கூடியதிலிருந்து காணலாம்) அண்மைக் காலத்தில் அரசாங்கத் துறையில் வேலை வாய்ப்புக் குறைந்தமைக்குரிய காரணம் மகாவலித் திட்டங்கள் போன்ற பெரிய அளவிலான அரச முதலீட்டுத் திட்டங்கள் முடிவுற்றமையும், அத்தகைய புதிய திட்டங்கள் பின்னர் தொடங்கப்படாமையுமாகும். மேலும், வரவுசெலவுத் திட்டத்தில் செலவுகளைக் குறைத்தல், தொழிற்சாலைகள் சிலவற்றை மூடுதல் போன்ற சில நடவடிக்கைகள் மூலம் அரச துறை சீர்செய்யப்படுவதிலிருந்து இத்துறையில் வேலை வாய்ப்பு மேலும் வளர்ச்சியடைவதற்கு இடமில்லை என்பது தெரிகிறது. எனவே, இப்பொழுதுள்ள கொள்கைகளின்படி வருங்காலத்தில் உண்ணாட்டு வேலைகளை உருவாக்கும் பொறுப்பு தனியார்துறையிலேயே அதிகம் தங்கியிருக்குமெனக்கொள்ளலாம்.

## தனியார்துறை

போதிய தரவுகள் இல்லாமையினால் தனியார்துறையிலுள்ள வேலைவாய்ப்புகள் பற்றித் திட்டவட்டமாக எதுவும் கூறமுடியவில்லை. எவ்வாறாயினும், இந்தத்துறையின் செயற்பாடுகளிலிருந்து பார்க்குமிடத்து இது நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் வகிக்கும் முக்கிய பங்கிற்கு ஏற்பப் போதிய வேலை வாய்ப்பை வழங்கவில்லை என்றே கூறுதல் வேண்டும். அரசதுறை அதிக பொறுப்புக்களை வகிப்பதனால் தனியார் துறையினரின் செயல்பாடுகள் குறைந்துவிட்டன எனக் கூறமுடியாது. 1970 - 77 காலத்தில் தனியார்துறையினர் பெற்ற கடன் 182 சதவீதத்தால் அதிகரித்தது. அதே காலத்தில் அரச துறை பெற்ற கடன் 87 சதவீதத்தால் கூடியது. 1978 முடிவுக்கும் 1985 முடிவுக்குமிடையில் தனியார் துறையினர் கடன் 1049 சதவீதத்தால் அதிகரிக்க அரச துறையின் கடன் 343 சதவீதத்தால் மாத்திரம் அதிகரித்தது. மேலும், 1970 - 77 காலத்தில் அரசதுறை மூலதன உருவாக்கம் குறையவே தனியார் முதலீடும் குறைந்தது. இதே போன்ற ஒரு நிலைமை 1980-85 காலத்திலுமேற்பட்டது. தனியார்துறை மூலதன உருவாக்கம் மொத்த உண்ணாட்டு உற்பத்தியின் ஒரு வீதமாகப் பார்க்குமிடத்து, 1980ம் ஆண்டிலிருந்து குறைந்துவந்திருக்கிறது. இக்காலத்தில் அரசு பொருளாதாரத்துறையில் ஈடுபடுவதும், ஒரு கொள்கை நோக்குடன் குறைக்கப்பட்டுவந்தது. மத்திய வங்கி மீள்நிதி வழங்கும் ஏற்பாடு இருந்தபொழுதிலும் தனியார்துறை முதலீட்டு நடவடிக்கைகள் 1980ம் ஆண்டிலிருந்து குறைந்துவிட்டன. வர்த்தக வங்கிகள் முதன்மை கொடுக்க வேண்டிய துறைகளுக்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்குவதற்கு உதவுவதற்காகவே மத்திய வங்கி மீள்நிதி வழங்கும் ஏற்பாடு செய்திருந்தது. தனியார்துறையினர் உற்பத்தித் தேவைகளுக்கென கடன் பெறுவது குறைந்ததற்குக் காரணம் குறைந்த வீத பொருளாதார நடவடிக்கைகளும் அதிகரித்துவந்த அரசியல் கொந்தளிப்புமாகும். முதலீட்டு நிதி அதிகம் தேவையில்லாதிருந்த நிலையில், தனியார்துறையினர் 1978-85 காலத்தில் அதிக கடன்களை பெற்ற

தன் காரணம், இறக்குமதி விலைகள் 271 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருப்பதனால் வர்த்தக நியதிகள் சீரழிந்தமையாகும். உண்ணாட்டில் பண வீக்கமும் கூடிற்று. தனியார்துறை விரிவடைவதற்குப் பல்வகையிலும் ஊக்கமளிக்கப்பட்டபொழுதிலும், தாராளமயமாக்கப்பட்ட காலத்து மொத்த உண்ணாட்டு உற்பத்தியின் நூற்றுவீதமாகப் பார்க்கும்பொழுது தனியார் முதலீடு 1970 - 77 காலத்திலும் பார்க்கக் குறிப்பிடக்கூடிய அளவுக்கு அதிகரிக்கவில்லை என்பது தெரிகிறது. வெளிநாட்டுச் செலாவணி கிடைப்பது குறைவாகவிருந்தபொழுதிலும், சில தனியார் முயற்சிகள் (முக்கியமாகக் கைத்தொழில் முயற்சிகள்) அவற்றிற்கு அளிக்கப்பட்ட தூண்டுதல்களை (இரட்டைச் செலாவணிவீத முறைமை போன்றவற்றை) பயன்படுத்தி நன்மையடைந்தன. முன்னர் குறிப்பிடப்பட்டது போன்று 1977 முடிவுக்கும் 1985 முடிவுக்குமிடையில் அமைப்புமுறையான தனியார்துறையில் வேலைவாய்ப்பு 31 சதவீதத்தால் கூடியபோதும் செயல்படும் கணக்குகளின் எண்ணிக்கை 1981 - 85 காலத்தில் 3 சதவீதத்தால் மாத்திரம் கூடியது. பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு வெளியிட்ட தரவுகளின்படி அக்குழுவின் கீழ்வரும் முயற்சிகளில் (முக்கியமாகச் சுதந்திர வர்த்தக வலயத்தில்) 1978ம் ஆண்டில் 261 பேர் மாத்திரம் வேலை பெற்றனர்; இத்தொகை 1986ல் 45,047 ஆகக் கூடிற்று. இவர்களில் 80 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் புடவைக் கைத்தொழில், ஆடைவகை தயாரிக்கும் தொழில், தோல் பொருள்கள் தயாரிக்கும் தொழில் ஆகியவற்றில் வேலை செய்தனர். வருங்காலத்தில் இத்துறையிலுள்ள வேலைவாய்ப்புகள் பற்றிச் சந்தேகங்கள் இப்பொழுது எழுந்துள்ளன. வெளிநாடுகளுக்காகிய இப்பொருள்களின் ஏற்றுமதி அளவுகள் இப்பொழுது குறைக்கப்பட்டிருப்பதே இச் சந்தேகங்கள் எழுவதற்குக் காரணமாயிற்று.

இலங்கையிலுள்ள முறைசாராத துறைபற்றிய தகவல்கள் போதிய அளவில் கிடைக்கவில்லை. நியாயமான வேலைவாய்ப்பளிக்கக்கூடிய முறைமைசாராத துறையினர் பொருளாதார நடவடிக்கைகள் தாராளமயமாக்கப்பட்டதனால் நன்மையடைந்தனரா என்பது பற்றித் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், தனியார் போக்குவரத்துத்துறை, மொத்தவியாபாரம், சில்லறை வியாபாரம் ஆகிய பகுதிகளில் வேலைவாய்ப்பு, தாராளமயமாக்கப்பட்ட பின்னர், நியாயமான அளவில்கூடியிருப்பது கவனிக்கற்பாலது. அதேவேளை, தாராளமயமாக்கப்பட்ட பின்னர் கூடியபோட்டியேற்பட்டதன் விளைவாக, உள்ளூர்த் தேவைகளுக்காகிய பொருள்களை உற்பத்தி செய்து வந்த பெருந்தொகையான தொழிற்சாலைகள் மூடப்பட்டும் விட்டன. இத்தொழில் முயற்சிகளிற் சில திறமையற்றனவாயிருந்தபொழுதிலும் அவை பெருந்தொகையான தொழிலாளருக்கு வேலை வழங்கி வந்துள்ளன.

**செலாவணி வீதத்தைச் சீர்படுத்தல்**

1977ம் ஆண்டிலிருந்து இலங்கை ரூபாய் ஏறத்தாழ 45 சதவீதத்தால், பெயரளவு விகிதத்தில், இலங்கையுடன் வர்த்தகம் செய்யும் பெரியநாடுகளின் நாணயங்களுடன் பொருந்தக்கூடியதாக (வர்த்தகப் பெறுமதி அடிப்படையில்) மதிப்பிறக்கம் செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், தொடர்பான சர்வதேச விலை மாற்றங்கள்காரணமாக மெய்யான செலாவணி வீதம் இக்காலத்தில், ஏறத்தாழத் தொடர்ச்சியாக மதிப்பேற்றமடைந்து வந்திருக்கிறது. 1986ல் மாத்திரம் ரூபாயில் குறிப்பிடத்தக்க மதிப்பிறக்கம் விசேட எடுப்பனவு உரிமை (எஸ். டீ. ஆர்) சம்பந்தமாக (மதிப்புக் குறைந்து வந்த அமெரிக்க டொலருக்கு எதிரெதிராக ரூபா வீதத்தைப் பேணுவதற்காக) செய்யப்பட்டது. இந்த மதிப்பிறக்கம் மெய்யான வீதத்தில் 3 சத வீதமாயிருந்தது. மேலும், மெய்யான செலாவணி வீதத்தை அமெரிக்க டொலருடன் தொடர்புப்படுத்திப் பார்க்கும்போது, இலங்கை ஏற்றுமதியாளர்கள் தங்கள் போட்டியான நிலைமையை மீண்டும் அடையவேண்டுமாயின், இலங்கை ரூபாய் ஏறத்தாழ 11சத வீதம்வரை மதிப்பிறக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

1977ம் ஆண்டின் பின் ஏற்றுமதிகள் அதிகரிக்காமலும், வேலை வாய்ப்புகள் பெருகாமலுமிருந்தபொழுது இலங்கை ரூபாவின் மதிப்பு உயர்த்தப்பட்டிருக்குமாயின் நன்மையேற்பட்டிருக்குமென்பது நாணய அறிஞர்களின் கருத்தாகும். 1986ம் ஆண்டுக்கான உலக வங்கியின் பொருளாதார அறிக்கை வர்த்தக நியதிகள் சீரழிந்தமைபற்றியும், இலங்கையின் பாரம்பூரிய ஏற்றுமதிகளினால் இலாபமேற்பட்டாமைபற்றியும், கடன் சேவை மிக உயர்ந்திருந்தமையினால் வெளிநாட்டுச் செலாவணி அரிதாகி விட்டமைபற்றியும், இல்ங்கையுடன் போட்டிபோடும் நாடுகள் இலங்கையிலும் பார்க்கக்கூடிய வீதத்தில் தங்கள் நாணயங்களை மதிப்பிறக்கம் செய்திருந்தமை பற்றியும் குறிப்பிட்டு மதிப்பிறக்கம் இன்னும் கூடியிருக்கலாமென்ற கருத்தைத் தெரிவித்துள்ளது.

தேயிலை உற்பத்தியைப் பொறுத்தவரையில், மதிப்பிறக்கம் உடனடியாக ஏற்றுமதி அளவை அதிகரிக்கச் செய்யுமென எதிர்பார்க்க முடியாது. மதிப்பிறக்கம் உலக விலை மட்டத்தைப் பாதிக்காது. ஆனால், உற்பத்தியை அதிகரிக்கச் செய்யலாம். உலகநாடுகளில் ஏற்பட்ட மிகையான உற்பத்திப் பெருக்கமே வர்த்தகச் சீர்குலைவை ஏற்படுத்

தியது. வர்த்தகச் சீர்குலைவு ஏற்படவே வேலைவாய்ப்புகளும் பாதிக்கப்படும். செலாவணி வீதங்கள் மற்றைய ஏற்றுமதிகளுக்கும் வேலைவாய்ப்புக்கும் உதவியளித்தனவா என்பது தெளிவாகத் தெரியவில்லை. தாராளமயமாக்கும் கொள்கை பின்பற்றப்பட்டபின் பெற்ரோலியப் பொருள்களை மீள ஏற்றுமதி செய்யும் முயற்சிகளும் உடைவகை ஏற்றுமதிகளும் வேகமாக அதிகரித்தன. இந்த இரண்டு வகையான உற்பத்திகளின் வளர்ச்சி செலாவணி வீத அமைப்புடன் அதிக தொடர்பு கொண்டிருக்கவில்லை. உடைவகை ஏற்றுமதி இலங்கைக்கு ஒதுக்கப்பட்ட அனுமதிப்பங்கில் தங்கியிருந்தது. சுதந்திர வர்த்தக வலயத்தின்மற்றைய ஏற்றுமதிகளின் வளர்ச்சியும் வேலைவாய்ப்புகளும் செலாவணி வீதங்களிலும் பார்க்க முதலீட்டு ஊக்குவிப்புடன் கூடிய தொடர்புடையனவாயிருந்தன. மேலும், பெற்ரோலியக் கைத்தொழிலும் உடைவகைக் கைத்தொழிலும் ஏனைய பொருளாதார நடவடிக்கைகளுடன் அதிக தொடர்பில்லாதனவாயிருந்தன. பெற்ரோலியக் கைத்தொழில் அதிக வேலைவாய்ப்பளிப்பதாயிருக்கவில்லை. சேவைகள் பிரிவும் நிருமாணத் துறையும் வளர்ச்சியடைந்தமைக்கு செலாவணிவீதம் உயர்ந்திருந்தமை உதவியாயிற்று எனவும் கூறமுடியாது. உள்ளூர்த் தேவைகள் அரசாங்கத்தின் மிகக்கூடுதலான செலவுகள் காரணமாக அதிகரிக்கவே மேற்படி இரு துறைகளும் வளர்ச்சியடைந்தன.

தாராளமயமாக்கப்பட்ட காலத்தின்பெரும்பகுதியில் ரூபாவின் பெறுமதி மற்றைய நாணயங்களுடன் பொருந்தக்கூடியதாக உயர்ந்த பொழுதிலும், இறக்குமதி செய்யப்பட்ட மூலதனப் பொருள்களின் மெய்யான விலை கீழ்மதிப்பீடு செய்யப்பட்டதன் விளைவாக, உற்பத்தியில் மூலதனச் செலவு மும்மடங்காகி தொழிலாளர் செறிந்த உற்பத்தி அமைப்பைத் தடுத்திருக்குமெனக் கூறமுடியாது. மேலும், 1978-1985 காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் அளவு, ரூபாவின் பெறுமதி குறைந்திருந்தமையால் அவற்றின் விலை கூடியிருந்தபொழுதிலும், முதலீட்டுக்கு வேண்டிய பொருள்களின் இறக்குமதி வெளிநாட்டுச் செலாவணி கிடைப்பதைப் பொறுத்ததேயல்லாமல் அவற்றின் விலையைப் பொறுத்ததன்று எனக் கூறலாம். மேற்குறிப்பிட்டுள்ளவாறு, 1978 - 85 காலத்தில் முன்னெப்பொழுதுமில்லாதவாறு பெருமளவான வெளிநாட்டுச் செலாவணி இந்நாட்டுக்குக் கிடைத்தது. விவசாயத் துறைக்கு வேண்டிய உள்ளிடுகைப் பொருள்களை அரசாங்கம் இறக்குமதி செய்வதற்கும் இந்த வெளிநாட்டுச் செலாவணி பயன்பட்டது.

1970 - 77 காலத்தில் பயன்படுத்தப்பட்ட இரட்டைச் செலாவணி வீத முறைமை தொழில்வாய்ப்பை வெளிப்படையாக ஏற்படுத்தியது எனக் கூறமுடியாது. இரட்டை வீதங்களும் கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் இறக்குமதிப் பொருட்களுக்கு மாற்றீடான பொருள்களை உற்பத்தி செய்வதற்குத் தனியார்துறைக்கு ஊக்கமளித்தனவெனினும் அத்துறையினர் தம் கைத்தொழில்களுக்கு வேண்டிய உள்ளிடுகைப் பொருள்களுக்கு இறக்குமதிகளிலேயே தங்கியிருக்கவேண்டியிருந்தது. இந்த நிலைமை சில பிரச்சினைகளை உருவாக்கிற்று. உதாரணமாக, மோட்டார் வாகனங்களின் இறக்குமதி தடைசெய்யப்பட்டதனுல் டயர்களின் விற்பனை மிகக் குறைவாகவிருந்தது. இரட்டைச் செலாவணி வீதம், பின்வந்த ஏற்றுமதி ஊக்குவிப்புக் கைத்தொழில் அமைப்பு முறையிலும் பார்க்கக்கூடிய மூலதனச்செறிவு உற்பத்தி அமைப்பு உருவாவதற்கு உதவியது எனக் கூறமுடியாது. உண்மையில் நிலைமை எதிர்மாறாகவிருந்தது என்றே கொள்ளவேண்டியிருக்கிறது. மூலதனப்பொருள்களின் இறக்குமதியை மூலதனச்செறிவு முதலீடுகளுக்குப் பதிலானது எனக் கொண்டால் மூலதனப்பொருள்களின் இறக்குமதி அளவு 1970 - 1977 காலத்தில் 15 சதவீதத்தால் மாத்திரம் கூடியது என்றே கொள்ளுதல்வேண்டும். ஆனுல், உண்மையில் இது 1978-85 காலத்தில் 113 சதவீதத்தால் கூடியது. 1970 -77 காலத்தில் நிலவிய வெளிநாட்டுச் செலாவணிப் பற்ருக்குறையே இதற்குக் காரணமெனக்கொள்ளலாமாயினும், இப்பற்ருக்குறையும். இரட்டைச் செலாவணி வீதமும் மூலதனச் செறிவான நுகர் பொருள்கள், இரண்டு சில்லு ட்ராக்டர்கள், களைகொல்லிகள் போன்ற மூலதன இடைநிலைப் பொருள்கள் ஆகியவற்றைப் பெருமளவில் இறக்குமதி செய்வதனையும் ஓரளவில் மட்டுப்படுத்தின. உதாரணமாக 1970-77 காலத்தில் ''ஏனைய நுகர் பொருள்கள்'' எனப்பட்டவற்றின் (உணவுப்பொருள்கள், குடிவகை, புடவைகள் ஆகியன நீங்கலான) இறக்குமதிகளின் அளவு 9 சதவீதத்தால் அதிகரிக்க, 1978 - 85 காலப்பகுதியில் இது 202 சதவீதத்தால் அதிகரித்தது.

**விலைகள் வருமானங்கள் பற்றிய கொள்கை**

1970 – 77 காலத்து அரசாங்கம் பின்பற்றிய விலைகள், உள்ளபடியான கூலிகள் சம்பந்தமான கொள்கையினுலேற்பட்ட வேலை வாய்ப்பு விளைவுகளைப் பகுப்பாய்வு செய்யும்பொழுது அத்தகைய கொள்கைகள் பண வீக்கத்தையும் வருமானங்களையும் உறுதியான வீதத்தில் இருக்கச் செய்தனவா, மூலதன உருவாக்கத்திற்கு ஊக்கமளித்தனவா என்பவற்றை ஆராய்வது அவசியமாகும். அந்த அரசாங்கம் அரச ஊழியரின் சம்பளங்களை மட்டுப்படுத்திய அதேவேளை குறைந்த கூலிகள் பெறுபவர்களின் கூலி

களைக் கூட்டும் விடயத்திற்கு முன்னுரிமை வழங்கியது. விலைகளும் வருமானமும் பற்றிய இந்த அரசாங்கத்தின் கொள்கை வருமானங்களுக்கிடையிலான வித்தியாசங்களைக் குறைப்பதில் சித்தியடைந்த பொழுதிலும் 1970–77 காலத்தில் விலைகள் உறுதியாகவிருக்கவில்லை; தனியார்துறையில் மூலதன உருவாக்கமும் குறையலாயிற்று. வர்த்தக நியதிகள் சீரழிந்தமையும் வெளிநாட்டுச் செலாவணியின் பற்றுக்குறையும் விலைகளையும் மூலதன உருவாக்கத்தையும் பாதித்தன, மேலும். அரசாங்கம் 1970ல் மேற்கொண்ட கட்டாய சேமிப்புத் திட்டம், சம்பளங்களின் உச்ச வரம்பு, அரசாங்க செலவினங்களில் கண்டிப்பான கட்டுப்பாடு ஆகியன பொருளாதார நடவடிக்கைகளை மேலும் சீரழியச் செய்தன. உண்ணாட்டுச் சேமிப்பும் எதிர்பார்த்தளவு நடைபெறவில்லை.

## முடிவுரை

1977ல் மேற்கொள்ளப்பட்ட தாராளமயப்படுத்தற் கொள்கையின்படி இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவே வேலைவாய்ப்புகள் பெருகியதுடன் பொருளாதார நடவடிக்கைகளும் அதிகரிக்கலாயின. அரசாங்கம் மூலதனச் செலவுத் திட்டங்கள் பலவற்றை மேற்கொண்டது. இதன் விளைவாக வரவுசெலவுத்திட்டத்தில் பற்றுக்குறையேற்பட்டன.

1970 - 85 காலத்தில் தனியார் துறையின் செயற்பாடுகள் திருப்திகரமற்றன்வாயிருந்தமைக்கு அரசாங்கத் துறையிலேற்பட்ட நெருக்கடிகளே காரணம் எனக் கூறமுடியாது. மேலும், தொடர்ச்சியான செலாவணி மதிப்பிறக்கம் போன்ற உறுதியாக்கற் கொள்கை நடைமுறைகள் உற்பத்தி அமைப்பை மூலதனச் செறிவுப் போக்கிலிருந்து மாற்றி தொழிலாளர் செறிவுடையதான அமைப்பாகச் செய்வதில் சித்தியடையவில்லை.

இந்த நோக்கத்திற்கு இரட்டைச் செலாவணிவீதமுறைமோ கூடிய பலனளிக்குமென்பதற்குச் சில சான்றுகளுண்டு. விலைகளும் வருமானங்களும் பற்றிய கொள்கை வேலைவாய்ப்புச் சம்பந்தமாக நற்பயனளிக்கக் கூடியதாயிருக்கும்.

தாராள மயமாக்கும் கொள்கை நியாயமான அளவில் பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது. 1977 ம் ஆண்டின் பின் செயல்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கையை ''**வலதுசாரி -கெய்னீசியக்** கொள்கை'' எனக் கூறலாம். இந்தக் கொள்கையின்படி அரசாங்கமே பொருளாதார விடயங்களில் முக்கிய பங்கெடுத்துக் கொள்ளும். 1978 - 85 காலத்தில் பின்பற்றப்பட்ட அபிவிருத்தி உபாயம் முந்தியவற்றிலிருந்து அதிகம் வேறுபட்டது எனக் கூற முடியாது; வெளிநாட்டு உதவித் தொகைகளில் மாத்திரம் வேறுபாடுகளுண்டு.

வருங்காலத்தில் வளர்ந்து வரும் தொழிலாளரின் எண்ணிக்கைக்கு ஏற்ப உண்ணாட்டில் வேலைவாய்ப்புகள் இல்லாமலிருக்கலாம். தொழிலாளர் வேறு நாடுகளுக்குக் குடிபெயர முடியாத நிலைமை ஏற்படுவதுடன் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றவர்கள் திரும்பிவரும் நிலைமையுமுண்டு. இப்பொழுது நிலவும் வேலையின்மை வீதத்தை அதே மட்டத்தில் வைத்திருக்க வேண்டுமாயின் மொத்த உண்ணாட்டு உற்பத்திக்கெனச் செய்யப்படும் முதலீடுகள் அதேமட்டத்திலிருத்தல் வேண்டும். பொருளாதார வளர்ச்சியும் வேலைவாய்ப்புமேற்படுத்துவதற்குத் தனியார் துறைக்கு நியாயமான வாய்ப்பளிக்கப்பட்டபொழுதிலும் அத்துறையினரின் செயற்பாடு இன்றுவரை போதியதாகவில்லை. இப்பொழுதுள்ள நிலையில்லாத சர்வதேச சூழ்நிலையிலும் இந்நாட்டில் நிலவும் அமைதியின்மை காரணமாகவும் தனியார் துறையின் ஈடுபாடுகள் (முக்கியமாக முதலீட்டு நடவடிக்கைகள்) நியாயமான அளவில் வருங்காலத்தில் விரிவடையுமெனக் கருதமுடியாது. அரசாங்கத்துறை திறமையற்றது என்பதை மறுக்க முடியாது. இதனை ஈடுசெய்யக் கூடிய தனியார் துறையிருக்கிறது எனக் கூறவும் முடியாது. 1987-89 உறுதிப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின்படியான இப்பொழுதுள்ள கொள்கை அடிப்படையில், அரசாங்கம் முதலீடு செய்வதனைக் குறைத்து ''கூடிய நிலையான வளர்ச்சி'' ஏற்படச் செய்வது சந்தேகத்துக்கிடமான விடயமாகும். நாட்டின் உற்பத்தி அத்திவாரம் அரிக்கப்பட்டு வருகிறது; இதற்குப் பதிலாக எதுவுமிருப்பதாகத் தெரியவில்லை.

நிதிநிலைமைகளை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைகள் அதிக செலவுக்கு இடமளிக்காதன எனக் கொள்ள முடியாது. இதனை உலக வங்கியும் அங்கீகரித்துள்ளதாகத் தெரிகிறது. உலக வங்கி 1986 ம் ஆண்டுக்குரிய அதன் பொருளாதார அறிக்கையில் பின்வருமாறு கூறுகிறது; ''இந்தச் சீர் செய்யும் நடவடிக்கையை வளர்ச்சி நடைமுறை குழம்பாமலும், பொருளாதாரம் பின்னடையாமலுமிருக்கக் கூடியவாறு மேற்கொள்ள முடியுமாவென்பது தெளிவாகவில்லை''. மேலும், விதந்துரைக்கப்பட்ட ''குறுகியகால'' உறுதியாக்கல் நடவடிக்கைகள் பொருளாதாரத்தின் உற்பத்தி அமைப்பை நீண்டகாலம்வரை பாதிப்பதாகவிருக்குமெனவும் தெரிகிறது.

ஆக, பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதற்கு உறுதியானதும், விவேகபூர்வமானதுமான கொள்கை நடவடிக்கைத் தொகுதியொன்று பின்பற்றப்படுதல் வேண்டும். சமூக கொந்தளிப்புக்களைத் தணிக்கும் விஷயத்தில், வேலைவாய்ப்புக்களின் உருவாக்கம் ஒரு முக்கிய பங்கினை வகிக்க முடியும்.

# வாட்டி வதைக்கும் வெள்ளப்பெருக்கு

வங்கதேசத்தில் கடும் வெள்ளப் பெருக்கால் இலட்சக்கணக்கானோர் வீடிழந்தோ அல்லது பட்டினியால் வாடி வதங்கியோ தவிக்கையில் 1000 த்துக்கும் அதிகமானோர் 1987 ல் இறந்தொழிந்தனர். வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்தால் எதுவுமே செய்யமுடியாத நிலை. 90% அளவிலான வெள்ள நீர் அயல் நாடுகளிலிருந்தே பாய்கின்றது; அயல் நாடுகளில் காடழிப்பும், மண்வள அரிப்பும் வங்கதேசத்துப் பிரதான ஆறுகளில் மண்ணும், சேறும் சென்று சேர வழிவகுக்கையில் அவற்றை அகற்றுவதற்கேற்ற உபகரணங்களோ, ஆற்றலோ வங்கதேசத்திடம் இல்லை. இதனால், 25 லட்சம் மக்களது வீடுகள், தோட்டம் துரவுகள் எல்லாமே நீரில் மூழ்கி விடுவதுடன், குடிநீரும் அசுத்தமாக்கப்பட்டு நோய்களும் பரவுகின்றன. இந்த வெள்ளப்பெருக்குகள், நாட்டின் 65 மாவட்டங்களில் 50 மாவ்ட்டங்களை வாட்டி வதைக்கின்றன.

ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகள் அழித்தொழிக்கப்பட்ட நிலையில், அதே அளவு வீடுகள் சேதமடைந்துள்ளன. பல்லாயிரக்கணக்கான ஆடு மாடுகள் நீரில் மூழ்கின; எத்தனையோ ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டவை எல்லாமே நீரால் அடித்துச் செல்லப்பட்டதால் 20 இலட்சம் தொன் தானியங்கள் அறுவடை செய்யப்படவில்லை. கிராமியக் கைத்தொழில்கள் பலவும், விவசாயத்திட்டங்களும் மூச்செடுக்க முடியவே இல்லை.

கங்கை, பிரம்மபுத்திரா போன்ற மாபெரும் நதிகளின் பள்ளத்தாக்கில் இப்பேர்ப்பட்ட வெள்ளப் பெருக்குகள் ஏற்படுவது சாதாரண நிகழ்வே. 1954ம் ஆண்டு தொடக்கம் பாரிய அளவில் நான்கு ஆண்டுகளுக்கொரு முறை வெள்ளப் பெருக்கேற்பட்டு, நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கின்றது. ஆனால், இவை எல்லாம் வங்கதேசத்தின் கட்டுப்பாட்டுக்கப் பாற்பட்டதாய்விட்டது. இமாலயப் பிரதேசத்தில் வருடாவருடம் நடைபெறும் காடழிப்பினால் மண் அரிப்பு ஏற்பட, அவை எல்லாம் வங்கதேச ஆற்று மடியில் வண்டலாய் வந்துறைகின்றன. ஒவ்வொரு வருடமும் இவ்வாறாக 2.4 மில்லியன் தொன் மண் அடைசல்கள் வந்தடைகின்றன. உரிய முறையில் இவை அகற்றப்படாததாலேயே வெள்ளம் வங்கதேசத்தில் அடிக்கடி ஆறாய்ப் பெருக்கெடுக்கின்றது. இது மட்டுமல்லாது, இந்தியா, திபெத்து, பூட்டான் போன்ற நாடுகளில் விரிந்து பரந்து இருக்கும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நீர் ஏந்தும் பகுதிகளிலிருந்து கிடைக்கும் நீர் கூட வங்கதேசத்து கங்கை பிரம்மபுத்ரா நதிகளினூடாகவே பெருக்கெடுக்கின்றன. வங்கதேசத்தில் பெருக்கெடுக்கும் நீரில் 10% மானதே அந்தநாட்டு மழை வீழ்ச்சியிலிருந்து கிடைக்கின்றது. மிகுதி அயல் நாடுகளிலிருந்தே வருகின்றது. கடந்த 30 வருடகாலமாக நீர்வளசபை, வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தவும் வடிகால் அமைக்கவும் எடுத்த முயற்சிகளெல்லாம் பாரிய பலன் எதையும் தரவில்லை.

ஆறுகளில் நீர் கொள்அளவைக் கட்டுவதற்கு அவற்றை முறையாகச் அரியெடுத்துத் துப்பரவு செய்தல் வேண்டும். 1980ம் ஆண்டு இம் முயற்சி தக்க பலனளித்தும், 1982 ம் ஆண்டின் பின் இந்த நல்ல முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளன. இன்று வெள்ளம் குறைந்து, நோய்கள் கூடிக்கொண்டிருக்கும் நிலை; 2500 க்கும் அதிகமான வைத்தியக் குழுக்கள் நாட்டின் பல பாகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளபோதும், தூர இடங்கள் பலவற்றிற்கு இன்னும் வைத்திய வசதிகள் கிடைக்கவில்லை. வெள்ளநிலைமைகாரணமாக மட்டும் நாளாந்தம் 12000 பேர் வரை நோய்வாய்ப்படுகையில் நாளொன்றிற்கு 25 பேர் இறக்கின்றார்கள். கொதித்தாறிய நீர் குடிப்பவர்கள் கூட வயிற்றோட்ட நோயால் பாதிப்படையுமளவுக்கு குடி நீர் வாரியத்தினால் வழங்கப்படும் நீரே வெள்ள நாட்களில் பாதிப்படைகின்றது என்ற கருத்தும் நிலவுகின்றது. இதனால் வயிற்றோட்டம், வயிற்றுக்கடுப்புப் போன்ற வியாதிகள் நாடளாவிய ரீதியில் தாண்டவமாடுகின்றன. கடந்த வருடம் செப்டம்பர் மாதம் வரை 350,000 க்கும் அதிகமானவர்கள் இப்பேற்பட்ட நோய்களினால் இறந்தனர்; இந்தப் பிரேதங்களில் பல வெள்ள நிலைமைகாரணமாக அடக்கம் செய்யப்படாமையினால் சுகாதார நிலைமைகள் மேலும் மோசமடைந்துள்ளன.

வங்கதேசத்தில் ஆழம் குறைந்த குழாய்க்கிணறுகளிலிருந்து சுத்தமான குடிநீரைப்பெற முடியாதநிலை; ஆகக்குறைந்தது 150,000 குழாய்க்கிணறுகள் முற்றுமுழுதாக நீரில் மூழ்கியிருக்கையில், 50,000 கிணறுகள் செயலிழந்த நிலையிலுள்ளன. நாடு பூராவும் தோண்டப்பட்ட ஒரு இலட்சம் கிணறுகளில் 40 வீதமானவை தனியாருக்குச் சொந்தமானவை. இவர்களால் அவற்றைத் திருத்தி எடுக்கவே முடியாது. பழுதடைந்து போன குழாய்க் கிணறுகளைச் சரிசெய்வதற்காக குழந்தைகள் பாதுகாப்பிற்கான ஐக்கிய நாடுகள் நிதியத்திலிருந்து 300,000 டொலர்கள் பெறுமதியான உதவி கோரப்பட்டுள்ளது.

இமாலயப்பிரதேச சோலைவள அழிப்பு, மண்வள இழப்புப் போன்றவற்றால் ஏற்படும் வெள்ளப் பெருக்குகளைத் தடுப்பதற்கோ, குறைப்பதற்கோ ஏதாவது செய்யவே வேண்டும். வடக்கில், நேப்பாள இமாலயப் பிர

( 63–ம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் பாற்பண்ணைக் கைத்தொழிலும் பால் உற்பத்தியும்

எம். எச். குணரத்ன

1987 வரையான பத்தாண்டுகளில் பண்ணைத் துறையில் பல முக்கிய கொள்கை மாற்றங்கள் நிகழ்ந்தன. உள்நாட்டு உற்பத்தி மட்டங்களை உயர்த்துவதே இதன் நோக்கம். கால் நடை வளர்ப்போர்க்கு உள்ளிடுகைகள் உடனடியாகக் கிடைக்கக் கூடியதாகச் செய்வதன் மூலமும் கால் நடை உற்பத்திப் பொருட்களுக்கு உடனடிச் சந்தை வசதிகள் செய்ய உறுதியளிப்பதன் மூலமும் புதுக் கொள்கைகள் செயல்படுத்தப்பட்டன.

பண்ணை நடாத்தல் முக்கியமாக இரு படிமுறைகளைக் கொண்டது: முதலாவது, பால் தரும் கட்டம் வரை மாடுகளை உணவூட்டி வளர்த்தல்; இது பால் உற்பத்திச் செயல்முறையில் 70 சதவீதத்தை உள்ளடக்குகிறது. மிகுதி 30% பால் சேகரித்தல், பதனிடல், போத்தலில் அடைத்தல், பெட்டிகளில் அடைத்து அளித்தல், சந்தைப்படுத்தல், விநியோகித்தல் என்பவற்றைக் கொண்டதாகும். இரண்டாவது கட்டத்தில் பண்ணைப் பொருளாதாரம் மிக முக்கியமான பங்கை வகிக்கிறது.

உள்நாட்டுப் பால் உற்பத்தி பற்றிக் கிடைக்கக் கூடியதாவுள்ள புள்ளி விவரங்கள் செம்மையானவையாக இல்லை. உற்பத்தி அல்லது நுகர்வு தொடர்பான மதிப்பீடுகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. மதிப்பிட்ட உற்பத்தி நாளொன்றுக்கு 400,000 மில்லி லீட்டர்கள் எனவும், பால் தரக்கூடிய விலங்குகளிலிருந்து பெறக் கூடிய பால் வளத்தின் மதிப்பீடு 700,000 மி. லீ. எனவும் அளவைகள் காட்டுகின்றன.

உற்பத்தி செய்யப்படும் பாலில் ஏறக்குறைய 40% வறண்ட வலயத்தில் கிடைப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், இது அப்பிரதேசத்தின் உற்பத்தி வளத்துக்கு ஏற்றதல்ல. நாட்டின் 70% மான கால் நடைகள் இப்பிரதேசத்திலேயே காணப்படுகின்றன. ஈர வலயத்தில் (மலைநாடு) உற்பத்தியில் 25 சதவீதத்தை நல்குகின்றது. தாழ்ந்த பிரதேச ஈரப்பகுதியில் 10% பால் உற்பத்தியாகின்றது. மீதி இடைநிலை வலயத்தில் உற்பத்தியாகிறது. (தென்னை முக்கோணம் 10%; மற்ற இடைநிலை வலயம் 15%).

அபிவிருத்தியடையும் நாடுகள் பலவற்றில் நிகழ்வது போல, உற்பத்தி செய்யப்படும் பாலிற் பெரும் பகுதி உற்பத்தி செய்யும் குடும்பங்களாலேயே நுகரப்படுகிறது. மிச்ச சொச்சம் தரகர்கள் மூலம் உள்ளூர்ச் சந்தையை அடைகிறது. சில மதிப்பீடுகளின் பிரகாரம் நாளொன்றுக்கு மொத்தம் 500,000 மி.லீ. உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் 70% (350,000 மி. லீ.) வீடுகளிலேயே நுகரப்படுகிறது; அல்லது உள்ளூர்ச் சந்தையில் செல்வாகிறது. மிகுதி 30% அதற்கென அமைக்கப்பட்ட நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்படுகிறது. தேசிய பால் சபை ஒரு அரசாங்கக் கம்பெனியாக மாற்றப்பட்டபொழுது (மில்கோ) அதன் பொறித்தொகுதி உற்பத்தித்திறன் நாளொன்றுக்கு 450,000 மி. லீட்டராகும். அதன் நான்கு பொறித் தொகுதிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன. இப்பொறித் தொகுதிகளில் பாஸ்சர் செய்யப்பட்டபால், கிருமியொழிக்கப்பட்டபால், பால்மா என்பனவும் வெண்ணெய், சீஸ், ஐஸ்கிறீம் போன்றவையும் உற்பத்தி செய்வதற்காகப் பால் பதனிடப்படுகிறது. இவற்றின் உற்பத்தித் திறனுக்குத் துணையாக அண்மையில் ஒரு சர்வதேசக் கம்பெனியால் பண்ணை உற்பத்திப் பொருள் பதனிடும் பொறித் தொகுதி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இதன் உற்பத்தித்திறன் நாளொன்றுக்கு 300,000 மி. லீ. ஆகும்.

குறிப்பாக பால் உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு பால் உற்பத்தி செய்வோருக்கும், பால் சேகரிப்பீதற்கும் அரசாங்கம் மானியம் வழங்கியது. இத்திட்டத்தின் பல்வேறு குறைபாடுகளின் காரணமாகப் பெறுபேறுகள் தொடர்ந்து எதிர்பார்த்ததைவிடக் குறைவாகவே இருந்தன. உலக வங்கி, “சென்ற காலக் கொள்கை குறிக்கோள்களில், உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு அவசியமான தூண்டுகோள்களுக்குப் பதில் குறைந்த விலையில் நுகர்வோருக்குப் பால் வழங்கும் நோக்கத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது'' என்ற பிரச்சினையைக் கிளப்பியது. ஊக்கப்பாடுகளிலும் நிறுவன அமைப்பிலும் சில முக்கிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென உலக வங்கி பாற்பண்ணை அறிக்கையொன்று வலியுறுத்தியது. உலக வங்கி அதன் யோசனைகள் பற்றிய அறிக்கையில், “உற்பத்தியாளரதும், நுகர்வோரதும் பால் விலையை ஏறவிட்டு அரசாங்கம் தேசிய பால் சபைக்கும் பால் இறக்குமதி செய்வதற்குப் பொறுப்பான கூட்டுறவு மொத்த வியாபாரத் தாபனத்துக்குமான மானியத்தைக் குறைத்துள்ளது. தேசிய பால் சபையை ஒழித்துவிட்டு அதனிடத்தில் முக்கியமாக பால் பண்ணைகளுக்குச் சொந்தமானதான ஒரு அமைப்பினை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது.''

1973 முதல் 1985 வரையிலான 12 ஆண்டுகளில் பாற்பண்

ணைக் கைத்தொழிலுக்காக அரசாங்கம் 100 கோடி ரூபாவுக்கு மேல் செலவிட்டுள்ளது; இக்காலப் பிரிவில் அரசாங்கம் பால் சபைக்கு உதவிய மூலதனத் தொகை ஏறத்தாழ 20 கோடி ரூபாவாகும்; அதேவேளை பல்வேறு மானியங்களுக்கும் பாற்பண்ணை அபிவிருத்திச் செலவுகளுக்குமாக 75 கோடி ரூபா செலவிடப்பட்டது. துணைச் சேவைகளுக்காகவும் அரசாங்கம் பணஞ் செலவிட்டுள்ளது. இவ்வாறு பணஞ் செலவிடப்பட்டுங் கூட பால் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படவில்லை. இக்காலப் பிரிவு முழுவதிலும் பால்சேகரிப்பு ஏறத்தாழ 60 கோடி லீட்டர் வரையிலேயே நடைபெற்றது.

தனியார்மயமாக்கும் கொள்கை 1980ல் அறிமுகப்படுத்தப்பட்டது. பொலநறுவையிலிருந்த கட்டிப்பால் தொழிற்சாலை, நெஸ்லேயினதும் தேசியப் பால் சபையினதும் ஒரு கூட்டு முயற்சியாக மாற்றியமைக்கப்பட்டது. நாளொன்றுக்கு 180,000 லீட்டர் பால் பதனிடத்தக்க உற்பத்தித்திறன் கொண்ட பாரிய பதனிடல் பொறித்தொகுதி நெஸ்லேயினால் குருணாகலையில் ஆரம்பிக்கப்பட்டது. இத்தொழிற்சாலைகள் இப்பிரதேசங்களின் பாலுற்பத்தியில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தின.

உலக வங்கியின் கூட்டுப் பண்ணை நிதியிடல் அபிவிருத்தித் திட்டம் ii அமுல் செய்யப்பட்டதோடு பிரதான நிறுவனமாற்றம் இடம் பெற்றது. இத்திட்டம், ஒரு நான்கு அடுக்குகளைக் கொண்ட ஒன்றிணைந்த அமைப்பினைத் தோற்றுவிப்பதை கருவாகக் கொண்டிருந்தது. அந்நான்கு அடுக்குகளாவன:

1. ஒரு பண்ணை அபிவிருத்தி நிறுவனம்
2. இலங்கைப் பாற் கைத்தொழில் கம்பெனி (மில்கோ)
3. பால் கொட்டில் உற்பத்திக் கம்பெனிகள் (எம். பி. சி.)
4. கிராமிய பால் உற்பத்தியாளர்

மில்கோ தாபனமானது பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஒரு கம்பெனியாகும். (இதன் பங்குகளில் 40% பால் உற்பத்தியாளர்களுக்கும் 51% பொதுமக்களுக்கும் சொந்தமாகும்.) இக்கம்பெனி, தேசிய பால் சபைக்குச் சொந்தமான பண்ணைப் பொறித் தொகுதிகளைக் குத்தகைக்குப் பெற்று இயக்கும்.

மில்கோ தொழிற்பட ஆரம்பித்தபோது பால் கைத்தொழிலை சூழ்ந்திருந்த பின்வரும் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

அட்டவணை 1

பால் சேகரிப்பு, மானியக்கொடுப்பனவுகள் மற்றும் விலைகள்

| | 1975 | 1976 | 1978 | 1979 | 1980 | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பால் சேகரிப்பு (பத்து இலட்சம் லீட்டர்) | 43 | 54 | 49 | 62 | 61 | 55 | 54 | 57 | 67 | 67 |
| வழங்கப்பட்ட மானியம் (பத்து இலட்சம் ரூபா) | 88 | 86 | 54 | 54 | 53 | 46 | 25 | 25 | 32 | 35 |
| மானியம் (ரூபா/லீட்டர்) | 2.04 | 1.59 | 1.10 | 0.87 | 0.86 | 0.83 | 0.46 | 0.43 | 0.47 | 0.52 |
| உற்பத்தியாளருக்கு வழங்கப்பட்ட விலை (ரூபா/லீட்டர்) | 1.05 | 1.05 | 1.60 | 2.20 | 2.20 | 2.80 | 3.80 | 3.96 | 4.30 | 4.30 |
| திறந்த சந்தை விலை (ரூபா/லீட்டர்) | 2.62 | 2.62 | 2.88 | 3.49 | 4.24 | 4.65 | 4.66 | 5.62 | 5.93 | 6.00 |

(i) பால் சேகரிப்பை அதிகரிப்பது எவ்வாறு. 1975-85 ஆம் ஆண்டுகளுக்கிடையே ஏறத்தாழ 5 கோடி லீட்டர் சேகரிக்கப்பட்டது.

(ii) உற்பத்தி செய்யப்படும் பாலில் பெரும் பகுதி (65%) பதனிடும் தொழிற்சாலையை அடைவதில்லை. இதற்குக் காரணம் குறைபாடுள்ள சேகரிப்பு முறைகளும் போதிய போக்குவரத்து வசதி இன்மையும் ஆகும்.

(iii) உற்பத்தியைப் பெருக்குவதற்கு அவசியமான ஊக்கப்பாடு உற்பத்தியாளருக்கு அளிக்கப்படுவதில்லை.

(iv) கறவைப் பசுக்களின் எண்ணிக்கை குறைந்தமை. பிறவகைப் பசுக்களின் எண்ணிக்கை 1976ல் 579,500ல் இருந்து 1983ல் 474,200 ஆகக் குறைந்தது. சென்ற இரு தசாப்தங்களில் கால்நடை, எருமைகளின் எண்ணிக்கை முறையே ஏழு, எட்டு சதவீதம் குறைந்தது.

(v) உயர் இனப்பசுக்கள் கிரமமாக இறக்குமதி செய்யப்பட்டும், வேறு சினையூட்டல், வளர்ப்புத் திட்டங்கள் பல்லாண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டும் உயர் இனப் பசுக்களினதும் கலப்பினப் பசுக்களதும் எண்ணிக்கை தொடர்ந்தும் குறைவானதாகவே இருந்து வருகிறது.

(vi) மலிவான பால்மா இறக்குமதி செய்யப்படுதல். சிலநாடுகள் கழிவு என்ற வகையில் 50-60 சதவீத உதவிப்பணம் வழங்குகின்றன. இதனோடு போட்டியிட இயலாததனால் உள்நாட்டு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

(vii) சமீப காலம்வரை இறக்குமதி சுங்கவரிக்கு 15% சலுகை அளிக்கப்பட்டிருந்தது.

(viii) 1981ல் ஆண்டொன்றுக்கு தலைக்கு 11.59 கிலோ கிராமாக இருந்த பசுப்பால் நுகர்வு

1983 ல் 11.31 கி. கிராமாக குறைந்தது. (மற்றெரு மதிப்பீடு 1986 ல் பசுப்பால் நுகர்வு 1.68 கி. கி. ஆகவும் பால்மா நுகர்வு 1.78 கி. கி. ஆக இருந்ததாகவும் கூறுகிறது.) ஆசியாவிலுள்ள அண்டை நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் பால் அருந்தல் மிகக் குறைவாகும்.

(ix) பள்ளிப் பிள்ளைகளிடையே என்றும் அதிகரித்து வரும் போசாக்கின்மை. பாடசாலைப் பிள்ளைகளில் 30 - 40 சதவீதமானேர் போசாக்குக் குறைவினுல் பாதிக்கப்பட்டிருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது.

உள்நாட்டுப் பால் உற்பத்திக்கும் தேவைக்குமிடையிலான இடைவெளியை நிரப்புவதற்கு மலிவான பால் இறக்குமதி அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும்; உற்பத்தி பாதிக்கப்படாதிருக்கும் பொருட்டு மானியம் ஒன்று வழங்கப்படுகிறது. உதவிப் பணம் சேகரிக்கப்பட்ட ஒரு லீட்டர் பாலின் 50 சதவீதமாகும்; அல்லது 21 ரூபாவாகும்.

பாற்பண்ணைக் கைத்தொழிலை எதிர்நோக்கும் பிரச்சினைகளின் பின்னணியில் அரசாங்கக் கொள்கையின் முக்கிய அழுத்தம் பால் உற்பத்திக்கும் விற்பனைக்கும் மானியம் வழங்கப்பட்டமையாகும். ஆனல் தீர்க்கப்பட எதிர்பார்க்கப்பட்ட பிரச்சினைகள் தொடர்வதையே பெறுபேறுகள் காட்டுகின்றன.

இத்துறைக்கு உலக வங்கியின் உதவியை அரசாங்கம் பல்லாண்டுகளாக எதிர்பார்த்தது. எவ்வாருயினும், பாற்பண்ணை அபிவிருத்திக்கு பன்னுட்டு இரு நாட்டு உதவியும் வழங்கப்பட்டன. நடைபெற்றுவரும் சில திட்டங்களுமுண்டு. பாற்பண்ணை விருத்திக்கான இரண்டாவது திட்டம் - 1985 அக்டோபர் 10 முதல் 1987 டிசெம்பர் 31 வரை - என்ற பெயரில் இலங்கைக்கும் சர்வதேச புனர் நிர்மாண, அபிவிருத்தி வங்கிக்கும் இடையிற் செய்யப்பட்ட ஒப்பந்தம் முக்கியமானதாகும்.

எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் கிடைப்பது தாமதமாகியதனுல் திட்டம் பயனுள்ளதாக அமையவில்லை என்ற காரணத்தின் மீது வங்கி இவ்வொப்பந்தத்தை இரத்துச் செய்தது. இவ்வொப்பந்தம் பற்றி முன்னையவற்றை விடச் சிறந்த நிபந்தனைகளின் அடிப்படையில் மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடத்தலாம் என்று கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு கருதுகிறது. உலக வங்கி அளித்த நிதியுதவி மீளப் பெறப்பட்டதனுல் இத்துறையில் அக்கறை கொண்டிருந்த பலரிடையே தயக்கத்தை ஏற்படுத்தியிருப்பினும் புது நிதியளிப்புத் திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

எனவே, வங்கி ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டதற்கான காரணங்களை ஆராய்தல் அவசிய மாகும். சென்ற காலத்தில் ஆராய்ச்சி நடாத்திய பலர், பால் சபை வண்டிகள் கட்டுப்படியாகாத பால் சேகரிப்புப் பயணங்களைத் தொடர்ந்தமை, போதியளவு பால் கிடைக்காமை, கரடுமுரடான பாதைகள், அதிக செலவை ஏற்படுத்தும் பாதைகளில் குளிரூட்டும் சாதனங்கள் அமைக்கப்பட்டிருந்தமை போன்றவற்றுக்குக் கவனத்தை ஈர்த்திருந்தனர். எனினும், மில்கோ, பால்சேகரிப்பு முறைகளை விருத்தி செய்வதற்குச் சில நடவடிக்கைகள் எடுத்துள்ளது. கட்டுப்படியாகாத பாதைகளில் அமைக்கப்பட்டிருந்த குளிரூட்டும் சாதனங்கள் மூடப்பட்டு, இலாபகரமான அளவு பாலை ஏற்றிச் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எவ்வாருயினும், கிராமங்களிலிருந்து கமக்காரர்கள் பாலை கொணர்ந்து ஒப்படைப்பதிலும் பால் சேகரிப்பு நிலையங்களை ஏற்படுத்துவதிலும் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மில்கோ வழிகாண வேண்டும். கமக்காரர்களுக்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள உள்ளமைப்பு வசதிகளைத் திருத்துவதற்கு நிதி ஒதுக்கப்பட வேண்டும். உலக வங்கி உதவி நிறுத்தப்பட்டதோடு மேலும் உதவியளிப்பது மட்டுப்படுத்தப்படலாம். கூடுதலாகப் பால் சேகரிக்கப்பட்டால் இறக்குமதியை நிறுத்தலாம்.

சேகரிக்கப்படும் பாலின் அளவுக்கும் இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் அளவுக்கும் இடையிலுள்ள இடைவெளி அதிகரித்து வருகிறது. நாடு ஏற்றுக்கொள்ளத்தக்க சிறந்த தீர்வு பால் சேகரிப்பை அதிகரித்து இறக்குமதியைக் குறைப்பதாகும். இவ்விரு நோக்கங்களையும் அடைவதற்கு உலக வங்கி பின்பற்றும் கொள்கை, உற்பத்தியாளருக்கு வழங்கும் உதவிப் பணத்தை நிறுத்தி இறக்குமதி செய்யப்படும் பாலுக்கான சுங்கத் தீர்வையை 15 சதவீதத்திலிருந்து 30% ஆகக் கூட்டுவதாகும். பால் சேகரிப்பு நிலையங்களும் பதனிடும் பொறித்

( 65 —ம் பக்கம் பார்க்க)

அட்டவணை 2

பாலுணவு இறக்குமதிகள்

| வருடம் | அளவு (கி.கி.) | பெறுமதி (ரூபா) |
|---|---|---|
| 1980 | 5,387,547 | 160,352,163 |
| 1982 | 10,939,223 | 426,197,255 |
| 1983 | 23,670,665 | 758,375,391 |
| 1986 (மதிப்பீடு) | 26,000,000 | 800,000,000 |
| 1987 (மதிப்பீடு) | 30,000,000 | 1,100,000,000 |

# அபிவிருத்தி பற்றிய சர்ச்சை

## இந்தியாவின் தேசிய பண்ணை அபிவிருத்திச்சபை

பி. எஸ். பவிஸ்கார்
சாந்தி ஜோர்ஜ்

அபிவிருத்தித் திட்டங்கள், அரசியல் சமுதாயத்திற்கு புத்துணர்ச்சியும் புதுத்தெம்பும் ஊட்டுவதை நோக்கமாகக் கொண்டிருப்பின், இச்செயற்பாடுகளைத் தூண்டி, துரிதப்படுத்தி, மும்முரப்படுத்துவதன் மூலம் சர்ச்சையானது முக்கிய பங்கினை வகிக்கலாம்.

பகிரங்க சர்ச்சையானது, அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபட்டுள்ள அமைப்புகள் மீது சந்தேக நிழலைப் பதிக்கின்றன என்பது பொதுவானதோர் ஊகம். ஊழல், உறவினர்க்குக் காட்டும் ஆதரவு; வளங்களை கையாடல் செய்தல் அல்லது இவைதொடர்பான குற்றச்சாட்டுகள் என்பவற்றிலிருந்தேஅடிக்கடி சர்ச்சைகள் எழுகின்றன. ஆனால் சர்ச்சைகளுக்கு நேரடிக் காரணங்களும் ஏதுவாக அமையலாம். ஏனெனில் சர்ச்சை, முக்கியமான விடயங்களில் பொதுமக்கள் செலுத்தும் கவனத்தையோ, அபிவிருத்தியில் பொதுமக்கள் ஈடுபாட்டை அல்லது அபிவிருத்திப் பிரச்சினைகள் பற்றிய விவாதங்களில் பொதுமக்கள் பங்கினையே பிரதிபலிக்கலாம். இத்தகைய பங்கைப்பொறுத்த அளவில்தான் நாம் சர்ச்சையை இயக்குநீருக்கு ஒப்பிடுகின்றோம். எத்தகைய சர்ச்சையையும் ஏற்படுத்தாத ஓர் அபிவிருத்தித் திட்டம், சந்தேகக் கண்ணோடு நோக்கப்பட வேண்டும். ஏனெனில் அது புதியனவற்றை உள்ளடக்காத, புதுத்துறைகளில் அடியெடுத்து வைக்காத, கடினமான பிரச்சினைகளைத் தீர்க்க முயலாத ஒரு திட்டமாக இருக்கலாம். சர்ச்சைபற்றிய இந்த அர்த்தத்தின் மீதே இவ்வாய்வுக் கட்டுரையில் கவனஞ் செலுத்துவோம்.

அவ்வாறு கவனம் செலுத்துகையில் தேசிய பண்ணை, அபிவிருத்திச் சபையைவிட சிறந்ததோர் அமைப்பினை நாம் இந்தியாவைப்பொறுத்தமட்டில்உதாரணத்துக்குத் தெரிவு செய்துகொள்ள இயலாது. இது வெள்ளப் பெருக்கத்திட்டத்தைவகுத்துச்செயல்படுத்துகிறது. உரோம் அபிவிருத்திக் குழுகூட அதன் கடுமையான விமர்சனத்தில் வெ. பெ. திட்டந்தான் உலகிலேயே கற்பனைமிக்க, புதினமான பாற்பண்ணை அபிவிருத்தித் திட்டம் என்பதனை ஏற்றுக்கொண்டுள்ளது. வெ.பெ. திட்டமானது வியக்கத்தக்களவு துணிச்சல்மிக்கதும் அளவில்பெரியதும், கடினமான பிரச்சினைகளைத் தீர்க்க முயல்வதுமாகும். இத்திட்டம் தோற்றுவித்துள்ள விரிவானதும் இடையறாததுமான சர்ச்சையை, தேசிய பாற்பண்ணை அபிவிருத்திச் சபைக்குரிய ஒரு பாராட்டாகக் கொள்ளலாம்.

எவ்வாறாயினும், அமைப்பானது சர்ச்சைகளைத் தோற்றுவித்தால் மட்டும் போதாது, சர்ச்சையை எவ்வாறு ஏற்றுக்கொள்வது, கையாள்வது என்பதும் மிக முக்கியமானதாகும். ஏனெனில் சிறந்ததொரு சர்ச்சையும் தவறாகக் கையாளப்படுமிடத்து அதன் விளைவுகள் சம்பந்தப்பட்ட அமைப்புக்கு அல்லது சமுதாயத்திற்கு அல்லது இரண்டிற்கும் நன்மை பயப்பதாக இருக்கமாட்டா. எனவே அத்தகைய சர்ச்சைக்கு ஏதுவாக அமைந்த அமைப்பு எவ்வாறு நடந்துகொள்கிறது என்பதை நாம் நுணுகி ஆராய்தல் வேண்டும். அவ்வளவு ஆக்கமுறையாக நடந்து சர்ச்சைப் புயலிலிருந்து மீள்கின்றதா? பகிரங்க விவாதத்துக்கு உற்சாகமூட்டி அதற்கமைய தனது திட்டத்தைத் திருத்தியமைக்க கற்றுக்கொள்வதற்குத் தயாராகவுள்ளதா? மறுபுறம் அவ்வமைப்பு தன்னுள்ளேயே அடங்கிவிடுகிறதா அல்லது விமர்சகர்கள் மீது சீறிப்பாய்கிறதா? அதுதொடர்புக்குரியவழிகளை அடைத்துவிடுகிறதா, அல்லது தவறான தகவல்களைத் தருகிறதா? சர்ச்சையைத் தவிர்ப்பதற்கு பல உபாயங்களைக் கையாளலாம். இக்கட்டுரையில் நாம் எடுத்துக்காட்டவுள்ள குறிப்பிட்ட உபாயத்தை நாம் "பக்கம் மாற்றத்தக்க உடையணிதல்" என அழைப்போம்.

### அமைப்பும் அதன் திட்டமும்

1965ல் குஜராத் மாநில ஆனந்த் எனுமிடத்தில் தாபிக்கப்பட்ட பாற்பண்ணை அபிவிருத்திச்சபை, சர்ச்சைகளில் பிறந்ததல்ல, அது பிறக்கக் காரணமாக இருந்த நிறுவனமும் அக்காலத்தில் சர்ச்சைக்குரியதாக இருக்கவில்லை. ஆனந்த் நகரை மையமாகக் கொண்ட கெதா மாவட்டம் (முன்னைய 'கைரா') இந்தியாவின் குறிப்பிடத்தக்க பால் தரும் பகுதியாகும். கெதா இயற்கை வளம் நிறைந்ததாக இருந்தமையால் அதிக பால் தரும் எருமைகளுக்குத் தீனியாகக் கொடுக்சத்தக்கதாக விவசாயப் டயிர்க் சழிவுகள் பெருமளவில் கிடைத்தன. மேலதிகமாகக் கிடைக்கும் பாலில் ஒருபகுதி பாரம்பரியமாக தூரத்துச் சந்தைகளில் விற்கும் பொருட்டு பல நூற்றாண்டு காலமாக நெய்யாக மாற்றப்பட்டு வந்தது. இருபதாம் நூற்றாண்டுத்தொடக்கஅளவில் இப்பாலில் ஒரு பகுதி மேல்நாட்டு டண்ணைப் பொருட்கள் செய்வதற்காக, குறிப்பாக பம்பாயைச் சேர்ந்த கைத்தொழில் அதிபர் ஒருவரால் ஆனந்த் நகரில் தயாரிக்கப்பட்ட பொல்சன் டண்ணையினால் பயன்படுத்தப்பட்டது. ஆனந்த் நகரிலிருந்து புகையிரத மார்க்கமாக பம்பாக்கும் பாலும் அனுப்பப்பட்டது. 1985இல் பாரிய பம்பாய் பால் திட்டம், பொல்சன் பண்ணையு

டன் கெதாவிலிருந்து பால் வழங்குவதற்கான ஒப்பந்தம் ஒன்றைச் செய்தும் இவ்வொப்பந்தம், உள்ளூரில் ஆதிக்கம் செலுத்திய பத்திதார் சாதியினருக்கு ஏற்றதாக இருக்கவில்லை. அவர்கள் விடாமுயற்சிக்கும், சுதந்திர உணர்ச்சிக்கும், சாதி ஐக்கியத்துக்கும், கூட்டுறவு அமைப்பின் வெற்றிக்கும், தேசிய இயக்கத் தொடர்புக்கும் பேர்பெற்றவர்கள். எனவே உள்ளூர் ஆதரலும் உள்நாட்டு வெளிநாட்டு உதவியிலும் வளர்ந்த கைரா மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் சங்கத்தின் பால் பொறித்தொகுதியான அமுல் பாற்பண்ணை ஆசியாவிலேயே மிகப் பெரிய பண்ணையாக வளர்ச்சியடைந்து அதன் பண்ணைப் பொருட்களின்பெயர் ஒவ்வொரு வீட்டிலும் சொல்லப்படும் அளவுக்கு பிரபல்யம் அடைந்தது.

ஏறத்தாழ இரண்டு தசாப்தங்களுக்குப் பின் அன்றைய இந்தியப் பிரதமர் லால் பஹதூர் சாஸ்திரி கைரா கூட்டுறவுச் சங்கத்தினால் பெரிதும் கவரப்படவே, அது நாடெங்கும் பரவப்பட வேண்டுமெனக் கருத்துத் தெரிவித்தார். அவரது கருத்தைச் செயல்படுத்து முகமாகவே கைராவில் தேசிய பண்ணை அபிவிருத்திச் சபை அமைக்கப்பட்டது. அமுல் பாற்பண்ணையின் பொது முகாமையாளர் வெர்கீஸ் குரியன் சபைத் தலைவரானார். அதுபோன்ற கூட்டுறவுப் பண்ணைகளை அமைக்கும் முயற்சி குஜராத்தின் சில மாவட்டங்களிலேயே வெற்றிகரமாக நடைபெற்றது.

இதற்கிடையில், வெகுதூரத்திலுள்ள ஐரோப்பிய பண்ணைகளில் பொது விவசாயக் கொள்கையின் கீழ் தேவைக்கு மேலதிகமாய் பால் உற்பத்தி செய்யப்பட்டுச் சேர்ந்து வந்தது. ஆடை நீக்கிய பால்மா மலைகளும் வெண்ணெய் வாவிகளும் அங்கு உருவாகியதாக வர்ணிக்கப்படும் அளவுக்கு பாலுற்பத்தி பெருகியது. இந்தமேலதிக பாலை விற்பதற்குஓர் இடத்தைக்கண்டு பிடிப்பது ஐரோப்பிய பொருளாதார சமூகத்துக்கு ஒரு பெரும் பிரச்சினையாக மாறியது. 1960 ஆம் ஆண்டுத் தொடரின் இறுதியில் வேறு வழியில்லாமல் ஒரு தர்ம மாற்று வழி காணும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பாற்பண்ணைப் பொருட்கள் இந்தியாவுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இவற்றை நேரடியாக இந்தியாவில் இறக்குமதி செய்வது இந்திய பண்ணைத் தொழிலுக்கு ஊறு விளைவிக்குமென தே. ப. அ. சபை கருதியது. எனவே அது அபிவிருத்தி தொடர்பாகப் பயன்படுத்தப்பட வேண்டும். எனவே இந்நோக்கத்தைக் கருத்திற் கொண்டே வெள்ளப் பெருக்கு இயக்கம் அமைக்கப்பட்டது.

அன்பளிப்பாகக் கிடைத்த பாற்பொருட்களுடன் உள்நாட்டில் உற்பத்தியான பாற்பொருட்களையும் கலந்து பாற்பண்ணைகள் மூலம் இந்தியாவின் நான்கு பெரு நகரங்களில் விற்பனை செய்வதற்குத் திட்டம் வகுக்கப்பட்டது. விற்பனையிலிருந்து கிடைக்கும் பணம் [1]. குளிரூட்டல் சாதனங்கள், ஓரளவு உற்பத்தித் திறனுடன் கூடிய ஊட்டல் சமப்பாட்டுப் பண்ணைகள், நகர்ப்புறப் பண்ணைகள் என்பவற்றின் கூட்டமைப்பினைக் கொண்ட சந்தைப்படுத்தல் வசதிகள் [2]. இந்தியப்பசுக்களுடன் ஐரோப்பிய பண்ணை இவைகளைக் கலந்து இனப்பெருக்கம் செய்தல், புற்றரைகளை விஸ்தரித்தல், கால்நடைத் தீனி ஆலைகளைத் தயாரித்தல் ஆகியவற்றின் மூலம் உற்பத்தியைப் பெருக்குதல் என்பவற்றில் முதலீடு செய்யப்படும். ப. அ. சபையின் முந்திய விரிவாக்கத் திட்டம் கைவிடப்படவில்லை. ஏனெனில் பால் கூட்டமைப்பு கைரா கூட்டுறவு அடிப்படையில் அமைக்கப்பட்ட கிராமிய கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பாலைப் பெற வேண்டியிருந்தது. இதன் நோக்கம் முழுவதும் திட்டம் நிறைவேற்றப்பட்டு இறுதியில் பால் சுயதேவைப் பூர்த்தி அடைவதாகவே இருந்தது.

தே. ப. அ. சபை தொழினுட்ப நிறுவனமாகச் செயல்பட, 1970இல் வெ. பெ. இயக்கத் தொடங்கப்பட்ட போது ஒரு நிதி நிறுவனமும் தாபிக்கப்பட்டது. இத்துணை நிறுவனம் தே. ப. அ. சபைத் தலைவரையும் பணிப்பாளர்களையும் கொண்டு இயங்குகிறது. இது இந்திய பண்ணைக் கூட்டுத் தாபனம் என்ற பெயரில் ஆனந்துக்கு அண்மையிலுள்ள பரோடாவில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டுத்தாபனத்தின் பொறுப்புகளில் ஒன்று அன்பளிப்பாகக் கிடைக்கும் பாற்பொருட்களை நகரப் பண்ணைகளுக்கு விற்று கிடைக்கும் பணத்தை சந்தைப்படுத்தல், உற்பத்தி வசதிகளுக்காக முதலீடு செய்வதாகும். தொடக்கத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த வெ. பெ. திட்டம் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. ஒரு முதலாம் கட்டம் 1981லும் இரண்டாம் கட்டம் 1985 லும்முடிவுறமூன்றாம்கட்டம் இப்பொழுதுதொடர்கிறது.(ஒவ்வொரு கட்டமும் இறுதிக் கட்டமாகவே அறிமுகப்படுத்தப்பட்டது. முதலாம் கட்டம்பத்து மாநிலங்களில் 27 பால் கொட்டில்களைச் சார்ந்த 10 இலட்சம் உற்பத்தியாளர்களை உள்ளடக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்தது. இதற்கான முதலீடு 111.6 கோடி ரூபா,இரண்டாம் கட்டமானது. எல்லா இந்திய மாநிலகளிலுமுள்ள 155 பால் கொட்டில்களைச் சார்ந்த ஒரு கோடிஉற்பத்தியாளர்களிடமிருந்து 147 பட்டினங்களுக்கும் நகரங்களுக்கும் பால் வழங்குவதற்கு விஸ்தரிக்கப்பட்டது. செலவு ரூ. 483.7 கோடி ரூபா. கையளிக்கப்பட்ட உற்பத்தி, சந்தைப் படுத்தல் உத்திகள் குறிப்பிடத்தக்களவுக்கு மாற்றமடையாவிடினும் இரண்டாம் கட்டத்தில சிலகணிசமான மாற்றங்கள் காணப்பட்டன. அன்பளிப்புச் செய்யப்பட வியாபாரப்

பொருட்களுடன் இதற்கான நிதியளிப்பு உலக வங்கியிடம் பெறப்பட்ட பாரிய கடன் தொகை ஒன்றிலிருந்து பெறப்பட்டது. (உலக வங்கி முதலாம் கட்டத்தில் மூன்று மாநிலங்களில் பண்ணை அபிவிருத்திக்கு உதவியிருந்தது.) இரண்டாம் கட்டத்தில்பெருந்தொகையான பண்ணைப் பொருட்கள் உபயோகிக்கப் பட்டன. 218,000 தொன் ஆடைநீக்கிய பால்மா 76,000 தொன் நெய் என்பன உபயோகிக்கப்பட்டன. முதலாம் கட்டத்தில் 126,000 தொன் பால்மாவும் 42,000 தொன் நெய்யும் உபயோகிக்கப் பட்டன. முதலாம் கட்டத்தில் அன்பளிப்புச் செய்யப்பட்டபாற் பொருட்களுக்கு உலக உணவுத் திட்டம் ஒரு வாய்க்காலாக அமைந்தது. ஆனல் இரண்டாம் கட்டத்திலிருந்து ஐ. பொ. சமூகம் இந்தியாவுடன் நேரடித் தொடர்பு வைத்துக் கொண்டது.

**இத்திட்டத்தின் 16 ஆண்டுகளில் வெள்ளப் பெருக்குத் திட்டம் பல** முறை மீள் மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது. உலக உணவுத் திட்டத் தூதுக்குழு 1972லும், 1981லும், 1977இல் உலக வங்கியும், 1984இல் ஜா குழுவும் 1986 இல் ஐ. பொ. ச. உலக வங்கிக் குழுவும் மீள் மதிப்பீடுகளை மேற் கொண்டன. ஜா குழு மீள் மதிப்பீடு சிறப்பாக அக்கறை கொள்ளத்தக்கதாகும். இந்தியப் பத்திரிகைகளில் வெ. பெ. திட்டம் பற்றி கிளம்பிய சர்ச்சைகளின் விளைவாகவும் அதன் காரண**மாக பாராளுமன்றத்தில் எழுப் பப்பட்ட வினக்களின் விளைவாக வும் ஜா குழு நியமிக்கப்பட்டது.**

**கருத்து வேறுபாடு**

நீண்ட காலமாகவும் பரவலாகவும் நடைபெறும் சர்ச்சையானது, சில முக்கிய அம்சங்களைக் கொண்டது. இச்சர்ச்சையில் தே. ப. அ. சபை, அரசியல்வாதிகளுடன் நீண்டகால எதிர்ப்பில் ஈடுபடவில்லை என்பது அக்கறை கொள்ளத்தக்கதாகும். அரசியல்வாதிகள் சில சந்தர்ப்பங்களில் தே. ப. அ. சபைக்கு ஆதரவாக அல்லது அதனை எதிர்த்துத் தலையிட்டிருப்பினும், இத்திட்டத்தை அவர்கள் விடாப்பிடியாகக் கண்டிக்கவில்லை. திட்டத்தை இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பத்திரிகையாளர்கள், தனிப்பட்ட அமைப்புக்களுடன் சமூக விஞ்ஞானிகள் ஆகியோரும் கடுமையாக விமர்சித்தனர்.

பத்திரிகையாளரின் எதிர்ப்புக்குச் சிறந்த உதாரணம், ''இல்லஸ்டிரேடட் விக்லி ஒவ் இந்தியா'' சஞ்சிகையில் ''வெள்ளைப் பொய்'' என்ற தலைப்பில் குளோட் அல்வாரஸ் எழுதிய கட்டுரையாகும். இக் கட்டுரை சர்ச்சைக்கு வித்திட்டு இறுதியாக ஜா குழு நியமிக்கப்படுவதற்கு ஏதுவாக அமைந்தது. தனிப்பட்ட அமைப்புக்களின் எதிர்ப்புக்குத் தக்கஉதாரணம், நெதர்லாந்து இந்தியக் குழு ''ஐ.பொ.ச. பால் இந்தியாவுக்கு வெளியே''என்ற தலைப்பில் நடத்திய பிரசார இயக்கமாகும். வெ. பெ. இயக்கத்தை தட்டிக்கேட்ட முதலாவது சமூக விஞ்ஞானி ரோமன் குறைட்டியாவார். அவர் லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் எழுதினர். 1979 முதல் இக்கொனமிக் அண்ட் பொலிட்டிகல் வீக்லி சஞ்சிகையில் இந்திய சமூக விஞ்ஞானிகளின் விமரிசனக்கட்டுரைகள் தொடர்ந்து வெளிவந்தன. இவர்களின் கண்டனங்களுக்கு பதிலளிப்பதற்கு தே. ப. அ. சபை வேறு பத்திரிகையாளர்கள், தனிப்பட்ட அமைப்புக்கள், விஞ்ஞானிகள் என்போரின் ஆதரவைப் பெற முடியுமாயிற்று

மேலும், சர்ச்சையின் முக்கிய அம்சங்கள் வளங்களைக் கையாடலோ, உறவினர்க்கு ஆதரவளித்தலோ ஊழலோ அல்ல. (தே. ப. அ. சபையின் சில உயர்தர அதிகாரிகளின் எதேச்சாதிகாரப்போக்கு, பால் உற்பத்தியாளர்களின் சேவகர்கள் என்று தம்மை வர்ணித்துக் கொள்ளுவோரின் வாழ்க்கைப் பாங்கு போன்றவை பற்றி சில முறைப்பாடுகள் வருவதுண்டு. இவை சில்லறைப் பிரச்சினைகளே) அபிவிருத்தி விடயங்கள் பற்றியே வாதப்பிரதிவாதங்கள் மும்முரமாக நடைபெறுகின்றன. வலியுறுத்தப்படும் தொழிநுட்பத்தின் விற்பனைச் சார்பு எத்தகையது? அது எவ்வகுப்பு பால் உற்பத்தியாளர்களுக்குப் பயனளிக்கிறது. பெரும் பண்ணைக்காரர்களுக்கா, நடுத்தர கமக்காரருக்கா, சிறு பயிர்ச் செய்கையாளருக்கா? காணியற்றவர்களுக்கா? நகர்ப்புறவாசிகளுக்கு கட்டுப்படியாகக் கூடிய வகையில் திறமையாக எவ்வாறு பால் வழங்கவும் மந்தைப் பெருக்கத்துக்குரிய முக்கிய உத்தி ஐரோப்பிய இனங்களோடு கலப்புச் செய்வதா அல்லது இந்திய இனங்களும் விருத்தி செய்யப் பட வேண்டுமா? இந்தியாவின் குறைந்த விவசாய வளங்களையும், போசாக்குறைவான சனத்தொகையினதும் பின்னணியில் புல் உற்பத்தியையும் கால்நடை தீனி கலப்பதையும் கொண்ட கொள்கை புத்திசாலித்தனமானதா? பாலைப் பெறுவதிலும் பாலின் சில்லறை விலையிலும் வெ. பெ. இயக்கம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது? புதிய பண்ணைப் பொறித்தொகுதிகளின் திறன் போதியளவு பயன்படுத்தப்படுகின்றதா? இத்திட்டத்தில் எந்த வருமான மட்டத்தில் உள்ளவர்களுக்குப்பால் கிடைக்கிறது. தற்கால இந்திய போசாக்கில் பால் வகிக்கவேண்டிய சரியான பங்கு யாது? ஐ. பொ. ச. மேலதிகப் பாலை ஏற்று, வெ. பெ. திட்டம் அதனை உபயோகிக்கும் வகையில் உபயோகிப்பது நாடு இழைத்த தவறாகுமா? எனவே திட்டத்தின் வடிவமைப்பை மையமாகக் கொண்டு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அடையப்பெறுத இலக்குகள், சமநிலையற்ற அமுலாக்கம் என்பன பற்றியும் ஓரளவு கவனஞ் செலுத்தப்பட்டது.

எல்லா விமர்சகர்களும்வினாக்களுக்கு அளித்த விடைகளில் பரந்தளவில் ஒரு முகப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. வெ. பெ. திட்டம் பெருமளவிலான உர்பத்தியாளர், உயர் மட்ட வருமானமுடையோர் ஆகியோர் பக்கம் சார்புடையதாகவுள்ளது என்பதில் அனைவரிடையேயும் கருத்தொற்றுமை காணப்படுகிறது. காரணம், பெருமளவில் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்ற, உயர் வருமானமுடைய மேல் நாடுகளிலிருந்து தொழிநுட்பம் பெறப்பட்டுள்ளது. மேலும் மிதமான வெப்பமுடைய பிரதேசங்களில் பாலை நீண்ட தூரத்துக்கு எடுத்துச் செல்வது சாத்தியமாகும். இதனையே வெ.பெ. இயக்கமும் பின்பற்றுகிறது. ஆனால் வெப்ப வலயத்தைச் சார்ந்த இந்தியாவில் இது எதிர்மாறான விளைவுகளைத் தோற்றுவிப்பதுடன் பெருஞ் செலவையும் ஏற்படுத்துகிறது. ஏனெனில் இது உற்பத்தியாளருக்கு கிடைக்கும் விலையை அரிப்பதோடு நுகர்வோருக்கான விலையையும் உயர்த்துகிறது. பிரச்சினையின் மற்றொரு பகுதி மேல்நாடுகளில் பதனிடப்படும் பாலின் அளவை அடிப்படையாகக் கொண்டு பண்ணைப் பொறித்தொகுதி உற்பத்தித் திறன் குறைவாகப் பயன்படுத்தப்படுவதாகும் இதனால் செலவு அதிகரிக்கிறது. நட்டமும் ஏற்படுகிறது. கிடைப்பதற்கு அரிதான மூலதனத்திற்குப் பதில் மேலதிகமாகவுள்ள தொழிலாளரைப் பயன்படுத்தி உள்நாட்டு கறவைப் பசுக்கள், எருமைகளை மையமாகக் கொண்டு விவசாய உபஉற்பத்திப் பொருட்களையும் எச்சப் பொருட்களையும் பயன்படுத்துவதை வலியுறுத்தும் கொள்கையொன்று பின்பற்றப்பட்டால் அது செலவைக்குறைத்து கைத்தொழில் வகையில் பால் பதனிடுவதைக் குறைக்கும் என்றும் அதுவே மிகப் பொருத்தமானதாகவும் அளவுச் சார்பற்றதாகவும் இருக்கும் என்பதும் விமர்சகர்கள் தெரிவிக்கும் கருத்தாகும். ஐ. பொ. சமூகம் அன்பளிப்பாக வழங்கும் மேலதிக பாலை வெ. பெ. இயக்கம் உபயோகித்துள்ள விதத்தினால் எதிர்கால மிகைகளை இந்தியாவில் விற்பனை செய்வதற்கேற்ற ஒரு நிலையையே உருவாக்கியுள்ளது. பால் உற்பத்தி விநியோக வலையமைப்பு ஏற்படுத்தப்பட்டதனால் இந்நிலை உருவாகியுள்ளது இவ்வமைப்புக்குத் தொடர்ந்து பால் வழங்குவதற்கு ஏற்ற வகையில் உள்நாட்டுப் பால் உற்பத்திக்கு ஊக்கமளிக்கப்படவில்லை.

இச்சர்ச்சை பற்றிய மற்றோர் அம்சமும் கவனிக்கத்தக்கதாகும். இது முக்கியமாக அபிவிருத்தி விடயங்களைப் பற்றியதாக அமைந்திருக்கிறது என்பதோடு, ஒருவரை ஒருவர் சந்திக்காவிடினும் விமர்சகர்களிடையே வியக்கத்தக்க வகையில் கருத்தொற்றுமை காணப்படுவதாகும். அத்துடன் தே. ப. அ. ச. பதினெட்டாண்டு நீண்டகாலத்தில் எதிர்த்து நிற்பதிலிருந்து பின்வாங்கவில்லை. தம்மைச் சூழ்ந்து சர்ச்சை நடைபெறும் அமைப்புக்களிற் பல எதிர்செயல் இல்லாத விடத்து சர்ச்சைச் சுடர்கள் அணைந்துவிடும் என்ற நம்பிக்கையில், அச்சுடர்களைப் புறக்கணிக்கின்றன. இப்புத்தி சிலவேளைகளில் பயனளித்தாலும் அதில் அபிவிருத்திப் பெறுமானம் ஏதுமில்லை. ஏனெனில் சம்பந்தப்பட்ட விடயம் பற்றிய விவாதம் தவிர்க்கப்படுவதனால் பொது மக்களுக்கு தகவல்கள் கிடைப்பதில்லை. சர்ச்சையிலிருந்து பின்வாங்காமல் எதிர்த்து நின்றிருப்பது தே. ப. அ. சபைக்குப் பெருமை தருவதாகும். சென்ற பதினெட்டு ஆண்டுகளில் ஒரு முறை கூட அச்சபை ''கருத்துரை ஏதுமில்லை'' என்ற கோட்டைக்குள் தஞ்சம் புகவில்லை.

விமர்சகர்களுக்குப் பதிலளிப்பதில் தே. ப. அ. சபை குறிப்பாக வெ. பெ. திட்டத்துடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களான அரசாங்கம், உலக உணவுத் திட்டம், உலகவங்கி, ஐ. பொ. சமூகம் போன்ற புகழ்பெற்ற நிறுவனங்களின் ஆதரவைப் பெறலாம். திட்டத்தோடு சம்பந்தப்பட்ட எந்த ஒரு நிறுவனமும் வெ. பெ. இயக்க வடிவமைப்பில் அல்லது அமுலாக்கத்தில் அதிருப்தியடைந்து எக்கட்டத்திலும் வாபஸ் வாங்கவில்லை. மாறாக, அனைத்தும் வியப்பையே தெரிவித்துள்ளன. அன்றியும் வேறு சர்வதேச நிறுவனங்களுடனிருந்தும் பிறமேற்கு நாடுகளிலிருந்தும் இருநாடொத்த உதவியின் உருவில் ஆதரவே கிடைத்துள்ளது. இதே வகைத்திட்டத்தை அமுல் நடத்தி பாகிஸ்தான், பங்களாதேசம், இலங்கை, சீனா, சவூதி அரேபியா பிலிப்பைன்ஸ், சிம்பாப்வே போன்ற ஆசிய, ஆபிரிக்க நாடுகள் வெ. பெ. திட்டத்தைப் பாராட்டியுள்ளன. இத்திட்டத்தை ஆதரிக்கும் பத்திரிகையாளர்களும் சமூக விஞ்ஞானிகளும் இதனை எதிர்ப்பவர்களை விட எண்ணிக்கையில் அதிகமானோர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். நேர்மையானது, திறமையானது, உயிர்த்துடிப்புள்ளது எனக் கருதப்படும் அமைப்பில் பொதுமக்கள் பெருமைகொண்டிருப்பதே இத்திட்டத்திற்குக் கிடைத்துள்ள மிகப் பெரிய ஆதரவாகும். இதனால் மக்கள் பொதுவாக, ''எமது நாட்டில் நற்பணிபுரியும் ஓர் அமைப்பாவது இருக்கிறது அதையும் நீங்கள் கண்டிக்கிறீர்கள்'' என்று கூறுகின்றனர்.

இத்தகைய ஒரு நிலை நம்பிக்கையூட்டத்தக்கதாகும் ஏனெனில், இதுபற்றிய சர்ச்சை ஒன்று தான் ''எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டது? இன்னார் ஏன் பழிவாங்கப்படுகிறார்'' என்பவை போன்ற விடயங்களை மையமாகக்கொள்ளாததாகவுள்ளது. இங்கு அபிவிருத்தி பற்றிய அடிப்படை விடயங்களில் இந்தியப் பொது மக்கள் பங்குபற்ற வாய்ப்புக்கிடைத்துள்ளது. இவ்வாய்ப்பு ஏற்படுவதற்கு காரணமாக அமைந்த

அமைப்பு இவ்வாய்ப்பினை எவ்வாறு பயன்படுத்தியது.

### பிரதிச் செயல்

சில அமைப்புகள் சர்ச்சையின் விளைவாகப் பிறக்கின்றன. சிலவற்றின் மீது சர்ச்சை திணிக்கப்படுகிறது. சில சர்ச்சையை அடையப் பெறுகின்றன. தே. ப. அ. ச. சர்ச்சையை அடையப் பெறும் பகுதியைச் சார்ந்தது என்பதைக் காட்ட நாம் முயன்றுள்ளோம். அது, பகிரங்கப்படுத்தலிலிருந்து தப்பிக்கொள்ளும் ஆசையைக் கட்டுப்படுத்தி, ஊழல் குற்றச்சாட்டுக்களைப் பொய்ப்பித்து, அபிவிருத்திப் பிரச்சினைகள் குறித்து நெருப்பெழுப்பி தே.ப.அ.சபை செயலாற்றியுள்ளது.

### இந்தியபண்ணை அபிவிருத்திச்சபை

தே. ப. அ. சபை அதன் சாதனையை போதியளவு நிலைநிறுத்தவில்லை என்பதே இப்பொழுது எமது வாதமாகும். அது பயன்தரத்தக்க வகையில் ஆரம்பித்த இச்சர்ச்சையை முதிர்ச்சியடைந்த விதத்தில் ஆக்கபூர்வமாக நடத்தியிருந்தால் கூடிய சாதனையை நிலைநாட்டியிருக்கலாம். இதனை தே. ப. அ. ச. செய்யவில்லை என்றே நாம் கருதுகிறோம். இக் கட்டுரையில் இப்பிரச்சினையின் எல்லா அம்சங்கள் பற்றியும் கருத்துக் கூறுவது சாத்தியமானதல்ல. சுதந்திரமான ஆராய்ச்சியாளர் மீது பகைமை பாராட்டுவதாக தே. ப. அ. ச. மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. வெ. பெ. திட்ட விமர்சகர்களின் ஆராய்ச்சிக்கு நிதியளிப்பதைத் தடுப்பதற்கு சில அமைப்புக்களை வற்புறுத்தியதாகவும், எதிர்ப்பை முறியடிப்பதற்காகப் புள்ளி விபரங்களைச் சோடித்ததாகவும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன. நாம் இங்கு இக் குற்றச்சாட்டுக்களின் உண்மையை ஆராயப் புகவில்லை.

மாறாக அபிவிருத்தியுடன் தொடர்புள்ள ஓர் அம்சம் பற்றி மட்டும் கவனஞ் செலுத்துவோம். இது பகிரங்க விவாதத்துக்காகப் பிரச்சினைகளைத் தெளிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டது. ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போன்று வெ. பெ. திட்டம் அபிவிருத்தி உத்திகளை உருவாக்குவது தொடர்பான பல தீர்மானங்களைச் செய்வதில் தீர்க்கமான முடிவுக்கு வராமல் இருந்துள்ளது.

(1) பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கு ஒரு கருவியாக இந்தியா உணவு உதவியை உபயோகிக்க வேண்டுமா, சாப்பாட்டுக்காக உபயோகிக்க வேண்டுமா, அல்லது இக்கருவி, உதவியளிக்கும் நாடுகளில் இந்தியா தங்கியிருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையை ஏற்படுத்துமா?

(2) ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளிலிருந்து தொழினுட்பத்தை இடமாற்றஞ் செய்வதன் மூலம் இந்தியா எவ்வளவு தூரத்துக்குப் பயனடைய முடியும்? அவ்வாறு இடமாற்றஞ் செய்தல் அந்நாடுகளைப்போன்று இந்தியாவும் சுபிட்சம் அடைய வழிவகுக்குமா? இந்தியாவின் போக்கைத் தவறான பாதையில் செலுத்துமளவுக்கு இத்தொழினுட்பம் இந்திய நிலைமைகளுக்குப் பொருத்தமற்றதா?

(3) இந்தியாவின் வறிய மக்கள் நிலை என்ன? பயன்கள் படிப்படியாக அடிநிலையை வந்தடையும் என்ற நம்பிக்கையில் உயர் சமூக - பொருளாதார மட்டத்தில் அபிவிருத்தி மீது கவனஞ் செலுத்தப்பட வேண்டுமா அல்லது திட்டங்கள் வறியவர்களை நேரடியாக மையமாகக் கொள்ள வேண்டுமா? வளர்ச்சியும் ஒப்புரவும் ஒன்றுக்கொன்று எதிரானவையா? அல்லது இரண்டையும் அடைய ஒரே நேரத்தில் முயற்சிக்கலாமா?

இவ்விடயங்கள் அனைத்தையும் செயல்படுத்தக்கூடிய வகையிலேயே வெ. பெ. திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. இதில் சம்பந்தப்பட்ட விடயங்கள் ஐ.பொ. சமூகத்திலிருந்து கிடைக்கும் மேலதிக பண்ணைப் பொருட்களின் உபயோகம் கலப்பினக் கால் நடைகளைப் பெருக்குவதற்காக ஐரோப்பிய தொழினுட்ப முறைகளை அறிமுகப்படுத்தல், புல்லையும் கல்வைத்தீனியையும் கொண்ட கறவைப் பசுத்தீனி தயாரித்தல், கிராமிய வறுமையை ஒழிக்கும் அதே வேளையில் பொருளாதார வளர்ச்சியையும் ஊக்குவித்தல் என்பனவாகும். அத்துடன் ஊட்டச்சத்து என்ற வகையில் பாலின் நிலைபற்றிய பிரச்சினையும் எழுப்பப்பட்டது.

[4] வெ. பெ.திட்டம் கையாளும் இப்பதார்த்தம் உண்மையில் என்ன? பால் முக்கியமானதோர் உணவா? அப்படியானால் யாருக்கு? முழுச் சமுதாயத்திற்குமா அல்லது ஒரு சில பிரிவினருக்கு மட்டுமா? அது ஓர் உணவுப் பொருளா, பால்பொருளா அல்லது இரண்டுமா? இரண்டும் என்றால் அதன் இரட்டைத் தன்மையை அடையாளம் காண்பதைகையாள்வதற்குச் சரியான முறை யாது?

இந்நான்கு விடயங்கள் தொடர்பாக தே. ப. அ. ச. எவ்வாறு நடந்து கொண்டது என்பதைக் காண்போம். சர்ச்சைக்குத் தக்க வகையில் செயல்படுவதென்றால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்சரியானவைஎன்ற நிலையை வகித்து உறுதியான வாதங்களைக்கொண்டு அவற்றை ஆதரித்திருக்க வேண்டும். அல்லது தீர்மானங்கள் பிழையானவைஎன்றால் உபாயங்களைப் பகிரங்கமாக மாற்றியமைத்திருக்க வேண்டும். மாறாக, தே. ப. அ. ச. தன் நிலையை அடிக்கடி மாற்றிக் கொண்டது. இச்செயல் நிலையும் தெளிவின்மையுமே வெ. பெ. திட்டத்திற் சிறப்பியல்புகளாக விளங்கின. அத்துடன் பகிரங்க விவாதத்திற்கான விடயங்களைக் குழப்பி மக்களுக்கு

அறிவூட்டுவதற்குப் பதில் குழப்பத்திற்குள்ளாக்கப்பட்டனர்.

### வியாபாரப் பொருளுதவி

பின்வரும் மேற்கோள்கள், இவ்விடயத்தில் தே. ப. அ. ச. எவ்வாறு முன்னுக்குப்பின் முரணாக நடந்து கொண்டது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

இலவசமாகக் கிடைக்கும் ஆயிரக்கணக்கான தொன் பண்ணைப் பொருட்களைப் போன்ற ஒரு அன்பளிப்பை ஏற்க மறுப்பது எவ்வளவு சங்கடமானது. எதிர்காலத்தில் பரிசாக வழங்கத்தக்கதென அதனை நோக்கும் அரசியல் வாதிகளுக்கும், அதிகார வர்க்கத்தினருக்கும் அது எவ்வளவு கவர்ச்சிகரமானதாக இருக்கும். ''இல்லை நாம் அதை இலவசமாக வழங்கமாட்டோம் பின்னர் நாம் நிறைவேற்ற முடியாத ஒரு தேவையை ஏற்படுத்துவதற்காக மட்டும் அவ்வாறு செய்ய முடியாது .......... மாறாக அதற்கு நாம் விலை குறித்து, அதிலிருந்து கிடைக்கும் வருவாயைக் சேமித்து, அதனை புதிய பண்ணை வழிகளில் முதலீடுசெய்வோம். பாலுற்பத்தியாளர்கள் தம் சொந்தக் கால்களில் நிற்பதற்கு உதவி செய்வோம்'' என்று கூறுவதற்கு எவ்வளவு கட்டுப்பாடு தேவைப்படுகிறது. (கூரியன், 1976)

தப்பபிப்பிராயம் ஏற்பட்டிருப்பதற்காக நாம் ஒரு விடயத்தைத் தெளிவு படுத்த வேண்டும். நாம் எத்தனை முயற்சி செய்தும், வழங்கலை விட தேவை அதிகரிக்குமானல், மரக்கறி எண்ணெய், தானியங்கள் விடயத்திற்போல நுகர்வோரின் நன்மை கருதி அரசாங்கம் எதிர்காலத்தில் பாலையும் பாற்பொருட்களையும் இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கலாம்.

வெ. பெ. திட்டத்திற்கு அன்பளிப்புச் செய்யப்படும் பாலின் அளவை, எதிர் பார்க்கப்படும் பால் பற்றாக் குறையைத் தீர்ப்பதற்காக அதிகரிக்குமாறுகேட்பதற்கு ஐ. பொ. ச. அணுகப்பட்டதாக கலாநிதி கூரியன் கூறினார். வெளிநாடுகளிலிருந்து பால்மா பெறுவதில் எவ்வித தவறுமில்லை என்றும் அவர் சொன்னார். (த ஹிந்து ஏப்றில் 28, 1982)

புதுடில்லி, வியாழன் — இந்தியாவின் வெ. பெ. திட்டம் இந்தியாவை பாலிலும்பாற் பொருட்களிலும் தன்னிறைவடையச் செய்துள்ளது. தே. ப. அ. சபைத் தலைவர் கலாநிதி கூரியன் இவ்வாறு இன்று இங்கு கூறினார் (ஸ்டேட்ஸ்மன், டிசெம்பர் 17, 1982.)

### பாலுற்பத்தித் தொழில் நுட்பம்

அடுத்து, ஒரு பண்ணை அபிவிருத்தித் திட்டத்திற்கு அடிப்படையான கறவை விலங்குகள் மற்றும் அவற்றின் தீனி எனும் விடயத்தில் தே. ப. அ. சபை ஒரு நிலையிலிருந்து மற்றநிலைக்கு எவ்வாறு மாறியிருக்கிறது என்பதைக் காட்டுவதற்கு ஒரு சில மேற்கோள்கள்.

பாலுற்பத்திக்கான பரந்து விரிந்த திறமையற்ற ஒரு பாரம்பரிய அமைப்பு. (ஜஹாலா 1974 - ஜஹாலா அப்பொழுது தே. ப. அ. ச. வின்செயலாளர்)

உயர் தொழினுட்பப் பாற் பண்ணைத் தொழில், விவசாயிகள் ஆவலோடு இருக்கிறார்கள். ஆனல் பண்ணையைத் தொழிலாகக் கொண்டவர்கள் விண்வெளிக்கல தொழினுட்பத்தைச் சமாளிக்கத் தயாராக இருக்கிறார்களா? புதுத் தொழினுட்பம் எம்மையெல்லாம் சூழ்ந்து கொண்டிருக்கிறது. பாலுற்பத்தியில், பால் பதனிடுவதில் புதுத் தொழினுட்பம் உதாரணமாகப் பாலுற்பத்தியில் விறைத்தமுட்டை நாற்று நடுகை நடைபெறுகிறது. (தே. ப. அ. ச. 1983)

கால் நடைத் தீனித் தொழிற்சாலையில், எவ்வாறு சமநிலையான கெட்டிப் பொருட்கள் பாலுற்பத்தியைப் பெருக்குகின்றன என்பதை கூட்டுறவு உத்தியோகத்தர்கள்விளக்குகிறார்கள். மையப்படுத்திய விந்து சேகரிப்பு நிலையத்தில், நவீன கால்நடை வளர்ப்பு முறைகள் பற்றி அங்குசெல்வோர் நிபுணர்களுடன் கலந்தாலோசிக்கின்றனர். பாலுற்பத்தியாளர்களால் வயல்களில் ஓரளவு பச்சைப் புல் கூட தினமும் கொடுக்கப்படுவதால் எவ்வாறு உற்பத்தியை அதிகரிக்கலாம் என்பது பற்றி அங்கு செல்வோர் கலந்துரையாடுகின்றனர்.

வெ. பெ. திட்டம் குறிப்பிடத்தக்கது. ஒரு விலங்கிலிருந்து கிடைக்கும் பால் 1970ல் 700 கிராமாக இருந்தது. 1983 அளவில் ஒரு கிலோ வரை அதிரிக்கப் பட்டுள்ளது.

வெ. பெ. திட்டத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளையும் அதனைச் செயல்படுத்துவதில் உள்ள குறைபாடுகளையும் கூரியன் மேல் வாரியாகப் பார்வையிட்டிருக்கிறார். பாலுற்பத்தி பெருகியதற்குரிய பெருமை எவ்வகையிலும் வெ. பெ. திட்டத்தைச் சாராது என்பதை அறிந்த பின், அத்தகைய பெருமை வெ. பெ. இயக்கத்தைச் சாரும் என்று தான் ஒரு போதும் கூறவில்லை என்று அவர் இரு வாரங்களுக்குமுன் கூறிவிட்டார். (இந்தியா டுடே)

பத்திரிகைகள், சஞ்சிகைகளும் தே. ப. அ. ச. ஆவணங்களை

(62 -ம் பக்கம் பார்க்க)

# பண்ணை அபிவிருத்தி - இந்தியாவின் 'வெள்ளப்பெருக்கு இயக்கம்' வற்றிவிட்டதா?

குளோட் அல்வாரஸ்

**'வெள்ளப்பெருக்கு இயக்கத்தை' இடைவிடாது கடுமையாக விமர்சிப்பவர்களுள் ஒருவரான குளோட் அல்வாரஸ் சமகால சமூக, சூழல் விடயங்கள் பற்றிச் சுதந்திரமாக எழுதி வருபவர். கோவாவில் தங்கியிருக்கும் அவர் ''புரட்சி பொய்த்தது'' என்ற நூலையும் எழுதியுள்ளார். இந்நூல் பாற்பண்ணைக் கைத்தொழிலை அலசி ஆராய்கிறது.**

உலகின் மாபெரும்பண்ணை அபிவிருத்தித் திட்டமான இந்தியாவின் 'வெள்ளப் பெருக்கு இயக்கம்' எனப்படும் திட்டம் கசக்கத்தொடங்கி விட்டது. உண்மையில் உலகவங்கி ஐரோப்பிய பொருளாதார சமூக அறிக்கை (இந்நிறுவனங்களே இத்திட்டத்துக்கு நிதி வழங்கியவர்கள்) ஒன்றை ஐரோப்பிய பாராளுமன்றம் ஏற்றுக்கொள்ளுமாயின் அத்திட்டம் முடிவுக்கு வந்து விமர்சகர்களின் கூற்று சரியானது என்பது நிரூபிக்கப்பட்டுவிடும். அபிவிருத்திக்குச் சிறந்த சாதனம், உணவு உதவியல்ல; ஏனெனில் இறுதியாக, உதவியாக வழங்கப்படும்உணவு உள்நாட்டு உணவுப் பொருளுடன் போட்டியிடவேண்டும். இதனல் விலையும் உற்பத்தியும் குறையும் என்று விமர்சகர்கள் தொடர்ந்து கூறி வந்திருக்கின்றனர்.

1970 இல் ஆரம்பிக்கப்பட்ட வெ. பெ. இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடு எளிமையானது. ஐ.பொ. சமூகத்திலிருந்து கிடைக்கும் ஆடை நீக்கியபால் மாவையும், வெண்ணெயையும் இந்திய பண்ணைக் கூட்டுத்தாபனம் திரவப்பாலாக மாற்றி விற்பனை செய்கிறது. பம்பாய், டில்லி, கல்கத்தா, சென்னை போன்ற பெருநகரங்களில் இப்பால் விற்பனையாகிறது. பால் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருவாய் பண்ணை அபிவிருத்தியில் குறிப்பாக மேற்கத்திய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் குளிரூட்டிப் பொறிகளில் முதலீடு செய்யப்படுகிறது. இப்பொறித் தொகுதிகள் பண்ணைத் தொழிலிலும் கூடுதலாகப் பசுக்களை வாங்குவதிலும் முதலீடு செய்வதற்கு தமக்காரர்களைத் தூண்டும் என்று ஊகிக்கப்பட்டது. இதனுல் பால் உற்பத்தி பெருகி இந்தியா பாலில் சுய தேவையைப் பூர்த்தி செய்யும். இறுதியாக ஐ. பொ. சமூகத்தின் பால் அன்பளிப்பு நிறுத்தப்படும்.

இவ்வாறு ஊகிக்கப்பட்டாலும் உண்மையில் நடந்தது என்னவென்ருல், திட்ட அதிகாரிகள் வாக்குறுதியளித்தது போல பாலை, இந்திய சந்தையில் பால் விற்கும் விலைக்கு மிகக்கிட்டிய விலையில் விற்கவில்லை. அதற்குக் குறைந்த விலையிலேயே விற்றனர். பால்விலைகள் இலாபகரமாக இருக்கவில்லை. பாலுற்பத்தி தேக்கமடைந்தது. நகரவாசிகளுக்குப் பெருமளவில் இறக்குமதி செய்த பால் வழங்கப்பட்டது. அவர்கள் அதற்குப் பழக்கப்பட்டனர். எனவேபாற்பண்ணைத்தொழில் ஏதோவகையில் ஐ.பொ. சமூகத்தில் தங்கியிருக்க வேண்டிய நிலைதோன்றியது. முன்னர் இத்தகைய நிலை இருக்கவில்லை.

1983ல் 'இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஒவ் இந்தியா' சஞ்சிகையில் இத்திட்டம்பற்றிய விரிவான விமரிசனம் ஒன்றை நான் வெளியிட்டேன். அதில் நான், இத்திட்டத்தைத் திருத்தி அமைப்பதற்காகப்பிரதம அமைச்சரின் பொருளாதார ஆலோசகர் கலாநிதி கே. எல். ஜாவின் தலைமையில் பொருளாதார நிபுணர்களையும் பண்ணையாளர்களையும் கொண்ட ஒரு குழுவை நியமிக்குமாறு பிரதமரைக் கேட்டிருந்தேன்.

1985ல் வெளியிடப்பட்ட குழு அறிக்கை, திட்டம் எதிர்நோக்கும் கடுமையான பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிட்டது. திட்டம் தொடங்கப்பட்டு 15 ஆண்டுகளுக்குப் பின்னரும் வெ.பெ. இயக்கம் பால் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க எந்தத்தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்றும் அறிக்கை கூறியது.

இதற்கிடையில்ஐரோப்பாவில் வெ. பெ. திட்டத்தினுல் இந்திய பண்ணைத் தொழிலுக்கு ஏற்படத்தக்க ஊறுகள் பற்றியும் வறியவர்களுக்கு உதவியளிப்பதற்குப் பதில் செல்வந்தர்களுக்கு வியாபாரத்துக்கு வழிசெய்யும் வகையில் திட்டத்தின் சில குறிக்கோள்களை மாற்றியமைப்பதற்காகவும் பகிரங்க எதிர்ப்பு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதுவும் வெ. பெ. இயக்கத்திட்டத்திற்குப் பெரும் பிரச்சினையாக அமைந்தது.

உலக வங்கி / ஐ. பொ. சமூக குழு ஒன்றின் அறிக்கையின் முடிவுக்குறிப்புக்கள் ஜா குழுவின் அறிக்கையைவிட மிகக் கடுமையாக இருந்தன.

★ உணவு உதவியானதுஅபிவிருத்திக்கு ஒரு நஞ்சாகத்தக்க கருவியாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. அபிவிருத்திக்கு இப்படியான மென்பாதைகளை நம்பியிருக்கும் நாடுகள் தம் சுயாட்சியை இழந்து உதவி வழங்குவோரில் தங்கியிருக்கும் நிலையைத் தெரிவு செய்து கொள்கின்றன. இதனுல் ஏற்படத்தக்க ஒரே விளைவு உதவிவழங்கும் நாடுகளின் உணவுத்துறை அபிவிருத்தியடைவதாகும்.

★ உணவு உதவி பெறும்நாடுகளில் அவ்வுதவி உண்மையா

கவே தேவைப்படுவர்களான வறியவர்கள், போசாக்கற்றவர்கள், கர்ப்பிணிகள், சிறுவர்கள் ஆகியோரை அது சென்றடையும் என்பதற்கில்லை. உதவி, முற்றாக இல்லாவிடினும் பெரும் பகுதி இந்தியாவின் பெருநகரங்களிலுள்ள செல்வந்தர்களான வாடிக்கையாளர்களையே சென்றடைகிறது. இதனால் கிடைக்கும் வருவாய் குளிரூட்டும் சாதனங்களை கிராமப்புறங்களில் நிறுவதற்கு முதலீடு செய்யப்படுகிறது என்பது இதைவிட மோசமானதாகும். இது, கிராமப் புறங்களில் பாலைவாரியெடுப்பதற்கு மட்டுமன்றி, போசாக்கை உறிஞ்சுவதற்கும் உதவுகிறது.

★ உஷ்ணவலய உணவு முறைகளைப் பற்றிய விளக்கமோ அனுபவமோ இல்லாத, இறக்குமதி செய்யப்பட்ட தொழில் வளர்ச்சி கண்ட நாடுகளின் பண்ணைத் தொழில் நிபுணர்களுக்குப் பதில் இந்திய ஆராய்ச்சியாளர்களையும் விஞ்ஞானிகளையும் கொண்டு ஆய்வுகளை நடாத்தித் தக்க நடவடிக்கைகள் நேரகாலத்தோடு எடுக்கப்பட்டிருந்தால், வெ. பெ. இயக்கத்தின் பல பிரச்சினைகள் எப்பொழுதோ அடையாளங் காணப்பட்டிருக்கலாம்.

★ மூன்றாம் உலக நாடுகளின் உணவு உற்பத்தி முறைகளை கைத்தொழில் நாடுகளின் தொழினுட்பத்தினதும் அந்நாடுகளுக்குப் பொருத்தமான நிலைமைகளிலும் உருவாக்கப்பட்ட முறைகளின் அடிப்படையில் பெருமளவில் மாற்றியமைக்கும் முயற்சியானது, ஆபத்துக்கள் நிறைந்ததாகும். அன்றியும் நின்று நிலைக்கத்தக்க நியாயமான அபிவிருத்திக்கும் இது ஏற்றதன்று. ஏனெனில் அது உள்நாட்டு வரலாறு, அனுபவம் என்பவற்றையும் மூலவளங்கள், பாரம்பரியம் என்பவற்றையும் முற்றாகப் புறக்கணிக்கிறது.

இந்திய பாற்பண்ணைத் தொழிலில் பல சிறந்த அம்சங்கள் இருந்ததாக அறிக்கை ஏற்றுக்கொள்கிறது. உதாரணமாக, பன்முகப்படுத்தப்பட்ட அடிப்படையில் கிராமப்புறங்களில் நெய் உற்பத்தி செய்யப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட தொழில்நுட்ப, செயல் முறைகளுக்குப் பதில் இதனை உறுதிப்படுத்தி விருத்தி செய்திருக்கலாம்.

இந்திய முறையை, மேல் நாட்டு முறையின் அடிப்படையில் மாற்றியமைப்பதனால் இந்தியாவின் கமத்தொழில் பாதிக்கப்படலாம். மேற்கத்திய பாற்பண்ணை முறை இந்திய நிலைமைகளுக்குப் பொருத்தமானதல்ல. அப்பொழுது இது தெளிவாகத் தெரியவில்லை. பாலுக்காக வளர்க்கப்படாத இந்தியப் பசுக்கள் பாலுக்கு வளர்க்கப்பட்ட மேற்கத்திய பசுக்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளன. இது முறையானதன்று. இவ்விரு இனங்களதும் இழுவைச் சக்தியை ஒருவரும் ஒப்பிட்டுப் பார்க்கவில்லை. அப்படிச் செய்திருந்தால் முக்கியமான முடிவுகளுக்கு வந்திருக்கலாம்.

பெ. வெ. திட்டம் ‘‘இலவச பாற் பொருட்களை’’ அடிப்படையாகக் கொண்டிருப்பினும், அது பல பாரிய திட்டங்களைப் போன்று இந்தியாவுக்கும் மூன்றாம் உலக நாடுகளுக்கும் பெருந்செலவிலான ஒரு பாடமாகும். ‘‘சும்மா கிடைக்கும் மாட்டின் சொம்பை அசைத்துப் பார்க்க வேண்டும்.’’ உலக வங்கி ஐ. பொ. சமூக அறிக்கை உரிய நேரத்தில் வந்திருக்கிறது குறிப்பிட்ட இத்தருணத்தில் அது வந்திராவிட்டால் இந்த உண்மைகள் எல்லாம் வெளியாகி இருக்குமோ என்னவோ!

( 52-ம் பக்கத் தொடர்ச்சி)

தேசத்தில் காட்டு மரம் நட்டு வளர்ப்பதற்கான திட்டங்கள் தீட்டப்படுகின்றன. இது போன்ற நல்ல திட்டங்கள் இந்தியா, நேபாளம், தீபெத்து, பூட்டான் போன்ற அயல் நாடுகளில் நடைமுறைப்படுத்துவதன் மூலமே வங்கதேசத்தில் வெள்ளப் பெருக்கையும் அதனால் ஏற்படும் அழிவுகளையும் குறைக்க முடியும் எனப் பல நிபுணர்கள் நம்புகின்றார்கள். இந்தப் பிராந்தியத்தின் மிகப் பாரிய நதிகள் ஊடறுத்துச் செல்லும் எல்லா நாடுகளும் ஒன்றிணைந்து செயலாற்றுவதன் மூலமே வெள்ளப் பெருக்கை வெற்றி கொள்ளலாம். வங்கதேசத்தை வாட்டிவதைக்கும் வெள்ளப்பெருக்கு நிலைமைகளைக் கட்டுப்படுத்த அந்த நாட்டுடன் இந்தியா, நேபாளம், சீனா போன்ற நாடுகள் வெள்ளத்தடுப்புக்கான பொதுத் திட்டமொன்றை வகுத்துச் செயற்படவேண்டும்.

— பனோஸ் நிறுவனத்தினதும் இலங்கை சுற்றாடல் சம்மேளனத்தினதும் கட்டுரைச் சேவை

( 61-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் இத்தகைய தகவல்களைப் படிக்கும் பொதுமக்கள் என்ன நினைக்க முடியும்? இந்நாட்டின் பாரம்பரிய பாலுத்தித் தொழினுட்ப முறை செயல் திறமையற்றது அல்லது அது கழிவுப் பொருட்களை பாலாக மாற்றும் தன்னிகரற்ற ஒரு முறையா? அது பின்னையது எனில், புதிய தொழினுட்பத்துக்குப் பச்சைப் புல்லும் கலப்புக்கால் நடைத்தீனியும் மையமாக அமைய வேண்டும்மென வெ. பெ. திட்டம் ஏன் வலியுறுத்த வேண்டும்? மறுபுறம், விண்வெளியும் தொழில் நுட்பம் வலியுறுத்தப்படுகிறது. தொழில்நுட்பத்தில் மாற்றம் செய்யாமலே ஆண்டொன்றுக்கு பாலுற்பத்தி 6 சதவீதமாக அதிகரித்துள்ளது. வெ. பெ. திட்டம் செயற்பட்டகாலத்தில் பாலுற்பத்தி திடீரென அதிகரித்ததாகக் கூறப்படுகிறது. அதேவேளையில் இதற்கு வெ. பெ. திட்டம்தான் காரணம் என்று தம்பட்டமடிப்பது வாபஸ் பெறப்படுகிறது. பாலுற்பத்தியைப் பொருக்குவதற்கு விவசாயிகள் தம் பசுக்களை இனக்கலப்புச் செய்ய வேண்டுமா அல்லது பசுக்களோடு வினயமாகப் பேச வேண்டுமா?

**மாணவர் பக்கம்**

## பண நிரம்பல்

செலாவணி அல்லது பரிமாற்றம் என்பது நவீன பொருளாதாரங்களின் அத்தியாவசியமான அங்கமொன்றாக இருக்கிறது. மிகவும் வளர்ச்சி கண்ட நாடுகளில் பரிமாற்றம் அநேகமாக நூற்றுக்கு நூறும் பணத்தைக் கொண்டே மேற்கொள்ளப்படுகிறது. இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் இன்னமும் கூட பண்டமாற்று ஓரளவுக்கு காணப்பட்ட போதிலும், பணப் பரிமாற்றம் பிரதான அம்சமாகி வருகிறது. ஏதாவதொரு பொருளின் பரிமாற்றத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் எந்த ஒரு பொருளையும் பணமாக கருத முடியும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதாவது, பணத்தினால் செய்யப்படும் எந்தக் கருமத்தினையும் செய்யக் கூடிய ஒரு பொருளை பணமாக கருத முடியும் என்பதே இதன் கருத்தாகும். செலாவணி ஊடகமொன்றாகவோ கணக்கீட்டு அலகு ஒன்றாகவோ கொடுப்பனவுகளைச் செய்யும் மூலம் ஒன்றாகவோ பெறுமானத்தின் வழி ஒன்றாகவோ கருதப்படும் எந்த ஒரு பொருளையும் பணம் என வரைவிலக்கணம் செய்ய முடியும்.

இப்பொழுது நாணயம் மற்றும் பணத்தாள் என்பனவே பண நிரம்பலின் பிரதான அங்கங்களாக இருக்கின்றன. இது சரித்திர ரீதியான ஒரு வளர்ச்சியின் விளைவாகும். ஆரம்ப காலத்தில் பண்ட மாற்றும் அதற்குப் பின்னர் சிப்பி ஓடுகள் போன்ற பொருட்களும் இடம் பெற்றன. பிற்பட்ட காலத்தில் உலோகங்களை அடிப்படையாக கொண்ட பற்றுச் சீட்டுகள் பாவிக்கப்பட்டன. இந்த படிமுறையான வளர்ச்சியின் இறுதிக் கட்டமாக இப்பொழுது பணம் புழக்கத்துக்கு வந்திருக்கிறது. இந்தப் பணம் புழக்கத்திலுள்ள பணம் அல்லது செல்லுபடியாகும் பணம் என்றழைக்கப்படுகிறது. இந்த நாணயமும் தாள்களும் பொது மக்களுக்கு சொந்தமானதாக இருக்க முடியும்; அல்லது வர்த்தக வங்கிகளிடமோ மத்திய வங்கியிடமோ இருக்க முடியும். இதில் பொதுமக்களிடம் புழக்கத்தில் இருக்கும் நாணயங்களும் தாள்களும் மட்டுமே பண நிரம்பலில் சேர்கின்றன. இப்பொழுது பொது மக்களிடையே புழங்கி வருவதும், பணமாக அங்கீகரிக்கப்பட்டிருப்பதுமான வங்கித் தாள்கள் அல்லது காசோலைகள் பண நிரம்பலின் அடுத்த முக்கிய அங்கமாகும். இதன்படி பொது மக்களின் கையில் புழங்கும் நாணயம், தாள் மற்றும் பொதுமக்களால் வைக்கப்பட்டிருக்கும் கேள்வி வைப்புக்கள் என்பன பண நிரம்பலாக இருக்கின்றன. நாணயங்கள் மற்றும் தாள்களை வெளியிடும் ஏகபோக உரிமையை மத்திய வங்கியே வைத்திருக்கிறது. கேள்வி வைப்புக்களை வர்த்தக வங்கிகளே உருவாக்குகின்றன. எனினும், வர்த்தக வங்கிகள் மத்திய வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதனால், மொத்த பண நிரம்பலினையும் மத்திய வங்கியின் கீழேயே நிர்வகிக்கப்படுகிறது என்று கூற முடியும்.

அநேகமாக் பொருளாதாரத்தின் அனைத்துப் பிரிவுகளும் பண நிரம்பலிலேயே தங்கியிருக்கின்றன. பண நிரம்பல் விலை மட்டத்தில் செல்வாக்கு செலுத்தும் முக்கிய காரணி ஒன்றாக இருக்கிறது. அதன் காரணமாக இது பணவீக்கம், பணச்சுருக்கம், நாட்டின் பொருளுற்பத்தி மற்றும் வேலை வாய்ப்புக்கள் போன்றவற்றில் தாக்கங்களை ஏற்படுத்துகிறது. இவ்விதமாக நவீன பொருளாதாரமொன்றின் அனைத்துப் பிரிவுகளினதும் செயற்பாடு மீது இது செல்வாக்கினைப் பிரயோகிக்கின்றது. எனவே, பொருளாதாரம் குறித்த மிக முக்கிய நிறுவனமான மத்திய வங்கி, பண நிரம்பலினை மிக்க விழிப்புடன் அவதானித்துக் கொண்டிருக்க வேண்டும்.

பண நிரம்பல் பொதுவாக இரு பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது.

1. குறுகிய பண நிரம்பல் (நாணயங்கள், தாள்கள், காசோலை முதலியன). இவை முற்றிலும் திரவத்தன்மை கொண்ட பணமாகும். அதாவது, இவற்றை கொடுக்கல் வாங்கல்களின் போது, நட்டமெதுவுமின்றி உடனடியாக பணமாக மாற்றிக்கொள்ள முடியும். வளர்ச்சி கண்ட நாடுகளில் நாணயம், தாள் என்பவற்றை விடவும் கூடுதலாக கேள்வி வைப்புக்களே இடம் பெறுகின்றன. உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவில் வங்கிப்பணம் 80% வரையில் இருக்கிறது. இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் கேள்வி வைப்புக்களின் பாவனை இன்னமும் அவ்வளவு தூரம் ஜனரஞ்சகமாகவில்லை. இலங்கையில் 47 சதவீதத்திலிருந்து 55 சதவீதம் வரையிலேயே கேள்வி வைப்புக்கள் இருக்கின்றன.

2. விரிவான பண நிரம்பல் (நாணயம், தாள், காசோலைகள், தவணை, சேமிப்பு வைப்புக்கள் முதலியன). இவற்றில் தவணை, சேமிப்பு வைப்புக்கள் முற்றிலும் திரவத்தன்மை கொண்ட பணமல்ல; அவற்றின் மூலம் வட்டி சம்பாதிக்கப்படுகிறது. அவற்றை பணமாக மாற்றினால் வட்டி கிடைக்காது போய்விடும். இதன் காரணமாக அவற்றை பணமாக மாற்றுவதன் மூலம் நட்டம் ஏற்படுகிறது. மேலும், தவணை, சேமிப்பு வைப்புக்களை பணமாக மீளப் பெறுவதற்கு முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும். அதனால் காலதாமதமின்றி அவற்றை பணமாக மாற்றிக் கொள்வது

கடினமாகும். எவ்வாறிருப்பினும், அதிக நட்டமெதுவுமின்றி, நீண்ட கால தாமதமெதுவுமின்றி இவற்றையும் பணமாக மாற்றிக்கொள்ள முடியும் என்பதனால் இவை விரிவான பண நிரம்பலில் சேர்க்கப்பட்டுள்ளன.

பண நிரம்பலில் மாற்றம் ஏற்படுவதற்கு பல காரணிகள் ஏதுவாகின்றன. மத்திய வங்கிக்குச் சொந்தமான வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்படும் அதிகரிப்பு – அதாவது வெளிநாட்டு பண நிலுவை, வெளிநாட்டு பிணைப்பத்திரங்கள் மற்றும் வெளிநாட்டு எடுப்பனவு உரிமைகள் என்பன காரணமாக தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்படும் அதிகரிப்பு - பண வெளியீடு அதிகரிப்புக்கு காரணமாக இருக்கும். அதுமட்டுமன்றி வர்த்தக வங்கிகளுக்குச் சொந்தமான வெளிநாட்டுச் சொத்துக்களும் பண நிரம்பலை நிர்ணயிக்கும் ஒரு முக்கிய காரணியாக இருக்கிறது. வெளிநாட்டு பண நிலுவைகள், வெளிநாட்டு வங்கிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஏற்றுமதி உண்டியல்கள், வெளிநாட்டு வங்கிகளிலிருக்கும் தேறிய நிலுவைகளின் வித்தியாசம் என்பன வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களாகும்.

வங்கி அமைப்பிலிருந்து அரசாங்கம் பெற்றுக் கொள்ளும் கடன் பண நிரம்பலில் தாக்கங்களை கொண்டு வருகிறது. இங்கு கடன் முற்பணங்களாகவோ, அல்லது உண்டியல்களாகவோ, பிணைப்பத்திரங்களாகவோ பரிமாற்றம் நடைபெறும் போது பண வெளியீடு இடம் பெறுவதால் பண நிரம்பல் அதிகரிக்கின்றது.

வர்த்தக வங்கிகளின் கடனாக்கத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் மத்திய வங்கி பண நிரம்பலை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது. ஒதுக்கு வீதம் வட்டி வீதம் என்பவற்றை மாற்றியமைத்தல் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் போன்றன பண நிரம்பலை கட்டுப்படுத்தும் உபகரணங்களாக பாவிக்கப்படுகின்றன. மேலும், உச்சமட்ட எல்லை நிர்ணயம், முதிர்வு திகதி குறித்தல், வெவ்வேறு வட்டி வீதங்களை நிர்ணயித்தல், வெவ்வேறு பிணைகளை விதித்தல் போன்றனவும் பண நிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்றன. பண நிரம்பலைக் கட்டுப்படுத்துவதன் மூலம், உள்நாட்டு, வெளிநாட்டு விலை மட்டங்களை ஸ்திரமாக வைத்துக் கொள்வதற்கும், உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதற்கும், அவற்றை பேணிக் கொள்வதற்கும் மத்திய வங்கி எதிர்பார்க்கின்றது.

**இலங்கையின் நாணய கூட்டுக்கள் 1968 – 1985** (ரூ. பத்து இலட்சம்)

| வருடம் | குறுகிய பணம் M1 | விரிந்த பணம் M2 | குறுகிய பண நிரம்பலில் கேள்வி வைப்புக்களின்% |
|---|---|---|---|
| 1968 | 1,913.2 | 2,724.4 | 44.3 |
| 1978 | 5,936.4 | 10,892.1 | 49.2 |
| 1980 | 9,428.2 | 19,860.2 | 55.6 |
| 1981 | 10,024.4 | 24,446.8 | 51.8 |
| 1982 | 11,759.8 | 30,509.9 | 49.0 |
| 1983 | 14,747.9 | 37,256.9 | 51.2 |
| 1984 | 16,823.8 | 43,427.4 | 49.1 |
| 1985 | 18,761.0 | 48,408.9 | 47.7 |
| 1986 | 19,974.0 | 49,315.0 | 45.4 |

இலங்கை மத்திய வங்கி, வருடாந்த அறிக்கைகள் *1972, 1985*

(55-ம் பக்கத் தொடர்ச்சி)

தொகுதிகளும் தூரத்தூர அமைந்துள்ளன. தங்குதடையின்றி செயல்படுவதற்குப் போதிய வாகன வசதிகளில்லை. பால் இறக்குமதி செய்யும் கம்பெனிகள் விளம்பரத்துக்காகப் பெருஞ் செலவு செய்கின்றன இச் செலவுகள் எல்லாம். நுகர்வோரிடம் அறவிடப்படுகின்றன.

மறுபுறம், பால் சேகரிப்பதில் மில்கோவைத்தவிர நெஸ்லே கம்பெனி மட்டுமே ஈடுபட்டுள்ளது. இக்கம்பெனி 10 பவுசர்களை உபயோகிக்கிறது. பிற கம்பெனிகளையும் பால் சேகரிப்பதில் ஈடுபடுத்தினால் இறக்குமதியைக் குறைக்கலாம். மில்கோவுக்கு இவ்விடயத்தில் போட்டியில்லை. அது 40 பவுசர்களைப் பால் சேகரிக்கப் பயன்படுத்துகிறது. நெஸ்லே உபயோகிக்கும் வண்டிகள் நெஸ்லே நிலையங்களிலிருந்து மட்டுமே பால் சேகரிக்கின்றன. கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு போட்டி முறையில் பால் சேகரிப்பதற்கான திட்டம் ஒன்றை வகுக்க வேண்டும். உதவிப்பணம் போட்டி நிலையை அகற்றி விட்டமையால் உதவிப் பணம் வழங்குவதை உலக வங்கி நிறுத்தியமை நியாயமானதே. மேலும், உதவி பெறுவதற்கான பேச்சு வார்த்தைகளில் அமைச்சு வெற்றி பெறும்வரை நுகர்வோரின் நிலை மிக மோசமானதாகும். உதவிப் பணம் நிறுத்தப்பட்டதனால் மில்கோ பாலின் விலையை உயர்த்தி விட்டது. தீர்வை 15 இலிருந்து 30 சதவீதமாக அதிகரிக்கப்பட்டால் பாலின் விலை மேலும் அதிகரிக்கும்.

அருமையான வெளிநாட்டுச் செலாவணி நிதிகள் பால் இறக்குமதிக்கென செலவிடப்படுவது குறைக்கப்பட வேண்டுமாயின் பால் உற்பத்திக்கும், சேகரிப்புக்கும் தூண்டுதல் அளிக்கக் கூடிய விதத்திலான தாக்கமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

**மக்கள் வங்கி** ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 300 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 800 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

# பொருளியல் நோக்கு

## மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதி வெளியீடு

பிரதி விலை ரூ. 7.00

வருட சந்தா ரூ. 40-00

283, கே. சிறில் சி. பெரேரா மாவத்தை கொழும்பு-13ல் உள்ள இன்டர் நெஷனல் இரபிக் மெகசின் லிமிடட் அச்சுயந்திரசாலையில் அச்சிடப்பட்டது.